வெளியீடு 12-2-99

Issued 12-2-99

450 — 97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 7, 1998 – தொகுதி 44– எண் 1

**Tuesday the 7th April, 1998 – Volume 44 – No. 1**

*பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**sembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

D.
V21,31
N98.441
21842

**[Price Rs. 3.00**

7-4-1998

## உள்ளடக்கம்

பக்கங்கள்


(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் iii-vi

(ii) Personnel of the Government of Tamil Nadu vii-x

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xiii-xiv

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xv-xxv

*1.* **வினாக்கள்-விடைகள்--**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-44

*2.* **அறிவிப்புகள்--**

(அ) வேளாண்மை மானியக் கோரிக்கை தொடர்பாக உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்குதல் 44

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு 44

(இ) மானியக் கோரிக்கைகள், *1998-99*, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.) 47

*3.* **விதி *110*-ன்கீழ் அறிக்கை--**

பால் விற்பனை மற்றும் கொள்முதல் விலை உயர்வு குறித்து மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் அறிக்கை 45-46

*4.* **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)--**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, *1998* 46-47

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-- | |
| (அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை<br>(ஆ) கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 48-150 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 48,53,56,72, 76,83-85,95, 96,97,98,99-100,102,113, 128-145 |
| திரு. க. மணிவர்மா | 51-52,55, 57-61 |
| திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் | 61-67 |
| திரு. ஆர். மகேந்திரன் | 67-71 |
| திரு. செ. இராமலிங்கம் | 71-76 |
| திரு. ஆ.செ. மணிக்கண்ணன் | 76-81 |
| திரு. ஜி.கே. மணி | 81-83,85-90 |
| திரு. ந. கருப்பண்ண உடையார் | 90-94 |
| திரு. சொ. கருப்பசாமி | 95-102 |
| திரு. வி. அய்யலுசாமி | 102-104,106-107 |
| *திரு. பி.என். வல்லரசு | 107-114 |
| திரு. எல். மூக்கையா | 114-119 |
| திரு. பொ. முருகேசன் | 119-122 |
| *திரு. என்.ஆர். அழகர்ராஜா | 122-128 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 151-152 |


21845



D
V21, 3, 1998
N08 - A2-1

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** | : **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | : **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | : **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | : **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | : **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந. பூ. .. மயிலாப்பூர்
40. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 67. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 68. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 69. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 70. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 71. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 72. | சந்தானம், திரு. லா. | .. சோழவந்தான் |
| 73. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 75. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 76. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 77. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 78. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 80. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 82. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 83. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 84. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 85. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 86. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 87. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 88. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 89. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 90. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 91. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 92. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 93. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 94. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 95. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 96. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 97. | சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 98. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 99. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 100. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 101. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 102. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 103. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 104. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராயநகர் |
| 105. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 106. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 108. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 109. | சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |
| 110. | சைதை கா. கிட்டு, திரு. | .. சைதாப்பேட்டை |

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு.ச.க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசுத் தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 24, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 ஏப்ரல் 7, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உழுவார் உலகத்தார்க்(கு) ஆணிஅஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து."

*பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால், அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.*

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் *161, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**161—**

### உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**4298*—**திரு. ஆர். மகேந்திரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, நாட்றாம்பள்ளி ஒன்றியம், பச்சூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[1998 ஏப்ரல் 7

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டில் பச்சூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என் தொகுதியிலுள்ள பச்சூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகக் கடந்த ஆண்டு உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்த மேல்நிலைப் பள்ளியில் Commerce, Accountancy, Economics போன்ற புதிய பாடப் பிரிவுகளை இந்த ஆண்டு தொடக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் இரண்டு பாடப் பிரிவுகள் வழங்கப்படுகின்றன. அந்த இரண்டு பாடப் பிரிவுகளுக்கும் உரிய ஆசிரியர்கள், ஒருவேளை ஒருவர், இருவர் குறைவாகயிருந்தால், அந்த ஆசிரியர்கள்தான் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைப் பள்ளிப் பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கான நிதி வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**162—**

### ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குதல்

*13435—**டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறில் ஒரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பு கல்வியாண்டில் அமைக்கப்படுமா?*



1998 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு அனுமதி அளிப்பதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவட்டாறுக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடைபெற்று வருகின்றது. ஆனால், அங்கே நடக்கின்ற முறைகேடுகள் என்னவென்றால், சாதாரண மக்களுக்கு இடம் கிடைப்பதிலே பெரிய சிக்கலாக இருக்கிறது. எனவேதான் திருவட்டாறு பகுதியிலே—ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இல்லை – ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிப்பது தொடர்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த மாவட்டத்திற்கு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று, அந்தப் பகுதியிலே இன்னொரு தனியார் நிறுவனமாக அரசு உதவி பெறுகிற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியே இருக்கிறது. அதிலே ஏதாவது குறைபாடு இருக்குமானால் அந்தக் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டு விவரங்கள் கிடைக்குமானால் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். இரண்டாவது, ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருக்கிற அதே இடத்தில் இன்னொரு கல்லூரியை ஏற்படுத்த அவசியமில்லை மூன்றாவது, இப்போதே 40,000-லிருந்து 50,000 பேர் பட்டதாரிகள், பி.எட். படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பதாகக் குறைபடுகிறார்கள். எனவே, இந்த எண்ணிக்கையை வளர்த்து—அதுவும் கன்னியாகுமரி மாவட்டத்திலேதான் அதிகமான பேர் வேலையில்லாமல் இருப்பார்கள்—அதற்கும் சேர்த்துப் போராடவேண்டிய அவசியத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல்கலைக்கழக அறிவுரையின்படி, மதுரை பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் எல்லாம் பி.டி., பட்டப்படிப்பை அஞ்சல் வழிமூலம் வழங்கியதை நிறுத்திவிட்டார்கள். அதனாலே பி.டி., பட்டப்படிப்பிற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, சுயநிதி (Self-Finance) அடிப்படையில், ஏற்கெனவே உள்ள கல்லூரிகள் B.Ed. பட்டப்படிப்பு தொடங்க, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அவர்கள் மனுச் செய்தால், அது தாராளமாக வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய கேள்விக்கு நான் அளித்திருக்கிற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஆசிரியர் பயிற்சி படித்தவர்கள் ஆசிரியர் வேலையைத் தவிர வேறு ஒரு வேலைக்கு எளிதாகச் செல்வதில்லை. ஆனால் ஆசிரியர் வேலை தருகின்ற வாய்ப்பு இப்பயிற்சி பெறுகின்ற எண்ணிக்கை அளவிற்குக்கூட இல்லை. எனவே மேலும், மேலும் இந்தப் பயிற்சியை வளர்த்து, வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒரே துறையில் வளர்ப்பது அவ்வளவு தேவையான காரியம் அல்ல. ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் கொடுத்த காரணத்தால் ஏற்பட்ட விளைவுகளைக் கல்லூரிகளுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அதிகமாக வழங்கப்பட்டதாலே, தனியார் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதிலே பயிற்சி பெற்ற கிட்டத்தட்ட 50,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பரிட்சை எழுதமுடியாமல், அவர்கள் அங்கீகரிக்கப்படாமல் நீதிமன்றங்களுக்குச் சென்று, பல்வேறு சங்கடங்களிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விதிமுறைகளைத் தளர்த்தி, படித்து முடித்த மாணவ, மாணவியர்கள் 50,000 பேர்களுக்கு பரிட்சை எழுதுவதற்கான உதவியைச் செய்து





கொடுத்து, அவர்களுடைய வாழ்வில் தீபம் ஏற்றிவைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலேயே விளக்கம் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு திரு. குமாரதாஸ் அவர்கள் விவரங்களைத் தெரிந்தவர்கள். சில நேரங்களில் அதை மறந்துவிட்டு இப்போது பேசியிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் 50,000 பேர் அல்ல. மொத்தம் 28,000 பேர்தான். அதிலே ஓராண்டுகூடப் படிக்காதவர்கள் ஏறத்தாழ 7, 8 ஆயிரம் பேர், இரண்டாண்டு படித்து தேர்வு எழுதாதவர்கள் 5, 6 ஆயிரம் பேர். தேர்வு எழுதி, அவர்கள் படித்த படிப்பு சரியல்ல; நிறுவனங்கள் நடைபெறவில்லை; இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கக்கூடாது; வெற்றியோ, தோல்வியோ எந்தச் சான்றிதழும் வழங்கக்கூடாது என்று நீதிமன்றம் ஆணையிட்டுவிட்டது. மறுபயிற்சி வழங்க வேண்டுமென்பதற்காக ஒரு முயற்சி எடுத்துக்கொண்டபோது, அந்த மறுபயிற்சி தகுந்த முறையில் அமையாது என்ற காரணத்தால் நீதிமன்றம் மறுபடியும் தடைவிதித்துவிட்டது. அதையும் நீக்குவதற்கு உச்சநீதிமன்றம் சென்றபோது, உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முறையானது என்று தெரிவித்துவிட்டது. எனவே 50,000 பேர் என்று சொல்லி பிரச்சினையைப் பெரிதாக்குவது நியாயமல்ல; இரண்டாண்டு முழுவதும் படித்ததாகச் சொல்வதும் நியாயமல்ல; படித்தவர்கள் என்று சொல்லுவதும் நியாயமல்ல. படிக்காதவர்களை என்ன செய்வது என்பதைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படுவார்கள் என்று கடந்த ஆண்டு அறிவித்திருந்தார்கள். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 163, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 7

**163—**

**அரசு ஊழியர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்**

*9627—**திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூரில் அரசு ஊழியர்களுக்கு வீட்டுமனை வழங்க 1994-லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டும், இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த ஏரி, கொரட்டூர்-வில்லிவாக்கம் பகுதியில் வடியும் கூடுதல் மழைநீர் சேமிக்கப் பயன்படுவதாகவும், வீடுகள் கட்டினால் கூடுதல் நீரை ஏரியில் தங்க வைக்க இயலாது எனவும், அதனால் இப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளது எனவும், சென்னை மாநகராட்சி ஆணையரும், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளரும் தெரிவித்துள்ளார்கள். எனவே, இத்திட்டத்தைக் கைவிடக் கோரியுள்ளார்கள். தற்போது காஞ்சிபுரம் மாவட்டம், ஒக்கியம்-துரைப்பாக்கம் கிராமத்தில் சுமார் 25 எக்டேர் நிலம் தலைமைச் செயலகச் சங்கத்தின் வீட்டுமனைத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் வாழும் அரசு ஊழியர் நலன் கருதி வீட்டு மனை வழங்க முன்வந்திருப்பதற்கு, பெருமுயற்சி எடுத்துக்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பயன்பெறும் ஊழியர்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, இத்திட்டம் எப்போது தொடங்கப்படும் என அறிய விரும்புகிறேன். மேலும், குளத்தூரில் வீட்டுமனைக் கேட்டு



1998 ஏப்ரல் 7]

பதிவு செய்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டு மனைகள் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புவதோடு, இதுபோன்ற திட்டம் சென்னை மாநகரில் வாழும் இதர அரசு ஊழியர்களுக்காகவும் தொடங்கி, மனைகளை வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 22.12 எக்டேர் நிலத்தில் தங்களுக்கும் ஒப்படை செய்து தருமாறு பிற அரசு அலுவலர் சங்கங்களும் கோரியுள்ளன. இந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 164, திரு. பா. பரணிகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**164—**

**பாதாளச் சாக்கடை அமைத்தல்**

*3439—**திரு. பா. பரணிகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளியில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் முடிக்கப்பட்டு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் இணைப்பதற்கு ஒரு வீட்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்று வசூலிக்கப்படுகிறது. அதைக் கட்ட முடியாதவர்களுக்கு 4 தவணைகளாகக் கட்ட அரசு அனுமதி அளிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியில் கட்டப்பட்டிருக்கிற பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றியது கேள்வி. துணைக் கேள்வி அதை ஒட்டியதாக அமைய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *165*, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**165—**

### குடிநீரை முறையாக விநியோகம் செய்தல்

***7794*—திரு. எஸ்.எஸ். பொன்முடி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், பொங்கலூர் ஒன்றியப் பகுதியில் அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் மின் அழுத்தக் குறைவினைச் சீர்செய்து குடிநீரை முறையாக விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கோவை மாநகராட்சி மற்றும் 20 பேரூராட்சிகளில் அமைந்துள்ள 91 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 8 பஞ்சாயத்து ஒன்றியங்களில் 99 ஊராட்சிகளில் உள்ள 523 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளது. இந்த அத்திக்கடவு குடிநீர் வெள்ளயங்காட்டில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையத்தில் இருந்து 400 குதிரைத் திறன் சக்தியுள்ள நீர் இறைப்பான்கள் மூலம் 1,500 மி.மீ. முதல் 700 மி.மீ., வரை விட்டமுள்ள பி.எஸ்.சி. மற்றும் ஏ.சி. குழாய்கள் மூலம் உந்தப்பட்டு மாநகராட்சி எல்லைக்குள் இராமகிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள 30.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு பிரதான நீர்த்தேக்கத் தொட்டி (எம்.எஸ்.ஆர்.) மூலம் கோவை மாநகராட்சிக்கும், விளாங்குறிச்சியில் உள்ள 15.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் நீர் ஏற்றப்படுகிறது. இந்த நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பல்லடம் ஒன்றியம் மற்றும் பொங்கலூர் ஒன்றியப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கோடை காலங்களில் மின்தடை/அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. மின் அழுத்தக் குறைவினை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1998 ஏப்ரல் 7]

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் தேவையான குடிநீர் இருந்தும் முந்தைய அரசினால் செய்யப்பட்ட சில முறைகேடுகள் காரணமாக தரமில்லாத பைப்புகள் அமைக்கப்பட்டன. இதன் காரணமாக, அடிக்கடி பைப்புகளெல்லாம் உடைகின்ற காரணத்தால், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்பட முடியாமல் உள்ளது. வளர்ந்து வரும் பல்லடம் தொகுதியில் குடிநீர் தேவையும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், புதியத் திட்டத்தின் மூலம் அதை விரிவாக்கித் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டத்தில் புதியதாகத் திட்டங்கள் உருவாக்க வேண்டிய அவசியமில்லை. பழைய குழாய்களில் பழுது ஏற்பட்டிருக்குமானால், புனரமைப்புத் திட்டத்தில் அவைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வப்போது அந்தப் பழுதுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட நிலை இருக்குமானால், அதைத் தெரிவித்தால் அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் என்கின்ற பில்லூர் குடிநீர்த் திட்டம் மிகவும் அருமையானத் திட்டம். என்னுடைய தொகுதியிலே கிட்டத்தட்ட 150 கிராமங்கள் இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலுள்ள குறைபாடுகள் என்னவென்று சொன்னால், ஏற்கெனவே இருந்த அரசு குழாய்களைச் சரியாகப் போடவில்லை. இப்பொழுது நமது அரசு புதிய குழாய்களைப் போட்டு இணைத்திருக்கிறார்கள். ஆனாலும்கூட, போதிய மின்சார வசதி, உந்துதற்குரிய மோட்டார் இல்லாத காரணத்தால், சில இடங்களிலே குடிநீர் சரியாக வருவதில்லை. என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 18 இடங்களில் தண்ணீர் சரியாக வருவதில்லை. ஒரே ஒரு முறை ஒரு சில ஊர்களுக்குத் தண்ணீரை அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தண்ணீரே வரவில்லை. மாண்புமிகு அமைச்சரிடம் சொன்னதன்பேரில், அவர் கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, தண்ணீரைக்

[1998 ஏப்ரல் 7

கொண்டு போய்ச் சேர்க்க முடிகிறதேயொழிய, அந்தத் தண்ணீரை முழுமையாக விநியோகம் செய்ய முடியவில்லை. இந்தத் தட்டுப்பாட்டை நீக்கவேண்டுமானால், 100 எச்.பி. மோட்டாரை கலங்கல் என்ற இடத்திலே பொருத்தினால், நிச்சயமாக ஒழுங்காகக் கொடுக்க முடியும். ஆகவே, சின்னச்சின்ன குறைகளை உடனடியாக சீர்செய்வதற்கு அரசு ஆணையிடுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதில் ஒன்றை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியும். தண்ணீர் இருந்தும் சில வேளைகளில் அதைப் போதுமான அளவிற்கு அளிக்க முடியாமல் போகிறது என்பது உண்மை. மின் அழுத்தக் குறைவுதான் அதற்கு முக்கியமான காரணம். அடிக்கடி மின் அழுத்தக் குறைவால்—எந்த நேரத்தில் மின் அழுத்தம் குறையும் என்று தெரிவதில்லை—அந்தத் தண்ணீரை நிரப்பி வைத்து அதனை அளிக்கின்ற அளவிற்கு நிலைமை சரியாக இல்லை. அப்படியிருந்தும்கூட, மின் அழுத்தக் குறைவின் காரணமாக ஏற்படுகின்ற இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவும், இந்தக் குறையை நிவர்த்திக்கவும் மின்சாரம் கிடைக்கும் நேரங்களில் மின் அழுத்தக் குறைவினைச் சீரான நிலைக்குள் கொண்டுவர மின் அழுத்தச் சீராக்கிகள் ரூபாய் 25,35,000 செலவில் எல்லா நீரேற்று நிலையங்களிலும் ஆறு மாதங்களுக்கு முன்னால் பொருத்தப்பட்டு, மின் அழுத்தம் சீரான நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதையும் தாண்டி, குழாய்களில் பழுது ஏற்படுமானால் அவர்களே சரிசெய்து கொள்வதற்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கின்ற அதிகாரிகளே அந்த நிலையை உணர்ந்து அதைச் செய்வார்கள். தவறினால் எனக்குத் தகவல் தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட சுமார் ஐம்பது கிராமங்கள் மிகவும் வறட்சியான கிராமங்கள். அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தின்கீழ் இந்த வறட்சியான கிராமங்களும் பயன்பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 523 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதிலேயே பல வேளைகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதைத்தான் சற்று முன்பு உறுப்பினர்களும் கேட்டு, நானும் பதில் சொல்லியிருக்கிறேன். இதை மீண்டும் விஸ்தரித்தால், ஏற்கெனவே இத்திட்டத்தில் இணைத்திருக்கின்ற கிராமங்களுக்குத் திட்டத்தைச் சரியாகச் செயல்படுத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூர் அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் Tail end பகுதியாக இருக்கின்ற மதுக்கரை ஒன்றியத்தில் இன்னமும் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குக் குடிநீர் வழங்கப்படாமல் இருக்கின்றது. அவற்றிற்கு நீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின்கீழ் பாக்கி இடங்களுக்கு நீர் போய்ச் சேரவில்லையென்றால், அது குறித்து தகவல் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, நிச்சயமாக சீரமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக்கடவு, குடிமங்கலம் ஆகிய இடங்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் ரூ.57 கோடி செலவில் ஆழியாறு குடிநீர்த் திட்டத்திற்கு இந்த ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணியானது இன்னும் எத்தனை மாதங்களில் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆய்வுகளும் முடிவுற்று, பணிகள் துவங்கும் நிலையில் இருக்கின்றது. பணிகள் எப்போது துவங்கப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றோரம் உள்ள சில பகுதிகளில், குறிப்பாக என்னுடைய தொகுதியில், வைகை ஆற்றிலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் எடுத்துச் செல்கிறார்கள். ஆனால், கடந்த மழைக்காலத்தில், ஆற்றிலே மிகுதியாகத் தண்ணீர் வந்த காரணத்தினால், அந்தக் குடிநீர் ஆதாரங்களெல்லாம், அந்தக் கிணறுகளெல்லாம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அவற்றைப் பழுதுபார்க்க முடியாத நிலையில் அந்த ஊராட்சி மன்றங்களும், பேரூராட்சிகளும் இருக்கின்றன. எனவே, இதற்கென்று சிறப்பு நிதி ஒதுக்கி அவற்றைச் சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தக் கிணறுகள் அவ்வாறு அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை என்னிடத்தில் எழுத்து மூலம் தெரிவிப்பார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, பழுதடைந்த இடங்களைப் புதுப்பித்து, தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் முதலிலே உருவாக்கப்பட்டது சிறுவாணி குடிநீர்த் திட்டம். அது மாநகர்ப் பகுதிக்கும், புறநகர்ப் பகுதிக்கும் குடிநீர் வழங்குகிறது. இப்போது அந்தத் திட்டத்தின் மேற்குப் பகுதி முழுவதும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. மாநகராட்சியிடம் இந்தத் திட்டத்தை ஒப்படைக்கும்போது, புறநகர்ப் பகுதியையும், அதாவது குடிநீர் வடிகால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய வால் பகுதியையும் மாநகராட்சி அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டார்கள். ஆனால், மாநகராட்சி அதிகாரிகள் தேவையான குடிநீரைப் புறநகர்ப் பகுதிகளுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். பல நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், அதிகாரிகளிடமும் உள்ள அந்தப் பகுதியைக் குடிநீர் வடிகால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியவில்லை. எனவே, அரசு இதில் தலையிட்டு, அது முறைப்படுத்திக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 7]

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூரிலிருந்து அவ்வளவு சீக்கிரமாகச் சிறுவாணிக்குப் போய் சேர்ந்துவிட முடியாது. ஆகவே, இதற்கெனத் தனியாகக் கேள்வி போட்டால், அதற்குப் பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

**166—**

**பக்கிங்காம் கால்வாய் ஷட்டரைச் சீர்செய்தல்**

*4913—**திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் பகுதியை ஒட்டியுள்ள பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஷட்டர் நீண்ட காலமாகப் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இந்நிதியாண்டிலேயே சீர் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பக்கிங்காம் கால்வாயில், படகுப் போக்குவரத்து கைவிடப்பட்ட பின், அதாவது 1969 முதல், இக்கால்வாயைப் பராமரிப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. அதனால் பராமரிப்பும் செய்யப்படுவதில்லை.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், படகுப் போக்குவரத்து கைவிடப்பட்டதால், அதைச் செய்வதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பக்கிங்காம் கால்வாயினுடைய முகத்துவாரத்தில் 'ஷட்டர்' இல்லாத காரணத்தினால், மழை வெள்ளம் போன்ற

காலங்களில், கடல்நீர் உள்ளே புகுந்து, ஏறத்தாழ 25 ஆயிரம் மக்கள் அந்தப் பகுதியில் பயிர் செய்யக்கூடிய விவசாய நிலங்கள் பாழாகின்றன. ஆகவே, விவசாய மக்கள்மீது நலன் கொண்டிருக்கின்ற நம்முடைய அரசு, தயவுகூர்ந்து புதிதாக ஷட்டர் அமைக்க ஏற்பாடு செய்து, அந்த விவசாய மக்களை வாழ வைக்க, அதுகுறித்து மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கேள்வியையே, கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு, பொதுப்பணித் துறை அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 167, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**167—**

### பட்டயப் பொறியாளர்களை நிரந்தரம் செய்தல்

*8350—**திரு. என்.ஆர். அழகராஜா:**

*மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பொதுப்பணித் துறையில், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணியில் சேர்ந்து, பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் பட்டயப் பொறியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே அதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணியில் சேர்ந்து பத்தாண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் 91 பட்டயப் பொறியாளர்களின் பணியை வரன்முறை செய்து, 20-2-1998 இல், அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.





**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மிகவும் நன்றி எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையிலே, கரைக் காவலர்கள் பணிக்கு நியமனம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசிடம் கருத்துரு இருக்கிறதா? அந்தப் பணிக்கான ஆட்களைத் தேர்வு செய்வதற்கான முன் முயற்சிகள் எந்த முறையிலே மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தில் இதுபற்றி விரிவாகத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள மணிமுத்தாறு பிரதானக் கால்வாயிலும், கன்னடியன் கால்வாயிலும், கரைக் காவலர் பணியிடங்கள் மற்றும் பாசனக் கண்காணிப்பாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல், வெற்றிடமாக இருக்கின்றன. அந்தப் பாசனக் கால்வாய்களின் மூலமாகப் பாசனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு மிகவும் கஷ்டமான நிலை இருக்கிறது. எனவே, அங்கு கரைக் காவலர்களையும், பாசனக் கண்காணிப்பாளர்களையும் உடனடியாக நியமித்து, பாசனத்திற்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, பாசனக் கால்வாய் கரைக் காவலர்கள் என்று சொல்லப்படுகின்ற 'லஸ்கர்கள்' பல இடங்களில் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியும். காரணம், பல ஆண்டுகளாகவே, காலியான அந்த இடங்களை நிரப்பாமலே விட்டுவிட்டார்கள். ஆகவே, தமிழ்நாட்டிலே, மொத்தம் எத்தனை 'லஸ்கர்கள்' தேவை; அவர்களை எப்படி நிரப்புவது என்பது என்னுடைய பொதுப்பணித் துறை மானியத்தின் விவாதத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி—நிதி நிலைமைப் பிரச்சினை இதிலே இருக்கிற காரணத்தினால்—இதுகுறித்து ஒரு நல்ல முடிவு அறிவிக்கப்படும்.

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 168, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**168—**

**கிராமங்களுக்குப் பேருந்து வசதி**

*2041—**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் தொகுதியில் 1,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசுப் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டுள்ளது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பேருந்து வசதி அளிக்கப்படும்போது, முழுமையான பேருந்துகளாக, அதாவது இப்போது ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளிலே பாதிப் பேருந்துகளுக்குப் படிக்கட்டுகளே இல்லை; பாதிப் பேருந்துகளுக்கு மேற்கூரை இல்லை; பாதிப் பேருந்துகளுக்கு இருக்கைகள் இல்லை; அப்படி இல்லாமல், முழுமையான பேருந்துகளாக, மக்களுக்கு வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையான பேருந்துகள் இருந்தால்தான், மக்கள் அவற்றிலே பயணம் செய்ய முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர்களுக்குப் பேருந்துகளும் வேண்டும்; அவை உடனடியாகவும் வேண்டும் என்று இருக்கிறபோது, புதிய பேருந்துகள் விடுகிறபோது, பழைய பேருந்துகளை, இதுபோன்ற வழித்தடங்களிலே இயக்குவது வழக்கம். படிப்படியாக, புதிய பேருந்துகள் இயக்கப்படும் போது, அவை மாற்றிக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.



1998 ஏப்ரல் 7]

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 கிலோ மீட்டருக்கு மேல், தொலைதூரம் சென்று வரக்கூடிய பேருந்துகளையெல்லாம் மாற்றிவிட்டு, குறைந்த இருக்கைகள் கொண்ட, சொகுசுப் பேருந்துகளாக விட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் சொல்லக்கூடிய வழித்தடங்களில் இரண்டு பேருந்துகள் செல்லும் என்று கூறியும்கூட இதுவரை எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு வழித்தடத்தில்தான் பேருந்துகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, விரைவாக இன்னொரு பேருந்தையும் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அதுபோல எழுதிக்கொடுத்தும் அவை விடப்படாமல் இருக்குமானால், அதை என்னிடம் எழுதிக் கொடுத்தால் உடனடியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் பேருந்து வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு மினி பஸ்கள் விடுவதற்குத் தனியாருக்கு அனுமதி கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே கூறினார்கள். இதுவரையில் அப்படி மினி பஸ்கள் எதுவும் விடப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே இந்தத் திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறதா, இல்லையா? தனியார் பஸ் முதலாளிகளைக் கேட்டால் அரசு விதிக்கின்ற விதிமுறைகளின்படி யாருமே அதுபோல பஸ் பெர்மிட்டுகளை வாங்கமாட்டார்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த

இதுவரை நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கின்றதா, அல்லது அரசே தனியாக அந்த மினி பஸ்களை விடுவதற்கு ஆவன செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 கிலோ மீட்டர்வரை இதுபோன்ற மினி பஸ்களை விடலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த 16 கிலோ மீட்டரில் இதுவரை பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற சாலையில் 1 கிலோ மீட்டர் தூரம்வரைதான் இந்த மினி பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற அந்த விதியும் அதனுடன் இணைக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை ஏறத்தாழ 350 விண்ணப்பங்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டு 40 மினி பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்துகளைக் காட்டினால், உடனடியாக அவர்கள் அதை இயக்குவதற்கு அரசு அனுமதி வழங்கவும் தயாராக இருக்கிறது. அவ்வாறு அனுமதி பெற்றிருக்கின்ற 40 பேர்களையும் அழைத்துப் பேசுவதற்கு இம்மாதம் 15-ஆம் தேதிக்குமேல் ஒரு நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்று, 16 கிலோ மீட்டர்—1 கிலோ மீட்டர் 'ஓவர் லேப்' என்றில்லாமல், யார் அனுமதி கேட்டாலும் அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்டத் தலைநகரங்களிலிருந்து கிராமங்களுக்குச் செல்கிற நகரப் பேருந்துகளுடைய தூரம் 30 கிலோ மீட்டர் என்று வைத்திருக்கிறார்கள். அதனால் பல இடங்களுக்கு நகரப் பேருந்துகள் செல்ல முடியவில்லை. எனவே அந்த கிலோமீட்டர் தூரத்தை அரசு கூட்டித் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதிகளே இல்லாத கிராமமாக, அதுவும் பக்கத்திலே இருக்கும் என்று சொன்னால் அதற்கு 35 கிலோ மீட்டர் வரை அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பேருந்து வசதிகள் இருக்கின்ற கிராமமாக இருந்தால் 30 கிலோ மீட்டர் வரைதான் இயக்கப்படும். அது இல்லாத பகுதிகளிலே நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்ப வழித்தடமாக இரண்டு பேருந்துகளை அறிவித்தார்களே, இந்த முறை குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்கள்மீது அனுதாபம் கொண்டு 4 வழித்தடங்களாவது அறிவிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் பல பேருந்துகள் நிறுத்தப்பட்டதாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி புகார் சொன்னதன் அடிப்படையிலேதான் அவை மீண்டும் இயக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, வந்த முதலாண்டில் இரண்டு பேருந்துகள் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. அந்த இரண்டு பேருந்துகள் வழங்கியது மட்டுமின்றி, மேலும் ஏறத்தாழ 500 வழித்தடங்களுக்கு மேல்-சென்ற ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 1000-க்கு மேற்பட்ட புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. புதிய வழித்தடங்களும் வேண்டும், புதிய பேருந்துகளும் வேண்டும் என்று சொன்னால் ஒரே நேரத்தில் இரண்டையும் செய்வது கடினமாக இருக்கும். ஆகவே இப்போது ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளைத் தரம் உயர்த்தி புதிய பேருந்துகளாக அவைகளை இயக்கியதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து, அவசியம் ஏற்படுமானால் அந்தப் பேருந்துகளை இயக்க அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசாங்கப் பஸ்களில் எல்லாம் ஆடியோ கேசட், வீடியோ கேசட் போன்றவைகளைப் போடுவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அதுபோல தனியார் பஸ்களிலும், வேன்களிலும், பிளஷர்களிலும் அதைப் போடுவதற்குத் தடை விதிக்கப்படுமா? ஏனென்றால் இப்படி பாட்டுப் போடுவதாலே, சினிமா போடுவதாலே விபத்துக்கள் எல்லாம் நடக்கின்றன. எனவே, இதைப் போக்க அரசு அதற்குத் தடை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள்

[1998 ஏப்ரல் 7

மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அடங்கிய மாநாட்டிலே எடுக்கப்பட்ட முடிவுகளின்படித்தான் அந்த மாநிலங்கள் அனைத்துமே இரவு நேரத்தில் செல்கின்ற பேருந்துகளில் இதுபோன்ற ஆடியோ, வீடியோ கேசட்டுகள் போடுவதை நிறுத்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த அடிப்படையிலேதான் முதலாவதாக அரசுப் பேருந்துகளிலே இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. படிப்படியாக இது தனியார் பேருந்துகளிலும் நிறுத்தப்படும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப்போல, இதுபோன்ற ஆடியோ, வீடியோக்கள் எல்லாம் ஓட்டுநருக்குப் பின்புறம்தான் வைக்கப்பட்டு இருக்கின்றன. ஓட்டுநர்கள் அவற்றைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை. செல்லுகின்ற பயணிகள் இது குறித்து இருவேறு கருத்துக்கள் சொல்லுகிறார்கள். சில பேர் எங்களுக்குத் தூக்கம் கெட்டு விடுகிறது, வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். சில பேர் செல்லுகின்ற தூரம் வெகுவாக இருப்பதால் படத்தைப் பார்ப்பதற்காவது அனுமதிக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். இவைகளை எல்லாம் அலசி ஆராய்ந்துதான், இரவு நேரங்களிலே வேண்டாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். படிப்படியாக இது மற்ற பேருந்துகளுக்கும் விரிவாக்கப்படும்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலிருந்தும் தலைநகருக்குப் பேருந்து விடும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிதாக 112 பேருந்துகள் விடப்பட்டன. என் தொகுதியில் எண் 85 என்ற தடத்திற்கு ஒரு புதிய பேருந்து விடுவதற்கு முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் புதிய பேருந்து என் தொகுதியிலே விடப்படவில்லை. அந்தப் புதிய பேருந்தை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 7]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து உறுப்பினர் தனியாக எழுதிக் கொடுப்பாரேயானால், உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃபேன்சி நம்பர்களைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைவருக்கும் ஃபேன்சி நம்பர் கொடுக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு சலுகை அளிக்கும் விதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பெயரிலே வண்டிகள் வாங்குகின்றபோது, கட்டணம் வசூலிக்காமல் இருப்பதற்கு ஏற்ப, அந்த 5 ஆயிரம் ரூபாய் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்பதோடு, இதுகுறித்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிதி குறித்த விவகாரமாகும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகம், (கோட்டம்-2) நாகை கிளைக்கு கேரள மார்க்கம் செல்வதற்காக இரண்டு புதிய பேருந்துகள் வழங்கப்பட்டன. அவை வழங்கப்பட்ட இரண்டு மாதங்களிலேயே சென்னை நிர்வாகத்தால் எடுக்கப்பட்டுவிட்டன. அவற்றிற்குப் பதிலாக மிகவும் மோசமான இரண்டு பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். இதுகுறித்து அமைச்சர் அவர்கள் அறிவாரா என்றும், புதிய பேருந்துகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இப்போது அவற்றையெல்லாம் படிப்படியாக புதிய பேருந்துகளாக மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு

[1998 ஏப்ரல் 7

வருகிறது. கடந்த காலங்களில் விடப்பட்ட பேருந்துகள், இரண்டு ஆண்டுகளிலேயே மிகவும் மோசமான சூழ்நிலைக்கு வந்திருக்கிற காரணத்தால் பெரும்பாலான பேருந்துகள் இதுபோன்ற நிலையில் இருக்கின்றன. புதிய பேருந்துகள் மாற்றப்படும்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு வழித்தடங்கள் ஒதுக்கப்பட்டன. ஏராளமான கிராமங்களிலிருந்து எங்கள் கிராமத்திற்கு பஸ் விடுங்கள் என்று கோரிக்கைகள் வந்தன. அடுத்த ஆண்டு நிச்சயமாக விடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்து விட்டோம். எனவே, இந்த ஆண்டுக்கு மட்டுமாவது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தொகுதிக்கு இரண்டு வழித்தடங்கள் என்பதை நீட்டிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றி நன்றாகத் தெரியும். அதற்கு ஏற்பதான் முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இருந்தாலும், பொது மக்களுடைய தேவையைக் கருதி, அவ்வப்போது அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *169*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**169—**

### நகரப் பேருந்து இயக்குதல்

**7419*—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 7]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ரெட்டவயல், பழுக்காடு, ருத்திரசிந்தாமணி, சீகன்காடு, வெள்ளாளங்காடு ஆகிய ஊர்கள் வழியாகப் பெருமகளூருக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கைத் தடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்றுள்ளன. எனவே, கோரிக்கைத் தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருந்து பெருமகளூருக்கு நகரப் பேருந்து இயங்கி வருகிறது. ஆனால் ரெட்டவயல், பழுக்காடு, ருத்திரசிந்தாமணி, சீகன்காடு, வெள்ளாளங்காடு போன்ற கிராமங்கள் வழியாகப் பேருந்துகள் இயங்கவில்லை. எனவே, மேற்கண்ட கிராமங்களிலுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பெருமகளூருக்கு சென்றுவர ஏதுவாக அந்த வழித்தடத்தில் கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே இதுகுறித்த வரைபடத்தையே கொடுத்திருக்கிறார்கள். பேராவூரணியிலிருந்து ரெட்டவயல், பழுக்காடு, ருத்திரசிந்தாமணி, சீகன்காடு, வெள்ளாளங்காடு, கைகாட்டி போன்ற ஊர்களுக்கெல்லாம் பேருந்து வசதி இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் எந்த வழித்தடத்தில் கேட்கிறார் என்பது குறித்து அவர் தனியாக இது சம்பந்தமாக நிர்வாக இயக்குநரிடம் பேசி அதற்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா *170*, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

170—

## வாரச் சந்தையின் கூரைக் கொட்டகைகளை மாற்றுதல்

*7032—**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மேம்பாலம் அருகில் உள்ள சித்தர்காடு பகுதி வாரச் சந்தையின் கூரைக் கொட்டகைகளை மாற்றி, ஓட்டுக் கட்டடமாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சித்தர்காடு கிராமத்தில் உள்ள மூன்று வாரச் சந்தைகளும் அருள்மிகு ஆலந்துரையப்பர் திருக்கோயிலுக்குச் சொந்தமானவை. மேற்படி திருக்கோயிலில் நிதி வசதியின்மை காரணமாக, வாரச் சந்தையின் கூரைக் கொட்டகைகளை ஓட்டுக் கட்டடமாக மாற்றும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் இருக்கிற அந்தச் சித்தர்காடு வாரச் சந்தை ஒரு பிரசித்தி பெற்ற வாரச் சந்தை. எனவே, தனியார் மூலமாக அவர்களே முன்வந்து கட்டடம் கட்டி, வாடகைக்கு விடுகிற அளவிற்கு முன்வருவார்களேயானால், அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பொதுவாகச் சந்தைகள் அனைத்தும் ஏலத்தில் விடப்படுகிற நிலைதான் நீடித்து வருகிறது. அந்த வகையில்



அந்தக் கோயிலுக்கு இருக்கிற மொத்த வருமானமே ரூ. 68,655 தான். இதிலே சந்தையிலேயிருந்து வருகிற வருமானம் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ரூ. 30,300. ஏற்கெனவே அங்கே இருக்கின்ற நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய நிலுவையே இந்தக் கோயிலுக்கு ரூ. 30,000 இருக்கிறது. எனவே, பொது ஏலத்தில் விடுவது என்ற கொள்கையை மாற்ற வேண்டுமானால் கொள்கை முடிவு எடுத்த பிறகுதான் அதை உறுதி செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 171, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

171—

## பழநி தேவஸ்தானத்தில் பொறியியல் கல்லூரி

*8128—**திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி கள்ளிமந்தயம் அருகே பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் தரிசு நிலத்தில் பழநி தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் சார்பாக ஆண்கள்-பெண்கள் கலைக் கல்லூரி, அதேபோல ஆண்கள்-பெண்கள்

[1998 ஏப்ரல் 7

தொழில் நுட்பக் கல்லூரி, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் எல்லாம் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் பொறியியல் கல்லூரியில் படிக்க வேண்டுமானால் மதுரைக்கோ, திருச்சிக்கோ அல்லது கோயம்புத்தூருக்கோ செல்ல வேண்டிய நிலை உள்ளது. மாணவர்களின் நலன் கருதியும், இன்றைக்கு அந்தப் பகுதியில் கோயிலுக்குச் சொந்தமான போதுமான நிலம் 300 ஏக்கர் இருப்பதாலும், தேவையான நிதி இருப்பதாலும் அமைச்சர் மனம் வைத்தால் அங்கே பொறியியல் கல்லூரி அமைக்கலாம். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து அங்கு பொறியியல் கல்லூரியினை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் மனமும் வைக்கலாம், தேவைப்பட்டால் பணமும் வைக்கலாம். ஆனால், இந்த நிலம் 219.85 ஏக்கர் பரப்புள்ளது, ஒட்டன்சத்திரம் பகுதியிலே இருப்பது, ஏற்கெனவே 10-9-1996-இல் முழுவதும் வனத் துறைக்கு ஐந்தாண்டு கால குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. காரணம், அவர்கள் விலை உயர்ந்த தேக்கு, முந்திரி, பலா போன்ற மரங்களை வளர்த்து நல்ல பலனைத் தர முடியும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டு, இப்போது அது அவர்கள் கையில் இருக்கிறது. எனவே, அந்த இடத்தில் இதுபோன்ற நிறுவனத்தை அமைப்பதற்கான வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**172—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

*10319—**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



1998 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழிக்கு அருகில் உள்ள மயிலாடுதுறையில், ஏற்கெனவே 10,000 லிட்டர் கொள்திறனுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தக் குளிரூட்டு நிலையத்திற்கு நாளொன்றுக்கு சராசரியாக 750 லிட்டர் மட்டுமே பால் வரத்து உள்ள நிலையில் அருகிலுள்ள சீர்காழியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் வைத்தீஸ்வரன்கோயில், தில்லைவிடங்கன், சட்டநாதபுரம், குடவாசல், அனுமந்தபுரம், விளந்திடசமுத்திரம் மற்றும் பூம்புகார் தொகுதியிலுள்ள காவேரிப்பூம்பட்டினம் ஆகிய பகுதிகளில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் சீர்காழி தொகுதி, விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக உள்ளது. அங்கே மாடுகள் வளர்த்து பசும்பாலை எடுத்துவந்து பால் உற்பத்தியாளர் சங்கத்திலே விற்று வருகிறார்கள். போதுமான அளவு பால் கிடைக்கின்ற காரணத்தினால் இதனை மறுபரிசீலனை செய்து குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகருக்கு அருகே செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் 6 தான் உள்ளன. அங்கு நாள் ஒன்றுக்கு பால் உற்பத்தி 1,330 லிட்டர் தான் இருக்கிறது. சுமார் 10,000 லிட்டருக்கு மேல் உற்பத்தி இருந்தால் அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சீர்காழி பற்றிய துணை வினாவிற்கு வாய்ப்புத் தருவேன். நீங்கள் கேட்கப்போவது சீர்காழி பற்றியா, இல்லைதானே? உட்காருங்கள்.

வினா எண் 173, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 7

**173—**

**ஆரோஃபுட் பிஸ்கட் கம்பெனியைத் திறத்தல்**

*8804—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆரோஃபுட் (ட்ரு) பிஸ்கட் கம்பெனி கடந்த ஆறு மாத காலமாக மூடிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆரோஃபுட் நிர்வாகத்திற்கு எதிராக பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி, 16-9-1996 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக சமரச பேச்சுவார்த்தை நடைபெற்று 27-3-1997 அன்று ஏற்பட்ட 12(3) ஒப்பந்தத்தின்படுத்து, தொழிலாளர்கள் 31-3-1997 அன்று பணிக்குத் திரும்பினர். பின்னர் இவ்வொப்பந்தத்தை ஆட்சேபித்து, சில தொழிலாளர்கள் (சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்தவர்கள்) வன்முறையில் ஈடுபட்டதால், 24-4-1997 முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தது. இப்பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பயனாகவும், சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் தவிர எல்லா இதர தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கிணங்கவும், 12-5-1997 முதல் கதவடைப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பி, தொழிற்சாலை இயங்கி வருகிறது. தற்போது நிறுவனத்தில் தொழிலமைதி நிலவுகிறது.

*முற்பகல் 10-10*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதவடைப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு இப்போது தொழிற்சாலையைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், ஒரு தொழிற்



1998 ஏப்ரல் 7]

சங்கமானது அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கை குறித்து திருப்தி தெரிவிக்காமல், அது பேச்சுவார்த்தையிலே இருந்து விலகிக் கொண்டது. எனவே, அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் குறித்து ஏதேனும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறதா? அதேபோல, கதவடைப்பு நேரத்திலே பல தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். மனிதாபிமான அடிப்படையிலே அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரோஃபுட் தொழிற்சாலை பிஸ்கட் தயார் செய்யக்கூடிய தொழிற்சாலை. அங்கே எட்டுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு தொழிற்சங்கம் மறுக்கிறது என்பதற்காக 12(3) அக்ரிமெண்ட்டையோ அல்லது மற்ற காரியங்களையோ நாம் நிறுத்திவைக்க முடியாது. மேலும், எல்லாத் தொழிலாளர்களும் ஒப்புக்கொண்டு வேலைக்குப் போகிறார்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால், 66 பேர்கள் அவர்களாகவே வேலைக்கு வராத காரணத்தினால் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மீதம் உள்ள 32 பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஏதேனும் பிரச்சினை எழுப்பினால், Dispute raise பண்ணினால், இலாக்கா அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 174, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**174—**

**சார்பு நீதிமன்றம் தொடங்குதல்**

*10056—**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் சார்பு நீதிமன்றம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் சார்பு நீதிமன்றம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி ஒரு முக்கியமான நகரம். இதனைச் சுற்றி, சின்னதாராபுரம், ஜமீன் ஆத்தூர், ஈசநத்தம், மஞ்சவள்ளி, புதூர், பள்ளப்பட்டி போன்ற பெருநகரங்கள் நிறைய மக்களைக் கொண்டதாக இருக்கின்றன. இங்கே உள்ளவர்கள் எல்லாம் நீதி தேடி கரூருக்குப் போகவேண்டும் அல்லது திண்டுக்கல்லுக்குப் போகவேண்டும். எனவே, அவர்களுடைய வசதிக்காக எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய இந்த இன்றியமையாத வசதியை, அரவக்குறிச்சி மக்களுக்குக் கொடுக்கும் வகையில், அருள்கூர்ந்து அந்த இடத்திலே சார்பு நீதிமன்றத்தை அமைக்கக்கூடிய யோசனையை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வருவாய் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால், நீதித் துறையில் இன்னும் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகின்ற செயற்குறிப்பு அமலுக்கு வரவில்லை. அப்படி அமலுக்கு வரும்போது, அரவக்குறிச்சியில் District Munsif-cum-Judicial Magistrate Court ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவாரூர் போன்று புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுவிட்டனவா? இல்லையெனில், எப்போது அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பிரிக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களில் இன்னும் நீதிமன்ற மாவட்டங்கள் பிரிக்கப்படவில்லை. அப்படிப் பிரிக்கப்பட்டு விட்டாலும் அந்த மாவட்டங்களின் தலைநகரங்களில் மாவட்டத் தலைமை நீதிமன்றங்களை அமைப்பதில் பல சிக்கல்கள், கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதைப்பற்றி அரசு தீர ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. எனினும், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட நீதிமன்றம் அமைய வேண்டும் என்பது அரசின் விருப்பம்.



1998 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

*முற்பகல் 10-15*

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு சட்டத் துறை மானியக் கோரிக்கையின்போது, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பொறையாறிலே ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது இந்த ஆண்டு தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மானியக் கோரிக்கையின்போது, சில உறுதிமொழிகளை அரசு சார்பாக அறிவித்தேன் என்பது உண்மை. அதைச் செயல்படுத்துவதற்கு தீவிரமாக முயற்சி எடுத்து வருகிறேன். ஏனென்றால், நாங்கள் முன்னோடி திட்டத்தின்கீழ் சுமார் 20-க்கும் மேற்பட்ட நீதிமன்றங்களைக் கொடுத்தோம். அதை உயர்நீதிமன்றம் பயன்படுத்தவில்லை. அதைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக முறையான ரெகுலர் கோர்ட் அமைப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டோம். அனுமதி தருவதாக வாய்மொழியாகச் சொன்னார்கள். மறுபடியும் அமலுக்கு வரும்போது அந்த நீதிமன்றமும், முன்னோடித் திட்ட நீதிமன்றமும் வேண்டுமென்றால், ரெகுலர் நீதிமன்றங்களை நீங்கள் அமையுங்கள் என்று உயர்நீதிமன்றம் சொல்லிவிட்ட காரணத்தால், நிதித் துறை அதற்கு ஒத்துழைக்க மறுக்கிறது. என்றாலும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, நிதித் துறையை அணுகிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற அரசின் கொள்கைக்கிணங்க, விருதுநகர்

[1998 ஏப்ரல் 7

மாவட்டம், அருப்புக்கோட்டை வருவாய்க் கோட்டத்திலே, அருப்புக்கோட்டை நகரிலே இருக்கின்ற ஜெ.எம். கோர்ட், மற்றும் முன்சிப் கோர்ட்டுக்குக் கூடுதலாக ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கைகளை நாங்கள் படிப்படியாக நிறைவேற்ற ஆசைப்படுகிறோம். தமிழ்நாட்டில் இப்போது 96 சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் மொத்தம், 1991-92-லிருந்து 1995-96 வரை எட்டே எட்டு சார்பு நீதிமன்றங்கள்தான் திறக்கப்பட்டன. ஆனால் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இதுவரை 12 சார்பு நீதிமன்றங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அருப்புக்கோட்டையில் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்கு ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எப்போது செயல்பட இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்து அரசு ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்துள்ளது என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கவிருந்த கேள்விக்கு அமைச்சர் அவர்களே பதில் அளித்துவிட்டார்கள். அதாவது தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் எத்தனை புதிய சார்பு நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டன, சென்ற ஆட்சிக்காலத்தோடு அதை ஒப்பிட இயலுமா என்ற வினா எழுப்ப இருந்தேன். அமைச்சர் அவர்கள் பதில் அளித்து விட்டார்கள், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.



1998 ஏப்ரல் 7]

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்பே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. மோகனதாசன் அவர்கள் அந்தக் கேள்வியைத் தொடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் சரி, உட்காருங்கள்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும் இன்னொரு கேள்வி. பர்கூர் தொகுதியில் போச்சம்பள்ளி என்ற இடத்தில், சார்பு நீதிமன்றம் அமைப்பதாக கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. விரைவில் அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தடைகளைப் பற்றி ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன். அந்தத் தடையை நீக்கி மீண்டும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நிதித் துறையின் ஒத்துழைப்போடு செயல்படுத்துவோம் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. வீரப்பன்.

**திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேலம் மாவட்டத்திலிருந்து பிரித்து புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். சேலத்திலே 3 அடிஷனல் ஏ.டி.ஜே. கோர்ட்டுகள் நீண்ட நாட்களாக செயல்பட்டு வருகின்றன. நாமக்கல்லில், நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்திற்கு, அங்கே இருக்கின்ற அடிஷனல் கோர்ட்டை மாற்றி அமைப்பதில், அரசாங்கத்திற்கு பெரிய அளவில் செலவு இல்லை. ஆகவே நாமக்கல் மாவட்டத்தினுடைய மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்கின்ற வகையில், சேலத்திலே இருக்கின்ற ஏ.டி.ஜே. கோர்ட்டை நாமக்கல்லுக்கு விரைவில் மாற்றிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருவாய் மாவட்டத்தில், இன்னொரு பெரிய நகரத்திலுள்ள அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டுகளை மாற்றி அமைப்பதிலே அரசைப் பொறுத்த அளவிலே எந்த மாறுபாடான

கருத்துக்கும் இடமில்லை, என்றாலும் அதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு சிலர் பார்த்து, அதற்கு தடைக் கல்லாக இருக்கிற காரணத்தினாலேதான், அதைப் பரிசீலித்து அதற்குப் பிறகு இறுதி முடிவு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *175*, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**175—**

**வீட்டு வசதித் துறை மூலம் அலுவலர்கள் குடியிருப்பு**

**10885*—**திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் வீட்டு வசதித் துறை மூலம் அலுவலர்கள் குடியிருப்பு கட்டப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாநல்லூர், நகராட்சிப் பகுதியாகும். இந்தப் பகுதியிலே நகராட்சி ஊழியர்கள், வருவாய்த் துறை ஊழியர்கள், மருத்துவத் துறை ஊழியர்கள், மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் தங்குவதற்கான வீட்டு வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சுமார் *30, 40* கி.மீ. தூரத்தில் இருந்து அந்தப் பகுதிக்கு வந்து பணியாற்ற வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினாலே—அமைச்சர் அவர்களிடத்திலே நான் வேறு கோரிக்கை வைத்ததில்லை; ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியிலே அலுவலர்கள் குடியிருப்பு





கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்டத் தலைநகரங்களிலும் கோட்டத் தலைமை இடங்களிலும்தான் அரசு ஊழியர்கள் குடியிருப்புகள் கட்டுவதை இந்த அரசு ஒரு கொள்கையாகக் கொண்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கூத்தாநல்லூர் ஒரு நகராட்சிப் பகுதி என்பதால், அங்கு அரசு அலுவலர்களுக்கு மட்டும்தான் கட்ட முடியும்; நகராட்சி ஊழியர்களுக்கு இல்லை என்கின்ற வகையிலே, குடியிருப்பு கட்டும் செயல் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும், கூத்தாநல்லூரில் அலுவலர்கள் குடியிருப்புக்கு போதிய தேவையும் இருந்து, அரசுக்குச் சொந்தமான நிலமும் சுட்டிக்காட்டப்பட்டால், அங்கே அலுவலர் குடியிருப்பு கட்டுவது பற்றி தனியாகக் கருதப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *176*, திரு. வி. அய்யலுசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**176—**

**திருவேங்கடத்தில் தொழிற்பேட்டை**

**8494*—**திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், திருவேங்கடத்தில் தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது கோவில்பட்டி தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், திருவேங்கடத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேங்கடம் ஒரு பேரூராட்சி. அந்தப் பேரூராட்சிப் பகுதியில் பல கிராமங்கள் மானாவாரிப் பிரதேசம். பல ஆண்டுகள் மழை இல்லை என்று சொன்னால் தொழில் இல்லாமல் போய்விடுகிறது.

சிவகாசியிலிருந்தும், கோவில்பட்டியிலிருந்தும், இராஜபாளையத்தி லிருந்தும், சங்கரன்கோவிலிலிருந்தும் நல்ல ரோடு வசதி இருக்கக்கூடிய ஒரு முக்கியமான சென்டராக அந்தப் பேரூராட்சி இருக்கிறது. அந்தப் பேரூராட்சிப் பகுதியில் மக்களுக்கு விவசாய வேலைகள் 3 மாதங்கள்தான் இருக்கும். மீதி நேரங்களில் வேலைவாய்ப்பு இல்லாமல் சங்கடப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கோவில்பட்டியிலே கிட்டத்தட்ட 85.85 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, தொழிற்கூடங்கள் எல்லாம் கட்டப்பட்டு முழுமையாக வழங்கப்பட்டு இருக்கின்றது. அதிலே இன்னும் மேம்படுத்தப்பட்ட பொது மனைகளாக 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. இப்போது, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அங்கே அந்த மனைகளை மேம்படுத்தி வருங்காலத்திலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, திரு. விளவங்கோடு மணி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**177—**

### காந்தி மண்டபத்தைப் பழுதுபார்த்தல்

*8663—**திரு. டி. மணி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரையிலுள்ள காந்தி மண்டபம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா? அதைப் பழுதுபார்க்க இந்த நிதியாண்டில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ): ஆம். 1997-98 ஆம் நிதியாண்டில் ரூ. 2.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முற்றாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**திரு. டி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் துணை வினா என்ன இருக்கிறது? நீங்கள் கேட்டதற்கு ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு; வேலை முடிக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்துள்ளார். அப்புறம் என்ன துணை வினா கேட்கப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

அடுத்து, வினா எண் 178, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**178—**

### கோயம்புத்தூரில் சிறுவர் உலகம்

*10427—**திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் அன்னை சந்தியாவின் பெயரில் நிறுவப்படவிருந்த சிறுவர் உலகத்தின் இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூரில் அன்னை சந்தியா பெயரில் சிறுவர் உலகம் மற்றும் பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்காக அரசு நிலத்தை தனியாருக்கு குத்தகைக்கு விட்டதில் பல முறைகேடுகள் நடந்திருப்பதால் அவற்றைப் பற்றி புலன் விசாரணை செய்யுமாறு குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவிடம் முதல் தகவல் அறிக்கை அரசால் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது விசாரணையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. அரசு கடைசியாக ஆட்சியில் இருந்தபொழுது கோவை மாநகரிலிருந்து விமான நிலையத்திற்குச் செல்கின்ற வழியில் சிறுவர் உலகம், தீம் பார்க் ஒன்றை நிறுவுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அது தொடர்பாக....

[1998 ஏப்ரல் 7

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் கேள்வியாகக் கேட்டிருக்கிறீர்களே? துணை வினா என்ன? அதைக் கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்குகளை விரைவாக முடித்து, சீக்கிரமாக அந்தச் சிறுவர் உலகத்தைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த இடம் மிகவும் விலையுயர்ந்த இடம். அது எவ்வளவு குத்தகைக்கு விடப்பட்டது? அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை சந்தியா பெயரில் 'தீம் பார்க்' என்ற குழந்தைகள் கேளிக்கைப் பூங்கா ஒன்றை நிறுவிட, கோவையில் 25.19 ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திடம் அந்தப் பூங்காவை அமைக்கும் பணியை ஒப்படைத்து வழங்கப்பட்ட ஆணைக்குப் பிற்பாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தன்னால் அந்தப் பணியை நிறைவேற்றிட முடியாது என்று தெரிவித்ததன்பேரில் மேற்கண்ட திட்டத்தைத் தனியார் நிறுவனத்தின் மூலமாகச் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சி கிராமத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25.19 ஏக்கர் நிலத்தில் நட்சத்திர அந்தஸ்து உடைய ஓட்டல், வணிக வளாகம் கட்டுதல், மற்றும் குழந்தைகள் பொழுதுபோக்கு அரங்கம் ஆகியவை கட்டுவதற்கு 20 ஏக்கர் நிலம் கீழ்க்கண்ட 3 நிறுவனங்களுக்கு 33 ஆண்டுகளுக்குக் குத்தகையாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களின் பெயர்கள், (1) நியூ கெனில் வொர்த் ஹோட்டல் பிரைவேட் லிமிடெட், (2) ஜென்னிஸ்



1998 ஏப்ரல் 7]

ரெசிடென்சி, (3) ஜெம்போஸ்ட் பார்க் பிரைவேட் லிமிடெட் ஆகிய மூன்று நிறுவனங்கள் இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கான அனுமதி பெற்றன. ஆனால், தனியார் நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கியதில் பல முறைகேடுகள் நடந்திருப்பதும், அதனால் அரசுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்ததால், இதுகுறித்து குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவு குற்ற எண் 7/97-இல் வழக்கு ஒன்று பதிவு செய்து அதன்படி விசாரணை நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**179—**

### நிதி நிறுவனம் தொடங்குதல்

***5151—திரு. சி.டி. தண்டபாணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஒரு நிதி நிறுவனம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன். 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தொழில் நடத்த சலுகை வட்டியில் கடன் வழங்கிட வங்கிக்கு நிகராக தாட்கோ மூலம் ஒரு அமைப்பை ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வண்ணம் தாட்கோ மேலாண்மை

[1998 ஏப்ரல் 7

இயக்குநர் மற்றும் அரசுச் செயலாளர் ஆகியோரிடம் வங்கிக்கு நிகரான ஒரு அமைப்பை ஏற்படுத்திடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்புவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விரைவில் ஒரு நிதி அமைப்பை ஏற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்படுத்தப்படவிருக்கின்ற அந்த நிதி நிறுவனத்தினுடைய அடிப்படை நடைமுறைகள் எதுவாக இருக்கப் போகின்றது? வட்டி விகிதங்கள் எவ்வாறு இருக்கும் ? அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அல்லது இளைஞர்களுக்கு கடன் கொடுக்கின்ற நேரத்தில் அதற்கு ஈடாக சொத்து தரவேண்டும் என்கின்ற ஒரு கட்டாயம் விதிக்கப்படுகின்றது. அதன் காரணமாகவே பல இளைஞர்கள் சுய வேலை ஏற்படுத்துகின்ற முயற்சியிலிருந்து விலகக்கூடிய கட்டாயம் இருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் அது எந்த அளவில், எந்த வகையிலே எல்லோருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே செய்யப்படும்? இதற்கிடையில், நேஷனல் எஸ்.சி./எஸ்.டி. நிதி கார்ப்பரேஷன் என்கின்ற ஒரு நிறுவனம் இப்போது நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய தாட்கோவுக்கு ஓரளவு நிதி வழங்கிக் கொண்டிருக்கின்றது. அது தொடர்ந்து சென்னை நகரில் மட்டும் அல்லாமல், பிற மாவட்டங்களுக்கும் வழங்கப்படுமா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த நிதி நிறுவனத்தின் மூலமாக எப்படி நிதி வழங்கப்படும் என்பதற்கு, இப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அதற்குரிய ஆய்வு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இனிமேல்தான் குழந்தை பிறந்து, அது எழுந்து, வளர்ந்து, நடந்து ஓட வேண்டியிருக்கிறது. இருந்தாலும், தொழில் நுட்ப ஆலோசனை அமைப்பு என்ற ஒன்று இருக்கிறது. 'IFCOT' என்ற நிறுவனத்தின் மூலமாக ஆலோசனை பெற்று அதற்குரிய வழிவகை ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 7]

*வினா எண் 180, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.*

**180—**

## மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்

*9589—**திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கடற்கரையோடு தொடர்புள்ள ஆறுகளைத் தெரிவு செய்து, அங்கு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொதுவாகவே சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் ஆறு கடலோடு கலக்கும் முகத்துவாரங்களின் முன்பாக தகுதியான இடம் தேர்வு செய்து அமைப்பது தொன்றுதொட்டு நடைபெறும் செயலாகும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பக்கிங்காம் கால்வாய், கூவம் கால்வாய், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை முகத்துவாரம், நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார், காவிரி ஆறு இணைகின்ற வழி அந்தத் துறைமுகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம் போன்ற கடல் பகுதியில் இணைகின்ற இந்த முகத்துவாரங்களில் எல்லாம் சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கின்ற, உருவாக்குகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்துவதற்கு முதன்முதலாக பொறியியல் ஆய்வு நடத்தப்படும். அது பெங்களூரில் உள்ள மத்திய கடலோர பொறியியல் மையத்திடம் ஒப்படைக்கப்படும்.

[1998 ஏப்ரல் 7

அப்படி ஒப்படைத்து, மாதிரி ஆய்வுகள் சில இடங்களில் நடத்தப்பட்டு, ஆற்காடு துறை, வேதாரண்யம் ஆற்றிலும், குலசேகரப்பட்டினம், கருமணி ஆற்றிலும், பரங்கிப்பேட்டை வெள்ளாற்றிலும், திருமுல்லைவாசல் உப்பனாற்றிலும், பழையாறு, கொள்ளிடக் கரையிலும் மாதிரி ஆய்வுகள்தான் நடத்தப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு, விரிவான ஆய்வுகள் பொருளாதார ரீதியாகவும் நடத்தப்பட்டு, அதன்பின்தான் அரசு கருத்துக்களைத் தெரிவு செய்து, பின்னர் மத்திய அரசுக்கு இதற்கான பிரேரணை அனுப்பப்பட்டு, அதற்குப் பிறகுதான் அமைக்க முடியுமா என்பதை அரசு தெரிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூத்துக்குடி திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் புன்னக்காயல் என்ற இடத்தில் முந்தைய அரசு காலத்தில் தனியார் துறைமுகங்கள் கட்ட அனுமதி கொடுத்திருந்தார்கள். அனுமதி கொடுத்த நாளிலிருந்து இதுவரைக்கும் மக்கள், அந்த இடத்தில் துறைமுகம் வந்தால் ஏறத்தாழ 5,000 மீனவக் குடும்பங்கள் பாதிக்கும் என்று அன்றிலிருந்து, இன்று வரைக்கும் ஆய்வு செய்யக்கூட விடாமல், தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நம்முடைய அரசு வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்து இருக்கிறார்கள். அப்பிராணி 5,000 மீனவக் குடும்பங்கள் பாதிக்காமல் இருக்க, முந்தைய அரசு தனியார் துறைமுகத்திற்குக் கொடுத்த அனுமதியைத் தடை செய்ய ஆவன செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை மூலம் 20-4-1995 நாளிட்ட அரசு ஆணை பல்வகை எண் 95-ன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், புன்னக்காயலில் சிறிய துறைமுகம் அமைப்பது குறித்து, வர்த்தக ரீதியாக செயல்பட, கடல் ஜெட்டிபோல அமைப்பு கட்டுவதற்காக மேற்கூறிய ஆய்வுகள் நடத்த தனியாரிடம் அரசு ஒப்படைத்தது. அப்படி ஒப்படைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில், அங்கே மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அங்கே துறைமுகம் கட்டுவதானால், மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கு 7 அல்லது 8 கிலோ மீட்டர் தூரம் வரை படகில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அங்கு வலை பாய்ச்சுகிற இடத்தில், கப்பல்கள் வந்து போய் கொண்டிருந்தால், மீனவர்களுக்கு, அங்கே மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும் என்ற நிலை உள்ளது. இதுபோன்ற



1998 ஏப்ரல் 7]

கருத்துக்கள் அரசுக்கு வந்துள்ளன. ஆகவே நமது தமிழக அரசு மீனவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்தத் துறைமுகத்தைக் கட்ட முடியுமா என்பதைக் கருணையுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து, கேரள மாநிலத்திற்கு மீன் பிடிக்கச் செல்லும்போது, மீனவர்கள் அங்கே மீன் பிடிக்கக் கூடாது என்ற பெரும் பிரச்சினையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தூண்டில் வளைவு அமைத்துத் தருவார்கள் என்று சொன்னால், பல்லாயிரக்கணக்கான மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற சாத்தியக்கூறுகள் ஏற்படும் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அங்கே தெளிவான ஆய்வுகள் பலமுறை நடத்தியாகிவிட்டது. எனவே, அதற்கான ரிப்போர்ட் என்ன வந்திருக்கிறது? அங்குள்ள பல்லாயிரக்கணக்கான மீனவர்களுடைய வாழ்விலே வளம் ஏற்றுகின்ற விதத்தில் அந்தப் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அல்ல, ஒரு தூண்டில் வளைவு அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்ன முட்டத்தில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகத்தை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதேபோல் மீனவர்களுக்கான பிரச்சினை இருக்கிறது என்பது உண்மை என எங்களுக்குத் தெரியும். இருந்தாலும், மீன்பிடி தங்குதளம் - தூண்டில் வளைவு அல்ல, தங்குதளம்-கட்டுவது பற்றி, ஆய்வுகள் நடத்தப்பட்டு, இன்னும் எங்களுக்கு அதுபற்றி கருத்துரு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வந்தவுடன், பொருளாதாரத்தை மனதில் கொண்டு, இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன், உங்கள் தொகுதிக்கும், துறைமுகத்திற்கும் என்ன தொடர்பு?

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோர மீனவர்களுக்கு மீன் வளத் துறை மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல, ஆற்றுப் பகுதியில் உள்ள மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும், வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சென்ற நிதிநிலை அறிக்கையில் உள்நாட்டு மீனவர்களுக்கும் 500 வீடுகள் கட்டித் தருவதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்த 500 வீடுகளும் ஆண்டு முழுவதும் உள்நாட்டில், அதாவது ஆறுகளில் மீன்பிடிப்பவர்களுக்கு முதல் தவணையாக இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) வேளாண்மை மானியக் கோரிக்கை தொடர்பாக உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மூன்று அறிவிப்புகளை வெளியிடுகிறேன். இன்று விவசாயத் துறை மானியக் கோரிக்கை. இந்த ஆண்டு தமிழகத்திலே அமோக விளைச்சல் ஏற்பட்டதன் காரணமாக நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்குகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டாவது அறிவிப்பு. இன்று நடைபெறுவதாக இருந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, 16-4-1998 அன்று நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### பால் விற்பனை மற்றும் கொள்முதல் விலை உயர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து, இந்த அவையில் தங்கள் அனுமதியுடன் ஓர் அறிக்கையை அளிக்கிறேன்.

பால் உற்பத்தியாளர் பிரதிநிதிகள் பால்விலை உயர்வு குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் 6-4-1998 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இது தொடர்பாக கடந்த அக்டோபர் திங்கள் முதல் பல்வேறு கட்டங்களில் உற்பத்தியாளர்கள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, பால் உற்பத்திப் பெருக்கத்தை கவனத்தில் கொண்டு, பசும்பால் கொள்முதல் விலையை தற்போதுள்ள லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 51 காசிலிருந்து 9 ரூபாயாகவும், எருமைப்பால் விலையை தற்போதுள்ள லிட்டர் ஒன்றுக்கு 9 ரூபாய் 45 காசிலிருந்து 10 ரூபாய் 94 காசாகவும் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் கொள்முதல் விலை உயர்வின் அடிப்படையில், பால் விற்பனை விலை தற்போதுள்ள லிட்டர் ஒன்றுக்கு 9 ரூபாய் 50 காசிலிருந்து 11 ரூபாயாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. அக்டோபர் 1996-இல் பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டபோது, விற்பனை விலை 1 ரூபாய் 50 காசாக உயர்த்தப்பட்டது என்பது நினைவு இருக்கலாம். ஆனால், இந்தமுறை பால் விற்பனை விலை, கொள்முதல் விலை உயர்வு அளவுக்கு மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேற்குறிப்பிட்ட விலை உயர்வுகள் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றன.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, Point of Order.

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கையின்மீது விவாதம் கூடாது. அதனால் Point of Order கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடு) Nothing, No. I am not permitting you. Sit down.

அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல்....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I am not allowing any clarification. (Interruption) உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே, இந்தமாதிரி இஷ்யூவைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இஷ்யூ பற்றி விவசாய மானியத்திலே பேசுங்கள். இப்போது உட்காருங்கள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எனக்குத் தெரியும். திரு. ப. ரங்கநாதன், உட்காருங்கள்.

(உறுப்பினர்கள் திரு. சி ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் நின்று கொண்டு இருந்தனர்)

I am asking you to sit down. Please sit down. (Interruption) Please sit down, I say. (Interruption) I am going to take action against you.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு—(அறிமுகம் செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1998 ஏப்ரல் 7]

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (இ) மானியக் கோரிக்கைகள், 1998-99, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அறிவிப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the Financial year 1998-99."

[1998 ஏப்ரல் 7

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

### (ஆ) கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1998-99-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.739,00,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 697, திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்ட விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 544, திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், விவசாயத்தையே நம்பி வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பெரும்பான்மையாக வாழும் பகுதியாகவும் உள்ளதால், ஜீவன்தாரா திட்டத்தில் கிணறு வெட்டி பயனடைய அதிக



1998 ஏப்ரல் 7] [திரு. ஜி.கே. மணி]

அளவு பயனாளிகளுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 6, திரு. கே. சுப்பராயன்.*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதிதாக வணிக வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 405, திரு. வி.கே. லட்சுமணன்.*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மலர்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 24, திரு. டி. மணி.*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்திற்கு அதிகம் தேவைப்படும் பருத்தியை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அரசு தேவையான தொழில் நுட்பங்களையும், வீரிய விதைகளையும், மானியத்தையும் அதிக அளவில் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 386, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்தினை விவசாயிகள் நன்கு அறிந்து பயனடையும் விதத்தில் செயல்படுத்த சொட்டு நீர்ப் பாசனத் தொழில் நுட்ப அலுவலர்கள் மூலம் முகாம் நடத்த வேண்டியதன் அவசியம்" குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 292, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி தொகுதியிலுள்ள எல்லா விவசாயப் பெருமக்களும் பயன்பெறும் வகையில் 'பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை' நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 528, திரு. ந. கருப்பண்ண உடையார்.



***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்து ஆலைக்கு அனுப்பும் கரும்புப் பயிருக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் வழங்க வேண்டும் என்பது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 356, திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 741, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 654, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயிகளுக்கு நெல் அறுவடை செய்வதில் ஏற்படும் கஷ்டங்களைப் போக்க நெல் அறுவடை இயந்திரம் வழங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்.".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 434, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய விவசாயக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 655, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தண்டராம்பட்டு ஒன்றியத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 757, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகையில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 107, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கடலூர் மாவட்டத்தில் பரவலாக சிறு விவசாயிகளால் பயிரிடப்படும் வெற்றிலை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரியினைக் குறைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 105, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஆர்.எஸ். மாத்தூரில் துணை வேளாண்மைக் கிடங்கு அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.739,00,18,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 868, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 593, டாக்டர் இ. எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

**(ஆ) கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.36,39,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 341, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு அனைத்து விதைகளையும் மானிய விலையில் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 553, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் நிலக்கடலை சாகுபடி அதிக அளவில் உள்ளதால் நிலக்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு விதைக்கடலை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஜிப்சம் போன்றவற்றை மானிய விலையில் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 295, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் சுற்று வட்டாரத்தில் மல்லிகைப் பூ அதிகமாகப் பயிரிடப்படுவதால் மல்லிகைப் பூ விளைச்சலை அதிகப்படுத்தும் உத்திகளைக் கையாள சேலத்தில் ஒரு ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 512, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி விவசாயிகள் வாங்கும் டிராக்டர் மற்றும் டிரெய்லர்களுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு வழங்கும் மானியத் தொகை போல மற்ற இனத்தவர்களுக்கும் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 773, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 446, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இயந்திர கலப்பை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 674, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெல் விலையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 776, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 270, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறையில் முன்பு போலவே உதவி வேளாண்மை அலுவலர் பணிக்கு வேளாண் ஈராண்டு டிப்ளமா படித்தவர்களை 70% நேரடியாக நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 274, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி செந்துறையில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,39,24,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 359, திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ இந்தப் பேரவையில் வேளாண்மைக் கொள்கை குறித்து நான் பேசியதாகக் கருதி அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வழங்குகின்ற நல்ல கருத்துக்களுக்குப் பின்னால், இறுதியாக என்னுடைய பதிலுரையை நிகழ்த்த வாய்ப்பளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம். 14 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள்.

---

@ 153 முதல் 303 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



ஆகவே, 10 நிமிடங்களுக்கு மேல் யாருக்கும் அனுமதி கொடுக்கக்கூடாது என்று பேரவைத் துணைத் தலைவருக்கு என்னுடைய கருத்தைத் தெரிவித்து, திரு. க. மணிவர்மா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மங்களகரமான மஞ்சள் ரோஸ் வரவேற்கும் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 95 இலட்சம் டன் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற அரசின் அறிவிப்பை வரவேற்கின்றேன். விவசாயிகளின் கடன்களுக்குக் கால நீட்டிப்பு வழங்கி இருப்பதை வரவேற்கும் அதேநேரத்தில் விவசாயிகளுக்கு நிலவரி இரத்து செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், விவசாயிகளின் நிலைக்கு இந்த அறிவிப்பானது, 'யானைப் பசிக்கு சோளப்பொரி' வழங்குவதாக உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுநாள் வரையிலே 75 சதவிகிதம் நிலவரி வசூல் செய்துவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏழைகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்து, அந்த விவசாயிகளுக்கு வாழ்வளித்தார்கள். நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற விவசாயிகளின் நிலை மிக மோசமாக உள்ளது. முதுகெலும்பு வளைந்த விவசாயியாக, செயல்படாத மனிதனைப் போன்ற நிலைக்கு ஆளாகி உள்ளார்கள். காரணம், நெல் உற்பத்திச் செலவு ஏக்கருக்கு ரூ. 6,000 ஆக இருக்கிறது. மகசூல் ரூ. 5,000-க்குதான் கிடைக்கிறது. கரும்பு உற்பத்திச் செலவு ஏக்கருக்கு 20,000 ரூபாய் வரையில் ஆகிறது. கரும்பு மகசூல் கேள்விக்குறியாக இருக்கின்ற நிலையிலே விவசாயிகள் வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நெல் விலையைக் குவிண்டாலுக்கு 750 ரூபாயாக உயர்த்தி, கரும்பு விலையை டன்னுக்கு 1,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாகக் கணக்குப் போட்டால்கூட, ஒரு லிட்டர் மினரல் வாட்டர் 12 ரூபாய்க்கு விற்பனை ஆகின்றது. ஒரு கிலோ நெல் 4¼ ரூபாய்க்குத்தான் விற்கப்படுகின்றது. ஒரு கிலோ கரும்பு விலை ரூ. 7.50 ஆக இருப்பதையும், இந்த நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். உழுது, உழுது ஏழை ஆகின்ற விவசாயப் பெருங்குடி மக்களை நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை 1-ல் பதிவு செய்யப்பட்டுள்ள கரும்புகள் அனைத்தும் இந்த ஆண்டு அரைவைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது கடினம் என்று தெரிய வந்துள்ளது. அவற்றை வேறு ஆலைக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற தண்டராம்பட்டுத் தொகுதியை விவசாயிகளுக்காக ஒரு தனித் தாலுக்காவாக ஏற்படுத்த வேண்டும். இன்னல்படுகின்ற ஏழை விவசாயிகளுக்காக இதை நீங்கள் தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் எப்போது வரும் என்று இரவு பகலாகக் கண்விழித்து காத்துக்கொண்டிருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1-ல் கரும்பு வெட்டும் ஆலையில் முறைகேடு இருப்பதாகத் தெரிகிறது. எங்கள் பகுதி ஆலையின் வடக்கு, திருவண்ணாமலையின் வடக்கு, தெற்கு தச்சம்பட்டின் வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். டிசம்பர் மாதம் வரையிலான பணத்தை மட்டும்தான் இதுவரையிலே விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். பாக்கித் தொகையை உடனே வழங்க ஆவன செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து சுமார் 10, 15 ஆண்டுகளாகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை. வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10,000 ரூபாய் செலுத்துபவர்களுக்குக்கூட இதுவரையிலே மின் இணைப்பு வழங்காமல் இருக்கிறார்கள். பணம் கட்டியவர்கள் ஓராண்டிற்கு மேலாகக் கூட காத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையைப் பொறுத்த அளவிலே, அதிகாரிகள், ஊழியர்கள் சிறப்பாகச் செயல்படுகின்றார்கள். அதே நேரத்தில், வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் செயலாளர் வாரம் ஒரு முறை தண்டல் வசூலிப்பது போல் ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் வசூல் செய்கின்றார் என்று அந்தப் பகுதியில் இருக்கின்றவர்கள் சொல்கின்றார்கள். அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10-50

சாத்தனூர் அணையின் வலதுபுற, இடதுபுறக் கால்வாய்களிலிருந்து பிரிந்து செல்கின்ற கிளைக் கால்வாய்களைத் தூர் எடுத்து, செப்பனிட்டு விவசாயத்திற்கு நல்ல முறையில் பாசன வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தானிப்பாடி அரசினர் மருத்துவமனையில் கட்டடங்கள் நல்ல நிலையில் இருந்தும், மருந்துகள் இருந்தும், டாக்டர்கள், ஊழியர்கள் சரியாக வராத காரணத்தினால், மக்கள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள். பாம்பு கடித்தால்கூட உடனடியாகச் சிகிச்சை பெற முடியாமல் இறந்து விடுகிறார்கள். எனவே, இக்குறையைப் போக்கி, மருத்துவமனையை நல்ல முறையில் இயங்கச் செய்ய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணை அமைந்து இருக்கின்ற சாத்தனூர் கிராம மக்களுக்கே இதுவரை குடிநீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த ஆண்டே சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மதிப்பீடு செய்வதற்கு நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால், வேலூரில் மதிப்பீடு செய்யும் குடிநீர் நிர்வாகப் பொறியாளர் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், காதில் போட்டுக்கொள்ளாமல் இருக்கிறார். எனவே, சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சதாகுப்பம் அருகில் பெண்ணையாற்றில் தண்ணீர் எடுத்து வாணாபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 30 கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு—தானிப்பாடி சாலையில் உள்ள கொளமஞ்சனூர் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். மழைக் காலங்களில் அப்பகுதியில் வாழ்கின்ற இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வெளி மாவட்டத்தின் தொடர்பு இல்லாமல் அவதிப்படுகின்றனர். அக்குறையைப் போக்க மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தானிப்பாடி, எறையூர் ஆகிய ஊர்களில் தீயணைப்பு நிலையங்கள் இருந்தால்தான் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத்

தெரிவிப்பதோடு, தச்சம்பட்டில் ஒரு புறக்காவல் நிலையமும், பத்திரப் பதிவு அலுவலகமும் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு பகுதி, முழுக்க முழுக்க விவசாயிகள் நிறைந்த பகுதி என்பதால், அதிகமான அளவிலே கரும்பு பயிரிடுகின்ற அந்தப் பகுதியிலே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரத்தில் பழம்பெரும் தியாகி, சுதந்திரத் தியாகி மறைந்த திரு. அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் வாழ்ந்த வீட்டை சுதந்திரப் பொன் விழா ஆண்டை முன்னிட்டு நினைவு இல்லமாக மாற்ற வேண்டும்.

தண்டராம்பட்டு ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்த வேண்டும். வாணாபுரம், சு. வாளவெட்டி, காட்டாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையங்களை 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி இல்லாமல் நலிந்து கிடக்கின்ற ஊராட்சிகளுக்கு அரசே நிதி ஒதுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் பண்டிதப்பட்டு, கொளக்குடி கம்பப்பட்டு போன்ற ஊராட்சிகள் எல்லாம் நிதி இல்லாமல், மின் கட்டணம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு வசதி இல்லாமல் நலிந்து கிடக்கின்றன. இந்த ஊராட்சிகளுக்கு அரசே நிதி உதவி வழங்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, தண்டராம்பட்டை, தனி வட்டமாக அறிவிக்க வேண்டும். சாதாரணச் சான்றுகள், பள்ளிச் சான்றுகள் வாங்க வேண்டுமென்றால்கூட சுமார் 70 கிலோ மீட்டர் தூரம், 3 பேருந்துகள் மாறி, மாறி ஒரு நாள் முழுவதும் பயணம் செய்து சான்றுகள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அவதிப்படுகின்ற மக்களுக்கு உதவும் வகையில், தண்டராம்பட்டில் தாலுக்கா அலுவலகம் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கடந்த கால ஆட்சியில் சீரழிந்து கிடந்த சாத்தனூர் அணையின் பூங்காக்கள், மின் விளக்குகள் இப்போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் மிகச் சீராக, சிறப்பாக,



பசுமை நிறைந்த நிலையில் காட்சி அளிக்கின்றன. இந்த ஆண்டு மேலும் நிதி ஒதுக்கீடு செய்து அந்த அணையைச் சிறப்பாகப் பாதுகாக்கக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்.

**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது பேசக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்கு முதலில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-55*

இன்றைக்கு, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்கின்ற வகையில், இரண்டாவது பசுமைப் புரட்சிக்குச் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையில், இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசக்கூடிய நிலையைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன்.

ஏசுபிரான் அவர்கள், 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கேட்காமலேயே விவசாயிகளுக்கு 1989-90 ஆம் ஆண்டில் இலவச மின்சாரத்தை வழங்கினார்கள். இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் விவசாயிகளுடைய கஷ்டத்தை உணர்ந்து, இலவச மின்சாரம் என்ற உன்னதத் திட்டத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தந்தார்கள். இந்த ஆண்டு விவசாயிகளுக்கு 43 கோடி ரூபாய்க்கான நில வரியை இரத்து செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர், தேசிய விவசாய வளர்ச்சி வங்கியோடு— 'நபார்டு' வங்கியோடு பேசி, எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டும்கூட அந்த நிர்வாகம் ஒத்தக்கொள்ளாத காரணத்தால், 1994 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தம் என்று தெரிய வந்துள்ள காரணத்தால் நம்முடைய தலைவர் அவர்கள் வேறு வழியின்றி விவசாயிகளுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்தோடு இன்றைக்கு அவராகவே அபராத வட்டியை 50 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

இன்றைக்கு மத்திய காலக் கடன்களை எல்லாம் நீண்ட காலக் கடன்களாகவும், குறுகிய காலக் கடன்களை எல்லாம் மத்திய காலக் கடன்களாகவும், அதைப்போல நீண்ட காலக் கடன்களுக்கு அதற்கு மேலும் காலம் நீட்டித்துத் தரக்கூடிய வகையில், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த ஏழை விவசாய மக்கள் சார்பாக இந்த நேரத்தில் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விவசாயத் தொழில் செய்கின்ற ஏழை விவசாயக் கூலிகள் படும் இன்னல்கள் எல்லாம் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவார்கள். அந்த வகையில், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த ஏழை விவசாயக் கூலிகளுடைய, இந்தத் தொழிலாளர்களுடைய நலனை மனதில் கொண்டு அவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குகின்ற வகையில், இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு முதியோர்களுக்கு எல்லாம் உதவித் தொகை வழங்குவதைப்போல, இந்த ஏழை விவசாயக் கூலிகளுக்கும், இந்தத் தொழிலாளர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் தந்திட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குத் தொகுப்பு வீடுகளை ஏழை, எளிய மக்களுக்கு எல்லாம் நம்முடைய அரசு கட்டிக் கொடுப்பதைப்போல, ஏழை விவசாயக் கூலிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அதைப்போல, 5 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்து இருக்கிற விவசாயிகள் தங்களுடைய பண்ணையில் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக முடிவது இல்லை. ஏனென்று சொன்னால், அவர்கள் 5 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற காரணத்தால், அவர்களுக்கு அந்தத் தொகுப்பு வீடுகள் பெற வழியில்லாத காரணத்தால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, கண்டிப்பாக அவர்கள் தொகுப்பு வீடுகள் பெறுவதற்கான முறையில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு ஏழை விவசாயி, ஒரு கிராமப்புறத்தில், ஒரு மலை அடிவாரத்தில், கீற்றுக் கொட்டகையில் குடியிருக்கிறான் என்று சொன்னால், அதிலே பாம்பு, தேள் போன்ற விஷப் பூச்சிகள் இருக்கிற



காரணத்தால் அந்த வீடுகளை மாற்றி அமைப்பதற்கு அவனுக்கு வசதி, வாய்ப்புகள் இல்லை. அதே நேரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய கூட்டுறவு வங்கிக்குச் சென்று கடன் கேட்டால்கூட அவனுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மானியமாக வழங்கி, அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஒரு விவசாயி, தான் எந்தப் பொருளை வாங்கினாலும், அது உரமாக இருந்தாலும், யூரியாவாக இருந்தாலும், பூச்சி மருந்தாக இருந்தாலும், விதையாக இருந்தாலும், அதற்கெல்லாம் விலை நிர்ணயம் உண்டு. ஆனால், ஒரு விவசாயி இன்றைக்கு ஒரு பொருளை உற்பத்தி செய்கிறான் என்று சொன்னால், அதற்கு ஒரு விலையை அவன் நிர்ணயிக்க முடியாது. அவன் உற்பத்தி செய்கின்ற எந்தப் பொருளுக்கும் அவன் விலை நிர்ணயம் செய்ய முடியாது. ஆனால், இதையே காரணமாக வைத்துக்கொண்டு அவன் உற்பத்தி செய்கின்ற பொருளைக் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய நிலை எல்லாம் சில நேரங்களில் ஏற்பட்டு விடுகிறது. அதற்காக இன்றைக்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை ஏற்படுத்தி, அதிலே அவன், தான் உற்பத்தி செய்கின்ற பொருட்களை, தனக்குக் கட்டுப்படியாகும் விலை வரும் வரையில், அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலேயே வைத்திருந்து, கட்டுப்படியாகக்கூடிய விலை வரும்பொழுது விற்றுப் பயன் பெறத்தக்க வகையிலே ஏற்பாடு செய்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

இன்றைக்கு ஒரு விவசாயி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் ஒரு டிராக்டர் வாங்க வேண்டுமென்று சொன்னால், 5 ஏக்கர் நிலம் இருந்தால் டிராக்டர் வாங்கிவிடலாம். ஆனால், ஒரு நில வள வங்கியிலே கடன் பெற வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 8 ஏக்கர் நிலம் இருந்தால்தான், அந்த ஏழை விவசாயிக்கு கடன் தருகிறார்கள். தேசிய மயமாக்கப்பட்ட வங்கி என்று சொன்னால், ஒரு ஏக்கர் இருந்தாலும் போதும் அல்லது ஒரு வீடு போன்றவை இருந்தாலும் போதும். அதை அடமானம் வைத்தால்கூட அவர்களுக்கு இன்றைக்குக் கடன் தரத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், நில வள வங்கி என்று சொன்னால், அது வேளாண்மைக்காக,

விவசாயிகளுக்காக இருக்கக்கூடிய வங்கி; அந்த வங்கியில் 8 ஏக்கர் நிலம் கேட்கின்றார்கள். 1939 ஆம் ஆண்டின் சட்டம் என்று நான் கருதுகிறேன், அந்தச் சட்டமே இன்னும் இருக்கின்ற காரணத்தினாலேதான் விவசாயிகள் ஒரு டிராக்டர்கூட வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்றி, அந்தச் சட்டத்தை மாற்றி, 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருந்தாலும்கூட அந்த விவசாயியும் இன்றைய நிலைக்கு உகந்தவாறு ஒரு டிராக்டர் வாங்கக்கூடிய அளவிற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு, சேலம் மாவட்டத்திலே கருமந்துறையில் ஏறத்தாழ 1,200 ஏக்கர் நிலம் இருக்கிறது. மா, பலா, கொய்யா போன்ற அனைத்து வகைப் பழ மரங்களும் அதிலே சுமார் 800 ஏக்கரிலே இன்றைக்கு அமைந்திருக்கின்றன. அங்கேயுள்ள 1,200 ஏக்கரில், கருமந்துறையில் ஒரு தோட்டக்கலைக் கல்லூரி அமைக்கப்படுமானால், அந்தச் சுற்று வட்டாரத்திலே இருக்கக்கூடிய ஏழை, எளிய விவசாயிகள், இன்னும் சொல்லப் போனால், மலைவாழ் மக்கள் நிறைந்த அந்தப் பகுதிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பயன்படும் வகையிலே அமையும். எனவே, ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை, சேலத்திலே, கருமந்துறையிலே ஏற்படுத்தி தர வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த மானியக் கோரிக்கைக் குறிப்பிலே மிகத் தெளிவாக, தென்னங்கன்று உற்பத்தி செய்யும் திட்டத்தை, வீரியத் தென்னங்கன்று உற்பத்தி செய்வதற்காக அறிவித்துள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவரவர்களே, இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே பேரவைத் தலைவரவர்கள் கூறியது நினைவு இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ்.ஆர் சிவலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஐந்தே ஐந்து நிமிடங்களில் உரையை முடித்துக் கொள்கிறேன்.

தென்னங்கன்று உற்பத்தி செய்வதற்காக, வீரியத் தென்னங்கன்றுக்காக இன்றைக்கு அரிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்றார்கள்.



ஆனால், தென்னை மரம் வளர்ந்து, 50 அடி, 60 அடி, 70 அடி என்று ஆன பின்னால், அது ஒரு தோப்பாக இருந்தால் ஒரு கம்பளிப் பூச்சி அரித்து, அந்தத் தோப்பையே நாசம் செய்து விடுகிறது. அதற்கு மருந்து அடிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள், ஒவ்வொரு தோட்டத்திலேயும் ஒரு டிராக்டரைப் பொருத்தி பெரிய, உயரமாக இருக்கக்கூடிய தென்னை மரங்களுக்கு மருந்து அடித்து, அந்தத் தென்னை மரங்களையெல்லாம் காப்பாற்றுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நகைக் கடன் என்று சொன்னால், மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய லேம்ப் சொசைட்டியிலே ஓர் ஆண்டுக்கு நகைக் கடனுக்கு வட்டி இல்லை. அதைப்போல, தேசிய வங்கியிலே, தனியார் வங்கியிலே விவசாயிகளுக்கு நகைக் கடனுக்காக நகைகளை வைக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு 10.5 சதவீதத்தில் வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது நில வள வங்கியிலோ சென்று அந்த ஏழை, எளிய விவசாயி நகையை வைத்துக் கடன் பெற வேண்டுமென்று சொன்னால் ஏன் 18 சதவீதம் வட்டி கேட்கிறார்கள்? ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள், இந்த ஏழை விவசாயிகளுக்கு நிச்சயமாக நகைக் கடனுக்கு ஓர் ஆண்டுக்கு வட்டி இல்லாமல் செய்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பால் விலை ஏற்றம் என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு அது மகிழ்ச்சி தரக் கூடிய ஒன்றாகும். இருந்தாலும், இன்றைக்கு நுகர்வோர்க்கும் விலையேற்றி இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருந்தார்கள். அதை மாண்புமிகு முதல்வரவர்களோடு கலந்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால் இன்றைக்கு எல்லாத் துறைகளுக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். ஆனால், பால்வளத் துறைக்கு மட்டும் பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கீடு இல்லை. ஆகவே, தயவுசெய்து 50, 60 கோடி ரூபாயை இன்றைக்கு பட்ஜெட்டிலே அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யும் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பால் விலை உயர்வு இல்லாமல், நுகர்வோர்க்கும் சிரமம் இல்லாமல் தடுத்திட முடியும். ஆகவே, மாண்புமிகு

முதல்வரவர்கள் பால்வளத் துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கரும்பு விலை. கண்டிப்பாகக் கரும்பு விலையை இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏற்றித் தர வேண்டும்.

இன்றைக்கு லாரியிலே கரும்பைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய நிலையில், 10 கிலோ மீட்டருக்கு மட்டும் வாடகையை, உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மீதி இருக்கக்கூடிய தூரம் 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டராக இருந்தாலும் அதற்கான வாடகையை அந்தத் தொழிற்சாலை ஏற்றுக்கொள்ளும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு, சாகுபடி செய்வதில் எந்த அளவுக்குச் சிரமம் இருக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். அதனால், தயவுசெய்து அந்த 10 கிலோ மீட்டர் வாடகையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

அதேபோல, இன்றைக்கு மக்கள் நலப் பணியாளர்கள் என்று கிராமப்புறங்களிலே இருக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தமட்டில் பல நல்ல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், கீழேயுள்ள விவசாயிகளுக்கு, இன்னும் சொல்லப் போனால், படிப்பறிவு இல்லாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தத் திட்டங்களெல்லாம் போய்ச் சேருவதில்லை. ஆகவே அந்த மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு, அந்தத் திட்டங்கள் அனைத்தும் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தொகுதியைப்பற்றி ஒரே ஒரு நிமிடம். நிறைய இருக்கிறது, இருந்தாலும் தொகுதிப் பிரச்சினையுடன் முடித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, நான் பிறந்த ஊரான கடையார்பட்டியில் கன்னிமாரி என்னும் ஓடை அமைக்க வேண்டுமென்று ஏறத்தாழ 5, 6 ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் நிச்சயமாக இந்தத் தடவையாவது அதைத் தர வேண்டும். ஒரு 60, 70 இலட்சம் ரூபாய்கூட வராது. ஆகவே, தயவுசெய்து அந்தத் திட்டத்தை நிறைவு செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** அதைப்போல, அக்ரகார நாட்டாமங்கலம் என்ற ஊரிலே சுமார் 100 ஏக்கர் பரப்பிலே ஒரு ஏரி இருக்கிறது. புழுதிக்கோட்டை பகுதி ஆனைமடுவு நீர்த்தேக்கத்திலேயிருந்து வாய்க்கால் மூலம் அக்ரகார நாட்டாமங்கலத்திற்குத் தண்ணீர் கொண்டு வரச் செய்தோமானால், அந்தப் பகுதியிலே ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், பல கிராமங்களும் விவசாயத்திலே முன்னேறக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அக்ரகார நாட்டாமங்கல ஏரிக்கு ஆனைமடுவு நீர்த்தேக்கத்திலிருந்து வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் கொண்டுவர தயவுசெய்து ஏற்பாடு செய்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, திருமனஹுரிலே சிட்டாம்பட்டி என்ற இடத்திலே ஒரு சிறு வாய்க்காலும், பெரிய கவுண்டாபுரத்திலே நாவலாறு என்ற ஒரு காட்டாறும் ஓடுகின்றன. அங்கே ஓர் அணை கட்ட வேண்டுமென்று 1970 ஆம் ஆண்டில் நிலங்களெல்லாம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, இந்தத் தடவையாவது அந்த நாவலாற்றின் குறுக்கே ஒரு சிறு அணை கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். மகேந்திரன்.

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு இந்தப் பேரவையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1998-99 ஆம் ஆண்டுக்கென ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து தமிழகத்திலேயிருக்கின்ற மக்களுடைய இதயங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்கள் என்ற செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனைத் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அற்புதமான வேளாண்மை மானியக் கோரிக்கையை இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறையில் நேரிடையாக ஈடுபாடு கொண்ட காரணத்தினாலும், இந்தத் துறையில் நீண்ட அனுபவத்தைப் பெற்றிருக்கின்ற காரணத்தினாலும் இரவு, பகல் என்று பாராமல் கடுமையாக உழைத்து இந்த மானியக் கோரிக்கையை இந்த அவையில் வைத்திருக்கிறார்கள். அதை நான் மனமாரப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய திறமையின் காரணமாகத்தான், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் மிக அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயப் பெருமக்களுக்கு நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தைத் தந்தார்கள். நேற்றையதினம் நில வரியை இரத்துச் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக, தமிழக விவசாய மக்களுடைய இதயங்களில் நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நீங்காத இடத்தைப் பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மரம் வளர்ப்புத் திட்டம். வேளாண் சுற்றுச் சூழலைப் பாதுக்காக்கவும், மழை வளத்தைப் பெருக்கிடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மரம் வளர்ப்புத் திட்டம் 1997 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், மாவட்டந்தோறும் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்வு செய்து, சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 250 மரக்கன்றுகள் சாலையின் இரு ஓரங்களிலும் நடவு செய்யப்பட்டு வருகின்றன. அதை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன். வருங்காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கிட நடவடிக்கை எடுத்துள்ள மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.



விவசாயத்திற்கு முழுமையாக மின்சாரத்தைத் தந்திட வேண்டும். விவசாயிகளுக்குக் குறித்த காலத்தில் நல்ல விதைகளைத் தேர்வு செய்து வழங்கிட வேண்டும். அதேபோல், விவசாயப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திட நீங்கள் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் உழுவதற்கு tractors, power tillers ஆகியவற்றை நீங்கள் வாடகைக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும், அப்போதுதான் அந்தப் பகுதியிலேயிருக்கிற விவசாயிகள் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தி நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு இயலும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய அனைத்து விளைபொருட்களுக்கும் அடிப்படை விலையை நிர்ணயம் செய்திடுமாறு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கரும்பு உற்பத்தியைப் பொறுத்தவரையில், 1997-98 ஆம் ஆண்டே 8.5 டன் சர்க்கரைத் திறன் கொண்ட கரும்புக்கு, சட்டபூர்வமாகக் குறித்த விலையாக ரூ. 484.50 என்று மத்திய அரசு அறிவித்தது. இந்த விலை போதாது என்று கூறி, தமிழகக் கரும்பு விவசாயிகள் பல்வேறு இடங்களிலே போராட்டம் நடத்தி வந்தார்கள், நம்முடைய அரசு உடனடியாக இதை ஆய்வு செய்து, டன் ஒன்றுக்கு 660 ரூபாய் விலையைப் பரிந்துரை செய்தது. இது தவிர, அரைவைக்காகச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படும் கரும்புக்கு, 10 கிலோ மீட்டருக்கு மேலுள்ள தூரத்திற்கு வாகன வாடகையை சர்க்கரை ஆலையே ஏற்கும் என்ற ஒரு அறிவிப்பை நம்முடைய அரசு தெளிவாகத் தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் நமது ஆட்சிக் காலத்திற்குள் வழங்குவோம் என்று தெரிவித்தார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது கரும்பு உற்பத்தியாளர்கள் மிகுந்த வேதனையோடு நமது அரசிடம், டன் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கருணையோடு, இந்த ஆண்டே அந்த விலையை— கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபால, பருத்தி விலையைப் பொறுத்தவரையில் அதிகரித்து வரும் பருத்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், பருத்தி உற்பத்தி மற்றும் பருத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பல வகையான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு, பருத்திச் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உற்பத்தித் திறனைப் பெருக்குவது நம்முடைய அரசினுடைய தலையாய கடமையாக இருப்பதையறிந்து, மாவட்டங்கள்தோறும் உடனடியாக இதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பருத்தி பயிரிடும் விவசாயப் பெருமக்களுக்கு, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் உயர்ந்த ரகப் பருத்தி விதைகளை இலவசமாக அரசு தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாட்டிலேயே மிக அதிக அளவில் எங்களுடைய பகுதியில்தான் பருத்தி விளைகின்றது. பருத்தி விற்பனையாளர்கள் பருத்தியை விற்பனை செய்வதற்காக, பருத்தி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். அங்கே அதற்கு உடனடியாகப் பணம் கிடைப்பதில்லை. பணம் காலதாமதமாகவே கிடைக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பருத்தி விற்பனை செய்கின்ற அன்றையதினமே அவர்களுக்குப் பணம் கொடுத்திட ஆவன செய்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

தோட்டக்கலைத் துறையைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் துறை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவேதான் தோட்டக்கலைத் துறையும் இருந்து வருகிறது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம் சென்னையில் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்த நிறுவனத்தினுடைய முதன் நோக்கம், உற்பத்தியாளர்களின் முழு ஈடுபாட்டுடன், வலிமையுடைய கூட்டுறவுக் கோட்பாட்டுடன் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வழிவகுத்தலாகும். *(மணியடிக்கப்பெற்றது)* இந்த உற்பத்தியாளர்கள் பல்லாயிரக்கணக்கான பழவகைச் செடிகளை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்ய இயலாத நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள



விரும்புவதெல்லாம், உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்திருக்கின்ற அந்தச் செடிகளை இந்தத் தோட்டக்கலைப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்பதுதான்.

அடுத்து, விவசாயப் பெருமக்களுக்குச் சிறந்த முறையில் நமது அரசு பயிற்சி அளித்து வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற சாதாரணமான 25 விவசாயிகளை சண்டிகருக்கு விமானத்தின் மூலம் அனுப்பி வைத்து, அங்கு நடைபெற்ற வேளாண்மைப் பயிற்சியிலே கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். அப்பகுதியில் வேளாண்மைத் துறை எப்படி நடைபெறுகிறது என்பதை அறிவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார்கள். அதற்காக நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தப் பேரவையின் மூலம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதுபோல, வேலூர் மாவட்டம் வேளாண்மைத் துறையிலேயும், தோட்டக்கலைத் துறையிலேயும் சிறந்த முறையில் விளங்கி வருகிறது. பல ஆண்டுகளாக எங்கள் பகுதியில் இருக்கின்ற மக்கள், வேளாண்மைக் கல்லூரி ஒன்று வேண்டுமென்று கோரி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்தில் உள்ள அனைத்துத் தொழில்களிலும் தலையாய தொழிலாகக் கருதப்படும் வேளாண்மை தொடர்புடைய இந்த மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு மனதார நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொன்ன இரு வரிகளைப் பார்த்தால், இந்தத் தொழிலின் மேன்மை நமக்கு நன்கு விளங்கும்.

*" சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை,"*

என்று வள்ளுவப் பெருமான் கூறியுள்ளார். உழவுத் தொழிலின் தொல்லை பொறுக்காமல், உழவை விடுத்து பிற தொழிலைச் செய்தாலும் உலக மக்கள் முடிவில் உணவுக்காக உழவையே நாடுகிறார்கள். ஆகவே, துன்பப்பட்டாலும் தொழிலில் உழவே தலையானது என்பது இதன் கருத்தாகும். ஆகவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நிலைதான் இன்னும் தொடர்கிறது என்பது ஒன்று. துன்பப்பட்டாலும் உலக மக்களுக்கு உணவு படைக்கும் உயிர்த் தொழிலாக இதை இன்னும் செய்து வருகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டுதான் வருகிறது. இதனை உணர்ந்த கழக அரசு, உழவர்களின் வாழ்வில் முன்னேற்றம் காண ஏராளமான சலுகைகளை வாரி வழங்கியிருப்பதை நான் மனதார வரவேற்கின்றேன். மன்னர்கள் காலத்தில்தான் குளங்கள் வெட்டுவார்கள்; ஆறுகள் வெட்டுவார்கள்; அணைகள் கட்டுவார்கள். இவற்றையெல்லாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். மக்களாட்சியில் இதற்கான எந்த முயற்சியும் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்படாத நிலையில், கடந்த ஆண்டு முதன்முதலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இணைந்து பாசனச் சீரமைப்புக்காக, முதல் கட்டமாக, சென்ற ஆண்டு 10 கோடி ரூபாயை வாரி வழங்கினார்கள். நிலையான ஆட்சி என்கின்ற ஒரு போலியான கொள்கையைச் சொல்லி, தமிழகத்தில் பல மாவட்டங்களை ஏமாற்றினாலும், தஞ்சை மாவட்டத்து மக்களை ஏமாற்ற முடியாத நிலையில், இன்றையதினம் அந்த மக்கள் நன்குணர்ந்து இந்த அரசுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 10 கோடி ரூபாய் அல்ல. 14 கோடி ரூபாய் தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது.



**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த தஞ்சைத் தரணி' என்பார்கள். அப்படிப்பட்ட தஞ்சைத் தரணியில், காவிரி பாய்கின்ற பகுதியில் முழுவதுமாக மராமத்துப் பணி என்பதே பார்க்கப்படாத நிலையில், மீண்டும் இந்த ஆண்டு 20 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த தென்மதுரை" என்றுதான் பாடல் இருக்கிறது என்று கருதுகின்றேன். (சிரிப்பு)

*முற்பகல் 11-20*

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனவே, அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்திற்கு, பாசன வசதி இல்லாத நிலையில் இந்த ஆண்டு 20 கோடி ரூபாயை, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் வாரி வழங்கியிருப்பதற்காக என்னுடைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மழைக் காலங்களில் மேடிட்ட இந்த ஆறுகளில் போதிய அளவு நீர் எடுத்துச் செல்கிற பரப்பு குறைந்துவிட்ட காரணத்தால், ஆண்டுதோறும் வெள்ளச் சேதம் ஏற்படுகின்ற நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றிட, இன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியால் இந்த மராமத்துப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும், இந்தப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வருகிற ஜூன் மாதத்திற்குள் இந்தச் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்படும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நேற்று தனது உரையிலே சொன்னார்கள். 'கடந்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட சேதத்தின் காரணமாக நில வரியை இந்த அண்டு இரத்துச் செய்கிறேன்,' என்கிற ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை இந்த அவையிலே செய்தார்கள். இன்றையதினம் இந்த நில வரி இரத்து என்பது நில

உடைமையாளர்களுக்கு மிகப் பெரிய சலுகையாகும். ஆனால் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு எந்தவிதப் பலனும் இதனால் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட்டு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 1972-ஆம் ஆண்டு தமிழக அரசு ஒரு சட்டத்தை 20/72 என்று கருதுகிறேன், அதனை வெளியிட்டார்கள். அந்தச் சட்டத்தின்படி 1381 ஆம் பசலிக்கான தொகையைச் செலுத்தினால் அதற்கு முந்தைய குத்தகைப் பாக்கி அனைத்தும் தள்ளுபடி என்கிற ஒரு புரட்சிகரமான சட்டத்தை இந்த மன்றத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். எங்களுடைய பகுதியிலே உள்ளவர்கள் 75 விழுக்காடு குத்தகைச் சாகுபடியாளர்கள். அவர்களுடைய நெஞ்சில் பால் வார்க்கிற அளவில், குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையை வழங்க வேண்டுமென்கிற வகையில், ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தாவது, எந்த வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்கலாம் என்பதை ஆராய்ந்து, நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இன்றையதினம் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும், நில உடைமையாளர்களுக்கும் இடையில் நடைமுறையில் நீதிமன்றங்களுக்கு வெளியே அவர்கள் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். குத்தகைதாரர்கள் நடைமுறை விலையில் 50 சதவீதத்தைச் செலுத்திவிட்டு நில உடைமையாளர்களின் நிலங்களைக் கிரயம் செய்து சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை சட்டப் பூர்வமாக்கி, உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவதற்கு தமிழக அரசு நல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். ஆனால் வாடிய விவசாயிகளைக் கண்டபோதெல்லாம் வாடினார் நம்முடைய தலைவர் கலைஞர். அதனால்தானோ, என்னவோ விவசாயிகளுக்கு இவ்வளவு சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், சேவை மனப்பான்மையுடன் செயல்படக்கூடிய ஒரு நல்ல துறை. நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லாத பருவமழையை முழுமையாக நம்பிச் செயல்பட



வேண்டியுள்ளது இந்தத் துறை. இந்த ஆண்டில் 22 இலட்சம் எக்டேர் நெல் பயிரும், 15 இலட்சம் எக்டேர் சிறு தானியங்கள் பயிரும், 10 இலட்சம் எக்டேர் பயறு வகைகளும் பயிரிடத் திட்டமிட்டுள்ளது உள்ளபடியே பாராட்டுக்குரியது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உறுப்பினர் ஒரு நிமிடத்திற்குள் தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளவும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நெல் சாகுபடியைப் பொறுத்தவரை காட்டப்படுகிற ஊக்கம், ஆதரவு, பயறு வகைச் சாகுபடிக்குக் காட்டப்படுவதில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பயறு வகைப் பயிரைப் பொறுத்தவரை, அதன் அபிவிருத்தி, தேசியப் பயறு வகைப் பயிர் அபிவிருத்தித் திட்டத்துடன் இருந்தாலும், பயறு வகைப் பயிரின் உற்பத்தித் திறன், தேசிய சராசரி உற்பத்தியைவிட தமிழகத்தில் குறைந்துதான் காணப்படுகிறது. திட்டங்களைப் பொறுத்தவரை மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களாக இருந்தாலும், மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களாக இருந்தாலும், செயல்பாடுகள் நிதியாண்டின் இறுதியில் மட்டுமே செயல்பாட்டிற்கு வருகின்றன. இதனால் விவசாயிகள் அவர்களுக்கான திட்டங்களை உரிய நேரத்தில் பெரிய அளவிலே செய்ய முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

அதோடுகூட, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில், ஆடுதுறையில் செயல்பட்டுவரும் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில், பல்வேறு புதிய இரக நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஏ.டி.டி.27 என்கிற நெல் இந்த நிலையத்தின் கண்டுபிடிப்பு என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன். இந்தப் பழமையான ஆராய்ச்சி நிலையம், முழுமையான வேளாண்மைக் கல்லூரிக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கின்றது. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உழவியல் துறை, பொறியியல் துறை, நோயியல் துறை, புது இரகங்கள் உற்பத்தி, பாமாயில் துறை, வேளாண்மைப் பொருளாதாரத் துறை, மண் இரசாயனத் துறை போன்ற அனைத்துத் துறைகளும் இயங்கிக் கொண்டிருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், சிறந்த நூலகமும் அங்கே இருக்கின்றது. போதுமான

அளவிற்குக் கட்டடங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 200 ஏக்கருக்கும் மேலே நிலம் இருக்கின்றது. எனவே, அரசுக்கு எந்தச் செலவும் இல்லாமல் அங்கே வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க முடியும். எனவே, இந்த ஆண்டிலாவது அங்கே வேளாண்மைக் கல்லூரியைத் துவங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நம்மைவிட மிகப்பெரிய நாடாக இருக்கின்ற சீன தேசத்தைப் பொறுத்தவரை, சீன தேசம் முழுவதிலும் வீரிய நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. ஆனால், நாம் இன்னும் வீரிய நெல் சாகுபடியில் கவனம் செலுத்தவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேளாண்மை ஆராய்ச்சி என்பது அரசியலுக்கும், ஆரவாரத்திற்கும் அப்பாற்பட்டதாக அமையவேண்டும். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால், சென்ற ஆட்சியில் ஜெ.ஜெ. என்ற ஒரு நெல்லை அறிமுகப்படுத்தினார்கள். மணக்கும் நெல் என்றெல்லாம் சொன்னார்கள். இன்றையதினம் நாற்றம் எடுத்த நெல்லாக அந்த நெல் இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவேதான், அந்த நெல் இப்போது பார்க்க முடியாத நெல்லாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகள் மத்தியிலே அதைப் பயன்படுத்துவதில்லை என்று அதைக் கைவிட்டு நான்காண்டு காலம் ஆகின்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** அடுத்து, திரு. ஆ. செ. மணிக்கண்ணன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** நேரமாகிவிட்டது, எனவே, உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு. ஆ. செ. மணிக்கண்ணன்.

**திரு. ஆ. செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டைவிட நடப்பாண்டில் 18 இலட்சம் டன் உணவுப் பொருள்களை வேளாண் பெருமக்கள் அதிகமாக



விளைவித்திருக்கிறார்கள். அதற்கு உதவியாக, பாசனத் திட்டங்களை நவீனப்படுத்த, நீர் ஆதாரங்களை நிலைப்படுத்த உலக வங்கி உதவியுடன் வரும் நிதியாண்டில் 352 கோடி ரூபாய் செலவில் 152 பணிகள் நடைபெற உத்தரவிட்டமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், வேளாண்மைத் துறையின் அபிவிருத்திக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் மானியத்தில் டிராக்டர்கள் மற்றும் தெளிப்பான் கருவிகள் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் வேளாண்மை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அக்கருவிகளை அதிகமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல், கரும்புக்கான குறைந்தபட்ச விலையை டன் ஒன்றுக்கு ரூ. 484 ஆக மத்திய அரசு அறிவித்ததை, ரூ. 660 ஆக உயர்த்த வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசு பரிந்துரை செய்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதை உயர்த்த வேண்டும். ஏனென்றால், கரும்புகள் எல்லாம் பூச்சிகளால் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக, விவசாயப் பெருமக்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதை மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழினத் தலைவர், நமது முதலமைச்சர் அவர்கள், 1989-90-ஆம் ஆண்டு இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கினார்கள். விவசாயிகள் எல்லாம் நல்ல முறையிலே விவசாயத்தைச் செய்வதற்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. நேற்றையதினம், நில வரியையும் இரத்து செய்திருக்கிறார்கள். அதையும் வரவேற்று, தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளிடையே, பல்வேறு விவசாயத் தொழில் நுட்பங்களைப் பரப்புவதற்கு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் 50 எக்டேர் செயல் விளக்கப் பண்ணையினை அமைக்க அரசு அறிவித்திருக்கிறது. எனது தொகுதியில், திருநாவலூர் ஒன்றியத்திலே வானாம்பட்டு பஞ்சாயத்திலே ஏறத்தாழ 100 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்தப் பகுதியில், தோட்டப் பயிர்கள் எல்லாம் ஓரளவிற்குப் பயிர் செய்யக் கூடிய இடங்கள் இருக்கின்றன. அங்கு ஒரு பண்ணையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்தில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருவெண்ணெய்நல்லூரில், ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கிக் கொண்டிருக்கிறது; அதற்குக் கட்டடம் ஒன்று கட்டித் தருவதாக, அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான இடத்தையும் தேர்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, அங்கு கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை உதவி அலுவலகக் கட்டடம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒட்டுமொத்தமாக இருக்கிறது. அங்கு கூடுதலாக ஒரு கட்டடத்தை அமைத்து, அதற்குரிய அதிகாரிகளையும் நியமித்து, அந்தப் பகுதி விவசாய மக்கள் பயன்பெறுவதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், இராகவன் வாய்க்கால் மற்றும் பல வாய்க்கால்களில் எல்லாம், தூர் எடுக்கும் பணிகளைப் பொதுப்பணித் துறையின் மூலமாக ஆரம்பித்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை இன்னும் வேகமாக முடுக்கிவிட்டுச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இப்போது, பொதுப்பணித் துறை மூலமாக ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று எடுத்து அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது போதாது. ஆகவே, வேளாண்மைத் துறையின் மூலமாக, குறைந்தது 5 ஏரிகளையாவது எடுத்து, அந்த அளவுக்குத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும், இணைப்புச் சாலை வசதி செய்து தரும்படி அறிவித்திருப்பதைச் செயல்படுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்பு சாலைகள் அமைக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறீர்கள். கரும்புகள் எல்லாம் எடுத்துச் செல்வதற்கு அந்தச் சாலைகள் அமைக்கப்படும்போது, 'நபார்டு' திட்டத்தின் மூலமாக அவற்றை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில், ஆதனூர், நெமிலி போன்ற இடங்களில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



உள்ளாட்சித் துறையின் மூலமாக அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச் சாலைகள் அமைத்துத் தந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அமைக்கப்படும் சாலைகளை, நபார்டு மூலமாக அமைக்கப்படும் சாலைகளின் தரம்போல உயர்த்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை மூலமாக, இன்றைக்குப் பழைய பேருந்துகள் எல்லாம் அகற்றப்பட்டு, 3,200 புதிய பேருந்துகளை வழங்கி, போக்குவரத்துத் துறை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசா குறைத்து பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படும் என அறிவித்து, அதனால் ஏழை எளிய மக்களின் அன்பை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் பல கிராமங்கள் இருப்பதால், ஊரகத் தொழில் துறை மூலமாக, தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தருமாறு முதலமைச்சர் அவர்களையும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், சேந்தநாடு என்ற பகுதியில், சென்ற ஆண்டு 1997-98 ஆம் ஆண்டு ஒரு மின் நிலையம் அமைத்துத் தருவதாக அறிவித்திருந்தார்கள். இந்த ஆண்டிலாவது அந்த மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் குறைந்த அளவு மின்சாரம் வருவதால், மின் மோட்டார்கள் எல்லாம் இயங்குவதில்லை என்று தெரிவிக்கிறார்கள். அதனால் அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அதுபோல, விழுப்புரம் மாவட்டத்தில் 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறு மரப்பலகை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அனுமதி அளித்திருப்பதாகத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆலையை, மிகவும் பின்தங்கிய தொகுதியான எனது திருநாவலூர் ஒன்றியத்தில் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அனைத்துப் பகுதிகளிலேயும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் ஆரம்பப் பள்ளிக்கூடம் பல கிராமங்களிலே இல்லாமல் இருக்கிறது. எனவே, அங்கெல்லாம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவி பெறும் விதவைகள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியவர்களுக்கெல்லாம் அந்தத் தொகையை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். சமத்துவபுரம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, எனது தொகுதியில் ஒரு கிராமத்தை எடுத்து, அதோடு சேர்த்து இரண்டு கிராமங்களில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

அதுபோல, என்னுடைய தொகுதியில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களை 24 மணி நேர சுகாதார நிலையங்களாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கூடுதலாக சேந்தநாடு மையத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சேந்தநாடு மையத்தில் சித்த மருத்துவமனை ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த சித்த மருத்துவமனை, உள்ளாட்சித் துறை மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் அதை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** தயவுசெய்து உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் 300 குக்கிராமங்களில் ஆரம்பக்



கல்விக்கூடங்கள் தொடங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்புச் செய்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே கோவிந்தராஜப்பட்டினம், தொட்டிமேடு ஆகிய கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடமும், மயிலங்குப்பம், கிலாப்பாளையம் ஆகிய கிராமங்களில் நடுநிலைப் பள்ளியும் அமைத்துத்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தித்திக்கும் அறிவிப்புகளைத் தமிழக விவசாயிகளுக்குத் தந்தார்கள். இன்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மஞ்சள் மலரோடு காலையிலே வரவேற்புக் கொடுத்தார்கள். இப்போது தித்திக்கும் பொங்கலை அன்போடு அளித்திருக்கிறார்கள். அவருக்கு அனைத்து உறுப்பினர்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** என்னுடைய நன்றியையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடப்பாண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே எண் 20 —வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாக இருப்பது, நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பது வேளாண்மைத் துறை என்று அரசு உணர்ந்து இருந்தாலும்கூட, இன்றைய நிலையிலே நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்திலே முதலாவதாக வேளாண்மைத் துறையை நமது அரசு இங்கே தொடங்கியிருந்தாலும்கூட, நிதியொதுக்கம் செய்யும்போது நமது அரசு வேளாண்மைத் துறைக்கு முதலிலே ஒதுக்கவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால் இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக இருந்தாலும், பிரதமராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அறிஞர் பெருமக்கள், யாராக இருந்தாலும் அனைவருடைய வாழ்க்கைக்கும் உயிர்நாடியாக இருக்கின்ற உணவுக்கு

ஆதாரமாக இருப்பது வேளாண்மைத் துறை என்ற நிலையில், வேளாண்மைத் துறைக்கு நமது அரசு முக்கியத்துவம் வழங்கவில்லை, முன்னுரிமை வழங்கவில்லை என்பதை இங்கே நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு விவசாயிகள் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள் என்றால் படித்த பிறகு ஏதாவது தொழிலை அவர்கள் தொடங்க வேண்டும். அதற்கும் வழியில்லாமல், அரசு அலுவல்களும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதால் அவர்களுடைய பிள்ளைகளை வெளி மாநிலங்களுக்கு, வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய நிலையிலே விவசாயிகள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மகன் மீண்டும் விவசாயத் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வருவதில்லை. காரணம் என்னவென்றால் உழவுத் தொழிலால் அவர்கள் பட்டுப்போய் இருக்கிறார்கள், விரக்தி அடைந்திருக்கிறார்கள். தனக்குப் பிறகு தன்னுடைய குடும்பம், தன்னுடைய சந்ததியினர் இந்தத் தொழிலையே செய்யக்கூடாது என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்ற காரணத்தால் உழவுத் தொழில் பின்னோக்கி இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளை அறிந்து, மீண்டும் பரிசீலனை செய்து, மாற்றி அமைத்து உழவுத் தொழில்தான் இந்த நாட்டினுடைய முன்னோடித் துறை என்ற நிலைமையை விவசாயிகளும் மற்றவர்களும் உணர்ந்து எல்லோரும் விவசாயத்திற்குத் திரும்பி மீண்டும் வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் கிடைப்பதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-40*

அடுத்து, உழவுத் தொழிலைப் பற்றிச் சொல்லுகின்றபோது,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" என்றும்

மிக அழகாகத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தலையான உழவுத் தொழில் பின்னோக்கி இருப்பதற்குக் காரணம் அரசு கவனம் செலுத்தாத குறைதான் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, வேளாண் துறையோடு பின்னிப் பிணைந்து இருப்பது பாசனமாகும். பாசனத் துறையை எடுத்துக்கொண்டால் இங்கே பெருந்தலைவர் காமராஜர் அவர்களது காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் மிகப் பெரிய அணைத் திட்டங்கள் ஏதேனும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு நிறைவேறி இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, வரக்கூடிய காலகட்டங்களிலாவது இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலே, அத்துறைக்கான நிதி ஆதாரங்களை அதிகமாக வழங்கி, அத்துறையைச் செம்மைப்படுத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டிலே குண்டூசி உற்பத்தி செய்கிறார்கள், சோப்பு தயார் செய்கிறார்கள், கண்ணாடி தயார் செய்கிறார்கள். இப்படி இந்த நாட்டிலே எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும், அப்பொருளை உற்பத்தி செய்கிறவர்கள் அப்பொருளின் விலையை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரத்தை, உரிமையை, பெற்றிருக்கிறார்கள். ஆனால் உழவுத் தொழிலில், நிலத்தைப் பக்குவப்படுத்தி, உழுது, பயிர்செய்து, உரமிட்டு, தண்ணீர் பாய்ச்சி, அறுவடை செய்து, அந்தப் பொருளை விற்பனைக்குக் கொண்டு வருகின்ற நேரத்திலே அதற்கான விலையை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமை அல்லது சரியான விலை பெறக்கூடிய உரிமை அந்த விவசாயிகளுக்கு இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, நம்முடைய அரசானது, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான, உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருளுக்கு விவசாயிகளைக் கொண்ட குழுவே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற உரிமையை வழங்கக்கூடிய வகையிலே அதற்கான ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்றும், இது குறித்து நிச்சயமாக ஆவன செய்ய வேண்டுமென்றும் அமைச்சர் பெருமகனாரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொல்லுகிறோம். அப்படிப்பட்ட உழவுத் தொழிலுக்கு நீர் ஆதாரம் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெல், கரும்பு மற்றும் சிறு தானியங்களுக்கான விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசுதான். அந்த விலையைத்தான்

மாநில அரசாங்கம் பின்பற்றுகிறது. உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பது, பேசுவதற்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம். அப்படி விட்டுவிட்டால் வாங்கிச் சாப்பிடுபவர்களின் நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். உற்பத்தி செய்யக்கூடியவர்கள், அவர்கள் தேவைக்கேற்ப எந்த அளவுக்கு அதிகபட்சமாக விற்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த அளவுக்கு விலை நிர்ணயம் செய்து, அந்த விலைக்குத்தான் அரிசி தருவோம், சிறு தானியங்கள் தருவோம், கரும்புக்கு இதுதான் விலை என்று சொல்லிவிட்டால், கரும்பு ஆலை ஓடாது, சர்க்கரை வாங்கிச் சாப்பிடுகின்றவர்களும் அதை விட்டுவிடவேண்டும். அதுபோலவே, அரிசி உணவையும், சிறு தானிய உணவையும் மக்கள் மறந்துவிட்டு இலையைத்தான் சாப்பிட வேண்டி வரும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகின்றபோது விவசாயிகளே விலை நிர்ணயம் செய்துகொள்ளக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். அது ஏற்கக்கூடிய ஒன்று அல்ல என்று நான் சொல்லவில்லை. ஆனால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையையாவது இந்த அரசு கொடுக்க வேண்டாமா? கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்றுகூட திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தது. முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது 3 ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள். 3 ஆண்டு காலம்கூட பொறுத்திருக்க வேண்டாம். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை. எனவே, இப்போதே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி நடப்பாண்டிலேயே ஆயிரம் ரூபாய் என்று கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் சொக்கருக்குத் தெரியும், ஞானசேகரனுக்குத் தெரிந்தால் சரி, தெரியவில்லை என்றுதான் கருதுகிறேன்.



ஆயிரம் ரூபாய் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும் கொடுப்போம் என்று இல்லை. ஆயிரம் ரூபாய் விலை கிடைக்கப் பரிசீலிப்போம் என்றுதான் அந்தத் தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. ஆகவே, கரும்புக்கு என்ன விலை கொடுத்தால்— அந்த ஆலைகளும் நட்டத்திலே நடைபெறாமல் இருக்க வேண்டும். அதேபோல விவசாயிகளுக்கும் கட்டுப்படியாக வேண்டும் என்கிற நிலை வருகிறபோதுதான் மத்திய அரசாங்கம் இந்தக் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறது. அதற்குமேல் மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் செய்கிற விலைகூட கட்டுப்படியாகாது என்றுதான் ஒரு பரிந்துரை விலை செய்கிறது. அதுகூட சட்டப்படி மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்வதற்கு முடியாது என்று வட மாநிலங்களிலே நீதிமன்றங்களுக்குப் போய் அந்த வழக்குகள் எல்லாம் நிலுவையில் இருந்தாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கரும்பு விவசாயிகளுடைய நலனைக் கருதி, ஆலை அதிபர்களையும் அழைத்துப் பேசி இருதரப்பாருடன் பேசி, இரண்டு பேரும் ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில்தான் மாநில அரசாங்கம் இப்போது பரிந்துரை விலையை நிர்ணயம் செய்து வருகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஏதோ கூடுதலாக விலையை வைத்து தாங்கள் மட்டும் வாழவேண்டும் என்றும், இந்த நாட்டிலே இருக்கக்கூடியவர்கள் அதை வாங்கி அவர்கள் எல்லாம் ஒரு பெரிய சுமையை அனுபவிக்க வேண்டுமென்றும் எண்ணம் கொண்டவர்கள் விவசாயிகள் அல்ல. விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் மனிதாபிமானம் உள்ளவர்கள். அதிலும் இன்னொன்று....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதை அப்படியே நான் மறுக்காவிட்டால் ஏதோ நான் விவசாயிகளுக்கு விரோதமானக் கருத்துக்களைச் சொல்வதாக ஆகிவிடும். நான் அப்படிச் சொல்லவில்லை. உற்பத்தி செய்யக்கூடியவர்களின் நலனையும் பார்க்க வேண்டும், வாங்கிச் சாப்பிடுபவர்களுடைய நலனையும் பார்க்க வேண்டும், அதுதான் ஒரு சர்க்காருடைய கடமை. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குப் பிரச்சினைகளை அணுகுகின்றோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏதோ விவசாயிகளே அந்த விலையை நிர்ணயம் செய்யவேண்டும் என்று நான் சொல்லவில்லை. உற்பத்தி செய்யக்கூடிய கரும்பிற்கு இந்த ஆண்டிலே விலை இவ்வளவு, நெல்லினுடைய மூட்டைக்கு இவ்வளவு

விலை, அதேபோல தக்காளி என்று சொன்னால் ஒரு கிலோ 10 ரூபாயோ அல்லது 20 ரூபாயோ ஒரு நியாயமான விலையை, அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு விலையை நிர்ணயம் செய்யலாம். விவசாயிகளுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது, அவர்களுக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறது என்று பார்க்க வேண்டும். எந்தப் பயிராக இருந்தாலும் சரி, அதிகாரிகளுக்கு எல்லாக் கணக்கும் தெரியும். அந்தக் குழுவிலே வாங்கிச் சாப்பிடுபவர்களுடைய பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆக, இப்படியெல்லாம் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலமாக விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதுதான் நீண்ட நாள் கோரிக்கை. அப்படிச் செய்கின்றபோது யாருக்கும் எந்தப் பாதிப்பும் இருக்காது. சரியான விலை, நியாயமான விலை எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அரசாங்கமானது முன்னோடித் திட்டங்களைச் செய்யக்கூடிய, எதையும் முதலாவதாகச் செய்யக்கூடிய நமது அரசானது இந்த நிலையிலே ஏன் இதை இந்தியாவிலேயே முதலாவதாகச் செய்யக்கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விளைவிக்கின்ற விளைபொருள்களுக்கு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கத்தின் விளைபொருள் விலை நிர்ணயக் கமிஷன் என்ற ஒன்றாகும். ஆனால், இதுவரையில் இந்தத் தமிழ்நாட்டிற்கு வந்து எங்கெங்கு அதிகமாக விளை நிலங்கள் இருக்கின்றனவோ அங்கே எல்லாம் சுற்றிப் பார்த்து, உற்பத்தியாளர்களைக் கேட்டு, அதேபோல வாங்கிச் சாப்பிடுபவர்களையும் கேட்டு விலையை நிர்ணயித்த வரலாறு நெல்லுக்குக் கிடையாது. ஆனால் அதனுடைய நோக்கமே கோதுமைக்காகத்தான் அந்தக் கமிஷனை வைத்திருப்பதைப் போன்று தோன்றுகிறது. எனவே, இதுவரையிலே மத்திய ஆட்சியிடத்திலே சொல்லியும் அதில் எந்தப் பலனும் கிட்டவில்லை. இப்போது தோழமையாக இருக்கிறவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். தயவுசெய்து பாரபட்சமாக இருக்கின்ற இந்த நிலையை மாற்றி அப்படிப்பட்ட விலை நிர்ணயக் கமிஷன் தமிழ்நாட்டிற்கு வருகைதந்து, குறிப்பாக நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல விவசாயிகளையும், வாங்கிச் சாப்பிடுபவர்களையும் கலந்து பேசி விலை நிர்ணயம் செய்கின்ற



முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உறுப்பினர் இரண்டு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளுங்கள். 11 நிமிடம் ஆகியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்குச் சற்றுக் கூடுதலாக நேரம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குக் குறுக்கீடு அதிகமாக இருந்தது. ஆகவே, இப்படி ஏதோ வடக்கே இருக்கிற காரணத்தினாலே, கோதுமைக்கு மட்டும் அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இங்கே தென் மாநிலங்களில் நெல் விளையக்கூடிய காரணங்களினாலே முக்கியத்துவம் இல்லையென்று சொன்னால் பழைய கூற்றுப்படி, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதற்கு இதுவரையிலே இருந்த ஆட்சியாளர்கள் எல்லாம் முன்னுதாரணமாக இருந்தார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். தோழமை உணர்வுடன் சொல்கின்ற அந்தக் காரணத்தினாலே நிச்சயமாக நாங்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வைப்போம் என்று சொல்லக்கூடிய அதே நேரத்தில் நம்முடைய அரசு, இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, பாசனம். பாசனத்திற்கு என்று நாம் எவ்வளவுதான் அணைக்கட்டுகளைக் கட்டினாலும்கூட, நீர் வரத்து பற்றாக்குறையாகத்தான் உள்ளது. கங்கை-காவிரித் திட்டம் என்பது நீண்ட காலமாகக் கிடப்பிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தைக் கொண்டு வர, மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். எந்த நாளிலே அந்த கங்கை-காவிரித் திட்டமானது அமலாக்கப்படுகிறதோ, அன்றுதான் இந்த மாநிலத்திற்கு விமோசனம் ஏற்படும். எனவே அதற்கு, மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்கிறோம். ஒரு விவசாயி கிணறு வெட்டுகிறான். அந்த இடத்திலே தண்ணீர் வரவில்லை. அடுத்து, ஓடை ஓரமாக ஒரு கிணறு வெட்டுகிறான். அங்கே தண்ணீர் கிடைக்கிறது. உடனே அந்தக் கிணற்றில் பம்பு

செட்டுப் போட அதற்கு மின் இணைப்பு வேண்டுமென்று அதிகாரிகளை அணுகுகின்றபோது, கிணறு வெட்டப்பட்ட இடம் புறம்போக்கு நிலம், ஆகவே மின் இணைப்புக் கொடுக்கப்பட மாட்டாது, சீனியாரிட்டி எல்லாம் இதற்குக் கிடையாது என்று காரணம் சொல்லி மறுத்துவிடுகிற நிலைமை உள்ளது. அப்படிப்பட்ட காரணங்களைச் சொல்வதனாலே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியுமா அல்லது வேளாண்மைப் புரட்சியை உண்டாக்க முடியுமா என்று எண்ணிப் பார்த்து, அந்த வகையிலே, விவசாயி எந்த இடத்திலே கிணறு வெட்டினாலும், அந்த இடத்தில் நீர் இருக்கும் என்று சொன்னால், அது புறம்போக்கு நிலம், பட்டா நிலம் என்று வகைப்பாடு பார்க்காமல், சீனியாரிட்டி என்று எதுவும் சொல்லாமல், முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பட்டு வளர்ப்புத் தொழில், தருமபுரி மாவட்டத்தில் அதிகம் என்பது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த உண்மை. அதிலும் குறிப்பாக, பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர் போன்ற இடங்களிலே பட்டு வளர்ப்பு அதிகமாக இருந்தது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நாளடைவில் பட்டு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் எல்லாம் பட்டுப்போய் விட்டார்கள். அதிகாரிகள் வேண்டுமானால் ஏதோ புள்ளிவிவரங்களைக் கொடுத்து, இவ்வளவு விவசாயிகள் பட்டு உற்பத்தி செய்கிறார்கள் என்று சொல்லலாமே தவிர, பட்டு வளர்ச்சி என்பது மிகவும் பாழடைந்து, சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதை நான் நிச்சயமாக இந்த நேரத்திலே சுட்டிக்காட்டியாக வேண்டும். அதற்குக் காரணம், அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குதான். இதை நான் குறையாகச் சொல்லவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதி பெண்ணாகரத்திலே *(மணியடிக்கப்பெற்றது)* பட்டு முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்குக் குளிர்பதன அறை தேவை. ஆனால், நீண்ட நாட்களாக அங்கே இருக்கக்கூடிய குளிர்பதன அறை மூடப்பட்டிருக்கிறது. வேலை செய்வதே கிடையாது. அப்படி இருக்கும்போது, எப்படி உற்பத்தி செய்யக்கூடிய முட்டைகளைப் பாதுகாக்க முடியும்? பயனுள்ளதாக மக்களுக்குக் கொடுக்க முடியும்? பாதி 'ஈல்டு' கூட வருவதில்லை. எனவே, இப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்கு அதிகாரிகள் முன் வர வேண்டும். அதேநேரத்தில், பட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் அதிக அளவிலே மானியத்தைக் கொடுத்து, விவசாயிகளைத்



தேர்வு செய்து, பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்த காலம் இருந்தது. அந்த நிலை எல்லாம் இப்போது மாறிக் கொண்டிருக்கிறது. எனவே, பட்டுப்புழு வளர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த அரசை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நேற்று முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய நில வரி ரத்து குறித்து அறிவித்தார்கள். அதை வரவேற்கிறேன். நான் மறுக்கவில்லை. இருந்தாலும்கூட, விவசாயிகளுடைய நில வரி என்பது குறைந்த தொகை, சிறிய விவசாயி என்றால், 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை இருக்கும். பெரிய விவசாயி என்றால் 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இருக்கும். அவ்வளவுதான் அவர்கள் செலுத்தும் வரி இருக்கும். இதை ரத்துச் செய்வதனால், வேளாண்மைத் துறையிலே மறுமலர்ச்சி ஏற்பட்டு விடாது. விவசாயிகளுடைய நிலவரியை இரத்துச் செய்கிற அதே நேரத்தில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதைப்போல, நிலவரி இரத்து என்பது நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் . . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். என்னுடைய பேச்சின் இடையிலே குறுக்கீடுகள் அதிகமாகப் போய்விட்டன. அதனால் கொஞ்சம் நேரத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுதே நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் ஓரிரு கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே பாசனத்திற்காக

மத்தளப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் நீண்ட காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. அங்கே பெரிய பாசனத் திட்டங்கள் எதுவுமே கிடையாது. எனவே, அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பாப்பாரப்பட்டியை ஒட்டி 16 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளில், கடந்த ஆண்டு நல்ல மழை இருந்தும்கூட நீர் வரத்து இல்லை. அங்கே பஞ்சப்பள்ளி அணையினுடைய வாய்க்காலிலே போய் நீரெல்லாம் சென்று விடுகிறது. ஆகவே, 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அந்த வாய்க்காலை நீட்டித்து, ஒரு ஏரியோடு இணைத்து விடுவோம் என்று சொன்னால், எல்லா ஏரிகளுக்கும் நீர் கிடைக்கும். ஆகவே, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பாரப்பட்டியிலே உழவர் பயிற்சி மையம் ஒன்று இருக்கிறது.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள விவசாயிகளுடைய நில வரியை ரூபாய் 43 கோடியே 30 இலட்சம் தள்ளுபடி செய்ததற்கு தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

மேலும் தமிழக விவசாயிகளுடைய கடன்களை, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றம் செய்து நேற்று அறிவித்துள்ளார்கள். அதற்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒத்திவைக்கப்பட்ட, அந்தக் கடன்களைக் கட்டும்போது வட்டியில்லாமல் வாங்கிக்கொள்வதற்கு நமது முதல்வர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



தஞ்சை மாவட்டத்தில், சென்ற ஆண்டு ஆறுகள், வாய்க்கால்கள் வெட்டுவதற்கு நமது அரசு 14 கோடி ரூபாய் செலவழித்து நல்ல முறையில் செம்மையாகச் செய்திருக்கிறது. இந்த ஆண்டிலே 20 கோடி ரூபாய் செலவிலே இந்தப் பணியை ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே செய்ய இருக்கின்றார்கள். அந்த அனுமதியை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே உணவு அளிக்கும் மாவட்டம் தஞ்சை மாவட்டம். இந்த மாவட்டத்தில் 75% மக்கள் விவசாயத்தைத் தொழிலாக நம்பியிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உதவியாக, தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல் ஆராய்ச்சியின் மூலம், புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் விதை நெல்களை விவசாயிகளுக்குத் தட்டுப்பாடு இன்றி மானிய விலையில் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அரசு மூலமாக நேரடிக் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு இப்போது 35 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கி வருவதை, குவிண்டால் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய டிராக்டர், பவர் டில்லர், கதிர் அடிக்கும் மெஷின், மருந்து தெளிக்கும் கருவி, கரும்பு வெட்டும் இயந்திரம், நடவு நடும் இயந்திரம் மற்றும் உள்ள பல பொருட்கள், விவசாயிகளுக்கு மார்ச் மாத இறுதியில்தான் மானியத்தோடு வழங்குகிற ஒரு நிலை இருக்கின்றது. அந்தக் கடைசி நேரத்தைத் தவிர்த்து ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அந்தப் பொருட்களை மானியத்தோடு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய நிலங்களைச் சீர்திருத்தம் செய்யும்போது ஆதிதிராவிட மக்களாக இருந்தால் அவர்கள் பாதி அல்லது நான்கில்

ஒரு பகுதி வீதம் வாடகை செலுத்தினால் போதும் என்று இருக்கின்றது. அதைப்போல சிறு விவசாயிகளாக இருக்கின்றவர்களுக்கும் நிலத்தைச் சீர்திருத்தம் செய்ய புல்டோசர் போன்ற கருவிகளைப் பயன்படுத்தும்போது அதன் வாடகையைக் குறைத்து வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பாசனம் தருகின்ற காவிரி ஆறு, மற்றும் காவிரி ஆற்றிலிருந்து பிரிகிற மற்ற ஆறுகளில் மணல் எடுப்பதன் காரணமாக, ஆறு பள்ளமாக ஆகி, வாய்க்கால்களிலே தண்ணீர் சென்று அடையக்கூடிய நிலை இல்லாமல் இருக்கின்றது. அந்த நிலையைப் போக்க வேண்டும். கொள்ளிடம் போன்ற அகளிலிருந்து மணல் எடுப்பதற்கு அரசு அனுமதியளிக்க வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஒரு மெட்ரிக் டன் நெல் கொடுத்தாலும், அதற்கும் மேலே அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்தாலும், ஓராண்டு காலத்தில் அந்த விவசாயியினுடைய குடும்பத்திலே எந்த ஒரு விபத்து ஏற்பட்டாலும்கூட, அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில்; நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்யும் நிலையத்தில் நெல்லை விற்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எப்படி அவர்களுக்கு விபத்து ஏற்படக்கூடிய காலங்களில் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொல்லி இருக்கின்றீர்களோ, அதைப்போல, விவசாயிகள் அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே நெல்லை விற்கின்ற காலங்களில் அவர்களுக்கு ஏதாவது விபத்துகள் ஏற்படுகின்ற காலங்களில் அவர்களுக்கும் அந்த 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

மேலும் கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு, கரும்பை வெட்டி எடுத்து ஆலைகளுக்குச் செல்கின்றபோதும் அல்லது வயல்களிலே வெட்டுகின்றபோதும் விபத்துகள் ஏதாவது ஏற்பட்டால் அதற்கும், சர்க்கரைக் கழகத்தின் மூலமாகவோ அல்லது அரசோ 25 ஆயிரம் ரூபாய் அந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கரும்பு விவசாயிகள் ஆலைக்கு 10 கி.மீ. பகுதிக்குள் இருந்தால் அந்த வாடகையை விவசாயிகள்தான் செலுத்த வேண்டுமென்று ஒரு விதி இருக்கின்றது. 10. கி.மீ. தூரத்திற்கு மேலுள்ள விவசாயிகள் தங்களுடைய கரும்பை எடுத்துச் செல்கின்றபோது வாடகையை ஆலை செலுத்துகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அருகில் 10 கி.மீ. தூரத்திற்குள் இருக்கின்ற விவசாயிகளும் அந்தப் பயனை அடையச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அந்தச் சர்க்கரை ஆலை வசூலிக்கின்ற செஸ் தொகையினை முழுமையாக அந்த ஆலைப் பகுதியில் உள்ள சாலைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தொகுதிப் பிரச்சினை குறித்து பேசுவதற்கு வாய்ப்பு அளிக்குமாறு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாபநாசம் தொகுதியில் ஈச்சங்குடியிலிருந்து சேந்தலூர் வரை 50 கி.மீ. தூரம் உள்ள பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் பல ஆயிரக்கணக்கான பம்பு செட்டுகள் உள்ளன. மின் பற்றாக்குறை காரணமாகப் பல மின் காயில்கள் தீய்ந்து ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு இலட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாகப் பாபநாசம் தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க இடத்தைப் பார்வையிட்டுச் சென்று உள்ளார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை மின் நிலையம் அமைய இந்த ஆண்டு அனுமதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் பரிந்துரை செய்து கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் தியாகசமுத்திரம் ஊராட்சியில் புல்லுமாங்குடியில் ஒரு துணை ஆரம்பச் சுகாதார நிலையம் உள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றி 9 ஊராட்சிகளினுடைய மக்கள் தொகை 30 ஆயிரத்துக்கு மேல் உள்ளது. ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கபிஸ்தலத்திலிருந்து 15 கி.மீ. தூரம் செல்லவேண்டும்; கும்பகோணம் அரசு மருத்துவனைக்கு செல்ல வேண்டுமென்றால், 15 கி.மீ. தூரம் உள்ளது; எனவே, அந்தப் பகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைவதற்கு வேண்டிய

கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் 2 ஆண்டுகளாகப் பல கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. *(மணியடிக்கப்பெற்றது).* முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைய அனுமதி அளிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் விழுக்கூரிலிருந்து உள்ளிக்கடையை இணைக்கும் குடமுருட்டி ஆறு-காவிரி ஆறுகளில் பாலம் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத் துறை மேலும் 9 கோடி மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பி உள்ளது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் நீலக்கல்லிலிருந்து ம.களத்தூரை இணைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்குச் சென்ற ஆண்டு நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 40 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில், அடுத்த ஆண்டு பார்ப்போம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு அனுமதி அளிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதேபோல, பாபநாசம் தொகுதியில் திரும்பூர்—திருவைக்காடு வழியாகச் செல்கின்ற சாலையில் மண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது அந்தப் பாலத்திற்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் இராஜாங்கம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் கட்டப்படாமல் உள்ளது. நெடுஞ்சாலைத் துறை மூலம் மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பாலத்தைக் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை என்பது தமிழகத்தில் இருக்கக்கூடிய



ஒரு முக்கியமான துறையாகும். ஆனால், பெரும்பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இல்லாவிட்டாலும்கூட, இந்தச் சட்டமன்றத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கிற, நமது தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்பட்டிருக்கிற, மஞ்சள் நிறத்துப் பூ உண்மையிலேயே மகிழ்ச்சி தருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிடித்தமான மஞ்சள் கலரிலே அந்தப் பூ வழங்கப்பட்டிருக்கிறது. *(சிரிப்பு)* இருந்தபோதிலும்கூட இது தமிழகத்தினுடைய தோட்டக்கலை மூலம் வளர்க்கப்பட்டதா அல்லது கர்நாடகாவிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் எதிரில் உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற பொருட்களை மட்டும்தான் நீங்கள் எடுக்க வேண்டும். இந்தமாதிரி மற்றவர்களுக்காக வைக்கப்பட்டிருப்பதையும் சேர்த்து நீங்கள் எடுக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒன்றும் இறக்குமதி செய்யப்பட்டதல்ல. தமிழகத்திலே வளர்கின்ற, நமது தோட்டக்கலைத் துறையைச் சேர்ந்த பூதான் இது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி.

தேரோட்டி வாழ்ந்த மன்னர் காலம் தொட்டு, காரோட்டி வரும் கனவான்கள்வரை, ஏரோட்டி உணவு தந்த உழவனுக்குப் பாராட்டு நாதியில்லை இந்தப் பாரதத் திருநாட்டில் இந்த நிலைமைதான் தமிழ்த் திருநாட்டில் இன்றைக்கு இருக்கிறது. வேளாண்மைத் துறையில் இன்றையதினம் மஞ்சள் கலரிலுள்ள பூவைக் கொடுத்திருக்கிறார்கள். இது முதல்வர் அவர்களுக்கு ஏற்ற நிறம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் மணமில்லாத மலரைத்தான் இங்கே கொடுத்திருக்கிறார்கள். மேலும், ....... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் மணம்

இல்லாத மலரைக் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை அவர் நன்றாக ** என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அனைவரும் பாராட்டியதைப் போல, அது ஒரு மங்களகரமான நிறம். இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை இன்று நடைபெறுகிறது என்பதற்காகத்தான் இந்தக் கலரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை. அவர் வேண்டுமானால் மாலை நேரத்திலே கடையிலே சென்று வாசம் உள்ள மலரை வாங்கிச் செல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "ரோசாவில் வாசம் இல்லையென்றால் நாசியில்தான் கோளாறு.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, .........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்கிற வார்த்தை பாராளுமன்ற நடைமுறையிலே வருகின்ற வார்த்தை இல்லை. ஆகையினால் அதை நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீங்களே திரும்பப் பெறுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையைத் திரும்பப் பெறுகின்றேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் ஊண், உறக்கமின்றி, அல்லும் பகலும் அயராது உழைக்கின்றார்கள். அந்த உழவனுக்கு தார்க்குச்சிகூட மிச்சம் இல்லை. இந்த நிலைமையில் விவசாயிகள் படும் கஷ்டம்.........

---

** உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெய்யக் கூடியவர்கள்தான் தார்க்குச்சியைப் பயன்படுத்துவார்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் என்கிற அடிப்படையில் சொல்கிறேன். தார்க் கொம்பு, உழவனுக்கு மாடுகளை, அதாவது நேராகச் செல்ல வேண்டிய மாடுகளைக் குத்தி ஒழுங்காகத் திருப்புவதற்காகத்தான் அந்தத் தார்க்குச்சி பயன்படுகிறது. அதைக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியாமல் வந்திருக்கின்றார்கள்....

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு உழவு கோல், சாட்டை என்றுதான் பெயர் சொல்வார்களே தவிர, தார்க்குச்சி என்பது திரு. கருப்பசாமி அவர்களுக்குத் தனியாகப் பயன்பட்டிருக்கலாம்.

**திரு. சொ. கருப்பசாமி:** தார்க்குச்சி என்றுதான் சொல்லவேண்டும். சாட்டைக் கொம்பு என்பது, சாட்டையைச் சுற்றி வீசுவது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவைக் குறிப்புகளைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அப்போதே பேசலாம் என்று இருந்தேன். ** என்பது `unparliamentary word' அல்ல. `Parliamentary word' தான். ஆனால் இந்தச் சூழ்நிலையில் சொல்வதானால் அது இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. எடுத்தவுடனேயே, அதை `unparliamentary word' என்று சொல்லமுடியாது. அது 'Parliamentary word' தான். ஆனால், இந்தச் சூழ்நிலையில், இன்று இருக்கிற சூழ்நிலையில், அந்தச் சொல், வேறு சிந்தனையை உருவாக்கிவிடக் கூடாதே, அப்புறம் ** ரொம்ப திட்சண்யமாக இருக்கிறார்கள் என்று வேறு காரியத்திற்காக அவர்களை அழைத்துச் சென்றுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் அது வேண்டாம் என்று சொன்னேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைக் குறிப்பிட்ட உறுப்பினரே அதை எடுத்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறார். இதோடு விட்டுவிடுங்கள். திரு. கருப்பசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு) திரு. சுந்தரம் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார். அவர் சொல்வார். நீங்கள் உட்காருங்கள். சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் தார்க்குச்சி என்றுதான் அழைக்கிறார்களாம். பெரும்பாலும் நம்முடைய சேலம் மாவட்டத்தில், சாட்டை என்று கூறுவார்கள். பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற பார்வர்டு பிளாக் கட்சி உறுப்பினர் அருமை அண்ணன் திரு. வல்லரசு அவர்களை நான் கேட்டேன். தென் மாவட்டங்களில் அந்தப் பொருளை தார்க்குச்சி என்று கூறுவதாகச் சொல்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் அதை சாட்டைக் கொம்பு என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தார்க்குச்சி என்பது வேறு, சாட்டை என்பது வேறு. தென் மாவட்டங்களில் இப்படித்தான் சொல்வார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாமே தவிர, எனக்குத் தெரியாததைப்போல ஏதோ இவர்தான் விவசாயி, இவருக்குத்தான் எல்லாம் தெரியும் என்பதைப்போல இங்கே பேசக் கூடாது. அவரைவிட எனக்கு விவசாயத்தில் ஆயிரம் மடங்கு தெரியும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தார்க்குச்சி என்பதைப்பற்றி இந்த அளவுக்கு எடுத்துக்கூறிய எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. இப்போது இருக்கிற வேளாண்மைத் துறை எந்த அளவுக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து கொண்டீர்கள். பொதுவாக, வேளாண்மைத் துறையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் வேளாண்மை உதவி அலுவலர்கள் நேரடியாகச் சென்று விவசாயிகளைச் சந்தித்து, பயிர் நிலங்களைக் கண்டு, எந்தெந்த நிலத்தில் பயிர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் பூச்சி மருந்துகள் அடிக்கப்படவேண்டும் என்பதை நன்கு தெரிந்து, உடனடியாக விளைச்சல் பெருகுவதற்கு உதவிகரமாக வேளாண்மை அலுவலர்கள் பணி செய்வார்கள். ஆனால் இப்போதுள்ள உங்கள் அரசு வந்தபிறகு, வேளாண்மை அலுவலர்கள் கிராமத்திற்குச் செல்கிறார்கள். அங்கே பெட்டிக் கடையில் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருப்பார்கள்.



நேரடியாக விளை நிலத்தையோ விவசாயிகளையோ பார்ப்பதில்லை. கிராமத்திற்குச் சென்றவுடனேயே, அந்த அலுவலர் அந்தப் பெட்டிக் கடையில் உள்ள நோட்டுப் புத்தகத்தில் கையொப்பம் இட்டுச் சென்று விடுகிறார். இதற்கு முன்னால் எங்கள் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்கள் விவசாயிகளை நேரடியாகச் சென்று பார்த்து, ஒவ்வொரு விவசாயின் பெயர் சொல்லி அழைக்கக்கூடிய அளவில் நேரடியாகப் பார்ப்பார்கள். விளை நிலங்களையும் நேரடியாகப் பார்த்து, இந்தப் பயிருக்கு நோய் இருக்கும் அறிகுறி இருந்துவருகிறது, அதைப் பார்த்தவுடன், முன்னேற்பாடாக அந்தப் பயிர்களுக்கு பூச்சி மருந்து அடிக்க வேண்டுமென்று சொல்லிவந்தார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை. மண்ணின் மாதிரி எல்லாம் எடுத்தார்கள். அதுவும் இப்போது இல்லை. ஏனென்றால், குறிப்பாக இப்போது வேளாண்மைத் துறை மூலம் ஜீவன்தாரா கிணறுகளுக்கு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் நினைத்ததை எல்லாம் பேசுவதற்கு இந்த அவை இடமல்ல. இந்தக் கொள்கைக் குறிப்பில் சில விவரங்கள் தந்திருக்கிறோம். 800 விவசாயக் குடும்பங்களை அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திக்க வேண்டுமென்று ஒரு முறை இருக்கிறது. அப்படிச் சந்தித்து, அதன் பிறகு ஓர் இடத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற அந்த நோட்டுப் புத்தகத்திலே கையெழுத்துப் போடுவார்கள். ஒவ்வொரு விவசாயிடத்திலும் இருக்கிற கையேட்டிலும், பார்த்த நாள், அந்த ஃபீல்டுக்குச் சென்று ஆலோசனை வழங்கியதையும் சொல்லி, சந்தித்தோம் என்பதற்கு கையொப்பமும் இட வேண்டும். பிறகு, பொதுவாக, ஒரு இடத்திலே அந்த நோட்டுப் புத்தகம் இருக்கும். வட்டார அளவிலே இருக்கக் கூடியவர்கள், வட்ட அளவிலே இருக்கக் கூடியவர்கள், அந்த பகுதிக்குச் செல்கிறபோது, உதவி வேளாண்மை அலுவலர்கள் எல்லாம் இந்தப் பகுதி விவசாயிகளை சந்தித்தார்களா என்று அந்த நோட்டுப் புத்தகத்தைப் பார்த்து, அவர்கள் அதிலே கையொப்பம் இடுவது மட்டுமல்ல, அவர்களும் விவசாயிகளைச் சந்தித்து, உதவி வேளாண்மை அலுவலர் உங்களை சந்தித்து, ஆலோசனை வழங்கினாரா என்று கேட்டறிந்து,

அப்படி யாராவது சந்திக்காமல் இருக்கின்ற தகவல் அந்த மேல் அதிகாரிகளுக்குக் கிடைத்தால் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான், இந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் இப்படி நடைபெறுகிறதே தவிர, அதற்கு முன்பு, ஐந்து ஆண்டு காலம் உங்களுடைய ஆட்சியில் இந்தப் பணிகள் எல்லாம் நடைபெறவில்லை என்பதை நான் உறுதியாக இங்கே சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் மேலைநல்லூர் ஒன்றியப் பகுதியில் விவசாயிகள் பெரும்பாலும், கூலித் தொழிலாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஜீவன்தாரா கிணறுக்கு அவர்கள் மனுக் கொடுக்கும்போது, முன்பிருந்த வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் மிகவும் தாழ்வான பகுதியில் இருப்பதைக் காரணமாக வைத்து, புவியியல் ஆய்வாளர்கள் இந்தப் பகுதியில் கீழ்மட்டத்தில்தான் நிலத்தடி நீர் உள்ளது என்று சொல்லி, இப்போது இந்தப் பகுதிக்கு ஜீவன்தாரா கிணறு கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். தற்போது பெய்த மழையின் காரணமாக ஒருசில இடங்களில் ஓரளவு நிலத்தடி நீர் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மையைப் பெருக்குவதற்கு, உடனடியாக அந்தப் பகுதியிலே ஜீவன்தாரா கிணறு கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக, வறட்சிக் காலங்களில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக குளங்கள் தூர் வாரப்படுகின்றன. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். என்னுடைய பகுதியில், என்னுடைய கிராமத்தில், இந்தப் பணியைச் செய்யும்போது, குளத்திற்கு அருகிலுள்ள பனை மரங்கள்—கிட்டத்தட்ட 1,500-க்கு மேல் பனை மரங்கள் உள்ள அந்தக் கரை ஓரத்தில் இயந்திரம் மூலமாக மண்ணை வெட்டி எடுக்காமல்— கரை ஓரமாகத் திரட்டித் திரட்டிப் போட்டு, கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட பனை மரங்கள் பட்டுப்போய் விட்டன. நான் அவரிடத்தில் சொல்லும்போது, அவர்கள் ஏதோ 5 மரங்கள்தான் பட்டுப் போய் விட்டதாக, வேளாண்மை உதவிப் பொறியாளர் மூலமாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். போன வாரம் அந்த மரங்கள் எல்லாம் வருவாய் ஆய்வாளர் மூலமாக ஏலம் விடப்பட்டன. ஏனென்றால் அந்த அளவுக்கு, குறிப்பிட்ட தூரம் கரையிலிருந்து 10 மீட்டருக்கு முன்னால்தான் ஆழம் எடுக்க வேண்டும்,



மண் எடுக்க வேண்டும். இவர்கள் கரை அருகிலேயே எடுத்து விட்டார்கள். அதேபோல, அந்த இயந்திரம் மூலமாகப் போடப்பட்ட மண் தற்போது பெய்த மழையில் அப்படியே ஓடிவிட்டது. மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற பணியைக் கொடுத்தால், ஒவ்வொரு கூலித் தொழிலாளியும், ஒவ்வொரு கூடை மண்ணாக, அந்தக் கரைக்குச் சென்று அவர்கள் போடும்போது, அவர்கள் மிதிக்கின்ற மிதியின் காரணமாக நல்ல உராய்வுக்கு வழி ஏற்படும். எந்த மழை பெய்தாலும், அரிப்பு ஏற்படாமல், கூடுதலாகக் கொஞ்ச நாட்களுக்கு, அந்தக் கரை பலமாக இருப்பதற்கு வாய்ப்பிருக்கும். ஆனால் இந்த இயந்திரம் மூலமாக போடப்பட்டது, அப்படியே இலேசாக, அப்படியே குவியலாக வைத்தது, சாதாரண மழைக்கே ஓடிவிட்டது. எனவே வருங்காலங்களில் மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற வகையில், வேளாண்மைத் துறையை விரிவுபடுத்துகின்ற வகையில், நீங்கள் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்.

மேலும், சேலம், நாமக்கல் மாவட்டங்களில், அதிகம் பயிராகும் மரவள்ளிக் கிழங்குக்கு பெரிய நோய் தாக்கி, அதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளார்கள். புதிதாக 'குச்சிவிதைக்கரணை' கோவை ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடித்ததை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

சேலம் மாவட்டம் சந்தியூர், ஆட்டையாம்பட்டியில் இயங்கிவரும் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை விரிவாக்கம் செய்து அனைத்து ஆராய்ச்சிகளும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருள்களுக்கு, முறையான நிர்ணய விலை, அரசு வழங்க உத்தரவிட வேண்டும்.

*பிற்பகல் 12-20*

விவசாயிகள் தாங்கள் படுகிற கஷ்டத்தில், பூச்சி மருந்து, உரங்கள் போன்றவற்றினை நிர்ணயம் செய்யப்பட்ட விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். ஆனால் விளைந்த பிறகு, பொருட்களைக் கொடுக்க கடைக்கு எடுத்துச் செல்லும்போது, ஏதோ சில காரணங்களினால், தங்களாலே வருவதைப்போல, 'கொண்டு வந்து போடுங்கள், இந்த விலைக்குக் கொடுங்கள், இல்லை என்றால் [illegible] சொல்லுங்கள்' என்று ஏளனமாக விவசாயிகளிடத்தில் வியாபாரம் [illegible] பேசி

24856

வருகிறார்கள். எனவே, உடனடியாக விவசாய விளைபொருட்களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகள் முன்னேற முடியும். அப்படி அவர்கள் முன்னேறினால்தான் இந்த நாடு முன்னேறும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி, முடியுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கண்டிப்பாக 5 ஆண்டுகள் இருந்தால்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். 5 ஆண்டுகள் இருப்பீர்களா இல்லை, கொடுப்பீர்களா என்பது இப்போது சந்தேகத்திற்கு இடமாகிவிட்டது. நீங்கள் கொடுக்கப் போவதில்லை.....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகாலம் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு உறுதியாக இருக்கும். தொடர்ந்து தி.மு.க.தான் ஆட்சிக்கு வரும். 5 ஆண்டுகள், 1991-லேயிருந்து 1996 வரையிலும் ஆட்சியிலே இருந்தவர்கள் மீண்டும் கனவு காண வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகாலம் தொடர்ந்து இருப்பது, இருக்காதது, தமிழ்நாட்டு மக்களின் கையில் அந்த முடிவு இருக்கிறது. ஆகவே, நீங்கள் அதைப்பற்றி ஒன்றும் கனவு காணவேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய தொகுதியில் ஒரு வட்ட ஆட்சியர் அலுவலகமும், ஒரு சார்பு நீதிமன்றமும் அமைத்துக் கொடுத்த இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த விவசாய மானியக் கோரிக்கையில் முந்தைய ஆண்டு விவசாயத்திற்காக நீர்வளத்தைப் பெருக்குவதற்காக இந்த அரசு பல இலட்சக்கணக்கில் ரூபாயை ஒதுக்கி, ஏரிகளையும், குளங்களையும் ஆழப்படுத்துவதற்கான பணிகள் செம்மையாக நடைபெற்று இருக்கின்றன. மேலும் தொகுதிக்கு ஓர் ஏரி போன்ற வேலைகளும் எடுக்கப்பட்டு, இயந்திரத்தின் மூலமாகத் திறம்படத் செய்யப்பட்டிருக்கின்றன. ஒருசில இடங்களில், தஞ்சாவூர் போன்ற இடங்களில், ஏரிகளுக்காக ஒதுக்கிய ரூபாயில், ரோடு ஓரங்களில் இருக்கிற காட்டாமணக்குச் செடிகளை அழிப்பதற்காகவும் செலவு செய்திருக்கிறார்கள். எப்படி இந்தத் தவறுகள் எல்லாம் நேர்ந்தன என்பதைக் கண்டறிய வேண்டும்.

மேலும் விவசாயிகள், இடுபொருட்கள் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும், இலட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற பணம் எல்லாம் விவசாயிகளுக்கு முறையாகப் போய்ச் சேருகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். ஓர் ஊராட்சி மன்றத்திற்கு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதற்கு தஞ்சை மாவட்டத்திலும் சரி, வேறு எங்கெங்கு அது இருந்தாலும் சரி, கண்மாய்களிலும் தண்ணீர் ஓடக்கூடியக் கால்வாய்களிலும், அதை அகற்றித்தரத் திட்டம் வகுக்கவேண்டும். இது முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த ஆண்டு உரிய இடங்களில் காட்டாமணக்குச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*பிற்பகல் 12-25*

தமிழகத்திற்கு உணவளிக்கும் விவசாயம் நிறைந்த தஞ்சை மண்ணில் பிறந்த நமது முதல்வர் அவர்கள் விவசாயிகளின் கஷ்டத்தை நன்கு அறிந்தவர். எனவே "நபார்டு" வங்கியின் விதிமுறைகள் இருந்தாலும், விவசாயிகளின் கடன்களை ஒத்திவைத்து, அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ததை வரவேற்கிறேன். அதோடு நில வரியையும் இரத்துச் செய்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் இலாப நோக்கத்தோடு விவசாயத் தொழிலைச் செய்யவில்லை. அந்தத் தொழிலை விட்டால் வேறு தொழில் இல்லை

என்ற கடமை உணர்வோடு செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தை நம்பி தொழில் செய்யக் கூடியவர்கள். இயற்கைச் சீற்றத்தால் நஷ்டப்பட்டால் அடுத்த ஓராண்டில் ஈடுகட்டுவது என்பது சாத்தியமானது இல்லை. ஆகவே, நஷ்டப்படக்கூடிய ஆண்டில் விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அன்னாவாரி சர்டிபிகேட் என்ற ஒன்று இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆனதால், அந்த அன்னாவாரி சான்று முறையை இரத்துச் செய்ய வேண்டுமென்று விவசாயிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த மத்திய அரசை வலியுறுத்தி நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை உடனடியாக எடுத்து, 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சர்க்காரை அணுகிக் கேட்க வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் பல இடங்களில் அரசு நிர்ணயித்த விலையைவிடக் குறைந்த விலையில் வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்து வியாபாரம் செய்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு இப்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைக்காத சூழ்நிலையில் அரசு நெல் விளையும் இடங்களில் எல்லாம் நேரடி நெல் கொள்முதல்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யலுசாமி அவர்கள் சொல்கிறபோது அன்னாவாரி, அன்னாவாரி என்று சொன்னார்கள். அது என்னவென்று தங்களுக்குப் புரிந்ததா? எனக்குப் புரியவில்லை. அவைக்கும் தாங்கள் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்ததை அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் அணாவரிச் சான்றிதழ் என்று சொன்னாரே தவிர, அன்னாவாரி என்று சொல்லவில்லை. வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பின்னால், கிராம அலுவலர்கள் மூலமாகப் பெறப்படுவது, அவர்களிடமிருந்து அந்த ஆர்டர் பெறப்பட்ட பின்னர்தான், அந்தக்



குத்தகைப் பாக்கியில், அந்த வரி பாக்கியில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆகவே, அதை நீக்க வேண்டுமென்று கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்விப்பட்ட வரையில் அணாவரி என்றால் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் 16 அணாக்கள் ஒரு ரூபாயாகும். விவசாயத்தில் விளைச்சல் விளையும்போது அவர்கள் வரி விதிப்பிற்கு முன்பாக இந்த ஆண்டு எவ்வளவு விளைச்சல் என்று கேட்பார்கள். 10 அணா, 8 அணா, 6 அணா அளவிற்கு விளைந்திருக்கிறது என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே அவர்களிடமிருந்து வரி வசூல் செய்வதைத்தான் அணாவரி என்று அவர்கள் சொல்லக்கூடிய வழக்கமாக இருந்தது என்று சொல்கிறேன். *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. ஞானசேகரன் பேசியதற்கு அந்தக் கட்சியின் சார்பிலே அவர் விளக்கம் சொன்னார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன Point of Order இருக்கிறது? சரி சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பராயன், பழனிசாமி ஆகியோர் அணாவரி சர்டிபிகேட் என்பது ஆங்கிலேயர் காலத்திலிருந்து கொண்டுவரப்பட்டது என்று கூறினார்கள். அந்த ஆங்கிலேயர் காலத்திலிருந்த முறையை மாற்றி அணாவரி சர்டிபிகேட் என்பதைத் தற்போதுள்ள வழக்கப்படி பைசாவரி சர்டிபிகேட் என்று மாற்றுவதற்கு இந்த அரசு ஆவண செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன Point of Order, அல்லது Clarification இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். திரு. அய்யலுசாமி, நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். திரு. அய்யலுசாமி, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது பயிர் விளைச்சலைப் பற்றி எழுதுவதுதான் அணாவரிச் சான்றிதழ். அது வழக்கறிஞரான உறுப்பினருக்கே தெரியவில்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு விளைச்சல் குறைந்துவிட்டால், விளைச்சல் ஆகவில்லை என்று சொன்னால், கடன் தள்ளுபடி உண்டு. கிஸ்தி தள்ளுபடி உண்டு, அந்த மாதிரி நிலைமை தாலுக்கா மட்டத்திலே கணக்கு எடுத்தார்கள். அதுதான் அந்த சர்டிபிகேட். மாநிலத்தில் பல இடங்களில் அதை நிர்மாணித்து — நான் இந்த இடத்தில் பேசும்போதுதான் அவர்கள் குறுக்கிட்டார்கள். குறைந்த விலையில் வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்கிறார்கள். எனவே, அரசு, நெல் விளையும் இடங்களில் எல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு அரசு அறிவித்துள்ள நேரங்களில் மும்முனை மின்சாரம் தடையின்றிக் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், எல்லா இடங்களிலும் மின்சாரப் பிரச்சினை நிறைய இருக்கிறது. ஆண்டுக்கு 40,000 மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படுவதை ஆண்டிற்கு 1 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதைகளின் உற்பத்தியைக் கண்காணிப்பதுடன், நல்ல தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். பல இடங்களில் விதைகளின் உற்பத்தியில் முறைகேடுகள் நடந்து, விவசாயிகள் விதைப்பில் மகசூல் எடுக்காத நிலையில் கடந்த காலத்தில் திருத்துறைப் பூண்டியில்கூட நெல் கதிர் வாங்கவில்லை என்று பத்திரிகையில் படித்திருக்கிறேன். அதைக் கண்காணிக்க வேண்டும். விவசாயத்திற்கு ஒட்டிய வயல் வெளியில் மீன் பண்ணைகளை அமைத்து வருமானத்தைப் பெருக்க அரசு உதவி செய்ய வேண்டும். அதேநேரத்தில், கேடு விளைவிக்கின்ற இறால் பண்ணைகளை அடியோடு நிறுத்த வேண்டும்.

மத்திய அரசின் திட்டத்தின் மூலம் வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தில் கிராமப்புறங்களில் சாலை அமைப்பதன் மூலம் பல கிராமச் சாலைகளுக்கு வசதி செய்து தர முடிந்தது. இந்தத் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, தொடர்ந்து, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு வரியில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.



**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க வழங்கப்பட்ட மானியம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் பல விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஆகவே ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கு அந்த மானியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

டென்மார்க் நாட்டு உதவியுடன் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் செயல்படும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்பாட்டு திட்டத்தில் கோவில்பட்டி தாலுக்காவைச் சேர்த்து அந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கு, தனியார் ஆலைகளும், அரசு ஆலைகளும் உடனடியாக பணத்தை விவசாயிகளுக்கு வழங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீலநாக்கு நோயால் இறந்த ஆடுகளுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஆடு ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் வழங்க உத்தரவிட்டார்கள். அதை, தேர்தலுக்கு முன்பே வழங்கி இருக்க வேண்டும். அதை முறையாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு விசாரணை செய்து உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின்மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விழைகின்றேன். இரண்டாவது பசுமைப் புரட்சியை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டுள்ள வேளாண்மைத் துறையானது இந்த ஆண்டு 94 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தியை ஈட்டித் தந்து தமிழக மக்களை மகிழ்விக்கக்கூடிய ஒரு சிறப்பான நிலையை உருவாக்கியுள்ளது. அதற்காக வேளாண்மைத் துறையையும், வேளாண்மைத் துறை அமைச்சரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்திலே என்போன்ற பல்வேறு அரசியல் கட்சிகளுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டபடி, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தாலும்கூட "நபார்டு" வங்கி

விவசாயிகளுடைய வட்டியைத் தள்ளுபடி செய்வதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்திருக்கிற காரணத்தினால் ஏதாவது ஒரு வழி வகையைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுடைய நில வரியை இவ்வாண்டு இரத்துச் செய்திருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களுக்கு மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். ஆனால், உண்மையில் இன்றையதினம் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருளான நெல், கரும்பு, பருத்திக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத சூழ்நிலையில் மாநில அரசுதான் அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கின்ற அளவுக்குப் பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறது. காரணம், நெல்லுக்கும், அரிசிக்கும் என்ன வித்தியாசம்? விவசாயிகளுடைய களத்திலே வைக்கப்படுகின்ற நெல்லுக்கு சரியான விலை இல்லை. ஆனால் உமி மட்டும் நீக்கப்படுகிறபோது அப்படி உமி மட்டும் நீக்கப்பட்டுவரும் அரிசிக்கு கடுமையான விலை உயர்வு இருக்கிறது. என்ன வித்தியாசம்? அதற்கு அதிகப்படியான பொருளாதாரச் செலவு இருக்கிறதா? நெல்லிலிருந்து உமியை நீக்குகிறார்கள். ஆனால் நெல்லுக்கு விலை இல்லை; அரிசிக்குக் கடுமையான விலை உயர்வு என்றால் எப்படி? இதை அரசு கண்டுபிடித்து நெல்லுக்கு, கரும்புக்கு, பருத்திக்கு உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். உர விலை கூடியிருக்கிறது. பூச்சி மருந்து விலை கூடியிருக்கிறது. இடுபொருள்களுடைய விலை கூடியிருக்கிறது. அவற்றையெல்லாம் அரசு குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் விவசாயிகளுடைய உப தொழிலாக கிராமங்களிலே ஆடு வளர்ப்புத் தொழில் இருக்கின்றது. இன்றைக்குத் தென் மாவட்டங்களில் நீல நாக்கு நோய்த் தாக்கி பல்லாயிரக்கணக்கான ஆடுகள் இறந்திருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே 15,000 ஆடுகள் இறந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



இன்றையதினம், 'சொன்னதைச் செய்வோம்' என்ற கொள்கை முழக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, மதுரை மாவட்டம் என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியிலே 58 கிராமக் கால்வாயை இவ்வாண்டு சுமார் 34 கோடி ரூபாயில் வெட்டத் தொடங்கியிருக்கின்றது. அதற்காக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களையும் என்னுடைய உசிலம்பட்டித் தொகுதி மக்கள் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

தென் மாவட்ட விவசாயிகள் மேம்பாட்டுக்காக மதுரை ஒத்தக்கடையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது. அந்த வேளாண்மைக் கல்லூரியை தென் மாவட்ட விவசாயிகளுடைய மேம்பாட்டுக்காக அதை ஒரு பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வேளாண்மைப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்படுகின்றபோது அந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு இந்திய நாட்டின் விடுதலைக்காக 11 வருட காலம் சிறைத் தண்டனை அனுபவித்த, ஆங்கிலேயர் ஆட்சியில் வாய்ப்பூட்டுச் சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட நிலையில், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் பல்லாயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்களைத் தன்னுடைய தலைமையில் அழைத்துச் சென்று ஆலயப் பிரவேசம் செய்திட்ட தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை அந்த விவசாயப் பல்கலைக்கழகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இது ஒரு மாபெரும் விவசாய நாடு. உலக நாடுகளோடு விஞ்ஞானத் துறையிலோ, தொழில் துறையிலோ, போட்டியிட்டு நாம் அவர்களை வெற்றி அடைகின்ற நிலை இல்லை. எனவே, ஒரு மாபெரும் விவசாய நாடாக இந்தியா இருக்கிற காரணத்தால் இங்கே கங்கை-காவிரித் திட்டம் நிறைவேற்றப்படுமானால் உலக நாடுகளுக்கு எல்லாம் உணவு உற்பத்தி செய்கின்ற, ஏற்றுமதி செய்கின்ற ஆற்றல் வாய்ந்த நாடாக இந்தியா திகழ முடியும். எனவே, கங்கை-காவிரித் திட்டத்தைப் புதிய பிரதமர் மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் தன்னுடைய அரசின் தேசியச் செயல் திட்டத்தில் சேர்த்து கங்கை-காவிரித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மேற்கு நோக்கி ஓடி அரபிக் கடலில் வீணாகக் கலந்து கொண்டிருக்கின்ற, ஆறுகளை எல்லாம் கிழக்கு நோக்கித் திருப்பிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்று காவிரியும், பெரியாறும் இரண்டு கண்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழக வேளாண்மைத் துறையினுடைய மேம்பாட்டுக்காக காவிரியும், பெரியாறும் இரண்டு படிக்கட்டுகள் என்றால் அது மிகையாகாது. ஆனால், இன்றையதினம் அந்த இரண்டுமே பிரச்சினைக்கு உரியதாக இருக்கின்றன. கடந்த 4 ஆம் தேதி அன்று கேரள சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அங்கே பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தை உயர்த்தவிடமாட்டோம், அப்படி உயர்த்துவது என்பது குழுவின் சிபாரிசுக்கு எதிரானது என்று எல்லாம் சொல்லி தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இங்கே பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தியே தீருவோம் என்ற சபதத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதை மிக விரைவில் 152 அடியாக உயர்த்திக்காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மனுநீதிச் சோழனாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், காவிரித் தாயினுடைய முதல் மகனாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு கலைஞர் அன்றும், இன்றும் சாதனை புரிந்து வருகிறார். ஆனால், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், காவிரிப் பிரச்சினையில் அன்றும், இன்றும் பாதகமே புரிந்து வருகிறார். அன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களைச் சந்தித்து காவிரி நடுவர் மன்றத்தை உருவாக்கி புதிய வரலாற்றைப் படைத்தவர்தான் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றால் அது மிகையாகாது. அதுமட்டுமல்லாமல், நடுவர் மன்றத்தை அங்கே உருவாக்கி இடைக்கால ஆணையை நமக்கு ஆதரவாக, 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கின்ற அளவுக்கு ஒரு தீர்ப்பை வாங்கித் தந்தார்கள். இப்போது, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இறுதியான, உறுதியான ஒரு முடிவை தமிழக விவசாயிகளுக்குப் பெற்றுத் தருகிற முயற்சியை எடுக்கிறார்கள். ஆனால், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் நடுவர் மன்றம் அமைக்கக் கோரி டெல்லிக்கு நமது தமிழக பாராளுமன்ற



உறுப்பினர்கள் செல்லுகின்றபோது—கர்நாடகத்தில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்தோடு சென்றார்கள். ஆனால் செல்வி ஜெயலலிதா அவர்கள், அங்கே திரு. வி. பி. சிங் அவர்களைச் சந்தித்து நடுவர் மன்றம் அமைக்கக் கோரி பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லுகின்றபோது— இரண்டு குழுக்களாகப் பிரித்து பிளவுபடுத்திப் பாதகம் புரிந்தார்கள். அதுமட்டுமல்லாமல் உண்ணாவிரதம் என்று இருந்தார்கள் சுய விளம்பரத்திற்காக. அந்த உண்ணாவிரதத்தால் ஏதாவது நன்மை ஏற்பட்டதா என்றால் எந்தவிதமான நன்மையும் இல்லை. உண்ணாவிரதத்தை முடித்து வைத்து அன்றைய மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் 2 கமிட்டிகளைப் போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த இரண்டு கமிட்டிகளை அமைக்கும் வாக்குறுதியை நிறைவேற்றினார்களா என்றால் நிறைவேற்றவே இல்லை.

அதேபோல், அன்றையதினம் 69 சதவீதம் இட ஒதுக்கீட்டில் உச்ச நீதிமன்றத்தில் எப்படி 50 சதவீதம் என்று ஒத்துக்கொண்டு தமிழக மக்களுக்குத் துரோகம் செய்தார்களோ அதுபோல, இன்று தேசியச் செயல் திட்டத்தில் தேசிய நதி நீர்க் கொள்கையை வைக்க ஏற்பாடு செய்துவிட்டேன் என்று இங்கே மண்ணுக்கும், விண்ணுக்கும் குதித்துக் கொண்டிருக்கிறார்கள் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள். ஆனால், உண்மையிலேயே இன்று தேசிய நதி நீர்க் கொள்கையை அங்கே கர்நாடக அரசுதான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. கர்நாடக முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்கள் தான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். காரணம், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு தமிழகத்திற்குச் சாதகமாக அமைந்துவிட்ட காரணத்தால் அதை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் தேசிய நதி நீர்க் கொள்கை, தேசிய நதி நீர்க் கொள்கை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேசிய செயல் திட்டத்தில் ஏற்றுக்கொண்டு இருப்பது தமிழகத்திற்கு பாதகமாக அமையும் என்பதை உணராமல் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே காவிரிப் பிரச்சினையில் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் அவர் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்தும்படி, அமல்படுத்தும்படி கோரியிருக்க வேண்டும். ஜெயலலிதா அவர்கள் அதைத் தேசியச் செயல் திட்டத்திலே சேர்த்திருக்க வேண்டும். உண்மையிலேயே காவிரி நீர்ப் பிரச்சினையிலே அவருக்கு அக்கறை இருந்திருக்குமேயானால், மத்தியில் மத்திய நீர்ப்பாசன மந்திரி

பதவி எங்களுடைய கட்சிக்கு வேண்டுமென்று ஜெயலலிதா கேட்டிருப்பார் அல்லது தொழில் துறை மந்திரி பதவி எங்களுக்கு வேண்டுமென்று அவர் கேட்டிருப்பார். ஆனால் அவருடைய ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காக, தனது ஊழலில் தண்டனை கிடைக்கப் போகிறது என்பதை உணர்ந்து, அவற்றிலிருந்து மீள்வதற்காக (குறுக்கீடு) தமிழகத்தினுடைய நலனைப் பார்க்காமல், தன்னுடைய சுயநலத்திற்காக சட்டத் துறை அமைச்சர் பதவி, அதேபோன்று தனிப் பொறுப்புடன் கூடிய, நிதித் துறை அமைச்சர் பதவிகளையெல்லாம் இன்றையதினம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழகத்தினுடைய நலனைக் காக்கின்ற ஆற்றல் பெற்றுத் திகழ்வது தமிழகத் தலைவர் டாக்டர் கலைஞர்தானே தவிர, ஜெயலலிதா அல்ல என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

அதேபோன்று இன்றையதினம் இங்கே சொன்னார்கள். தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியினுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதைப்போன்று, மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கருணாநிதியினுடைய ஜனநாயகமில்லை என்று ஒரு மத்திய அமைச்சர் சொல்கிறார். மற்றொரு மத்திய அமைச்சர், தமிழ்நாட்டில் சட்டம் தன் கடமையைச் செய்தால், டெல்லி அரசியல் தன்னுடைய பணிகளைச் செய்யும் என்று மிரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், எந்தவொரு போராட்டத்தையும் நடத்தியாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தே தீருவோம் என்றும் சொல்கிறார்கள்.

ஆனால், இவர்களுக்கெல்லாம் பிரதமராக இருக்கின்ற பிரதமர் வாஜ்பாய் என்ன சொல்கிறார் என்றால், இந்திய அரசியல் சட்டத்தினுடைய 356-வது பிரிவைப் பயன்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க மாட்டேன் என்று சொல்கிறார். அவர்களுக்குக் கீழே இருக்கின்ற, கூட்டுப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் இன்று......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் கூறியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள்





என்று கருதுகிறேன். அவர்கள் கூறியது, 356 ஆவது சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தமாட்டோம் என்றுதான் கூறியிருக்கிறாரேயொழிய, பயன்படுத்தமாட்டோம் என்று எந்த இடத்திலேயும் சொல்லவில்லை. நேற்று பேசிய சுப்பராயன் முதற்கொண்டு, ஒவ்வொருவரும், வாஜ்பாய் கூறிவிட்டார், வாஜ்பாய் கூறிவிட்டார், இந்த ஆட்சி கலைக்கப்படாது, கலைக்கப்படாது என்று. அப்படி நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்காதீர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறாகப் பயன்படுத்தமாட்டோம் என்று சொல்லிவிட்டு, தி.மு.க. ஆட்சியைக் கலைக்க மாட்டோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. வல்லரசு பேசட்டும்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது எல்லாம், பாராளுமன்றத்திலே தன்னுடைய கொள்கையை விளக்கிப் பிரகடனம் செய்தார் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், மத்திய அரசினுடைய இலட்சியப் பிரகடனமாக, கொள்கைப் பிரகடனமாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க மாட்டோம் என்று பாராளுமன்றத்தில் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அவருக்குக் கீழே செயல்படுகிற மத்திய அமைச்சர் பெருமக்கள் இன்று பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்துகொண்டு அவர்கள் நம்மைப் பார்த்து கருடா சௌக்கியமா என்று கேட்கிறார்கள்.

ஆனால், உண்மையில் ஒரு கூட்டாட்சித் தத்துவத்தில் பிரதமருடைய கொள்கைக்கு எதிராக, இன்றையதினம் தமிழக அ.தி.மு.க. மத்திய அமைச்சர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆட்சியிலே, ஒரு பிரதமருக்கு எதிரான கருத்துக்களைச் சொல்வார்களேயானால், அவருடைய முடிவிற்கு எதிரான நடவடிக்கைகளிலே ஈடுபடுவார்களேயானால், அந்த ஆட்சியிலே அவர்கள் அமைச்சர்களாக நீடிக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் அவர்கள் நம்மைப் பார்த்து இந்த ஆட்சியைக் கலைத்து விடுவோம் என்று சொல்கிறார்கள். அன்று, திருவள்ளுவருடைய துணைவியார் வாசுகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், 'கொக்கென்று நினைத்தீரோ கொங்கணவீர்' என்று. அதுபோன்று இன்றையதினம், சந்திரசேகர் என்று நினைத்தீரோ வாஜ்பாயை என்று உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உண்மையில், அவர்களுடைய நாள்கள்தான் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியினுடைய நாள்கள் எண்ணப்படவில்லை, எண்ணப்படவில்லை.

மத்திய அ.தி.மு.க. அமைச்சர்கள் பாரதீய ஜனதா ஆட்சியில் நீடிக்க முடியுமா? ஒரு பிரதமரை எதிர்த்து, அவருடைய கருத்தை எதிர்த்து, அவருடைய இலட்சியப் பிரகடனத்தை எதிர்த்து, அவர்கள் அங்கே ஆட்சியிலே நீடிக்க முடியுமா? எனவே, அ.தி.மு.க. மத்திய அமைச்சர்களுடைய நாள்கள்தான் எண்ணப்படுகின்றன, எண்ணப்படுகின்றன என்று கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

*பிற்பகல் 12-50*

**திரு. எல்.** மூக்கையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் பேசுவதற்குரிய வாய்ப்பினைத் தந்த நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பெரியகுளம் தொகுதி மக்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நாட்டினுடைய முதுகெலும்பு, விவசாயிகள் என்று நாம் சொல்கிறோம். விவசாயி சேற்றிலே கை வைத்தால்தான், நாம் சோற்றிலே கை வைக்கமுடியும் என்றெல்லாம் நாம் சொல்கிறோம். ஆனால் அந்த விவசாயிகள், உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்று சொல்கிறார்கள். அந்த விவசாயிகளுடைய சங்கடங்களை, அந்த விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய சிரமங்களை உணர்ந்துள்ள நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள், 1989-90 ஆம் ஆண்டில், விவசாயி தனக்கு இலவச மின்சாரம் தரவேண்டுமென்று கோரிக்கை எழுப்பாமலேயே, விவசாயி தனக்கு இலவசமாக மின்சாரம்



தரவேண்டுமென்று போராடாமலேயே, அந்த விவசாயிகளுடைய கஷ்டத்தைப் புரிந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து விவசாயிகளுக்கும், பாகுபாடு பார்க்காமல், ஏழை விவசாயி, பணக்கார விவசாயி என்று பார்க்காமல், 5 எச்.பி.க்கு மேல் வைத்திருக்கிற விவசாயி, 10 எச்.பி.க்கு மேல் வைத்திருக்கிற விவசாயி என்று பார்க்காமல், ஒட்டுமொத்தமாக அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தந்த தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதோடுமட்டுமல்ல, விவசாயிகள் வாங்கிய கடன்களை, ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அளவுக்கு அவைகள் கூட்டுறவுச் சங்கக் கடன்களாக இருந்தாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிக் கடன்களாக இருந்தாலும், அனைத்துக் கடன்களையும் இரத்துச் செய்துள்ளார்கள். அப்படி இரத்துச் செய்ததற்குப் பிறகுதான் விவசாயிகள் ஓரளவுக்கு நிம்மதியாகத் தங்களுடைய வேளாண்மைப் பணியில் ஈடுபடக்கூடிய வாய்ப்பை உருவாக்க முடிந்தது. இன்றைக்கும் விவசாயிகள் சொல்கிறார்கள், இன்றைக்கு ஏறியிருக்கின்ற உரவிலை காரணமாக, ஏறியிருக்கின்ற பூச்சி மருந்து விலை உயர்வு காரணமாக, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இலவச மின்சாரம் தராமல் இருந்திருந்தால், விவசாயிகள் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள் என்று பல விவசாயிகள் எங்களைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் விவசாயிகள் நலன் கருதி தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்கள் பரிந்துரை செய்கிற ஒரு கண்மாயைத் தேர்வு செய்து, அந்தக் கண்மாயை 10 இலட்சம் ரூபாய் நிதி உதவியோடு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இருக்கின்ற அந்த தேர்வு செய்யப்பட்ட கண்மாயை, இப்போது ஆழப்படுத்துகிறார்கள், கரைகளை எல்லாம் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி கண்மாய்களை ஆழப்படுத்துகின்ற பணி, கரைகளை உயர்த்துகின்ற பணி நடைபெறுகிறபோது, அந்த விவசாயிகள் எனக்கு 60 வயதாகிறது, இந்த 60 ஆண்டு காலத்தில் இப்படிப்பட்ட பணிகள் எல்லாம் நடைபெற்றதை நான் கண்ணால் பார்த்ததில்லை, என்று சொல்கிறார்கள். இதில் கண்மாய்களை ஆழப்படுத்துவதால், கரைகள் உயர்த்தப்படுவதால், அதிகமான நீர் தேக்கப்படும் வாய்ப்பு உருவாகி, அந்தக் கண்மாய்களுக்குக் கீழே இருக்கிற விவசாயிகள்

எல்லாம், அவர்கள் செய்கின்ற விவசாயப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் நல்லமுறையில் விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகியிருக்கிறது. அதைப்போல கண்மாய்களுக்குக் கீழே இருக்கின்ற கிணறுகள் எல்லாம் ஊற்று கிடைத்து கிணற்றுப் பாசனம் செய்கிற விவசாயிகளும் இன்றையதினம் பயன் அடைகிறார்கள். இன்றையதினம் ஒவ்வொரு கண்மாயும் ஆழப்படுத்தப்பட்டு அங்கே செப்பனிடப்படுகிறது. இந்த ஆண்டும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கண்மாய் அல்லது இரண்டு கண்மாய்கள் ஆழப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு மேலும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தி என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு *40* கோடி ரூபாய் அளவுக்கு மேல் நிலவரி இரத்து செய்யப்பட்டிருப்பது, அதைப்போல விவசாயிகள் வாங்கிய குறுகியக்காலக் கடனை மத்தியகாலக் கடனாகவும், மத்தியகால கடனை நீண்டகால கடனாகவும், நீண்டகால கடனை மேலும் நீட்டித்தும் இருப்பது, பால் விலையை உயர்த்தித் தந்திருப்பதும், இதையெல்லாம் பார்த்து விவசாயிகள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் நம்முடைய கழக அரசையும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களையும் மறக்கமாட்டார்கள், நன்றியோடு இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன். இன்றையதினம் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கண்மாய்க் கரைகளில் கருவேல மரங்கள் வளர்க்கப்படுகின்ற காரணத்தால், கண்மாய்களை ஆழப்படுத்த முடியாமல் பல இடங்களில் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலைகள் ஏற்படுகின்றன. அதனால் கண்மாய்கள் எல்லாம் மேடாகிவிடுகின்ற காரணத்தால், கண்மாய்களில் நீரைத் தேக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. அதனால் அந்தக் கண்மாய்க்குக் கீழே உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே கண்மாய்களில் கருவேல மரங்கள் வைக்கப்படுகிற அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

பெரியகுளம் கண்மாய், ஒவ்வொரு கண்மாய்க்கும் *10* இலட்சம் ரூபாய் ஒதுக்கி பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரியகுளம் கண்மாய் என்றால், *10* கண்மாய்கள் சேர்ந்து இருந்தாலும்கூட அதைவிடப் பெரிய கண்மாய் அந்தப் பெரியகுளம் கண்மாய். அந்தப்



பெரியகுளம் கண்மாய் ஆழப்படுத்தப்படவும், செப்பனிடப்படவும் தனியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் ஒவ்வொரு விரிவாக்க மையம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு விரிவாக்க மையத்திலும் ஒரு வேளாண்மை வளர்ச்சி அலுவலர் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கக்கூடிய ஏ.டி.ஓ. தென்னை அபிவிருத்தித் திட்டம், எண்ணெய் வித்துத் திட்டம் போன்ற அந்தப் பயிர்ப் பாதுகாப்பு விளக்கங்களைத்தான், ஆலோசனைகளைத்தான் விவசாயிகளுக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மா போன்ற பயிர்களுக்கு அவர்கள் ஆலோசனைகள் சொல்வதற்குரிய வாய்ப்பு அங்கேயில்லை. பெரியகுளம் பகுதியைப் பொறுத்தவரையில் மா ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகிறது. மா பயிரிடும் விவசாயிகளுக்கு அங்கே பூச்சி மருந்து தடுப்பு முறைகளை சொல்லிக் கொடுப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், என்னுடைய மாவட்டத்தில் கரும்பு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மஞ்சுளா *86032, 95071* போன்ற இரகங்கள் ஏராளமான அளவில் பயிரிடப்படுகின்றன. நல்ல தண்ணீர் வசதியிருக்கின்ற காரணத்தினால் நல்ல கரும்பு மகசூல் கிடைக்கிறது. ஓரளவுக்கு விலையும் இன்றையதினம் தரப்படுகிறது. கரும்புக் கரணை நடவு செய்யும்போது மருந்து தெளித்து விவசாயிகள் நடவு நடாத காரணத்தினால் இன்றையதினம் அழுகல் நோய் ஏற்பட்டு வருகிறது. இந்த அழுகல் நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் அழுகல் நோயைத் தடுப்பதற்கு கரணை நேர்த்தி செய்யும் கருவி அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒரு வழிக் கலப்பை, இருவழிக் கலப்பைதான் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சாதாரணமாக விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற கடப்பாறை, மண்வெட்டி, இரும்புச் சட்டி, கொத்து போன்ற பொருட்களெல்லாம் மானிய விலையில் கிடைக்கின்ற வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும்.

எங்கள் பகுதியில், எங்கள் மாவட்டத்தில் ஒரு தனியார் சர்க்கரை ஆலை இருக்கிறது. அங்கே குறிப்பிட்ட வயதில், குறிப்பிட்ட காலத்தில் **Cutting Order** கொடுத்து வெட்டாமல் *3, 4* மாதங்கள் கழித்து கரும்பு **Cutting Order** கொடுத்து வெட்டுவதால், சர்க்கரை அளவு குறைந்து,

எடை குறைந்து விவசாயிக்கு மகசூல் குறைவாகக் கிடைக்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் வெளியூர்களிலிருந்து பதிவு செய்யப்படாத கரும்பை குறைந்த விலைக்கே அந்த நிலத்தையே கான்ட்ராக்ட் பேசி, குறைந்த விலைக்கு வெளியூரிலிருந்து கரும்பை வெட்டி ஆலைக்குக் கொண்டுவருகின்ற காரணத்தினால், பதிவு செய்த கரும்புகளை காலந்தாழ்த்தி அவர்கள் எடுக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை மலைப் பகுதி, தரைப்பகுதி என்று இருக்கிறது. கொடைக்கானல் மேல்மலைப் பகுதியைப் பொறுத்தவரை, அங்கே மானாவாரியாக விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றார்கள். அங்கே கிணற்றுப் பாசனம் கிடையாது. ஆற்றுப் பாசனம் கிடையாது அல்லது கண்மாய் பாசனம் கிடையாது. கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் மக்கள் பூண்டு, கேரட், கோஸ் போன்றவற்றை பயிர் செய்கிறார்கள். மழை பொய்த்துவிட்டால் அவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், அதைப்போல வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேல்மலைப் பகுதியில் விவசாயம் செய்யும் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அந்தப் பகுதியில் சிறுசிறு நீர்த்தேக்கங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூம்பாறை பகுதியில் குண்டம்பாச்சி நீர்த்தேக்கத்தையும், கூக்கால் பகுதியில் பேரிஜம் நீர்த்தேக்கத்தையும், கவுஞ்சி பகுதியில் கோணலாறு நீர்த்தேக்கத்தையும், இப்படி சிறுசிறு நீர்த்தேக்கங்களைக் கட்டிக் கொடுத்தால் ஒவ்வொரு பகுதியிலும் 5 ஆயிரம், 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழ்மலைப் பகுதியில் பெருமாள்மலை, பண்ணைக்காடு, தாண்டிக்குடி, மங்களம்கொம்பு, கே.சி.பட்டி, பெரியூர், பள்ளத்துக்கால்வாய், பாச்சலூர் போன்ற பகுதிகளில் எல்லாம் காபி பயிர், வாழை, ஆரஞ்சு பயிரிடுகிறார்கள். காபியும் ஆரஞ்சும் நல்ல விளைச்சல் தந்து கொண்டிருக்கின்றன. ஆனால், கடந்த 10 ஆண்டுகாலமாக மலை வாழையில் முடிக்கொத்து நோய் ஏற்பட்டு அந்த மலை வாழை விவசாயமே இன்றையதினம் பெரிதும் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே, கீழ்ப்பழனி மலைப் பகுதியில் பண்ணைக்காட்டிலேயே ஒரு தோட்டக்கலை மையம் ஏற்படுத்தி அந்த மையத்திற்கு வேளாண்மைத் துறை அதிகாரிகளை அனுப்பி, அந்தப் பகுதியில் நோய் தாக்காத வாழைக் கன்றுகளைத் தந்து மலை வாழையை மீண்டும் சாகுபடி செய்வதற்கு நடவடிக்கையை அரசு எடுத்து வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

பிற்பகல் 1-00

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கின்ற 120 பாலங்களில், காஞ்சிபுரத்தில் பாலாற்றில் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி வரையுள்ள பாதையில் ஒரு மேம்பாலமும், அதே பாலாற்றில் கீழ்ரோட்டிலே, காஞ்சிபுரம்-உத்திரமேரூர் பாதையில் பாலாற்றில் ஒரு தரைப் பாலமும் அமைப்பதற்கும்—இரண்டு பாலங்களையும் இணைத்து அறிவித்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய இரண்டு துறைப் பணிகளுக்கும் சேர்த்து அமைச்சர் பொறுப்பு வகித்து வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கும், அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த மன்றத்திலே வைத்திருக்கின்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் பல நல்ல செயல்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுத் தேவையை ஈடுசெய்வதிலும், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் வேளாண்மைக்குப் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை அடையாமலிருந்த உற்பத்தித் திறனை அடைவதோடு உற்பத்தியைப் பெருக்கி இரண்டாவது பசுமைப் புரட்சியை நோக்கிச் செல்வதில் முழு வேகத்தோடு செயல்பட்டு, இன்றைக்கு அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் சராசரியாக 1 எக்டேருக்கு 5 டன் உற்பத்தி செய்யும் அளவிற்கு இந்தத் துறை முழுமூச்சுடன் செயல்பட்டுவருவது பாராட்டுக்குரியதாகும். இருப்பினும், மாநிலத்தில் அதிக அளவிற்குமேல் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் ஒரு

ஏக்கருக்கு 7 மெட்ரிக் டன் நெல் உற்பத்திப் பெருக்குவதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருவது பாராட்டுக்குரிய செயலாகும்.

கிராமங்கள்மீது அக்கறை கொண்ட இந்த அரசு கிராமப்புற மாணவர்கள் வேளாண்மைக் கல்வி பயில வாய்ப்பளிக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளதைக் கண்டு கிராமப்புற விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசை எப்போதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள். விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் இத்துறை சலுகை முறையில் பல உதவிகளைச் செய்து வருகிறது. இன்றைக்கு விவசாயிகள் நிலத்தடி நீரையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறையின் மூலமாக புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கக் குறைந்த வாடகையில் ஆழ்துளைக் கருவிகளைக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவிகரமாகச் செயல்பட்டுவருவது பாராட்டுக்குரியதாகும்.

அதே நேரத்தில் ஒரு கோரிக்கையையும் வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன். இந்தத் திட்டத்தின் மூலமாகப் போடப்படும் ஆழ்துளைக் கிணறுகளுக்கு சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 75 சதவீதம் மானியமும் அளிக்கப்பட்டு வந்ததை இரண்டாண்டு காலமாக வழங்கவில்லை. எனவே, ஏற்கெனவே அளித்து வந்த மானியத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இத்துறையின் மூலமாக விவசாயிகளுக்குப் பல சலுகைகளை வாரி வழங்குவதோடு, விவசாயம் செய்வதற்காகக் கருவிகளைக் குறைந்த வாடகையிலே தரிசு நிலத்தை மேம்படுத்த Tractor, Dozer போன்ற கருவிகளைக் குறைந்த வாடகைக்கு விடுவதோடு, உழவு செய்ய Power Tillers— வாடகைக்குத் தந்து விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பது பாராட்டுக்குரியது ஆகும். அதேநேரத்தில், இன்றைக்கு விவசாய வேலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால் அறுவடை செய்கிற இயந்திரங்களை வாடகைக்கு வழங்கி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமாய் இன்றைய தினம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவசாயிகளுக்கு இத்துறையின் மூலமாக இந்த அரசு இவ்வளவு சலுகைகளைச் செய்திருந்தும்கூட ஒரு சிறு மனக்குறையும் இருந்துகொண்டேயிருக்கிறது. அந்தக் குறையும் நியாயமான மனக்குறையாகும். உற்பத்தி செய்கின்ற நெல்லிற்குப் போதுமான விலை


1998 ஏப்ரல் 7] [திரு. பொ. முருகேசன்]

கிடைக்கப்பெறவில்லை என்ற ஆதங்கம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக அவர்கள் கூடுதலாக விலையைக் கேட்கவில்லை. ஏற்கெனவே, அரசால் அறிவிக்கப்பட்ட கொள்முதல் விலைக்கே விற்றால் போதும் என்றுதான் கேட்கிறார்கள். இன்றைக்கு நெல் கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், மோட்டா ரகம் என்று சொல்லப்படுகின்ற A.D.T.27, 75 கிலோ கொண்ட மூட்டைக்கு அரசு நிலை நிர்ணயித்த விலை 330 ரூபாய். ஆனால் மார்க்கெட்டில் இன்றைக்கு ரூபாய் 260, 270-க்கு மேல் வாங்குவோர் இல்லை. இதனால் விவசாயிகளுக்கு ஒரு மூட்டைக்கு இன்றைக்கு ரூபாய் 60, 70 வரை இழப்பு ஏற்படுகிறது. எனவே விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்க வழிவகை செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-05

காஞ்சிபுரம் நகரைப் பொறுத்தவரையில் அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பெயரளவில்தான் இருக்கிறதே தவிர, அது சரியாகச் செயல்படவில்லை. அதை விரிவுபடுத்தி, தானியக் கிடங்கு வசதியோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்து, விவசாயிகள் கொள்முதல் விலைக்கே விற்று பயன்பட இந்த ஆண்டிலேயே அதைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி குறித்து ஓரிரு கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய தொகுதி விவசாயத்திற்கு அடுத்து நெசவுத் தொழிலில் சிறந்து விளங்குகிறது. அந்தத் தொழிலும் இன்றைக்கு நலிவடைந்து உற்பத்தி செய்த கைத்தறித் துணிகளும், பட்டுச் சேலைகளும் தேக்கமடைந்திருக்கின்றன. இந்தத் தேக்கத்தினால், நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியாத சூழ்நிலையும் இன்றைக்கு இருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால், கைத்தறி நெசவாளர்களும், பட்டு நெசவாளர்களும் வேலைவாய்ப்பின்றி அல்லல்படுகின்ற வாய்ப்பு ஏற்படும். எனவே, உடனடியாக கைத்தறி, பட்டுத் துணிகளின் தேக்கத்திற்கு ஒரு அவசர முடிவெடுத்து கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காஞ்சிபுரம் நகரின் மத்தியில் மஞ்சள்நீர் கால்வாய் ஒன்று செல்கின்றது. மழைக் காலங்களில் நகரத்தில் வழிந்தோடும் தண்ணீர் இந்தக் கால்வாய் மூலமாகத்தான் நகரத்திற்கு வெளியே செல்ல வேண்டும். ஆனால் இந்தக் கால்வாய் சீர்கெட்டு இருப்பதால், இந்தக் கால்வாயின் மூலமாகத் தண்ணீர் வெளியே போக வாய்ப்பில்லாமல், சுகாதாரக் கேடும் இதனால் ஏற்படுகிறது. எனவே, இந்தக் கால்வாயை சிமெண்ட் கால்வாயாக அமைத்து, காஞ்சிபுரம் நகரத்திற்குப் பெருமைத் தேடித் தருகின்ற வகையிலே அழகுபடுத்த வேண்டுமென நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடைசியாக, காஞ்சிபுரம் நகரம், மக்கள் பெருக்கமும், வாகனப் பெருக்கமும் நிறைந்து காணப்படுவதால், போக்குவரத்தைச் சீரான முறையில் கட்டுப்படுத்த போதுமான போக்குவரத்துக் காவலர்கள் இல்லை. காஞ்சிபுரம் நகருக்குக் கூடுதலாகப் போக்குவரத்துக் காவலர்களை நியமிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் அரசு மருத்துவமனை ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு வெளி நோயாளிகள் மட்டும் சுமார் 4 ஆயிரம் பேர் தினமும் வந்து போகிறார்கள். அவர்களை கவனித்து சிகிச்சை அளிக்கப் போதுமான மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லை. எனவே, உடனடியாக மருத்துவர்களையும், செவிலியர்களையும் கூடுதலாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு என்று அறிவித்த பல்வேறு சலுகைகளுக்கு, விவசாயிகளின் சார்பாகவும், என சார்பாகவும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று அறிவித்த பல்வேறு சலுகைகளில், பல்வேறு கூட்டுறவுக் கடன்களை, குறுகியகாலக் கடன்களை, மத்தியகாலக் கடன்களாகவும், நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றும்படி அறிவித்தார்கள். ஆனால் பல்வேறு விவசாயிகள் தங்களுடைய விவசாயத்திற்கு வேண்டிய கடன்களை தேசிய வங்கிகளில்



வாங்கி விவசாயத்தை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேசிய வங்கிகளில் இந்தச் சலுகை கிடைக்காத காரணத்தால், அவர்கள் துன்பப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் Lead Bank என்ற வங்கி உண்டு, அந்த வங்கியின் கூட்டம் கூடுகின்றபோது அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். அந்தக் கூட்டத்தில் இந்தக் கடன்களை re-schedule செய்யச் சொன்னால், அது Non-Performance Account ஆக மாறவேண்டிய அவசியம் இருக்காது. எனவே அதை re-Schedule செய்யக்கூடிய அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரை வற்புறுத்தவேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் வங்கிக்கும் பிரச்சினை இல்லை. விவசாயிக்கும் பிரச்சினை இல்லை என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இன்று கிட்டத்தட்ட 1,200, 1,300 நூற்பாலைகள் உள்ளன. ஆனால், தமிழகத்தில் விளையக்கூடிய பருத்தியானது கிட்டத்தட்ட 6 இலட்சம் பேல்கள்தான் என்று உங்கள் விளக்கவுரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடந்த ஆண்டு 2½ இலட்சம் ஏக்கர் பருத்தி விவசாயம் செய்ய வேண்டும் என்று இலக்கு இருந்தாலும்கூட, அந்த இலக்கை எட்ட முடியாமல் 2,13,000 ஏக்கர்தான் பருத்தி விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சரியான விலை கிடைக்காத காரணத்தாலும் தரமான விதைகள் கிடைக்காத காரணத்தாலும் இதுபோன்ற இலக்கை எட்ட முடியவில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நூற்பாலைகளுக்கு கர்நாடகா, மகாராஷ்டிரா, பஞ்சாப், ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்துதான் பருத்தியை வரவழைத்து இங்கே நூற்பாலைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. திரும்பவும் நூலையும் அங்கேதான் அனுப்புகிறோம். அதனால் உற்பத்திச் செலவு அதிகமாகிவிடுகிறது. தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பருத்தியானது 40 இலட்சம் பேல்கள் என்று வரக்கூடிய அளவுக்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-10

தமிழ்நாட்டிலே விதைகள் சுத்திகரிப்பு நிலையங்கள் பெரியது 16, சிறியது 57, நடுத்தரம் வாய்ந்தது 3 உள்ளன. அவைகள் சரியான முறையில் கண்காணிக்கப்படுகின்றனவா என்றால் இல்லை என்பதுதான் என்னுடைய பதில். அங்கேயிருந்து கிடைக்கிற விதைகள், அது பருத்தியினுடைய விதையானாலும் சரி, மற்ற விதைகளானாலும் சரி.

அவைகளின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஜெர்மினேஷன் குறைவாக இருக்கிறது. ஜெர்மினேஷன் மட்டுமல்ல, பியூரிட்டியும் மிகக் குறைவாக இருக்கிறது. இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் உதவியோடு தீவிர அபிவிருத்தித் திட்டம் என்ற திட்டம் தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய மானியம் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, பருத்தியினுடைய உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல், பருத்தியினுடைய விலையையும் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்கிற முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பழச் செடிகள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலைப் பயிர்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு, கடந்த ஆண்டு 23,087 எக்டேரில் சாகுபடிக்கு சுமார் ரூ. 193 இலட்சம் செலவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரக்கூடிய நிதியாண்டிலே 32,000 எக்டேரில் பழப் பயிர்களும், மலைப் பயிர்களும், நறுமணப் பயிர்களும் பயிர் செய்யப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக ரூ. 440 இலட்சம் மதிப்பிட்டில் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

உலகத்திலே அக்டோபர், நவம்பர் மாதங்களில் திராட்சை எங்கும் விளையாது. தேனி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஓடப்பட்டி, வெள்ளையம்மாள்குளம், மூர்த்திநாயக்கன்பட்டி போன்ற இடங்களிலே இந்த திராட்சைப் பயிர் விளைகிறது. கடந்த ஆண்டு அந்த விவசாயிகளுக்கு ஒருசில சலுகைகளை அளித்து, ஏற்றுமதிக்கு முயற்சி செய்தாலும்கூட காலதாமதமாக அவைகள் செய்யப்பட்டதால் அவர்கள் முழு அளவில் பயன்பெறவில்லை. வரக்கூடிய ஆண்டிலாவது இதைத் தீவிரமாகப் பரிசீலித்து அந்த விவசாயிகளினுடைய முன்னேற்றத்தைக் கருதி, அங்கே Cold Storage வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். Cold Storage அங்கே அமைத்தால், அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை சேமித்து வைப்பதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் அது வசதியாக இருக்குமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று பெரியகுளம் பகுதியில் மாம்பழம் அதிகமாக



விளைகிறது. அந்த மாம்பழத்தைச் சேமித்து வைக்கக்கூடிய அளவிற்கு அங்கேயும் குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்கினை நிறுவினால் அதிகமான அளவில் பாதுகாப்பதற்கும், அதைத் தரமான முறையிலே விநியோகம் செய்வதற்கும் ஏதுவாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தோட்டக்கலையினுடைய ஒரு பகுதியான வெற்றிலை விவசாயம் சின்னமனூர் பகுதியிலே செய்யப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 300, 400 ஏக்கர் நிலப்பரப்பிலே வெற்றிலை விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விவசாயிகள் ஏழைகள். கோடைக்காலத்திலே போதுமான தண்ணீர் கிடைப்பது இல்லை. அங்கு பயிரிடப்படும் வெற்றிலை பல்வேறு வெளி மாநிலங்களுக்குச் செல்கிறது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் இதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மார்க்கெட்டிங் வசதி இல்லாத காரணத்தால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கே மார்க்கெட்டிங் வசதியைச் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் தரமான செடிகளையும், விதைகளையும் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காக செயல்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 125 இலட்சம் செடிகள்தான் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்வேறு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளைப் பார்த்தோம் என்று சொன்னால், குறிப்பாக பெரியகுளம் தோட்டக்கலைப் பண்ணையை எடுத்துக்கொண்டாலும்கூட, இங்கே போதுமான நீர் வசதி இல்லாத காரணத்தால் விவசாயிகளுக்கு வேண்டிய நேரத்தில், விதைகளை, மரக் கன்றுகளை, செடிகளைக் கொடுக்க முடியாத நிலையிருக்கிறது. இதைப்போன்று பல்வேறு இடங்களில் விதைகளை, செடிகளைச் சேமித்து வைக்க முடியாத நிலையிருக்கிறது. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற விதைகளை, செடிகளை சேமித்து வைக்கக்கூடிய அளவிற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதோடு, போதுமான பணியாளர்கள் அங்கே இல்லாத குறையையும் நீக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விருதுநகர், தேனி, கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், இயற்கை சூழலைப்

பாதுகாக்கவும் அரசு போதுமான நிதியை அளித்திருக்கின்றது. ஆனால், அந்த நிதியைக் கொடுக்கின்றபோது, அதற்கான அக்ரிமெண்ட்டைப் போட்டதற்குப் பின்னால், காண்ட்ராக்டர்கள் மூலமாகத்தான் அதைச் செய்கின்றார்கள். அப்படி காண்ட்ராக்டர்கள் மூலமாகச் செய்யாமல், அந்த நிலத்தினுடைய உரிமையாளர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுத்துச் செய்வதாக இருந்தால், ஓரளவிற்காவது தரமாகவும் செய்யமுடியும்; விரைவாகவும் செய்ய முடியும். ஆகவே, அதுபோன்றதொரு திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்த அரசு, கடந்த ஆண்டு டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் ஓர் உயர் நிலைக் குழுவை அமைத்திருக்கிறது. தன்னுடைய பரிந்துரைகளைக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் கொடுத்திருந்தாலும்கூட, அதற்குப் பின்னால் தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் அது பரிசீலிக்கப்பட்டு, மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழகத்தை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 28 இலட்சம் ஏக்கருக்கும் மேலாக தரிசு நிலங்கள் உள்ளன. அந்த 28 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களையும் பயன்படுத்த வேண்டுமானால், அதனைப் பயன்படுத்த முன்வருகின்ற விவசாயிகளுக்குக் கடன் வசதிகளை அளிக்க இந்த அரசு முன்வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மேலும், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற, கடன் வசதிகளைப் பெற அவர்கள் கூட்டுறவு வங்கிகளை அணுகும்போது காலதாமதம் ஏற்படுகின்றது என்று சொல்கின்றார்கள். எனவே, இதுபோன்ற கடன்வசதிகளைப் பெற அவர்கள் வருகின்றபோது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.. அதற்குக் கூட்டுறவு வங்கிகள் முன்வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதோடு, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்திலே நான்கு வணிக வளாகங்கள் ஏற்படுத்த இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே ஒன்றை தேனியிலே பருத்திக்காக ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்காக அரசுக்கு என்னுடைய நன்றியை அந்தப் பகுதி மக்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், கடந்த ஆண்டு மஞ்சளுக்காக ஈரோட்டில் ஒரு வணிக வளாகம் ஏற்படுத்துவதாக இருந்தது. அது இன்னும் செயல்பாட்டிற்கு



வரவில்லை என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் கூறுகின்றார்கள். ஆகவே, அதனையும் ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அந்த வணிக வளாகத்தினைக் கூடிய விரைவிலே அமைத்து, எந்த நோக்கத்திற்காக அந்த வளாகம் அமைக்கப்பட இருக்கிறதோ அந்த நோக்கத்தை அடைவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்திலே விளையக்கூடிய நெல், நவதானியங்கள் போன்றவை அறுவடை செய்ததற்குப் பின்னால் அவற்றிற்கென சரியான உலர்கள வசதிகள் இல்லாத காரணத்தினால், அவற்றை 'ஸ்டோரேஜ்' செய்வதற்கு, அவற்றைப் பாதுகாப்பதற்கான வசதிகள் அதிகமாக இல்லாத காரணத்தினால், கிட்டத்தட்ட 10 சதவிகிதத்திற்கும் மேலாக வீணாகிறது. என்று சொல்கிறார்கள். ஆகவே, அவற்றிற்காக உலர்களங்கள் அமைத்துக் கொடுத்தால், அதன் மூலமாக இரண்டு சதவிகிதம் வீணாவதைச் சேமிக்க முடியும் என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, கடந்த ஆண்டு ஆறு மாவட்டங்களில் அறுபது கிராமங்களிலே அவற்றை அமைப்பதற்கு நிதிவசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், அந்த வசதிகளை அனைத்து மாவட்டங்களிலும் செய்து தருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தேனி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இருபதாயிரம் ஏக்கரில் நெல் மற்றும் நவதானியங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பகுதியாக இருக்கின்றது. ஆகவே, வர இருக்கின்ற நிதியாண்டிலே தேனி மாவட்டத்திலே உலர் களங்களை ஏற்படுத்த முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்திலே இருக்கின்ற கண்டமனூரில் மார்க்கெட்டிங் கமிட்டி அமைப்பதற்கு ஒரு ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிலம் அரசின் பொறுப்பிலே இருக்கிறது. மேலும் அதைச் சுற்றியுள்ள 4 ஏக்கர் நிலத்தினை அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களையும் கையகப்படுத்தி, அங்கே மார்க்கெட்டிங் கமிட்டியை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கருத்து, விரைவிலே பேசி முடித்து விடுகிறேன். பள்ளிக் கல்வியில் வேளாண்மையை பாடமாகக் கற்பிப்பதற்கு

கல்வித் துறை முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை ஆரம்பிக்கிறபோது, பல ஆண்டுகளாக டிப்ளமோ படித்து இருக்கக்கூடிய மாணவர்களையும், அதிலே நியமிப்பதற்கு, விவசாயத் துறை முடிவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

மற்றபடி, அனைத்துப் பயிர்களுக்கும் 'இன்ஷூரன்ஸ்' செய்வதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். இப்போது ஒருசில பகுதிகளிலே, கரும்புக்கு 'இன்ஷூரன்ஸ்' செய்யப்படுகிறது. ஆனால், மற்ற பல்வேறு பகுதிகளிலே மற்ற பயிர்களுக்கும் 'இன்ஷூரன்ஸ்' வசதியில்லை. ஆகவே, அவற்றிற்கும் 'இன்ஷூரன்ஸ்' வசதி செய்து தருவதற்கு அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. இன்னும் அமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. கடைசியாக ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு கொள்முதல் மூலமாகக் கிடைக்கக்கூடிய வரியில், கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு, அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஆலைகளுக்கு 90 சதவிகிதம் அந்தத் தொகையைக் கொடுத்து, அதன்மூலமாக சாலை வசதியை மேம்பாடு செய்வதற்கும், மரங்களை நடுவதற்கும், பல்வேறு திட்டங்களை கடந்த ஆண்டு இந்த அரசு அறிவித்திருக்கிறது. கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் இதற்காக கடந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பல்வேறு பகுதிகளிலே மரங்களை மட்டும் நட்டிருக்கிறார்கள். ஆனால் உரிய அளவுக்குப் பாதுகாப்புச் செய்யவோ, தண்ணீர் வசதி செய்து கொடுத்து அவற்றை மேம்படுத்தவோ யாருமே முயற்சி செய்யவில்லை. ஆகவே, அதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*** மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் இங்கே பேசியிருக்கிறார்கள். 13 பேர் பேசியிருக்கின்ற அந்தக்



கருத்துக்களுக்கெல்லாம், நான் விளக்கமாகவோ, அல்லது விரிவாகவோ பதில் அளிக்கின்ற வாய்ப்புக்கான நேரம் எனக்கு இல்லை என்பதைப் பேரவை உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இங்கே, இறுதியாக, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா அவர்கள், இந்த மானியக் கோரிக்கையில், முழுமையாக வேளாண்மையைப் பற்றி சில நல்ல ஆலோசனைகளையெல்லாம் அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த நல்ல ஆலோசனைகளை உரிய நேரத்தில் அரசு பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஒவ்வொரு உறுப்பினரும் பேசிய அந்தக் கருத்துக்களுக்கெல்லாம் என்னிடத்திலே விரிவான பதில் இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான இந்த நேரத்திலே வந்திருக்கிற நம்முடைய வேளாண்மைத் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகள், இங்கு ஒவ்வொரு உறுப்பினரும் பேசுகிறபோது, அந்தக் கருத்துக்கான பதிலையும், விளக்கங்களையும் எனக்குக் குறிப்பாக இங்கே கொடுத்தும் இருக்கிறார்கள். ஆகவே, அவற்றையெல்லாம்கூட ஒரு வரி, இரண்டு வரியிலே சொன்னாலும்கூட, நீண்ட நேரம் ஆகிவிடும் என்ற காரணத்தினாலே, அதற்கெல்லாம் நான் விரிவாகப் பதில் அளிக்க இயலவில்லை. இருப்பினும், பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை அலட்சியப்படுத்தாமல், உரிய வகையில் ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பதிலை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது மொத்தம் 22 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களின் விவரம்; திரு. ஐ. கணேசன்-19; திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்-18; திரு. ப. கோவிந்தன்-16; திரு. கருப்பண்ண உடையார்-15; திரு. ஜி.கே. மணி-14; திரு. க. மணிவர்மா-10; திரு. பி.ஆர். சுந்தரம்-9; திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்-9; திரு. ஜி. நிஜாமுதீன்-6; எதிர்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன்-5; திரு. கே. சுப்பராயன் - 4; திரு. பா. வேல்துரை-4; திரு. சி. ஞானசேகரன் -4; திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்-4; திரு. அ.வ. அப்துல் நாசர்-4; திரு. நா. பெரியசாமி-4; திரு. டி. சுதர்சனம்-4; திரு. ஆர். ஆர்.

சேகரன்-3; திரு. பி. வெங்கடசாமி-2; திரு. டி. மணி-1; டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்-1; திரு. வை. சிவபுண்ணியம்-1; ஆக மொத்தம் 157 வெட்டுத் தீர்மானங்கள்.

*பிற்பகல் 1-25*

இங்கே பேசியவர்கள் எல்லாம் எங்கள் பகுதியில் விதைப் பண்ணை அமைக்க வேண்டும், தோட்டக்கலைப் பயிற்சி மையம் வேண்டும், வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் விதைப் பரிசோதனை நிலையம் தேவை என்றும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியிலே 100 ரூபாய் குறைக்க வேண்டுமென்று இங்கே இந்த வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டுப் பேசவில்லையென்றாலும்—அவருடைய கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. அய்யலுசாமி அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்–– அவர் எதற்கும் பதில் சொல்ல வேண்டாம், அறிவிப்பு மட்டும் செய்யுங்கள் என்று உட்கார்ந்து கொண்டே என்னிடத்திலே கேட்டுக் கொண்டார், சொன்னார் என்று சொல்லமுடியாது. கேட்டுக்கொண்டார். அவருடைய கோரிக்கை ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறார். திருப்பூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதியதாக வணிக வளாகம் ஒன்று கட்டப்பட வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கை அது. அந்த வணிக வளாகம் கட்டுவதற்கு 240 இலட்சம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு அரசுக்கு கருத்துரு வந்திருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் 1998-99-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்குமேல் வெட்டுத் தீர்மானங்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசாதவர்களுக்குச் சலுகை கொடுக்கிறீர்களே?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, கட் மோஷனில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, பேசாதவர்களுக்கு இவ்வளவு பெரிய சலுகை கொடுக்கிறீர்களே?



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய கட்மோஷன் இருக்கிறது. அதனாலேதான் சொன்னேன். மொத்தத்திலே 22 உறுப்பினர்கள் 157 வெட்டுப் தீரமானங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னேன். நேரம் இல்லாத காரணத்தினால் சுருக்கமாக இங்கே நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் இங்கே மானியக் கோரிக்கைகள் என்ன 20, மற்றும் 52-க்கும் சேர்த்து 775 கோடியே 39 இலட்சம் ரூபாய் நிதி கோரப்பட்டிருக்கிறது. அதுபோல, பகுதி - 2 திட்டத்தின்கீழ் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய்க்கான மானியமும் கோரப்பட்டிருக்கிறது. இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 1998-99-ஆம் ஆண்டினுடைய இலக்கு, அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் 22 இலட்சம் எக்டேரில் 72 இலட்சம் மெட்ரிக் டன்கள் அரிசி உற்பத்தி செய்வதற்காகக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல, உணவு தானியங்கள், பயறு வகைகள் இவைகளுக்கு எல்லாம் சேர்த்து மொத்த உணவு தானிய உற்பத்தி 47 இலட்சம் எக்டேரில் 97.75 இலட்சம் மெட்ரிக் டன்கள் உணவு உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தக் குறியீட்டைத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற இந்த ஆட்சியிலே நிச்சயமாக அடைவோம், அடையமுடியும் என்ற அந்த உறுதியை நான் இங்கே தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 1997-98-ஆம் ஆண்டில் 94.92 இலட்சம் மெட்ரிக் டன்களாக மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி உயர்ந்திருக்கிறது. 1995-96-இல், கடந்த ஆட்சிக் காலத்தில் மொத்த அரிசி உற்பத்தி 52.06 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருந்தது, 1996-97-இல் 60.61 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்தது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள்கூட சென்றமுறை பேசுகின்றபோது இந்த அவையிலே ஒன்றைச் சொன்னார்கள். இந்தக் குறியீடுகளை எல்லாம் அடையமுடியுமா என்று கேட்டார்கள். நான் முடியும் என்று

சொன்னேன். 1997-98-ஆம் ஆண்டின் குறியீடு 70 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதற்காகத்தான் தனது சந்தேகத்தை அன்றைக்கு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் எழுப்பினார்கள். ஆனால் அந்தக் குறியீட்டையும் மிஞ்சி 73.56 இலட்சம் மெட்ரிக் டன்கள் அரிசி உற்பத்தி செய்திருக்கிறோம். இந்த உற்பத்தி, வரலாற்றிலே ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பெரும் மழை, புயல் போன்ற காரணங்களால் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலங்களில் இருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டன. இல்லாவிட்டால் அதிலிருந்து இன்னும் 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் உணவு உற்பத்தி கூடுதலாகக் கிடைத்திருக்கும். அப்படி மழைச் சேதம் ஏற்பட்டும்கூட இந்த அளவுக்கு உணவு உற்பத்தியை நாம் அதிகமாகப் பெற்றிருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டு அபாண்டமானது; அதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை "அறிக்கையிலேயே நான் ஒரு வேளாண்மைக் குடும்பத்திலே பிறந்தவன்" என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலங்களையெல்லாம் நீங்கள் எடுத்துக்கொண்டால், கோரிக்கைகள் வருவதற்கு முன்பாகவே திட்டங்களை அறிவித்து நிறைவேற்றிக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒருவேளை இதனால்தான் பொது மக்கள் மத்தியிலே, விவசாயிகள் மத்தியிலே அவற்றுக்கு வரவேற்பு இல்லையோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. கோரிக்கை வைத்து போராட்டம் செய்ததற்குப் பின்னாலே ஆகட்டும் பார்க்கலாம் என்றோ அல்லது பார்க்கிறோம் என்றோ சொல்லி காலம் கடத்திய பிறகு, செய்யமாட்டார்களா என்று அவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றபோது திட்டங்களை நிறைவேற்றினால்தான் அவர்களுடைய மனங்களில் அது நிலைத்து நிற்கும்போல் தெரிகிறது.

நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1969-லே அண்ணா தலைமையில் அமைந்த ஆட்சியிலும், அண்ணாவிற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும் ஏறத்தாழ 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட பம்பு செட்டுகளை அவருடைய ஆட்சிக் காலங்களிலே,



1976-க்குள் வழங்கினார்கள் என்பதை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அடுத்ததாக, அவருடைய ஆட்சிக் காலத்திலேதான், தமிழகத்திலே வேளாண்மைப் பல்கலைக்கழகம் கொண்டுவரப்பட்டது. இன்றைக்கு இந்தியாவிலேயே மிகச்சிறந்த வேளாண்மைப் பல்கலைக்கழகமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அடுத்து, இந்த இரண்டு ஆண்டுகளில், ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் ஜூன் மாதத்தில், பிறகு டிசம்பர் மாதத்தில், அதைத் தொடர்ந்து 1997-இல் ஏற்பட்ட புயல் காற்று, மழை போன்றவற்றால் ஏற்பட்ட சேதத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கிய தொகை ஒட்டுமொத்தமாக 62,17,72,900 ரூபாய் ஆகும். ஆகவே, இதையெல்லாம் கேட்காமலேயே நம்முடைய விவசாயப் பெருமக்களுக்கு வாரி வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

அதைப்போல பல்வேறு விவரங்கள் என்னிடத்திலே இருந்தாலும், அவைகளையெல்லாம் விவரமாக அதுவும் ஒவ்வொரு துறையாக நான் எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை. வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைப் பல்கலைக் கழகம், விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, சர்க்கரைத் துறை என்றெல்லாம் பள்ளிக்கூட மாணவன் பரிட்சைக்குப் படிப்பதைப்போல இரவு எல்லாம் படித்தும்கூட சொல்வதற்கு நேரம் இல்லை. நான் அதிலே மகிழ்ச்சியடைகிறேன். ஏன் என்று சொன்னால், எதிர்க்கட்சி தலைவரிலிருந்து, எதிர் வரிசையில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் பேசாததிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் இந்தத் துறை மிகச் சிறப்பாக செயல்படுகிறது, குற்றம் சொல்வதற்கு இடமேயில்லை நாம் ஏன் பேசவேண்டும், நம்முடைய உறுப்பினர்கள் பேசட்டும் என்று இருந்ததிலிருந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக, எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து, அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் நான் நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொது மக்கள், விவசாயிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது இந்தத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்கின்ற

கருத்துக்களின் அடிப்படையிலே நம்முடைய முதலமைச்சரைக் கலந்து, சில அறிவிப்புகளை இந்த நேரத்திலே தெரிவிப்பது சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 1991-92-ஆம் ஆண்டு முதல் ஒரு 7 ஆண்டு காலத் திட்டமாக ரூ.409.52 கோடி செலவில் செயல்பட்டது. அது இந்த ஆண்டு, 30-9-1993-லே முடிவடைய இருக்கிறது. மேலும் இந்தத் திட்டம் தொடரப்பட வேண்டுமென்பதற்காக வேளாண்மைத் துறை—தொகையெல்லாம் கூடத் தனித்தனியாக இருக்கிறது. சொல்வதற்கு நேரமில்லை, என்பதால் சுருக்கிக் கொள்கிறேன்— தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, விதைச் சான்றளிப்புத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இவைகளின் சார்பிலே பல்வேறு பணிகளுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ரூ.455.30 கோடி மதிப்பீடுகளின்படி தொடர்ந்து தமிழகத்திலே செயல்படுத்திட மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்து இருக்கிறது. முதலமைச்சரின் அனுமதிக்காக அது இருக்கிறது. ஆகவே, இந்த 1998-99-ஆவது ஆண்டில் தொடர்ந்து இந்தத் திட்டம் செயல்பட ரூ. 455.30 கோடிக்கான திட்டம் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல தஞ்சாவூர் காவிரி டெல்டா பகுதியில், நெய்வேலி காட்டாமணக்கு. பெரிய 'ஏ'-சானலாக இருந்தாலும், 'பி' அல்லது 'சி' சானலாக இருந்தாலும், மதகுகளின் கீழே வயலுக்குச் செல்லுகின்ற வாய்க்காலாக இருந்தாலும் எல்லாவற்றிலும் அந்தக் காட்டாமணக்கு நிறைந்து 30 சதவிகிதத்திற்கு தண்ணீரை உறிஞ்சி விடுகிறது. அதனால் உரிய காலத்திலே பயிர்களுக்குத் தண்ணீர் போவதில்லை. ஆகவே, இதை எப்படியெல்லாம் அழிக்கலாம் என்று இதில் ஈடுபட்டு அதற்காக பல்கலைக்கழகத்திலே பணியாற்றக்கூடிய விஞ்ஞானிகளுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டு 2-4-D சோடியம் உப்பு கலந்த கரைசலைத் தெளித்து அழிக்கலாம் என்றும், அதைப்போல பொதுப் பணித் துறையிலே தூர் எடுக்கலாம், Desilting-செய்யலாம் என்றும் திட்டம் வகுக்கப்பட்டு சென்ற ஆண்டு வேளாண்மைத் துறையிலே மட்டும் 308.53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதில் 4,378 எக்டேர் நிலப்பரப்பில் மண்டிக் கிடந்த 'பி' முதல் 'ஈ' வரையிலுள்ள கால்வாய்களில் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்கத் திட்டமிடப்பட்டு சென்ற ஆண்டு 2,384 எக்டேர் நிலப் பரப்பில் மட்டுமே அழிக்க முடிந்தது.



மேட்டூர் நீர்தேக்கத்திலிருந்து ஜூன் 12-ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்ட காரணத்தினால் 4,378 எக்டேர் முழுவதுமான நிலப்பரப்பில் நெய்வேலி காட்டாமணக்குச் செடியை அகற்ற முடியவில்லை. மீதம் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் விடுபட்டுள்ள பரப்பிலும், காவிரிப் படுகையில் உள்ள மாவட்டங்களான கடலூர், திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் சேர்த்து 3,344 எக்டேர் நிலப்பரப்பில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்க 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 2 கோடியே, 99 இலட்சத்து, 33 ஆயிரத்து 400 செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த காட்டாமணக்குச் செடிகளை முழுவதுமாக அழிக்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக ஐந்து குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களும், ஐந்து குதிரைத் திறன் கொண்ட என்ஜின்களுக்குப் பதிலாக 7.5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வந்தது. இந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஏற்று அனுமதித்திருக்கிறார்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீரைக்கொண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து பாசனம் செய்யும் விவசாயிகள் மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் நீரை உறிஞ்சி வெளியே தள்ள சிரமப்படுவதால், வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைகிறது. இதனைத் தவிர்க்க, மானிய விலையில் வழங்கப்படும் மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வழங்குமாறு விவசாயிகள் வைத்த கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசிய பின் 27-7-1996 அன்று வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்போது சிறு பாசனத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் கூட்டுறவு இணையத்தின் மூலம் வழங்கப்படும் எனச் சட்டப் பேரவையில் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில், சிறு, மிகச்சிறு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் விவசாயிகளுக்கு முறையே 25, 30, மற்றும் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படும்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1998 ஏப்ரல் 7

இத்திட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 625 விவசாயிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் செலவில் மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களும், 5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 7.5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்களும் அனைத்து மாவட்டங்களுக்கும் வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்று, 500 ஆயில் என்ஜின்கள் ரூ.31 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் விரிவாக்க மையங்கள். விவசாயப் பெருமக்களுக்கு வேளாண் தொழில் நுட்பங்களை அளிப்பதற்கும் அவர்களுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்குவதற்கும், வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டு கழக அரசு இருந்தபோது விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று 100 புதிய வேளாண் விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவைகளை நிர்வகிப்பதற்காக ஒவ்வொரு மையத்திற்கும் கிடங்கு மேலாளர் தரம் 3 பணியிடம் ஒன்றும் காவலர் பணியிடம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், கடந்த ஆட்சியில் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. சட்டப் பேரவை உறுப்பினர்கள், விவசாயிகள் கோரிக்கையின் பேரில், விவசாயிகளின் நன்மையைக் கருத்திற்கொண்டு, 100 வேளாண் விரிவாக்க மையங்களை மீண்டும் 1998-99-இல் ஆரம்பிப்பது என்றும், ஒரு மையத்திற்கு ஒரு கிடங்கு மேலாளர் தரம்-3 பணியிடமும், ஒரு காவலர் பணியிடமும் தோற்றுவிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பயறு வகைகள் மகசூலை அதிகரிக்க 'டை அமோனியம் பாஸ்பேட்' (டி.ஏ.பி.) கரைசலை இலை வழியாகத் தெளிக்கும் திட்டம். தமிழகத்தில் பயறு வகை உற்பத்தியில் நாம் இன்னும் தன்னிறைவு அடையவில்லை. தமிழ்நாட்டில் 10 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் 70 சதம் மானாவாரியாகவும், நெல் அறுவடைக்குப் பின்னும் சாகுபடி செய்யப்படுகிறது.

பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க 2 சதம் டை அமோனியம் பாஸ்பேட், உரக்கரைசலைத் தயாரிக்க 200 லிட்டர் நீரில் 4 கிலோ டி.ஏ.பி. கலந்து, 2 சதம் டி.ஏ.பி. கரைசல் தயாரித்து தாவரப் பருவத்திலும்,



1998 ஏப்ரல் 7] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பூக்கும் பருவத்திலும் தெளித்தால் ஒரு எக்டேருக்கு 150 கிலோ அதிக மகசூல் கிடைக்கிறது என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஒரு எக்டேருக்கு 'டை அமோனியம் பாஸ்பேட்' கரைசல் தெளிக்க ரூ.125/-வீதம் 50,000 எக்டேருக்கு இருமுறை தெளிக்க ரூ.125 இலட்சம் செலவு ஆகிறது. இதனால் 1,25,000 விவசாயிகள் பயன் அடைவார்கள். இதனால் தமிழகத்தில் 7,500 டன் பயறுவகைகள் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதில் 30 சதவிகிதம் மான்யம் வழங்கி ரூ. 62.50 இலட்சத்தில் இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

வேளாண் துறை ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று விவசாய மக்கள் மத்தியிலே ஒரு கோரிக்கை இருக்கிறது. வேளாண்மை மற்றும் அதன் சகோதர துறைகளான தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனைத் துறை, இவைகளின் செயல்பாடுகள் தனித்தனியே வெவ்வேறு அலுவலகங்களில் உள்ளதால் அனைத்துத் துறைகளுக்கான தொழில் நுட்பங்களையும், அனைத்துத் துறைகளுக்கான மானிய திட்டங்களையும் விவசாயிகள் எளிதில் பெற இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, இந்தத் தொழில் நுட்பங்களும், மானிய திட்டங்கள் குறித்த விவரங்களும், அறிவுரைகளும் ஒரே குடையின்கீழ் ஒன்றிய அளவில் வேளாண்மை வளர்ச்சி அலுவலர் மூலமாகவும், வட்ட அளவில் வேளாண்மை உதவி இயக்குநர் மூலமாகவும், கிடைக்க இந்த நிதி ஆண்டில் வழிவகை செய்யப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன் ஒருங்கிணைப்பு அலுவலராக மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செயல்படுவார் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அகில இந்திய அளவில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்களை பரிமாறிக் கொள்ளவும், அங்கீகாரமற்ற பட்டதாரிகளை தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கான வரன்முறைகளை வகுக்கவும், வேளாண் பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்ளவும், மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்று வேளாண்மையும் தொழில் நுட்பக் கல்வி என்ற அடிப்படையில் வேளாண் வல்லுநர்களைக் கொண்ட வேளாண்மை கவுன்சில் அமைப்பது என்பது இன்றியமையாதது என்று வேளாண் பட்டதாரிகள்

சங்கம் மற்றும் வேளாண் உயர் அலுவலர்கள் சங்கங்கள் பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வைத்த வண்ணம் உள்ளன. இந்தக் கோரிக்கைகளை இவ்வரசு பரிசீலித்து வேளாண்மைக் கவுன்சில் அமைக்க அனுமதி வழங்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்கு தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் வழங்கும் திட்டம். நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். 1998-1999 ஆம் ஆண்டில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யும் காய்கறிகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கும் 50 சதவீதம் மானியம் அல்லது ரூ.30,000 இதில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்திட்டத்தின் கீழ் 1998-99 ஆம் ஆண்டு 200 எக்டேர் நிலப்பரப்பில் தெளிப்பு நீர்ப்பாசன முறை கொண்டு வரப்படும். இதற்காக மானியத் தொகை நீலகிரி மாவட்டத்திற்கு 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வி நிலையங்களில் பழ மரங்கள், அழகு தரும் மரங்கள், நிழல் தரும் மரங்கள் மற்றும் பொருளாதார மரங்கள் நடும் திட்டம். மாணவர்களிடையே சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுற்றுப்புறத்தை பசுமையாக வைத்திருக்கச் செய்வது அவசியமாகும். தமிழகத்தில் உள்ள பள்ளிகளை பசுஞ்சோலைகளாக உருவாக்கிட ஆண்டுதோறும் மாவட்டம் ஒன்றிற்கு 25 கல்வி நிலையங்களை தேர்வு செய்து அவற்றிற்கு ரூ.500 மதிப்புள்ள மரக் கன்றுகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும். இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 14,500 கல்வி மற்றும் பொது நிலையங்களில் இத்திட்டப் பணிகள் ரூ.7.2 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அறுவடைக்குப்பின் ஏற்படுகின்ற மொத்த தானிய இழப்பான 9.33 சதவீதத்தில் போதிய உலர் கள வசதி இல்லாததனால் 1.68 சதவீத தானிய இழப்பு ஏற்படுகிறது. அவ்விழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு 1997-98-லே தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் உலர் களங்கள்—களம் ஒன்றுக்கு ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில், 60 உலர்



களங்கள் ரூபாய் 90 இலட்சம் செலவில் வேளாண் விற்பனைக் குழுக்கள் உபரி நிதியிலிருந்து விவசாயிகள் நன்மைக்காக அமைத்துத் தரப்பட்டன. இது விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. உலர் களம் வேண்டும் என்ற கோரிக்கை அதிக அளவில் இருப்பதால் நடப்பு 1998-99-வது ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் நெல் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும். தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் தலா 10 உலர் களங்களும், இதர மாவட்டங்களில் 70 உலர் களங்களும் ஆக 100 உலர் களங்கள்—உலர் களம் ஒன்றுக்கு ரூ. 1.75 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.175 இலட்சம் செலவில் அமைத்துத் தரப்படும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-50

அறுவடைக் காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க தற்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. நெல், மணிலா வரத்து அதிகம் வரும் காலங்களில் உடனுக்குடன் பணம் பட்டுவாடா வியாபாரிகளால் செய்ய இயலவில்லை. இதனால் விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். எனவே, விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்வதற்கு இத்திட்டத்தை வியாபாரிகளுக்கும் விரிவுபடுத்த அரசு தீர்மானித்து உள்ளது. வியாபாரிகள் கொள்முதல் செய்த பொருளின் மதிப்பில் 25 சதவீதத் தொகை அல்லது ரூ.25,000— இவைகளில் எது குறைவோ அத்தொகையை பொருளீட்டுக் கடனாக வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. நன்கு செயல்படும் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தேர்வு செய்து, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்றுக்கு ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூபாய் 5 கோடி வழங்கப்படும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பெரும்பாலான விற்பனைக் கூடங்களின் முன்னால் உள்ள பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் இல்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வருகை தரும் விவசாயிகளும் வணிகர்களும் வெயிலிலும் மழையிலும் அல்லல்படுகின்றனர். இக்குறையைப் போக்க நிழற்குடைகளை அமைப்பது அவசியமாகிறது. முதற்கட்டமாக 1998-99-ஆவது நிதி ஆண்டில் வரத்து அதிகமுள்ள 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில்— விற்பனைக் கூடம் ஒன்றுக்கு ரூ.0.75 இலட்சத்தில் ஒரு நிழற்குடை வீதம்,

22 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டில் மொத்த வணிகத்தில் சுமார் 15 சதவீத வணிகம் மட்டுமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடைபெறுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அதிக அளவில் விவசாயிகளை ஈர்த்து நல்ல விலை கிடைக்கும்பொருட்டு அவர்களை ஊக்குவிக்க, அதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வருவாயை அதிகரிக்கச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதன் முதற்கட்டமாக தொடர்ந்து தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்யும் சிறு, மிகச்சிறு மற்றும் இதர விவசாயிகளில், பிரிவிற்கு ஒருவர் வீதம் குலுக்கல் முறையில் தேர்வு செய்து ரூ. 2 ஆயிரம் மதிப்பில் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை பரிசாக வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் பொருளாதார சாத்தியக்கூறு உள்ள 260 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.15 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிற நேரத்தில் பயனடையக்கூடிய பயனாளிகள் 780 பேராக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கை 58.2 சதவீதம். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை பாதியிலே விட்டுவிடும் மாணவர்களின் எண்ணிக்கை 64 சதவீதம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்தும், மொத்த வணிகத்தில் சுமார் 15 சதவீதம் விளைபொருட்கள் மட்டுமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்தின் அளவை உயர்த்துவதற்கும், தங்கள் படிப்பை பாதியில் விட்டுவிடும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்ப மாணவ மாணவியர்களுக்கு 6-ஆவது முதல் கல்லூரி படிப்புவரை நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,620 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் பயன் அடைவார்கள். ஆண்டு ஒன்றுக்கு இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ.20 இலட்சம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 1-55

தமிழ்நாட்டிலேயிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கும் அயல் நாடுகளுக்கும், பூக்கள் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. 'அபிடா' நிதி உதவியுடன், சென்னைக்கு அருகில், பள்ளிக்கரணை கிராமத்தில், பன்னாட்டு மலர் ஏல மையம் ஒன்று நிறுவப்பட உள்ளது. ஏற்றுமதிக்கான பூக்கள் சாகுபடி குறித்து தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறியாமல் உள்ளனர். அவர்களுக்கு தொழில் நுட்பங்களை விளக்கி, ஏற்றுமதிக்குத் தகுந்த பூக்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில், நடப்பு ஆண்டில், பூக்கள் அதிக அளவு உற்பத்தியாகும் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், ஈரோடு, திருச்சி, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி போன்ற 12 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் தொழில் நுட்ப உத்தியுடன் கூடிய பசுமைக்கூடம் ஒன்றுக்கு ரூ.4 இலட்சம் வீதம் ரூ.48 இலட்சம் செலவில் 12 பசுமைக்கூடங்கள் (கிரீன் உறவுஸ்) அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன், மருத்துவ வசதி, உலர் களம்வசதி, பரிவர்த்தனைக் கூடம், குடிநீர் வசதி, ஓய்வறை போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் பிற பகுதிகளிலும், பிற மாநிலங்களிலும் நிலவும் விற்பனை முறை, அங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் ஆகியவற்றை, நமது விவசாயிகளும், வியாபாரிகளும் முழுமையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பின்றி உள்ளனர். இதனால், விற்பனைக் கூடங்களுக்குத் தொடர்ந்து வருகை தரும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒருங்கிணைத்து, ஆண்டுக்கு ஒருமுறை மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் 100 நபர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்ல அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பாண்டிற்கு ரூ.2.50 இலட்சம் செலவாகும். இச்செலவினம் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது 16 விற்பனைக் குழுக்களில், எந்த விற்பனைக் குழுக்களிலும் பேக்ஸ் மற்றும் ஒயர்லெஸ் வசதி கிடையாது. கணிப்பொறி இரண்டு விற்பனைக் குழுக்களிலும், நகல் பெருக்கிகள் 8 விற்பனைக் குழுக்களிலும்

மட்டுமே உள்ளன. நாட்டின் பிற பகுதிகளில் நிலவும் விலை விவரம், வரத்து விவரம் ஆகியவைகளை அறிய, பேக்ஸ், கணிப்பொறி, ஒயர்லெஸ் கருவி மற்றும் படிப்பெருக்கி ஆகியவைகளை எல்லா விற்பனைக் குழுக்களுக்கும் வழங்குவது அவசியமாகிறது. எனவே, எஞ்சிய விற்பனைக் குழுக்களுக்கும், வேளாண்மை விற்பனை இயக்குநர் அலுவலகத்திற்கும் 1998-99 ஆம் நிதியாண்டில் ரூ.47 இலட்சம் செலவில் இத்தகைய சாதனங்களைத் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து வாங்கி வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1987 ஆம் ஆண்டின், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் பிரிவு 10-ன்படி, விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தைக் கவனிக்க, ஒவ்வொரு விற்பனைக் குழுவிற்கும் 16 நபர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். 1978-இல் குழுக்கள் கலைக்கப்பட்டு, தமிழகத்தில் அனைத்து விற்பனைக் குழுக்களுக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களின் தலைமையின் கீழ் நிர்வாகம் நடைபெற்று வரக்கூடிய நிலை இருப்பதால், விற்பனைக்குழு நிர்வாகத்தை மேலும் சீராகவும், சிறப்பாகவும் நடத்துவதற்கு, விற்பனைக் குழு உறுப்பினர்களையும் தலைவரையும் நியமிக்க இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கும் பல்வேறு புதிய அறிவிப்புகளை நம்முடைய முதலமைச்சரோடு கலந்துபேசி, விவசாயப் பெருமக்களுடைய நன்மைக்காக அறிவிப்பதற்கும் உறுதுணையாக இருந்து இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய, வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு. நா. ஆதிமூலம், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு, துறையின் அமைச்சர் என்ற முறையில் எனது நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-00

அதேபோல, வேளாண்மைத் துறை இயக்குநராகப் பணியாற்றக் கூடிய திரு. கே. அருள்மொழி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தோட்டக்கலைத் துறையினுடைய இயக்குநர், திரு. என். வாசுதேவன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், வேளாண்மை விற்பனைத் துறை இயக்குநர், திரு. இ. தசரதன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், விதைச் சான்றுத் துறை இயக்குநர், திரு. கணபதி அவர்களுக்கும், வேளாண்மைத்



துறை தலைமைப் பொறியாளர், திரு. எஸ்.கே. பத்மநாபன் அவர்களுக்கும், வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின் இயக்குநர், திரு. ஆர். ரத்தினசாமி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், சர்க்கரைத் துறை ஆணையர், திருமதி கிரிஜா வைத்தியநாதன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷன் "தாய்" நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநர், திரு. அன்சர் அலி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாக இயக்குநர், திருமதி தங்கம் சங்கரநாராயணன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மேலும் தலைமைச் செயலகத்திலேயும், வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்திலேயும் பணியாற்றுகின்ற அத்தனை பேர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைக்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் எந்தவிதமான தவறுகளும் நடைபெறாமல் சிறப்பாக விவசாயிகளுக்கு அது உற்ற நண்பனாக விளங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் துறை செயல்படுகிறது, இந்த அரசும் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் விவசாயிகளுடைய கஷ்டத்தை அறிந்து, 43 கோடி ரூபாய் நில வரியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

அதைப்போலவே. கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கியிருக்கின்ற கடனை, குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாகவும், மத்திய காலக் கடனை நீண்ட காலக் கடனாகவும் நீட்டித்துத் தந்ததன் மூலம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே பயிர்களுக்காக வாங்கிய அந்தக் கடன்களுக்கு— அபராத வட்டி, கூட்டு வட்டி என்பார்களே அவைகள்தான் பெரும் சங்கடத்திற்கு விவசாயிகளை ஆளாக்குகின்றன. ஆகவே, அவற்றை நீட்டிக் கொடுத்திருப்பதன் மூலமாக இன்றைக்கு 50 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது. விவசாயிகளுக்கு இந்தச் சலுகை மட்டுமல்ல நான் ஆரம்பத்திலே சொன்னதைப்போல, எப்போதெல்லாம் அவர்கள் பாதிப்புக்கு ஆளாக்கப்படுகிறார்களோ, அப்போதெல்லாம், 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பார்களே, அதைப்போல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தினால், அதுவும் தஞ்சை மண்ணிலே பிறந்தவர் என்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உதவிகளையெல்லாம் இன்றைக்கு வழங்கி வருகின்றார்கள். இருப்பினும், எங்கேயாவது தவறு நடந்தால் நடவடிக்கை எடுப்பதற்கும் தயங்குவதில்லை.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரைமீது பேசுகிறபோது அவர்களுக்கு வந்த ஒரு தகவலைக் கொடுத்தார்கள். உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி விசாரியுங்கள் என்று துறைக்கு அனுப்பினார்கள். நானேகூட அதற்குப் பதில் சொல்லியிருக்க முடியும். இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அவர்கள் கொடுத்த புகார் என்பதனால் முதலமைச்சர் அவர்களே விசாரிக்கட்டும் என்று இருந்தேன். விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் அளிப்பதற்காக நாம் நிதியை ஒதுக்குகிறபோதும் எங்கும் தவறு நடக்கக் கூடாது என்றுதான் அரசு கருதுகிறது. ஆனால் எப்படி நாற்றைப் பிடுங்கி வயலிலே நட்டுவிட்ட பிறகு களை முளைக்கிறதோ, அதைப்போல ஒருசில இடங்களிலே சில தவறுகள் நடைபெறுவதற்கு களைகளாக சில அதிகாரிகளேகூட வந்து விடுகிறார்கள். நம்முடைய மேல்மலையனூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஞானசேகரன் அவர்களும், அதைப்போல செய்யார் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களும், அந்தப் பகுதியிலே சில அலுவலர்கள், இதுபோல தவறுதலாக 'செக்' போட்டு தருகிறார்கள். அவர்களுடைய கைக்கு அந்தப் பணம் போகக்கூடிய வகையிலே இப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள். நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னிடத்தில் சொன்னவுடன், உடனடியாக செயலாளரை அழைத்து, இயக்குநரை அழைத்துப் பேசி, இயக்குநரே நேரடியாகச் சென்று, அங்கிருந்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கோ, அல்லது வேறு ஒரு உதவி அலுவலருக்கோ அனுப்பினால், நடவடிக்கையிலேகூட தாமதம் ஏற்படலாம், குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளலாம். அப்படி தப்பிக்கக் கூடாது என்பதற்காக, நேரடியாக இயக்கக அலுவலகத்திலேயிருந்து உரியவர்களிடம் சென்று, விசாரிக்கச் செய்து, மேல்மலையனூரில் நடந்த தவறுக்காக சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள் 4 பேர்.

*பிற்பகல் 2-05*

அதைப்போல செய்யாறிலே தவறு செய்தது தெரிய வந்த காரணத்தினால் 6 பேர் அங்கு சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். ஆகவே அவர்கள் போலியாக தந்த 'செக்'- ஐபாஸ் செய்யக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டு, இப்போது உரியவர்களுக்கு அந்தப் பணம் கொடுக்கலாம் என்று - பணம் இருக்கிறது, பாங்கிலே பணம் இருக்கிறது. ஆனால் அதற்குள் நீதிமன்றத்திற்கு ஒருவர் போய் விட்டார். போய் விட்ட காரணத்தினால், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் ஒருவர், அதைப்போல, மற்ற



துறைகளிலே, வேளாண்மைத் துறையிலே இருப்பவர்கள், இவர்கள் எல்லாம் சேர்ந்த ஒரு குழுவை போட்டு விசாரித்து, இந்த விண்ணப்பதாரர் சொல்வதைப் போல, உண்மையாக இருந்தால், பரிசீலித்து நீங்கள் பணம் கொடுக்கலாம் என்று— சொன்ன காரணத்தினாலே, இப்பொழுது அவர்களுக்கு அந்த உத்தரவு வந்த காரணத்தாலே, அந்தக் குழு போடப்பட்டிருக்கிறது. ஆகவே போலி 'செக்' அலுவலர் தந்தது உண்மை. ஆனால் அதற்காக அவர்கள் பணம் பெறுவதற்கு நாங்கள் விடவில்லை. அப்படி தந்தது தவறு என்று நடவடிக்கை எடுத்து, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைத்தான் நேற்றைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துறை மேலும் சிறப்பாக செயல்பட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கு பேசியவர்கள் மட்டுமல்ல, அந்த வாய்ப்பே இல்லாவிட்டாலும், நேரிலே சந்திக்கக்கூடிய நம்முடைய உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துக்களையெல்லாம் கவனத்திலே கொண்டு நம்முடைய முதலமைச்சரோடு கலந்து பேசி, மேலும் மேலும் நல்ல தொழில் நுட்பங்கள் நம்முடைய விவசாயிகளுக்குச் சென்று, அந்தத் தொழில் நுட்பத்தின் பேரில், அது உணவுப் பொருளாக இருக்கட்டும், பணப் பயிர் பொருளாக, தோட்டக்கலைத் துறையாக இருக்கட்டும், எந்தத் துறையாக இருந்தாலும், அது விவசாயிகளுக்காக, நேரடியாக அரசாங்கத்திலே ஒதுக்கப்படுகின்ற அந்த நிதியும் போய்ச் சேர வேண்டும். அதனாலே அந்த விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் வாழ்க்கையிலே வளம் பெற வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். அந்த அடிப்படையிலே இந்த அரசு செயல்படும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of clarification

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2¼ மணிக்கு Point of Clarification என்று சொல்கிறீர்களே? இன்னொரு நாளைக்குக் கேளுங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 20 — வேளாண்மை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20 வேளாண்மை. வெட்டுத்தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு.எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

[1998 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.739,00,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



1998 ஏப்ரல் 7]

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 ஏப்ரல் 7

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.36,39,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் புதன்கிழமை (15-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*112. 1-1-1988 முதல் 25-9-1991 வரை உள்ள கால அளவில் மறு சிப்பம் கட்டி விற்கப்படும் தேயிலைக்கு யாதொரு வணிகரும் செலுத்த வேண்டிய வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் வரி மற்றும் தண்டத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-11-1997 ஆம் நாளிட்ட 497 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5), 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*113. 28-9-1990 முதல் 25-6-1991 வரை உள்ள கால அளவில் விற்கப்பட்ட சிம்புகள் மற்றும் வீனீர்ஸ் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி மற்றும் மேல் வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 22-12-1997 ஆம் நாளிட்ட 599 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 58 (5) மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971 7(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*114. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-11-1997 ஆம் நாளிட்ட 494 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*115. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையினால் வெளியிடப்பட்ட 12-1-1998 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.அ.நி/(A-9)/98-ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 1-4-1998 ஆம் நாளிட்ட 102-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

[1998 ஏப்ரல் 7

116. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 1-4-1998 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/ 1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

117. வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையினால் வெளியிடப்பட்ட 17-12-1997 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.அ.நி/100/97-ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 1-4-1998 ஆம் நாளிட்ட 104 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/ 1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

51. மானியக் கோரிக்கை எண் 20-வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

52. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

53. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம் என்ற புத்தகம், 1998 (தமிழ், ஆங்கிலம்).



1998 ஏப்ரல் 7]

## இணைப்பு

[56 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**கோரிக்கை எண் 20 - வேளாண்மை**

**கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**அத்தியாயம் - 1**

**முன்னுரை**

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்(று) அதன் காப்பு

—திருவள்ளுவர்

வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கு ஏற்ப உணவு தேவையை ஈடுசெய்வதிலும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை அளிப்பதிலும், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும், வேளாண்மை தொடர்ந்து முக்கிய பங்காற்றுகிறது. இந்திய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதால் வேளாண்மைக்குப் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வறுமையைப் போக்குவதே அரசின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. இதுவரை அடையப்படாமல் இருக்கும் உற்பத்தித் திறனை அடைதல், மானாவாரி நிலங்களில் தகுந்த தொழில் நுட்பங்களை பரப்புவதுடன் அதனைக் கடைப்பிடித்து உற்பத்தித் திறனை உயர்த்துதல், தரிசு நிலங்களை பசுமை நிலங்களாக்குவதற்கு உதவேகம் அளித்தல் ஆகியவை இரண்டாவது பசுமைப் புரட்சியை நோக்கி செல்வதில் உதவும் சில உந்துதல்களாகும். வேளாண் துறை மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை சராசரியாக ஒரு எக்டேருக்கு 5 டன்கள் நெல் உற்பத்தி செய்யும் அளவை மாநிலம் எய்தி உள்ளது. இருப்பினும், மாநிலத்தில் இன்னும் அதிக அளவில் உணவு உற்பத்தியையும் மிகுந்த அளவில் அரிசி உற்பத்தியையும் அடைவதற்குப் பெரிதும் வாய்ப்புள்ளது. எனவே "ஒரு எக்டேருக்கு 7 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி" என்ற அளவில் ஒன்பதாவது திட்ட காலத்தில் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதற்கென சிறப்பு இயக்கம் ஒன்றினைத் தொடங்குவதற்கு எல்லா முயற்சிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. மானாவாரிப் பயிர்களின் உற்பத்தியை

இரட்டிப்பாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் பல்முனை விரிவாக்கம், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், மண்வளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, பாசன மற்றும் வடிகால் வசதிகளை ஆற்றுப்படுகைகளில் மேம்படுத்துதல், நுண்பாசனம் மற்றும் நீர் உபயோகத் திறனை மேம்படுத்துதல், வேளாண்மையை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை மேம்பாடு, தொழில் நுட்பங்களை ஆராய்ச்சி மையத்திலிருந்து பண்ணைக்கு எடுத்துச் செல்லும் அமைப்பை வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டம் மூலம் மேம்படுத்துதல் போன்றவற்றில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

இவற்றிற்கு மேலாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவையே அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

**வேளாண்மைத் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு**

**கோரிக்கை எண் 20**

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1997-98 | திருந்திய திட்ட மதிப்பீடு 1997-98 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1998-99 |
|---|---|---|---|
| 2059 பொதுப்பணிகள் | 72,61 | 72,61 | 72,61 |
| 2216 வீட்டு வசதி | 10 | 10 | 10 |
| 2401 பயிர்வளர்ப்பு | 5,10,53,42 | 5,28,15,74 | 5,37,65,10 |
| 2402 மண்வள, நீர்வள பாதுகாப்பு | 42,80,13 | 42,87,35 | 47,46,11 |
| 2415 வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி | 40,41,73 | 48,10,33 | 46,05,38 |
| 2435 ஏனைய வேளாண் திட்டங்கள் | 23,54,77 | 32,81,24 | 30,84,54 |
| 2501 ஊரக வளர்ச்சி சிறப்பு திட்டங்கள் | 14,86,53 | 11,83,67 | 6,42,70 |
| 2551 மலைப் பகுதிகள் | 11,15,74 | 11,39,56 | 12,63,39 |
| 2702 சிறுபாசனம் | 9,99,86 | 10,13,33 | 11,14,80 |
| 2705 பாசனப்பகுதி மேம்பாடு | 25,62,95 | 34,52,84 | 36,36,21 |
| 3054 சாலைகளும் பாலங்களும் | 9,59,90 | 13,52,24 | 9,69,25 |
| 3435 உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 1 | 1 | 1 |
| **துணை மொத்தம்** .. | **6,89,27,75** | **7,34,09,02** | **7,39,00,20** |



**கோரிக்கை எண் 52**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| கணக்குத் தலைப்பு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1997-98 | திருந்திய திட்ட மதிப்பீடு 1997-98 | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1998-99 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவுகள் | 25,69,66 | 24,47,02 | 30,98,14 |
| 4402 மண் வள மற்றும் நீர் வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 1,15,89 | 1,06,04 | 1,06,03 |
| 4408 உணவுப் பொருட்கள் சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 1 | 1 | 1 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி குறித்த மூலதனச் செலவு | 85,70 | 1,49,30 | 15,02 |
| 4435 ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 2 | 2 | 7,02 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 2 | - | 2 |
| 5054 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,63,00 | 4,17,15 | 4,13,00 |
| **துணை மொத்தம்** .. | **30,34,30** | **31,19,54** | **36,39,24** |
| **பெரு மொத்தம்** .. | **7,19,62,05** | **7,65,28,56** | **7,75,39,44** |

[1998 ஏப்ரல் 7

## 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி - 2 திட்டங்கள்

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | **வேளாண்மைத் துறை :** | |
| 1 | சேலம் மாவட்டம் சிலநாயக்கன்பட்டியிலுள்ள உயிரின உர உற்பத்தி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். | 15.00 |
| 2 | ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி நிர்வாக பயிற்சி மூலம் மணிலா, பயறுவகைப் பயிர்களுக்கு உழவர் வயல் வெளிப்பள்ளி முறையை விரிவுபடுத்துதல். | 26.50 |
| 3 | 50 எக்டேரில் வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்தி பற்றிய செயல்விளக்கம் அளித்தல். | 3.50 |
| 4 | ஏழு வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல். | 21.00 |
| 5 | ஐந்து விதைக் கிடங்குகள் கட்டுதல். | 7.50 |
| 6 | விதைத் தரத்தை உயர்த்த விதைச் சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்துதல். | 30.00 |
| | **தோட்டக்கலைத் துறை :** | |
| 7 | நெய்வேலி, ஆனைக்கட்டி, ஏற்காடு, கொடைக்கானல், ரெட்டியார்சத்திரம் மற்றும் திருவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளைப் பலப்படுத்துதல். | 40.00 |



1998 ஏப்ரல் 7]

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர். (2) | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 8 | தோட்டக்கலை விரிவுப்படுத்தும் முறையை வலுப்படுத்துதல் - உதவி தோட்டக்கலை இயக்குநர், வேலூர், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் துணை தோட்டக்கலை இயக்குநர், குடுமியான்மலை அலுவலகங்களுக்கு 5 புதிய டீசல் ஈப்புகள் வாங்குவதும், 5 ஓட்டுநர்கள் பதவி வழங்குவதும். | 20.65 |
| 9 | நீலகிரி மாவட்டத்தில் காய்கறிகள், சம்பா ரகப் பயிர்கள் மற்றும் மலைப்பயிர்கள் பயிரிடும் விவசாயிகளின் நிலங்களில் மானிய விலையில் சுழல் வீச்சு பாசனக் கருவிகள் நிறுவுதல். | 20.00 |
| | **வேளாண்மைப் பொறியியல் துறை :** | |
| 10 | காவிரிப் படுகையில் வாய்க்கால் தூர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள டி.50 ஏ.15 நில சமன் செய்பொறி தேய்ந்து போன கீழ்நிலை பாகங்களுக்குப் பதிலாக புதிய கீழ்நிலை பாகங்கள் 5 ஜதை வாங்குதல். | 28.00 |
| 11 | பெர்க்குஷன் துளைக்கருவி மற்றும் கைத்துளைக் கருவிகளில் பணித் திறனை அதிகரிக்க 250 மி.மீ. விட்டமுள்ள கேசிங் குழாய்கள் 100 மீட்டர் நீளத்திற்கு வாங்குதல். | 6.00 |
| 12 | 50 புதிய துளைக் குழாய்களை (7.5 மி.மீ. x 6.10 மீ.) பொருத்தி சுழல் துளைக் கருவிகளின் பணித் திறனை அதிகப்படுத்துதல். | 7.00 |
| 13 | புல்டோசர்களில் பணி இழப்பு காலத்தை குறைக்க 5 புதிய பிரைம் மூவர் வாங்குதல். | 20.00 |

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர். (2) | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | **விதைச் சான்றுத் துறை :** | |
| 14 | அனைத்து விதைச்சான்று உதவி இயக்குனர்களுக்கும் மின்னணு ஈரப்பதம் கணக்கிடும் கருவிகள் வாங்குதல். | 1.87 |
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்) :** | |
| 15 | இரண்டு நிலச்சமன் பொறிகள் வாங்குவதற்கு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு சேவை மையத்திற்கு விளிம்புத் தொகை வழங்குதல். | 16.00 |
| 16 | 5 வட்டார வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு சேவை மையங்களுக்கு வாடகை இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியங்கள் வழங்குதல். | 10.00 |
| | **தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் :** | |
| 17 | தோட்டக்கலை, மலர் மேம்பாட்டு இயல் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் ஆகிய காவல் திட்டங்களில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் கூட்டுத் துறை முயற்சியை பங்கு முதலீடு முறையில் முன்னேற்றமடையச் செய்தல். | 40.00 |
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் :** | |
| 18 | புதிய ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி. | |
| | (i) மரக்குழு (Gene) மாற்றுவிக்க தாவர வளர்ப்பிட வசதியை ஏற்படுத்துதல் (கோயம்புத்தூர்) | 12.00 |



| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | (ii) நெற்பயிரின் வெப்ப உணர்வு பண்பக ஆண் மலட்டு நிலைக்கு வினையியல், உயிர் வேதியியல் மற்றும் மூலக்கூறு அமைப்பியக்கம் பற்றிய ஆய்வு (கோயம்புத்தூர்). | 1.50 |
| | (iii) மலர் விதை ஆராய்ச்சி (கோயம்புத்தூர்). | 3.00 |
| | (iv) சூரியகாந்தியில் மரபு வழியில் நிலைபெற்ற ஆண் மலட்டு இரகங்கள் மற்றும் ஒட்டு இரகங்களை உற்பத்தி செய்தல் (கோயம்புத்தூர்). | 2.00 |
| | (v) அயல் மகரந்தசேர்க்கை அதிகமுள்ள உளுந்து செடி வகைகளை தெரிவு செய்து நன்செய் உளுந்தின் விளைச்சலை அதிகப்படுத்துதல் பற்றிய ஆய்வு (ஆடுதுறை மற்றும் தஞ்சாவூர்). | 2.00 |
| | (vi) தமிழ்நாட்டில் தோன்றும் முக்கிய நச்சுயிரி நோய்களுக்கான நச்சுயிரி எதிர்ப்புப் பொருள் வங்கி உருவாக்குதல் (கோயம்புத்தூர்). | 1.00 |
| | (vii) வேளாண்மையில் மூலதனம் உருவாகிற நிலையைக் கண்டறியும் ஆய்வு (கோயம்புத்தூர்). | 3.00 |
| | (viii) தமிழ்நாடு வேளாண்மையில் இடுபொருள் உற்பத்தித் திறனை மேம்பாடு செய்வதற்கான ஆய்வு. | 2.00 |
| | (ix) நெல் மற்றும் நெல் சார்ந்த சுழல் அமைப்பிலுள்ள வயல்களில் வேம்புப் பொருட்களின் நிலைபடு திறனை மேம்படுத்துதல் குறித்த ஆய்வு (ஆடுதுறை). | 2.50 |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (x) வடகிழக்கு பருவக்காற்று மழையிலிருந்து அதிக அனுகூலம் பெற வழிமுறைகள் பற்றிய ஆய்வு (அருப்புக்கோட்டை). | 1.67 |
| | மொத்தம் .. | 30.67 |
| | **வேளாண்மை விற்பனைத் துறை** | |
| 19 | சென்னை (வடக்கு), ஈரோடு-2, திருச்சி-2 ஆகிய இடங்களிலுள்ள மாநில அக்மார்க் ஆய்வகங்களை பலப்படுத்துதல். | 24.00 |
| 20. | திருச்சி, ஈரோடு மற்றும் மார்த்தாண்டம் ஆகிய மூன்று மாநில அக்மார்க் ஆய்வகங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல். | 7.00 |
| | பெரு மொத்தம் .. | 374.69 |



## அத்தியாயம் - 2

## வேளாண்மை

### பருவநிலை

*1997-98* ஆம் ஆண்டு பருவம் வாரியாக பெறப்பட்ட மழை விபரம், இயல்பான மழை மற்றும் சென்ற ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவுடன் ஒப்பிட்ட விபரம் பின்வருமாறு:

(மில்லி மீட்டரில்)

| வ. எண். | பருவம்/ மாதம் | இயல்பான மழை | பெய்த மழை 1996 | பெய்த மழை 1997 | வேறுபாடு (%) இயல்பு மழையுடன் | வேறுபாடு (%) கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | கோடை 97 (ஏப்ரல்-மே) | 117.6 | 133.6 | 89.4 | (-)24 | (-)33 |
| 2. | தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்) | 307.6 | 480.8 | 230.4 | (-)25 | (-)52 |
| 3. | வடகிழக்கு பருவம் (அக்-டிச) | 436.7 | 550.9 | 785.5 | (+)79 | (+)42.6 |
| 4. | குளிர்பருவம் (ஜன-பிப் 98) | 42.2 | 10.5 | 4.6 | (-)89.1 | (-)56.2 |
| | மொத்தம் (ஏப் 97-பிப் 98) | 906.1 | 1175.8 | 1109.9 | (+)23 | (-)6 |

### 1997-98 ஆம் ஆண்டில் பயிர் நிலைமை விபரம்

ஏப்ரல் '97 முதல் பிப்ரவரி '98 வரை பெறப்பட்ட மொத்த மழையளவு சராசரியுடன் ஒப்பிடுகையில் 23% அதிகமாகவும், கடந்த ஆண்டு இதே காலத்தை ஒப்பிடுகையில் 6% குறைவாகவும் உள்ளது. வடகிழக்கு பருவமழை தவிர பிற பருவங்களில் பெறப்பட்ட மழை இயல்பைவிட குறைவாகவே உள்ளது. தென்மேற்கு பருவ மழை குறைவினால் மானாவாரி சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி பரப்பில் குறைவு ஏற்பட்டது.

[1998 ஏப்ரல் 7

மேட்டூர் அணை பாசனத்திற்காக குறித்த காலத்தே (ஜூன் 12) திறந்துவிடப்பட்ட போதிலும் நீர் நிலைமை குறைவாக இருந்ததால் விவசாயிகளிடையே ஏற்பட்ட தயக்கத்தால் காவிரி நதிப்படுகை பகுதிகளில் குறுவை சாகுபடி பரப்பில் 0.941 இல.எக்டேர் குறைவு ஏற்பட்டது. இக்குறைபாடு சம்பா பருவத்தில் ஈடு செய்யப்படும் என எதிர்நோக்கப்பட்டது. நவம்பர் மாதத்தில் பெய்த அதிக மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 1.84 இல.எக்டேர் பரப்பு சேதமடைந்து, அரசு துரித வெள்ள நிவாரண பணிகளை மேற்கொண்டு ரூ. 15.81 கோடி அளவில் முழுவதுமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு நிலவிய இடர்பாடான பருவநிலை இவ்வாண்டின் சிறுதானியங்கள், பயறுவகை மற்றும் பருத்தி ஆகியவற்றின் உற்பத்தியைப் பாதிக்கும் என கருதப்படுகிறது. இவ்வாண்டில் எதிர்நோக்கும் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விபரம் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இல.எக்.) | | | உற்பத்தி (இல.மெ.டன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | பிப்ரவரி 98 வரை சாதனை | எதிர் நோக்கும் சாதனை | இலக்கு | பிப்ரவரி 98 வரை சாதனை | எதிர் நோக்கும் சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அரிசி | 21.00 | 22.5 | 23.50 | 70.00 | 70.00 | 73.56 |
| சிறுதானியங்கள் | 15.00 | 11.47 | 12.00 | 19.00 | 14.81 | 16.36 |
| பயறுவகைகள் | 10.00 | 9.68 | 10.00 | 6.00 | 4.84 | 5.00 |
| உணவு தானியங்கள் | 46.00 | 43.65 | 45.50 | 95.00 | 89.65 | 94.92 |
| எண்ணெய் வித்துக்கள் | 15.00 | 12.31 | 13.88 | 19.00 | 17.70 | 19.95 |
| பருத்தி (இல.பொதிகள்) | 2.50 | 2.12 | 2.30 | 6.50 | 3.93 | 4.26 |
| கரும்பு (வெல்லமாக) | 2.50 | 2.50 | 2.93 | 29.00 | 26.00 | 30.47 |



1998 ஏப்ரல் 7]

## 1998-99 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு

இயல்பான மழை மற்றும் பருவநிலை நிலவும் என எதிர்பார்த்து ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டாம் ஆண்டு வரையறுக்கப்பட்ட உற்பத்தியைக் கணக்கில் கொண்டு கீழ்க்கண்டவாறு 1998-99 ஆம் ஆண்டின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | பரப்பு (இல.எக்டேர்) | உற்பத்தி (இல.டன்கள்) |
|---|---|---|
| அரிசி | 22.00 | 72.00 |
| சிறுதானியங்கள் | 15.00 | 19.25 |
| பயறுவகைகள் | 10.00 | 6.50 |
| உணவு தானியங்கள் | 47.00 | 97.75 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 21.00 |
| பருத்தி (இல.பொதிகள்) | 2.50 | 7.00 |
| கரும்பு (வெல்லமாக) | 2.50 | 30.80 |

## இடுபொருள் திட்டங்கள்

### அ. விதைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வல்லுநர் விதைகள் 39 அரசு விதைப் பண்ணைகள் மூலம் ஆதார விதைகளாக பெருக்கம் செய்யப்பட்டு பின் இந்த ஆதார விதைகள் பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகளில் சான்று விதைகளாக பெருக்கம் செய்யப்படுகின்றன. சான்று விதைகளின் தரத்திற்காக விதைச் சான்றுத் துறையினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மாநிலத்தில் இயங்கும் 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இச்சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் 28,500 மெ.டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு சான்றட்டையிடப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

[1998 ஏப்ரல் 7

1998-99 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் விதை மாற்று சதவிகிதம் பின்வருமாறு:

| வ. எண். | பயிர் | மாநில அரசு பரிந்துரைக்கும் விதை மாற்று விகிதம் | மத்திய அரசு பரிந்துரைக்கும் விதை மாற்று விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | அரிசி மற்றும் சிறுதானியங்கள் | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம் (அரிசி) ஒதுக்கீட்டிற்கு மட்டும் | |
| 2. | பயறு வகைகள் | 12.5 | 11 |
| 3. | பருத்தி-மானாவாரி | 10 | 15 |
| | பருத்தி-இறவை | 15 | 15 |
| 4. | நிலக்கடலை | 5 | 3 |
| 5. | எள் | 15 | 10 |
| 6. | சூரியகாந்தி | 50 | 50 |
| 7. | ஆமணக்கு | 30 | 20 |
| 8. | சோயாமொச்சை | 25 | — |

1997-98 ஆம் ஆண்டின் கொள்முதல், விநியோக இலக்கு பிப்ரவரி 1998 வரையிலான சாதனை மற்றும் 1998-99 ஆம் ஆண்டின் திட்டம் பற்றிய விபரங்கள் வருமாறு:

(அலகு மெடன்கள்)

| வ. எண். | பயிர் | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | 1998-99 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) | கொள்முதல் | | | |
| 1. | நெல் | 18000 | 15500 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 377 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1670 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11200 | 5288 | 11200 |
| 5. | பருத்தி | 375 | 235 | 375 |



1998 ஏப்ரல் 7]

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | விநியோகம் | | | |
| 1. | நெல் | 18000 | 16500 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 301 | 400 |
| 3. | பயறுவகைகள் | 2600 | 1450 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11200 | 5134 | 11200 |
| 5. | பருத்தி | 375 | 270 | 375 |

## (ஆ) உரங்கள்

பயிர்களின் பல்வேறு நிலைகளில் சரியான விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை தரவல்ல இரசாயன உரங்களை இட்டால் அதிக மகசூல் பெறுவது உறுதி. 1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1998 வரை இரசாயன உர உபயோகமும் 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டமும் வருமாறு:

(அலகு இல. மெடன்கள்)

| சத்துக்கள் | இலக்கு 1997-98 | பிப்ரவரி 98 வரை சாதனை | 1998-99 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தழை | 4.80 | 4.23 | 5.05 |
| மணி | 2.10 | 1.68 | 2.00 |
| சாம்பல் | 2.10 | 1.92 | 1.95 |
| மொத்தம் | 9.00 | 7.83 | 9.00 |

## நுண்ணூட்டச் சத்துக்கலவை

குடுமியான்மலையில் இயங்கிவரும் நுண்ணூட்டச் சத்துக் கலவை தயாரிக்கும் மையம் ஆண்டுதோறும் 1250 மெடன். நுண்ணூட்டச் சத்து கலவையினை தயாரித்து விநியோகித்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு பிப்ரவரி 1998 வரை 940 மெடன். நுண்ணூட்டச் சத்துக் கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டும் 1,250 மெ.டன். நுண்ணூட்டச் சத்துக் கலவை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 7

## இயற்கைப் பண்ணையம்

வேளாண் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இயற்கைப் பண்ணையம் பரிந்துரைக்கப்படுகிறது. தரமான மக்கு எரு, உயிர் உர உபயோகம், வேளாண் கழிவுகளை உயிரியல் முறையில் மக்கு உரமாக மாற்றி உபயோகித்தல், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உர உபயோகம் போன்றவை சாகுபடி செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த பயிர்சத்து மேலாண்மைக்காகவும் பரிந்துரைக்கப்படுகின்றன. இவ்வாறு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## புளுரோட்டஸ் பூஞ்சாளம் கொண்டு மக்கு எரு தயாரித்தல்

சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு பண்ணைக் கழிவுகளை புளுரோட்டஸ் பூஞ்சாளம் மூலம் மக்கு உரமாக்கி பயன்படுத்த 5 கிலோ யூரியா, 1 கிலோ புளுரோட்டஸ் பூஞ்சாளம் மற்றும் துண்டுபிரசுரம் அடங்கிய 10,000 சிறுதளை பைகள் ரூ. 7 இலட்சம் செலவில் இலவசமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

## ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்க சிறுதளைப் பைகள் வழங்குதல்

ஊட்ட மேற்றிய தொழுஉரம் தயாரிக்க 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ பொட்டாஷ் மற்றும் துண்டு பிரசுரம் அடங்கிய சிறுதளைப் பைகள் ரூ. 20.00 இலட்சம் செலவில் இலவசமாக வழங்க நடப்பு ஆண்டில் உத்திரவிடப்பட்டு பிப்ரவரி 1998 வரை 9,303 எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

## உர அடையாள அட்டை விநியோகம்

விவசாயிகள் உரங்களை சரியான சமயத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பெற உர அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளது.

இதன் முதல் நிலையாக மதுராந்தகம், மேலூர், திருவாரூர், முசிறி மற்றும் சேலம் வேளாண் கோட்டங்களில் வழங்கப்படும். இதற்காக 1,50,000 அட்டைகள் அச்சிடப்பட்டு மார்ச் 1998-க்குள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிடும். மேலும் 6,50,000 உர அட்டைகள் கூடுதலாக அச்சிடப்பட்டு 22 வேளாண் கோட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே இத்திட்டம் 22 வேளாண்மை கோட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.



1998 ஏப்ரல் 7]

## உயிரின உர உற்பத்தி மற்றும் விநியோகம்

மத்திய அரசுத் திட்டங்களின் மானிய உதவியோடு உயிர் உர உபயோகம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய 6 இடங்களில் இயங்கும் உயிரின உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுதோறும் 1,400 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. பிப்ரவரி 1998 வரை 1,021 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டும் 1,400 மெ.டன் உற்பத்தி செய்யப்படும்.

## பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

மண்ணின் மக்கு அளவினை அதிகரிக்க பசுந்தாள் உரத்தினைப் பயிர்செய்து அந்நிலத்திலேயே உழுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் 25% மானியத்தில் 90 மெ.டன் பசுந்தாள் உர விதை வழங்கிட ஆணையிடப்பட்டு 90 மெ.டன் கொள்முதல் செய்யப்பட்டு பிப்ரவரி 1998 வரை 15 மெ.டன்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடரப்படும்.

## கலவை உர உற்பத்திப் போட்டி

ஊராட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் தரமான அதிக கலவை உரம் தயாரிக்கும் முயற்சியை ஊக்குவிக்க, கலவை உர உற்பத்திப் போட்டி நகராட்சிகளிடையே நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றது. 1997-98 ஆம் ஆண்டில் 31 நகராட்சிகள் 'கலவை உரப் போட்டி'யில் கலந்து கொள்ள பதிவு செய்துள்ளன. மிகவும் தரமான அதிக அளவில் நகர கலவை உரம், உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நகராட்சிகளுக்குப் பரிசுத் தொகையும், சுழற்கேடயமும் வழங்கப்படும். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## கழிவுநீர்ப் பண்ணைகள்

தற்போது 18 உள்ளாட்சி நிறுவனங்களில் கழிவு நீரைப் பயன்படுத்தி கழிவு நீர்ப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் தீவனப்புல், தென்னை, கரும்பு, காய்கறிப் பயிர்கள் மற்றும் இதர பயன்தரும் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. நகராட்சிகளில் வெளியேறும் கழிவுநீரை இப்பண்ணைகளில் முறையாகப் பயன்படுத்தி, நகராட்சிகள் செயலாற்றி வருகின்றன.

[1998 ஏப்ரல் 7

### இயந்திரக் கலவை உரம் தயாரித்தல்

நாகர்கோவில் நகராட்சியில் தினமும் சேகரிக்கப்படும் திடக் கழிவுகளைக் கொண்டு ரூ. 20.00 இலட்சத்தில் 'இயந்திரக் கலவை உர தயாரிப்பு நிலையம்' ஏற்படுத்தப்பட்டு செயல்படுகின்றது. அவ்வாறே தாம்பரம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளில் 1996-97 ஆம் ஆண்டில் மைய அரசு மானியத்தில் வழங்கிய ரூ. 70.20 இலட்சத்தில் இயந்திரக் கலவை உர தயாரிப்பு நிலையம் நிறுவ உள்ளமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு வருகின்றன. இதேபோன்று குடியாத்தம், தஞ்சாவூர், மேட்டூர், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய நகராட்சிகளில் 'இயந்திரக் கலவை உர தயாரிப்பு நிலையம்' ரூ. 100 இலட்சம் செலவில் அமைக்கும் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

### இ. பயிர்ப் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் முறையான பூச்சிநோய் கணிப்புப் பணி செயல்படுத்தப்பட்டு, பூச்சி மற்றும் நோய்களின் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் 7,356 இடங்களிலிருந்து புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து ஒவ்வொரு வாரமும் விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பிப்ரவரி 98 வரை உணவுப் பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 51.80 இலட்சம் எக்டேரிலும், உணவு அல்லாத பயிர்களில் 21.50 இலட்சம் எக்டேரிலும் மற்றும் விதை நேர்த்தி 21.70 இலட்சம் எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது.

### ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில் நுட்பத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. குறைந்த செலவில் பயிர்களின் பூச்சி சேதத்தைத் தவிர்த்தல், மேலும் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுதல், மண்ணின் நச்சுத் தன்மை மற்றும் பூச்சிகளின் பெருக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மத்திய அரசுத் திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம் (அரிசி), தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம், தீவிர பருத்தி மேம்பாடு திட்டம் மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் ஆகிய



1998 ஏப்ரல் 7]

திட்டங்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஒரு இனமாக சேர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் மத்திய அரசுத் திட்டங்கள் மூலம் பின்வரும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

| வ. எண். (1) | திட்டம் (2) | செயல் இலக்கு (3) | பிப்ரவரி 1998 வரை சாதனை (4) |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின்கீழ் விவசாய வயல் வெளிப் பள்ளிகள் (எண்கள்). | 1400 | 1350 |
| 2. | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் விவசாய வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்). | 1100 | 988 |
| 3. | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்கள்). | 530 | 460 |
| 4. | எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டேரில்). | 3333 | 3034 |

1998-99 ஆம் ஆண்டிலும் மத்திய அரசின் நிர்வாக ஒப்புதலின் அடிப்படையில் இத்திட்டங்கள் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு இனமாக பூச்சிநோய் கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகளையும் வேளாண் துறையின் அலுவலர்களையும் பூச்சிநோய் கணக்கெடுப்பு பணிகளில் பயிற்றுவிக்க மதுரை மற்றும் காஞ்சிபுரத்தில் இரண்டு மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையங்கள் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் மத்திய அரசு மையத்துடன் கூடுதலாக செயல்படுகின்றன. இம்மையங்கள் உயிரின கட்டுப்பாட்டு ஒட்டுண்ணிகளையும் வளர்த்து விவசாயிகளுக்கு வழங்குகின்றன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையின் உபயோகத்தை வலுப்படுத்த திருச்சிராப்பள்ளி, சேலம், தர்மபுரி, ஈரோடு, மதுரை,

கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எட்டு உயிரின கட்டுப்பாட்டு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு உயிரியல் கொல்லிகள் நியாயமான விலையில் கிடைக்க அமைக்கப்பட்டுள்ளன.

## உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

பல்வேறு பயிர்களின் ஒட்டுண்ணி விடுதல் மூலம் கட்டுப்படுத்தப்படும் பரப்பு பின்வருமாறு:

(பரப்பு எக்டேர்)

| வ. எண். (1) | பயிர் பூச்சிகள் (2) | நிலையங்கள் (எண்கள்) (3) | 1997-98 இலக்கு (4) | பிப்ரவரி-98 வரை சாதனை (5) | 1998-99-க்கான குறியீடு (6) |
|---|---|---|---|---|---|
| 1. | கரும்பு இடைக்கணுப்புழு | 21 | 10500 | 9000 | 10500 |
| 2. | தென்னை கருந்தலைப்புழு (பெத்திலிட்ஸ், பிரகோனிட்ஸ், யூலோபிட்ஸ்) | 19 | 10250 | 9538 | 10250 |
| 3. | பருத்தி... காய்ப் புழு/என்பிவி | 3 | 1500 | 1200 | 1500 |
| 4. | மணிலா சிகப்பு கம்பளிப் புழு (என்பிவி) | 4 | 480 | 480 | 480 |
| 5. | தென்னை காண்டாமிருக வண்டு (குப்பிகள்) (பச்சை மஸ்கார்டின் பூஞ்சாளம்) | 2 | 10000 | 8834 | 10000 |

## நெய்வேலி காட்டாமணக்கை அழித்தல்

காவிரிப் படுகையில் உள்ள வாய்க்கால் மற்றும் பாசன வகைகளில், பாசனத்திற்கு இடையூறாக இருக்கும் நெய்வேலி காட்டாமணக்கு என்ற களையை அகற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏப்ரல் 1997 முதல் ஜூன் 1997 வரை இத்திட்டம் டெல்டாப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.





2-4-டி என்ற களைக்கொல்லி இக்களையினை அழிக்க உபயோகப்படுத்தப்பட்டது. பின்பு காய்ந்த இலைகள் அப்புறப்படுத்தப்பட்டு கொளுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ. 308.53 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்தொகையில் 2,384 எக்டேர் பரப்பில் 2-4-டி களைக்கொல்லி தெளிக்கவும், 1,916 எக்டேரில் காய்ந்த இலைகளை அகற்றவும் ரூ. 102.32 இலட்சம் செலவிடப்பட்டது.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்பட்டு காவிரி படுகைப் பகுதி மாவட்டங்களில் கோடை மாதங்களில் நெய்வேலி காட்டாமணக்கை அழிக்க மீதமுள்ள ரூ. 206.40 இலட்சம் செலவிடப்படும்.

## மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்

வேளாண் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், மழை வளத்தைப் பேணவும் மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று ஊராட்சி ஒன்றியம் வீதமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 25 கி.மீ. தூரத்திற்கு, கிலோ மீட்டருக்கு 250 கன்றுகள் வீதம் புளி, வேம்பு, புங்கன், இலுப்பை ஆகிய மரக்கன்றுகள் மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் இருமருங்கிலும் நடப்பட்டன. 25 மாவட்டங்களில் செயல்படுத்தும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ. 7.35 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2 மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 58.80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டு பிப்ரவரி 1998 வரை ரூ. 492.826 இலட்சம் செலவிடப்பட்டு மரக்கன்றுகள் 1,615 கி.மீ. தூரத்திற்கு நடப்பட்டுள்ளன. இக்கன்றுகள் நன்கு வேரூன்றவும் பாதுகாக்கப்படவும் காவலுக்கும் நீரூற்றவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்பட்டு நடப்பட்ட மரங்கள் நிலைபடவும், மேலும் மரங்கள் நடவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 50 எக்டேர் நிருபணம்

விவசாயிகளிடையே பல்வேறு தொழில் நுட்பங்களைப் பரப்புவதற்காக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 50 எக்டேர் செயல்விளக்கப்

[1998 ஏப்ரல் 7

பண்ணையினை இந்த அரசு அமைத்துள்ளது. வேளாண் துறை மற்றும் அதன் சகோதரத் துறைகளும், பிற சார்புத் துறைகளும் இந்த செயல்விளக்கப் பண்ணையில் இணைந்து பங்கேற்று உயரிய தொழில் நுட்பங்களைப் பரப்பும் பணியைச் செய்யும். 385 ஊராட்சி ஒன்றியங்களில், 461 எண்கள், 50 எக்டேர் நிருபணத்தளைச் சகோதர மற்றும் பிற துறைகளின் பங்கேற்போடு அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைகளிடையே சீரிய ஒருங்கிணைப்புக்கும், இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கும், வேளாண்துறை அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ஒரு மாநிலக் குழுவையும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களைத் தலைவர்களாகக் கொண்டு மாவட்டக் குழுக்களையும் நியமித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

## இஸ்ரேல் நாட்டு "தகல்" நிறுவன ஆலோசனை ஆய்வு

தர்மபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உயர் வருவாய் தரும் வேளாண் விளை பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான திட்டம் தயாரிக்கவும் விளைபொருட்களின் மதிப்பைக் கூட்டுவதற்கு தேவையான வழிமுறைகளை வகுக்கவும் இஸ்ரேல் நாட்டு 'தகல்' நிறுவனத்திடம் ரூ. 2.33 கோடி செலவில் ஒரு ஆலோசனை ஆய்வுப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்காக ரூ. 1.38 கோடி செலவிடப்பட்டுள்ளது. இப்பணி ஏப்ரல் 1998 இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்குக் கடப்பாரை மற்றும் மண்வெட்டி வழங்கும் திட்டம்

வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் தங்களது அன்றாட வேளாண் பணிகளுக்குக் கடப்பாரை மற்றும் மண்வெட்டி அவசியமாகிறது. எனவே இக்கருவிகள் 50% மானியத்தில் வழங்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 7]

*1997-98 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 வரை சாதனை விபரம் வருமாறு:*

| வ. எண். | இனம். | செயல்முறை | | நிதி இலட்சம் ரூபாயில் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | பிப்ரவரி 98 வரை சாதனை | இலக்கு | பிப்ரவரி 98 வரை சாதனை |
| 1. | மண்வெட்டி வழங்குதல் | 20,000 | * | 8.00 | 8.00 |
| 2. | கடப்பாரை வழங்குதல் | 20,000 | * | 20.00 | 20.00 |

*தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி இணையம் இக்கருவிகளை விரைவில் வழங்கும்.

### மாநில திட்டங்கள்

*தென்னை மேம்பாட்டு திட்டங்கள்*

தமிழ்நாட்டில் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. நெட்டை மற்றும் நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென 26 தென்னை நாற்றங்கால்களும், நெட்டை இரக நெற்றுகள் உற்பத்தி செய்வதற்கென ஆறு தாய்மரத் தோட்டங்களும் செயல்படுகின்றன.

*1997-98 ஆம் ஆண்டு தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆண்டு இலக்கு, பிப்ரவரி 1998 வரை சாதனை மற்றும் 1998-99 குறியீடு ஆகியவை பின்வருமாறு:*

அலகு இலட்சம் எண்கள்

| வ. எண். (1) | இரகங்கள். (2) | 1997-98 இலக்கு. (3) | பிப்ரவரி 98 வரை சாதனை. (4) | 1998-99 குறியீடு. (5) |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் : | | | |
| | அ. நெட்டை | 16.07 | 12.98 | 15.50 |
| | ஆ. நெட்டை/குட்டை | 9.95 | 8.53 | 9.40 |
| | இ. குட்டை/நெட்டை | 0.30 | 0.08 | 0.30 |
| | மொத்தம் | 26.32 | 21.59 | 25.20 |

| | | | |
|---|---|---|---|
| 2. தென்னங்கன்றுகள் விநியோகம் : | | | |
| அ. நெட்டை | 12.00 | 10.90 | 12.00 |
| ஆ. நெட்டை/குட்டை | 7.00 | 6.20 | 7.00 |
| இ. குட்டை/நெட்டை | 0.30 | 0.08 | 0.30 |
| மொத்தம் | 19.30 | 17.18 | 19.30 |

## தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்

தென்னை நெற்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம் கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கும் 100 சத நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ. 3,000-மும் இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் ரூ. 1,500 வீதமும் மொத்தம் எக்டேர் ஒன்றுக்கு ரூ. 6,000 மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை தென்னை நடுவோர்க்குத் தேவையான கன்றுகள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் பராமரிப்புச் செலவுகளுக்கும் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 45.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே ஆகும்.



| வ. எண். (1) | இனங்கள்/அலகு (2) | 1997-98 இலக்கு (3) | பிப்ரவரி 98 வரை சாதனை (4) | 1998-99 குறியீடு (5) |
|---|---|---|---|---|
| 1. | சாகுபடி பரப்பு (இல.எக்.) | 2.50 | 2.12 | 2.50 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 6.50 | 3.93 | 7.00 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3750 | 2350 | 3750 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 3750 | 2700 | 3750 |
| 5. | விதை கொள்முதல் (நிதி ரூ.லட்சம்) | 79.00 | 57.25 | 79.00 |
| 6. | என்.பி.வி. நச்சுயிரி விநியோகம் (எக்) | 1500 | 1200 | 1500 |
| 7. | என்.பி.வி. நச்சுயிரி விநியோகம் (ரூ. இலட்சம்) | 0.45 | 0.35 | 0.45 |

## கரும்பு அபிவிருத்தித் திட்டம்

பல்வேறு தொழில் நுட்பங்களைக் கையாண்டு, கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

| வ. எண். (1) | இனங்கள்/அலகு (2) | 1997-98 இலக்கு (3) | பிப்ரவரி 98 வரை சாதனை (4) | 1998-99 குறியீடு (5) |
|---|---|---|---|---|
| 1. | பரப்பு (இல.எக்.) | 2.50 | 2.50 | 2.50 |
| 2. | உற்பத்தி (இல.மெ.டன்) (வெல்லமாக) | 29.00 | 26.00 | 30.80 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் (எக்) | 10500 | 9000 | 10500 |
| 4. | ஒட்டுண்ணி விடுதல் (நிதி ரூ. இலட்சத்தில்) | 2.89 | 2.61 | 2.89 |
| 5. | செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் (எண்) | 575 | 525 | 575 |

[1998 ஏப்ரல் 7

## கரும்பு கொள்முதல் விலை

கரும்பு கட்டுப்பாடு ஆணை 1966 பிரிவு 3-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு கரும்பிற்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்கிறது. இந்த விலை கரும்பு பயிரிடுவோருக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இல்லாததால் மாநில அரசு, மைய அரசு அறிவிக்கும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலைக்கு மேல் கூடுதலாக ஆலைகள் கரும்புக்கு விலை கொடுக்க பரிந்துரை செய்கிறது.

1997-98 ஆம் ஆண்டு 8.5 சதவீத சர்க்கரைத் திறன் கொண்ட கரும்பிற்கு சட்டபூர்வ குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ. 484.50 என்று மைய அரசு அறிவித்தது. இது கட்டுப்படியாகக்கூடிய விலை இல்லை எனக் கூறி கரும்பிற்கு அதிக விலையை அறிவிக்கும்படி தமிழக கரும்பு விவசாயிகள் அரசிடம் முறையிட்டனர். சர்க்கரை ஆலைகளுக்கு அதிகப்படியாகக் கரும்பு கிடைக்க வேண்டும் என்ற நோக்குடனும், அதிக சர்க்கரை உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும், தமிழக அரசு சர்க்கரை ஆலை உரிமையாளர்களுடனும், கரும்பு விவசாயிகளுடனும் கூட்டங்கள் நடத்தி கலந்து ஆலோசித்து 1997-98 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீத சர்க்கரைத் திறன் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 660 விலையாக பரிந்துரை செய்து அறிவித்துள்ளது.

இதைத் தவிர அரைவைக்காக சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படும் கரும்புக்கு 10 கி.மீ. தொலைவிற்கு மேல் உள்ள வாகன வாடகையை சர்க்கரை ஆலைகளே தொடர்ந்து ஏற்க வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் கரும்பு கொள்முதல் வரியை கரும்பின் மதிப்புக்கு ஏற்ப விதிப்பதற்குப் பதிலாக 1997-98 ஆம் ஆண்டுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 60 என்று சமமாக வரியை அரசு நிர்ணயித்துள்ளது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடுவோருக்கு மாநில அரசு பரிந்துரை விலை நிலுவையை அளிப்பதற்கு ஏதுவாக வழிவகை முன்பணமாக 7.30 கோடி ரூபாய் அரசு வழங்கியுள்ளது. மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடுவோருக்கு ஒரு டன் கரும்பிற்கு 10 ரூபாய் கூடுதல் கரும்பு விலையை 1996-97 ஆம் ஆண்டு கரும்பு அரைவைப் பருவத்திற்கு அளிப்பதற்கு ரூ. 3.34 கோடி அரசு வழிவகை முன்பணம் வழங்கியுள்ளது. அரசு, கரும்பு பயிரிடுவோருக்கு, சர்க்கரை ஆலைகள் கரும்பு விலை



1998 ஏப்ரல் 7]

நிலுவையை வழங்க தீவிர முயற்சிகள் எடுத்தது. இதனால் 1996-97 ஆம் ஆண்டிற்கு சட்டபூர்வ குறைந்த விலை மற்றும் மாநில அரசு பரிந்துரை விலை நிலுவையை ஒரு ஆலையைத் தவிர எல்லா சர்க்கரை ஆலைகளும் வழங்கிவிட்டன. கரும்பு விலை நிலுவைப் பாக்கி வைத்துள்ள அந்த ஒரு சர்க்கரை ஆலையும் விரைவில் நிலுவையைக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக "கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்" உருவாக்கப்பட்டது. கரும்பு போக்குவரத்தை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளின்கீழ், இம்மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் கரும்புகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து என்ற வீதத்தில் வசூலிக்கப்படும் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒரு பகுதி கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்ட நிதிக்கு ஒதுக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி விவரம் கீழ்வருமாறு:

| வருடம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1993-94 | 575.75 |
| 1994-95 | 691.15 |
| 1995-96 | 836.19 |
| 1996-97 | 626.63 |
| 1997-98(பிப்ரவரி 1998 முடிய) | 336.00 (சரிபார்க்கப்படாத விவரம்) |

[1998 ஏப்ரல் 7

கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் சாலைப் பராமரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் வருமாறு:

| ஆண்டு | புதிய சாலைகள் அமைத்த செலவு (ரூ.இலட்சத்தில்) | புதியதாக சாலைகள் அமைத்த தூரம் (கி.மீ) | பராமரிப்பு | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1993-94 | 200.00 | 18.870 | 300.00 | 500.00 |
| 1994-95 | 420.76 | 28.500 | 309.84 | 730.60 |
| 1995-96 | 273.65 | 46.870 | 225.86 | 499.51 |
| 1996-97 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 (பிப்ரவரி 1998 முடிய) | 226.43 | 25.050 | 265.30 | 491.73 |

வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரியை பின்வரும் முறையில் செலவிடுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது:

1. குறிப்பிட்ட சர்க்கரை ஆலைப் பகுதிக்கான சாலைப் பணிகள் — 60%
2. மற்றப் பகுதிகளுக்கான சாலைப் பணிகள் — 20%
3. ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக (சர்க்கரைத் துறை ஆணையரால் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படும்) — 10%
4. பல்வகை செலவுகள் (தொழில் துறையுடன் ஆலோசித்து சர்க்கரைத் துறை ஆணையர் முடிவெடுப்பது) — 10%

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கருத்துக்கள் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தையும் அதனால் ஏற்படும் விலை ஏற்றத்தையும் தவிர்ப்பதற்காக சாலைப் பணிகளை பரிந்துரைக்க அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் ரூ. 531 இலட்சம் செலவில் புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 557 இலட்சம் செலவில் பழைய சாலைகளைப் பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 7]

## உழவர் பயிற்சி நிலையங்கள்

காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தர்மபுரி, பவானி, இலால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் இயங்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கிராமப்புற பயிற்சிகள் மூலம் நவீனத் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், நடைமுறை மற்றும் இரண்டாம் நிலை செயல்விளக்கங்கள் மேற்கொள்ளுதல், விளம்பரம், கூட்டு விவாதங்கள், உழவர் சுற்றுலா மற்றும் உழவர் தின விழா ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 வரை சாதனை மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை பின்வருமாறு:

அலகு (எண்கள்)

| வ. எண் | இனங்கள்/அலகு | 1997-98 இலக்கு | பிப்ரவரி 1998 வரை சாதனை | 1998-99 குறியீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கிராமப்புற பயிற்சி | 264 | 266 | 264 |
| 2. | நடைமுறை செயல்விளக்கங்கள் | 528 | 527 | 526 |
| 3. | உழவர் விவாதக் குழு அமைப்பாளர்கள் பயிற்சி | 120 | 136 | 120 |
| 4. | சுழற்பயிற்சி மற்றும் செயல்விளக்கம் | 1320 | 1259 | 1320 |

## வட்டார அளவிலான விழிப்புணர்ச்சி முகாம்

வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசுத் திட்டங்கள் பற்றி விவசாயிகள் அறியும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து முதல் பத்து முன்னோடி விவசாயிகள் வீதம் ஊராட்சி ஒன்றிய அளவில் சுமார் 250 முதல் 500 பேர் தேர்வு செய்யப்பட்டு இருநிலைகளாக (அதாவது பிப்ரவரி - மார்ச் 97 மற்றும் ஜூன் - ஜூலை 97) நடத்தப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திற்கும் 5-10 விவசாயிகள் வீதம் மொத்தம் 1,44,356 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இம்முகாம்களின்போது சகோதரத் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களும் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

[1998 ஏப்ரல் 7

## மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்

குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில், இளநிலை மற்றும் நடுநிலை அலுவலர்களுக்கு பணியிடை பயிற்சி அளிக்கப்படுகிறது. இவையல்லாமல், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி 98 வரை அளிக்கப்பட்ட பயிற்சிகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பயிற்சி விவரம் | செயல் (எண்ணிக்கை) | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 97-98 | பிப்ரவரி 98 வரை சாதனை | இலக்கு 97-98 | பிப்ரவரி 98 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | வயல்விளக்க அலுவலர் களுக்கு புத்தூட்டப் பயிற்சி | 200 | 200 | 3.32 | 2.57 |
| 2. | மானாவாரி வேளாண்மை வேளாண் அலுவலர் | 400 | 324 | 5.70 | 3.77 |
| | வேளாண் உதவி அலுவலர் | 400 | 347 | - | - |
| 3. | இயற்கை விவசாயம் வேளாண்மை அலுவலர் | 200 | 183 | 5.70 | 2.37 |
| | வேளாண் உதவி அலுவலர் | 200 | 216 | - | - |
| 4. | நிர்வாகப் பயிற்சி | 400 | 215 | 2.85 | 1.16 |
| 5. | கணிப்பொறி பயிற்சி | 60 | 60 | 0.73 | 0.61 |
| 6. | கரீப்/ரபி முன்பருவப் பயிற்சி | - | - | 1.00 | 0.74 |
| 7. | பயிற்சியாளர்களுக்கு பயணப்படி | - | - | - | 0.18 |
| | மொத்தம் | 1860 | 1545 | 19.30 | 11.40 |

1998-99 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சிகள் தொடரப்படும்.



1998 ஏப்ரல் 7]

## மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு

மண்ணின் தன்மை, அதன் பௌதீக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவற்றை கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து சர்வதேச நிலைக்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி நில அமைப்பியலின்படி வரைபடம் வரைந்து பயன்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் இம்மண் அளவை அமைப்புகளில் ஆண்டு இலக்கான 1.50 இல.எக்டேரில், பிப்ரவரி 1998 வரையில் 1.38 இல.எக்டேர் பரப்பில் விரிவான அளவு மேற்கொள்ளப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு இவ்வளவை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## மண் வரைபடம்

தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகள் யாவும் தொடக்க மண் வகையீடு முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் மண் வரைபடங்களாக நிலையான அலகில், எல்லாவிதமான தகவல்களுடன் வட்டார வாரியாக தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வகை மண் வரைபடங்கள் மற்றும் மண்வகைத் தொகுப்புகள் மாவட்ட அளவிலும் தொகுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 7 மாவட்டங்களுக்கு மண் வரைபடங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

## களர் உவர் சீர்திருத்தம்

தஞ்சாவூர், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 3 ஆண்டுகளில் 12,000 ஏக்கர் பரப்பில் களர் உவர் நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ள ரூ. 404.68 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## மண் பரிசோதனை நிலையங்கள்

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து குறிப்பான உரப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தற்போது மண்வள ஆய்வுகளும் இந்த நிலையங்கள் மூலம் மேற்கொண்டு, மண் ஆய்வின் அடிப்படையில் முக்கிய பயிர்களுக்கான பரிந்துரைகள் கணக்கிடப்பட்டு உரப் பரிந்துரைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 7

இலக்கிடப்பட்ட 10 இலட்சம் மண் மாதிரிகளில் பிப்ரவரி 1998 முடிய 5.98 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 5.80 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 2.88 இலட்சம் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வகங்கள் களர் உவர் மண் பகுதிகளுக்குச் சீர்திருத்த ஆலோசனை வழங்குதல், கிராம அளவிலான மண் வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர்த் தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம், கருத்துக்காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூர தொழில்நுட்பங்களைப் பரப்புவதில் இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் உறுதுணை புரிகின்றன.

**தேனி மற்றும் சிவகங்கை மாவட்ட சிறு மண் ஆய்வுக் கூடங்களை மேம்படுத்துதல்**

இதுவரை தேனி மற்றும் சிவகங்கையில் இயங்கிவந்த சிறு மண் ஆய்வுக் கூடங்கள் இவ்வாண்டு முதல் சட்டசபையில் அறிவித்தவாறு முழு அளவு ஆய்வுக் கூடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

**உரப் பரிசோதனை நிலையங்கள்**

விவசாயிகளுக்குத் தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி வழங்கும் நோக்கத்துடன் உரச்சட்டத்தின் கீழ் உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர்கள், சில்லறை மற்றும் மொத்த விற்பனை மையங்கள், உற்பத்திக் கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகள் எடுக்கின்றனர். ஆண்டொன்றுக்கு 17,220 உர மாதிரிகள் 14 உரப் பரிசோதனைக் கூடங்கள் மூலம் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட 17,220 மாதிரிகளுக்கு பிப்ரவரி 1998 வரை 15,275 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இத்துறையின் தரக்கட்டுப்பாட்டு பிரிவில் அமலாக்கப்படும் 1985 ஆம் ஆண்டு உரக் கட்டுப்பாட்டுச் சட்டம், கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் தரமான இரசாயன உரங்களை விநியோகிக்க வழி வகுக்கிறது.



1998 ஏப்ரல் 7]

1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி 98 வரை மேற்கொள்ளப்பட்ட தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | மாதிரிகள் எடுத்தது | 15273 | எண்கள் |
| 2. | மாதிரிகள் ஆய்வு செய்தது | 15273 | எண்கள் |
| 3. | மாதிரிகள் தரக் குறைவானதென அறிவிக்கப்பட்டது | 855 | எண்கள் |
| 4. | நடவடிக்கை எடுக்கப்பட்டவை— | | |
| | அ. நீதிமன்றத்தின் மூலம் | .. | |
| | ஆ. துறைமூலம் | 435 | எண்கள் |
| | இ. பரிசீலனையில் உள்ளவை | 420 | எண்கள் |
| | ஈ. தரமற்ற உர மாதிரிகள் (சதவீதம்) | 5.6% | |

**பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்**

ஆண்டு ஒன்றுக்கு 16,236 பூச்சி மருந்துகள் ஆய்வு செய்யும் திறன் கொண்ட ஒன்பது பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி '98 வரை 14,288 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1998-99ஆம் ஆண்டிலும் 16,236 மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

**பயிர் விளைச்சல் போட்டி**

விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியை அதிகப்படுத்தும் பயிர் விளைச்சல் போட்டிகளில் விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள வகை செய்ய இந்தப் பயிர் விளைச்சல் போட்டித் திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா (இறவை), சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

[1998 ஏப்ரல் 7

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வருமாறு:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| இதர பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

*1997-98* ஆம் ஆண்டில் இந்தப் போட்டிகள் ரூ.*16.92* இலட்சம் ஒதுக்கீட்டுடன் நடத்தப்படுகின்றன. மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.*100* ஆகவும் மற்றும் இதர பயிர்களுக்கு ரூ.*50* ஆகவும் மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலா பயிருக்கு ரூ. *50* ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. *25* ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி *1998* வரை மாநில அளவில் *1,251* விவசாயிகளும், மாவட்ட அளவில் *3,902* விவசாயிகளும் பதிந்துள்ளனர். *1998-99* ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**சோதனை முறை பயிர்க் காப்பீட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில், கடன் பெறாத சிறு/மிகச்சிறு விவசாயிகளின் நலனுக்கென திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மத்திய அரசின் சோதனை முறை பயிர்க் காப்பீட்டுத் திட்டம் *1997-98* ஆம் ஆண்டில் ரபிபருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரிவான பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தில் இப்போது கடன் பெறும் விவசாயிகளும், தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் உணவு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றைப் பயிரிடும் எல்லா சிறு/மிகச்சிறு விவசாயிகளும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர். சிறு/மிகச்சிறு விவசாயிகளுக்குரிய காப்பீட்டுக் கட்டணத்தின் *100* சதவீதமும் மானியமாக வழங்கப்படும். அவ்வாறு அளிக்கப்படும் மானியத் தொகை *8:2* என்ற விகிதத்தில் மத்திய அரசாலும் மாநில அரசாலும் பகிர்ந்துக்கொள்ளப்படும். கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரகவங்கிகள் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.



1998 ஏப்ரல் 7]

**பள்ளிக் கல்வியில் வேளாண்மையை பாடமாக அமைப்பது**

*1997-98* ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றிய போது வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கும் ஒரு வாய்ப்பாக பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் *3-7-1997* மற்றும் *16-3-1998* ஆகிய நாட்களில், வேளாண்மை அறிவியல் பாடத்தினைப் பள்ளிகளில் ஒரு பாடமாக அமைப்பது குறித்து மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பாடச்சுமையைக் குறைப்பது பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தங்களது அறிக்கையினை அரசிற்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. உயர்மட்டக் குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மத்திய அரசு சார்புத் திட்டங்கள்**

**ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி)**

தமிழ்நாட்டில் நெற்பயிர் மிகுதியாக பயிரிடப்படும் மாவட்டங்களில் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. நெல் சாகுபடியில் மேலும் அதிகக் கவனம் செலுத்தும் வகையில் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குவது மற்றும் அவசிய இடுபொருட்களை மானிய விலையில் விநியோகித்தல் போன்ற இனங்களைக்கொண்ட இத்திட்டம் ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக, மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனை விட உற்பத்தித் திறன் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட *140* வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்ட செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே *75:25* என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

[1998 ஏப்ரல் 7

இனவாரியாக 1997-98 ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 வரை சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சான்று பெற்ற விதை விநியோகம் நெல் (மெட்ன்) | 19200 | 11941 | 400.00 | 246.19 |
| | சிறு தானியங்கள் (மெட்ன்) | 400 | 179 | | . |
| 2. | பண்ணைக் கருவிகள் விநியோகம் (எண்) | 25000 | @ | 76.10 | 76.10 |
| 3. | நிருபண திடல்கள் (ஏக்கர்) | | | | |
| | அ. உற்பத்தித் தொழில்நுட்பம் | 1400 | 1400 | 28.00 | 28.00 |
| | ஆ. வீரிய ஒட்டு நெல் உற்பத்தி தொழில்நுட்பம் | 2000 | 1021 | 20.00 | 10.21 |
| | இ. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பம் (எண்) | 1400 | 1350 | [illegible] | 77.19 |
| 4. | உழவர் பயிற்சி (எண்) (140 வட்டாரங்களில்) | 280 | 280 | 14.00 | 14.00 |
| 5. | விசை உழுவைகள் விநியோகம் (எண்) | 350 | 350 | 105.00 | 105.00 |
| 6. | விசை உழுவைகள் (எண்) (கடந்த ஆண்டுக்குரியது) | 250 | 250 | 75.00 | 75.00 |
| 7. | சில்லரைச் செலவினம் | - | - | 6.30 | 5.57 |
| 8. | மின்னணுச் சாதனம் (1994-95 ஆம் ஆண்டுக்கானது) | - | - | 3.00 | 3.00 |
| | மொத்தம் | - | - | 611.40 | 640.26 |

@ தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் இக்கருவிகளை விரைவில் வழங்கும்.

*1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*



1998 ஏப்ரல் 7]

## தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் விதை சிறுதளை இனம் (100% மத்திய அரசு செலவினம்) தவிர மீதமுள்ள இன செலவினங்களை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற சதவிகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டம் கோவை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

*1997-98 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் கடந்த ஆண்டு விடுபட்ட பணிகளையும் சேர்த்து பிப்ரவரி 1998 வரை சாதனை விவரம் வருமாறு:*

| வ. எண் | இனம் | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | வயல் விளக்கம்(எக்.) | 1200 | 747 | 12.00 | 6.75 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்) | 80 | 40 | 4.80 | 2.40 |
| 3. | விவசாயிகள் பயிற்சி (எண்) | 80 | 57 | 4.00 | 3.35 |
| 4. | சான்று/வீரிய ஒட்டு இரக உபயோக மானியம் (மெட்ன்) | 160 | - | 6.40 | - |
| 5. | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் (மாவட்டம்) | 2 | - | 2.86 | 2.86 |
| 6. | விளம்பரம் (மாவட்டம்) | 3 | - | 2.40 | 1.30 |
| 7. | சில்லறைச் செலவினம் | - | - | 2.28 | 0.74 |
| 8. | விதைச் சிறுதளை செயல்விளக்கம் | | | | |
| | அ. வீரிய ஒட்டு இரகம் | 960 | 390 | 0.48 | 0.20 |
| | ஆ. இரகம் | 568 | - | 0.22 | - |
| | மொத்தம் | - | - | 35.44 | 17.60 |

## தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்

பயறு வகைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு சார்புத் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

[1998 ஏப்ரல் 7

இனவாரியாக 1997-98 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி இலக்குகள் மற்றும் பிப்ரவரி 1998 வரையிலான சாதனை பின்வருமாறு :—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 97-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | விதை கிராமம் (குவி.) | 7500 | 10038 | 15.00 | 17.73 |
| 2. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி.) | 10000 | 9577 | 30.00 | 29.70 |
| 3. | கருவிதை கொள்முதல் (குவி.) | 100 | 66 | 4.00 | 2.56 |
| 4. | ஆதார விதை விநியோகம் (குவி.) | 2500 | 1608 | 10.00 | 6.82 |
| 5. | விதைச் சிறுதளை விநியோகம் (எண்) | 16000 | 14952 | 20.00 | 15.32 |
| 6. | நிருபண திடல்கள் (எண்) | 5550 | 5820 | 50.00 | 45.88 |
| 7. | பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் | 750 | 334 | 4.50 | 3.64 |
| 8. | விதைநேர்த்தி 50% மானியம் (எக்.) | 50000 | 17500 | 1.50 | 0.68 |
| 9. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிருபணம் (எண்) | [illegible] | [illegible] | 8.00 | 6.85 |
| 10. | பண்ணைக் கருவிகள் விநியோகம்(எண்) | 330 | - | 5.00 | .. |
| 11. | தானிய சேமிப்பு கலன்கள்(எண்) | 270 | 83 | 4.00 | 1.43 |
| 12. | தெளிப்பு நீர்ப் பாசன கருவிகள்(எண்) | 295 | 283 | 59.00 | 58.60 |
| 13. | நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (எக்.) | 12000 | 12274 | 3.00 | 3.00 |
| 14. | நுண்ணூட்ட சத்துக்கள் விநியோகம் (எக்.) | 2000 | 1559 | 2.00 | 1.69 |
| 15. | பயிற்சிகள் (எண்) | 10 | 10 | 1.00 | 1.00 |
| 16. | பணியாளர் சம்பளம் | - | - | 3.00 | 4.67 |
| | மொத்தம் | | | 220.00 | 199.57 |

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 7]

**தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம் :**

அதிகரித்து வரும் பருத்தி தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளதால் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதே மாற்று வழியாகும். இந்த நோக்கத்துடன் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. அதன் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனவாரியாக 1997-98 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | கருவிதை உற்பத்தி (குவி.) | 5.00 | 3.60 | 0.13 | 0.10 |
| 2. | சான்றுவிதை விநியோகம்(குவி.) | 3000 | 1807 | 10.50 | 5.40 |
| 3. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிருபணம் மற்றும் பயிற்சி (எண்) | 1100 | 1050 | 88.00 | 79.24 |
| 4. | தெளிப்பு நீர்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 300 | 278 | 75.00 | 73.75 |
| 5. | உழவர் பயிற்சி (எண்) | 100 | 99 | 5.00 | 4.95 |
| 6. | என்.பி.வி. நச்சுயிரி நிருபணம் (எண்) | 2600 | 1275 | 19.50 | 8.73 |
| 7. | இனக்கவர்ச்சிப் பொறி நிருபணம் (எண்) | 1250 | 1028 | 3.13 | 2.57 |
| 8. | பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம் (எக்.) | 6000 | 5606 | 90.00 | 86.29 |
| 9. | சில்லறைச் செலவினம் | - | - | 0.75 | 0.69 |
| | மொத்தம் | - | - | 292.01 | 261.72 |

1998-99 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 7

## கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சித் திட்டம் :

மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனை விடக் குறைவான உற்பத்தித் திறன் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களில் தரமான விதைக் கரணைகள் விநியோகம் மற்றும் விதை மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுக்கக்கூடிய கரணைநேர்த்தி, திசுவளர்ப்பு, நுண்ணுயிர்பாசனம், பண்ணைகளை இயந்திரமயமாக்குதல் ஆகிய நவீன தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்கச் செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. உற்பத்தித் திறன் விருதுகள், உயிரியல் கொல்லிகள் மையம் மற்றும் திசுவளர்ப்பு மையம் ஆகிய இனங்களுக்கு மைய அரசின் பங்கு 100% ஆகும்.

1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1998 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | களசெயல் விளக்கம் (எண்) | 100 | 100 | 5.00 | 5.00 |
| 2. | மாநில பயிற்சி (எண்) | 2 | 2 | 0.25 | 0.25 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 30 | 27 | 1.50 | 1.45 |
| 4. | எருது இழுக்கும் கருவிகள் (எண்) | 400 | - | 6.00 | 6.00 |
| 5. | டிராக்டர் இழுக்கும் கருவிகள் (எண்) | 250 | - | 25.00 | 25.00 |
| 6. | விதைப் பெருக்கம் (எக்.) | 120 | 120 | 2.40 | 2.40 |
| 7. | உற்பத்தித் திறன் விருதுகள் (எண்) | 48 | 9 | 12.00 | 2.25 |



1998 ஏப்ரல் 7]

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 8. | சொட்டுநீர்ப் பாசன உள்ளமைப்பு (எக்.) | 350 | - | 87.50 | - |
| 9. | சொட்டுநீர்ப் பாசன நிருபணம் (எண்) | 20 | - | 4.50 | - |
| 10. | உயிரியல் கொல்லிகள் மையம் (எண்) | 2 | 2 | 10.00 | 10.00 |
| 11. | திசுவளர்ப்பு மையம் (எண்) | 2 | 2 | 10.00 | 10.00 |
| 12. | வெப்ப நேர்த்தி நிலையம் (எண்) | 15 | 2 | 30.00 | 2.90 |
| 13. | சில்லறைச் செலவினம் | - | - | 2.40 | 2.24 |
| | மொத்தம் | - | - | 196.55 | 67.04 |

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைபிடிப்பதற்கு ஏதுவாகவும், முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதன் மூலமும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிரிக்கும் நோக்கத்துடனும் இம்மாநிலத்தில் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில் இத்திட்டம் மைய அரசு சார்புத் திட்டமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

*1997-98-க்கு பிப்ரவரி '98 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை கீழ்வருமாறு :*

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | வல்லுனர் விதை உற்பத்தி (குவி.) மற்றும் ஆதார விதை உற்பத்தி (குவி.) | 10000 | 4015 | 37.76 | 54.27 |
| 2. | விதைக் கிராமம் (குவி.) | 50000 | 39949 | 100.00 | 88.65 |
| 3. | சான்று விதை விநியோகம் (குவி.) | 50000 | 36517 | 150.00 | 112.58 |
| 4. | விதைச் சிறுதளை விநியோகம் (எண்) | 23810 | 32234 | 50.00 | 58.74 |
| 5. | கூட்டு நிருபணம் (எக்.) | 7576 | 7259 | 125.00 | 105.43 |
| 6. | விதைநேர்த்தி (லட்.எக்.) | 1.667 | 1.116 | 30.00 | 30.00 |
| 7. | விதைநேர்த்தி மூலம் வேர்ப் புழுவைக் கட்டுப்படுத்துதல் (எக்.) | 2000 | 1897 | 14.00 | 14.00 |
| 8. | நுண்ணுயிர் விநியோகம் (எக்.) | 100000 | 83804 | 37.00 | 28.58 |
| 9. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிருபணம் (எக்.) | 3333 | 3094 | 50.00 | 40.57 |
| 10. | இனக்கவர்ச்சிப் பொறி நிருபணம் (எண்) | 4934 | 2815 | 24.67 | 15.92 |
| 11. | ஜிப்சம் விநியோகம் (எக்.) | 121000 | 131000 | 262.00 | 262.00 |
| 12. | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 2667 | - | 40.00 | 40.00 |
| 13. | நுண்ணூட்டச் சத்து விநியோகம் (எக்.) | 34000 | 37898 | 34.00 | 37.90 |



| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி 1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 14. | உழவர் பயிற்சி (எண்) | 15000 | 13427 | 30.10 | 26.85 |
| 15. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 640 | 625 | 160.00 | 156.44 |
| 16. | மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகளில் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்துதல் | - | - | 50.00 | 14.00 |
| 17. | சம்பளம் மற்றும் இதர செலவினம் | - | - | 40.00 | 32.16 |
| | மொத்தம் | - | - | 1234.43 | 1118.09 |

*1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**எண்ணெய்ப் பனை சாகுபடி திட்டம்**

*சமையல் எண்ணெய் தேவையை மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும்வகையில், எண்ணெய்ப் பனை சாகுபடித் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு சார்புத் திட்டமாக மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்து செயல்படுத்தப் படுகிறது. சாகுபடிப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 6 எக்டேர் சாகுபடி செய்யும் வகையில் 900 கன்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் எண்ணெய்ப் பனை பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செய்யும் ஆலைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் எண்ணெய்ப் பனை சட்டமொன்றும் இயற்றப்பட்டுள்ளது.*

[1998 ஏப்ரல் 7

*1997-98 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி '98 வரையிலான சாதனை பின்வருமாறு:*

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | திட்டத்திற்கு முந்திய நடவடிக்கைகள் (எக்டேரில்) | 3550 | 572 | 133.13 | 62.65 |
| 2. | பரப்பு விரிவாக்கம் (எக்.) | 2300 | 1022 | 92.35 | 30.73 |
| 3. | அலுவலர், விரிவாக்கப் பணியாளர் மற்றும் எண்ணெய்ப் பனை உற்பத்தியாளர் பயிற்சி | 720 | 360 | 6.66 | 3.33 |
| 4. | விளம்பரம் மற்றும் விரிவாக்கம் | - | - | 6.66 | 3.34 |
| 5. | இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்புச் செலவு (எக்.) | 3166 | 2138 | 89.99 | 60.82 |
| 6. | சொட்டுநீர்ப் பாசனம் (எக்.) | 150 | 150 | 37.50 | 37.50 |
| 7. | சம்பளம் | - | - | 16.52 | - |
| | **மொத்தம்** | -- | -- | 382.81 | 198.37 |

*1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## குட்டை X நெட்டை விரிய தென்னங்கன்றுகள் உற்பத்தித் திட்டம்

நவ்லாக்கில் உள்ள தென்னை நாற்றுப் பண்ணையில் குட்டை X நெட்டை மற்றும் நெட்டை X குட்டை வீரிய தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கென மத்திய அரசு சார்புத் திட்டமாக இத்திட்டம் மைய மாநில அரசு சம பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகின்றது.

1997-98 ஆம் ஆண்டு, ஆண்டு இலக்கான 1.0 இலட்சம் தென்னங்கன்றுக்களுக்கு, பிப்ரவரி '98 வரை 0.96 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.16.90 இலட்சத்தில் ரூ.13.50 இலட்சம்



1998 ஏப்ரல் 7]

செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்

வெளி மாநிலங்களில் வேளாண் திட்டங்களையும், கடைபிடிக்கப்படும் தொழில்நுட்பங்களையும் நேரில் கண்டு சாகுபடி முறைகளை அறிந்து கொள்ள 20 பேர் அடங்கிய குழுக்களாக நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று பார்வையிட போக்குவரத்து செலவினமாக ஒரு குழுவிற்கு ரூ.20,750/- மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

1997-98-ம் ஆண்டில் 20 பேர் அடங்கிய நான்கு குழுக்கள், உத்திரபிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு நெல், பயறுவகைகள், எண்ணெய்வித்து, பருத்தி பயிர்களின் சாகுபடி முறையை அறிய சென்று வந்துள்ளனர்.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மத்திய அரசு முழு நிதி உதவி பெறும் திட்டங்கள்
## நெல் மற்றும் சிறு தானிய சிறுதளைகள் திட்டம்

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களை விரைவாக விவசாயிகளிடையே பரவச் செய்யவும் வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்புத் தன்மையை தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் சிறுதளைப் பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. மத்திய அரசின் திட்டமான இத்திட்டத்தின் முழு செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதளைப் பைகள் விவசாயிகளுக்கு 90% மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

[1998 ஏப்ரல் 7

*1997-98 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி '98 வரையிலான சாதனை பின்வருமாறு:*

| இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நெல் | | | | |
| அறிவிக்கப்பட்ட இரகங்கள் | 100 | 85 | 0.03 | 0.03 |
| அறிவிக்கப்படாத இரகங்கள் | 40000 | 40078 | 10.00 | 9.99 |
| சிறுதானியங்கள் | 21850 | 17444 | 6.78 | 6.31 |
| மொத்தம் | 61950 | 57607 | 16.81 | 16.33 |

*1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் சிறுதானிய தீவிர சாகுபடி நிருபணம் அமைக்கும் திட்டம்

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்து புதிய தொழில்நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம் மக்காச்சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானிய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் நிருபணங்கள் அமைக்கப்படுகின்றன. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் நீலகிரி நீங்கலாக இதர மாவட்டங்களில் அரை முதல் ஒரு எக்டேர் பரப்பில் நிருபண தளைகள் அமைக்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட 267 எக்டேர் நிருபணங்களுக்கு பிப்ரவரி '98வரை 271 எக்டேரில் நிருபணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

*இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டில் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணைமுறை

தென்னை நெற்றுகள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னை மரங்களை அகற்றி புதிய தென்னங்கன்றுகளை நடுதல், உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் பல இரக தென்னங்கன்றுகளைப் பயிரிடுதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். *10 சதவீத ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்திற்கான நிதியுதவி, தென்னை அபிவிருத்தி வாரியம் மூலமாக வழங்கப்படுகின்றது.*



1998 ஏப்ரல் 7]

*இனவாரியாக 1997-98 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி '98 வரையிலான சாதனை பின்வருமாறு:*

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | முதிர்ந்த, நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல் (எண்) | 20000 | 19450 | 40.00 | 38.90 |
| 2. | புதிய தென்னங்கன்றுகள் நடவு செய்தல் (எண்) | 20000 | 19450 | 1.00 | 0.97 |
| 3. | உரமிடுதல் மற்றும் பயிர்பாதுகாப்பு (எண்) | 437500 | 400000 | 35.00 | 32.00 |
| 4. | பல இரக தென்னை சாகுபடி (எக்.) | 1500 | 1414 | 3.00 | 2.83 |
| | மொத்தம் | - | - | 79.00 | 74.70 |

*1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## தேசிய மானாவாரி நிலம் உர மேம்பாட்டுத் திட்டம்

*மத்திய அரசு நிதியுதவியுடன் தூத்துக்குடி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முழு செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது. இத்திட்டத்தில் சிறிய உரப்பைகள் விநியோகம், ஒருங்கிணைந்த பயிர்ச் சத்துக்கள் விநியோகத்திற்கான நிருபணம், திருந்திய கம்போஸ்ட் தயாரிப்பு நிருபணம் மற்றும் பசுந்தாள் உரவிதை உற்பத்திக்கு உதவி ஆகியவற்றிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

இனவாரியான 1997-98 ஆம் ஆண்டின் பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண். | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை | இலக்கு 1997-98 | பிப்ரவரி1998 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சிறிய உரப்பைகள் விநியோகம் (இ.எண்) | 1.00 | 1.00 | 2.25 | 2.25 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர்ச் சத்துக்கள் விநியோகத்திற்கான நிருபணம் (எண்) | 52 | 52 | 2.34 | 2.34 |
| 3. | திருந்திய கம்போஸ்ட் தயாரிப்பு நிருபணம் (எண்) | 50 | 50 | 2.25 | 2.25 |
| 4. | பசுந்தாள் உர விதை உற்பத்திக்கு உதவி (அ.வி.ப.) (குவிண்டால்) | 260 | 40 | 1.30 | 0.20 |
| | மொத்தம் | - | - | 8.14 | 7.04 |

## வேளாண் தட்பவெப்ப மண்டலத் திட்டமிடுவதற்கான திட்டம்

வேளாண்மை தட்பவெட்ப மண்டலத் திட்டம் (ஏ.சி.ஆர்.பி.) 1993-94 ஆம் ஆண்டிலிருந்து திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணிகண்டம் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழு கிராமங்களில் 1800 எக்டேர் பரப்பளவு கொண்ட 9.7 லிருந்து 10.8 க்கு இடைப்பட்ட களர் தன்மை வாய்ந்த நிலத்தை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.268.18 இலட்சங்களாகும். இதற்குரிய செலவுத் தொகை மத்திய மாநில அரசுகள் தங்களுக்கிடையே 50:50 விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் மண் சர்வே மற்றும் பரிசோதனை சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்து சர்வே மேற்கொள்ளுதல், திட்ட செயலாக்கத்தினால் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து மதிப்பிடுதல், திட்டம் பற்றிய விளம்பரம் மற்றும் பிரசாரம், வாய்க்கால்கள் மற்றும் குளங்கள் மேம்பாடு செய்தல், விவசாய இடுபொருட்கள் மற்றும்



அவற்றைப் பயன்படுத்தப்படும் முறை பற்றி மக்களிடையே பரப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 4954 மெட்ரிக் டன் எடையுள்ள ஜிப்சம், 118 மெட்ரிக் டன் ஜிங் சல்பேட், 182 மெ.டன் பசுந்தாள் உரங்களுக்குரிய விதைகள், 37.297 மெ.டன் கோ.43 ரக நெல் விதை வழங்குதல், 78528 பாக்கெட்டுகள் நுண்ணுயிர் உரங்கள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் 13 குளங்கள் ஆழப்படுத்துதல் மற்றும் வாய்க்கால் தூர் எடுத்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தனிநபர் பூமிகளில் வடிகால் அமைத்தும் கொடுக்கப்பட்டது: இந்தத் திட்டப்பணிகளின் பயனாக மண்வளம் மேம்பாடு அடைந்து களர் தன்மை மதிப்பு 9.7 லிருந்து 8.8க்கு குறைந்து எக்டேருக்கு சென்ற மகசூலைவிட 890 கிலோ நெல் உற்பத்தி கூடுதலாக பெறப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.268.18 இலட்ச ஒதுக்கீட்டில் இதுவரை ரூ.223.707 இலட்சம் செலவிடப்பட்டு மீதித் தொகை மார்ச் 1998-க்குள் செலவிடப்படும். இந்தத் திட்டம் மார்ச் '98 உடன் முடிவடைகிறது.

[1998 ஏப்ரல் 7

## அத்தியாயம் 3

### தோட்டக்கலை

தமிழ்நாட்டில் பலவகை தோட்டக்கலை பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் வணிக மலர்கள் பயிர் செய்வதற்கு உகந்த வெப்ப, மிதவெப்ப மற்றும் குளிர் மண்டலத் தட்ப வெப்ப நிலைகள் நிலவுகின்றன. தோட்டக்கலை பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்க தரமான நடவுச் செடிகள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை வழங்குவதோடு விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

1992-93 முதல் 1996-97 வரை பல்வேறு தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி நிலை அட்டவணையில் தரப்பட்டுள்ளது. 1996-97-ல் பழங்களின் மொத்த பரப்பு 1.89 இலட்சம் எக்டேர்களாகவும், காய்கறிகள் 1.79 இலட்சம் எக்டேர்களாகவும், நறுமணப்பயிர்கள் 1.68 இலட்சம் எக்டேர்களாகவும், மலைப்பயிர்கள் 1.80 இலட்சம் எக்டேர்களாகவும் மற்றும் மலர் வகைகள் 0.17 இலட்சம் எக்டேர்களாகவும் இருந்தது. 1996-97-ல் பழங்களின் உற்பத்தி 47.29 இலட்சம் டன்களாகவும், காய்கறிகளின் உற்பத்தி 53.09 இலட்சம் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.54 இலட்சம் டன்களாகவும், மலைப்பயிர்கள் 7.13 இலட்சம் டன்களாகவும் மற்றும் மலர் வகைகளின் உற்பத்தி 0.99 இலட்சம் டன்களாகவும் (உத்தேசம்) இருந்தது.

1997-98 ஆம் ஆண்டு பழங்களின் உற்பத்தி 48.80 இலட்சம் டன்களாகவும், காய்கறிகள் 53.63 இலட்சம் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.59 இலட்சம் டன்களாகவும், மலைப் பயிர்கள் 7.25 இலட்சம் டன்களாகவும் மற்றும் மலர் வகைகளின் உற்பத்தி 1.04 இலட்சம் டன்களாகவும் அதிகரிக்கும். 1998-99-ம் ஆண்டில் உற்பத்தி முன்மதிப்பீட்டாய்வின்படி பழங்களின் உற்பத்தி 51.06 இலட்சம் டன்களாகவும், காய்கறிகள் 54.44 இலட்சம் டன்களாகவும், மலைப்பயிர்கள் 7.44 இலட்சம் டன்களாகவும் நறுமணப் பயிர்கள் 3.72 இலட்சம் டன்களாகவும், மலர்கள் 1.12 இலட்சம் டன்களாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 7]

### 1998-99 ஆம் ஆண்டிற்கான முக்கிய கொள்கைகள்

1. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பிற்கு வழக்கம்போல் தொடர்ந்து முக்கியத்துவம் தரப்படும்.

2. தரமான நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

3. இரசாயன உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளுக்குப் பதிலாக உயிர் உரங்கள், தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் ஊக்குவிக்கப்படும்.

4. உயர்நுட்ப தோட்டக்கலை தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்படும்.

5. ஏற்றுமதிக்கு உகந்த தோட்டக்கலைப் பயிர்களைப் பரந்த அளவில் சாகுபடி செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

### மாநிலத் திட்டங்கள்

#### 1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

*அ. பரப்பு விரிவாக்கம்*

இத்திட்டத்தின்கீழ் தரமான பழச்செடிகள், நறுமணப் பயிர்செடிகள், மலர்ச்செடிகள், ஏற்றுமதிக்கு உகந்த தோட்டக்கலைப் பயிர் செடிகள், காய்கறி மற்றும் மலர் விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் தரமான நடவுச் செடிகள் மற்றும் விதைகள் விநியோகம் செய்ய ரூ.193.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998 முடிய 23.087 எக்டேர் பரப்பு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டு ரூ.186.88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இயற்கை வேளாண்மையின்கீழ் உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதற்காக ரூ.13.13 இலட்சம் 1997-98 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. பிப்ரவரி 98 முடிய ரூ.13.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் பரப்பு விரிவாக்கம் மற்றும் இயற்கை வேளாண் திட்டங்களுக்கு ரூ.440.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி 32,000 எக்டேர் பரப்பு பல்வகை தோட்டக்கலைப் பயிர்களின்கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நடவுச்செடிகள், விதைகள், உயிர் உரங்கள் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மானியத்தில் விநியோகிக்கப்படும்.

### ஆ. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம்-சிறப்பு திட்டம்

இத்திட்டம் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்கென நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான செடிகள், காய்கறி விதைகள், தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உயிர் உரங்கள் மானிய விலையில் தாழ்த்தப்பட்ட இன விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. நடப்பு 1997-98ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 3,686 எக்டேர் பயனடைய ரூ.9.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998 முடிய 3,686 எக்டேர் பரப்பு பழங்கள், காய்கறிகள் மற்றும் இயற்கை வேளாண்மை சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டு ரூ.9.01 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1998-99ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 3801 எக்டேர் பரப்பில் பழங்கள், காய்கறிகள் மற்றும் இயற்கை வேளாண்மை சாகுபடியின்கீழ் கொண்டு வர ரூ. 11.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### இ. தோட்டக்கலைப் பயிற்சி

மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஆண்டுதோறும் நாற்பது மாணவர்களுக்குத் தோட்டக்கலையில் ஈராண்டு பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. நடப்பு 1997-98 ஆம் ஆண்டில் 39 மாணவர்கள் இப்பட்டயப் படிப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குடுமியான்மலையிலுள்ள பயிற்சி நிலையம் இத்துறையில் பணியாற்றும் உதவி வேளாண் அலுவலர்கள்/வயல் விளக்க அலுவலர்களுக்கு தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியில் உயரிய தொழில்நுட்பங்கள் குறித்து பணியிடை பயிற்சி அளித்து வருகிறது. பிப்ரவரி 1998 முடிய ரூ.0.97 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டு 370 துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் 500 உதவி வேளாண் அலுவலர்கள்/வயல் விளக்க அலுவலர்களுக்கு பயிற்சி ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.



### ஈ. அரசு தோட்டக்கலைப் பண்ணை

தமிழகத்தில் 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. இவற்றின் மொத்த பரப்பு 2598 எக்டேர்களாகும். இப்பண்ணைகளில் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. 1997-98 ஆம் ஆண்டு இப்பண்ணைகளின் பராமரிப்பு மற்றும் செடிகள் உற்பத்திக்கு ரூ.350.253 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிப்ரவரி 1998 முடிய 125.11 இலட்சம் செடிகள் ரூ.326.11 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் ரூ.350.00 இலட்சம் செலவில் தோட்டக்கலை துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படும்.

## 2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் சேலம் மாவட்டத்திலுள்ள கல்ராயன்மலை, கொல்லி மலை, சேர்வராயன்மலை. அருநூற்றுமலை மற்றும் பச்சை மலையிலும். திருச்சி மாவட்டத்திலுள்ள பச்ச மலையிலும், தருமபுரி மாவட்டம் சித்தேரி மலையிலும், வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையிலும் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையிலும் வசிக்கும் மலைவாழ் மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் அமைப்பதற்கு 100 சத மானியத்தில் ரூ.1,750 மதிப்புள்ள பல்லாண்டு பழப்பயிர்கள் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் பழங்குடி விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பழங்குடி விவசாயிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு இம்மலைப்பகுதிகளில் அமைந்துள்ள நான்கு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் தரமான செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் இப்பண்ணைகள் மலைவாழ் விவசாயிகளுக்கு மாதிரிப் பண்ணைகளாகவும் விளங்குகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் ஆண்டு இலக்கான 3,000 ஏக்கர் பரப்பில் பழத்தோட்டம் அமைக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டு பிப்ரவரி 1998 வரை ரூ.114.22 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.128.24 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

[1998 ஏப்ரல் 7

## 3. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மண் அரிப்பைத் தடுக்கும் முகமாகவும், இயற்கை சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள் உள்ளடக்கிய கோயமுத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குத் தரமான நடவுப் பொருட்கள், காய்கறி விதைகள், கருவிகள் மற்றும் இதர இடு பொருட்கள் சாகுபடி மேற்கொள்ளும்பொருட்டு 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு ரூ.79.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 1998 முடிய 1896 எக்டேர் பரப்பு பழங்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டு ரூ.75.15 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 1350 எக்டேர் பரப்பு பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் 450 எக்டேர் பரப்பு காய்கறிப் பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டு வர ரூ.87.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கவும். இயற்கை சூழலைப் பாதுகாத்திட ஏதுவாக ஆண்டு பயிர்கள் சாகுபடியிலிருந்து பல்லாண்டு பயிர்களான தேயிலை, காபி, பழப்பயிர்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் இதர பொருளாதார பயிர்கள் சாகுபடிக்கு மாற்றும் நோக்கத்துடன் செயலாக்கப்படுகின்றது. விவசாயிகள் 10 சதவிகிதத்திற்கும் குறைவான சரிவுகளில் காய்கறிகள் பயிர் செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் உற்பத்திச் செய்யப்பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.240.713 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998 முடிய 144 எக்டேர் பரப்பு தேயிலை நடவின்கீழ் கூடுதலாகக் கொண்டு வரப்பட்டது. இது தவிர 10 டன் காய்கறி விதைகள், 31,800 எண்கள் காபி, பழச்செடிகள் நறுமணப் பயிர்கள் மற்றும் இதர பொருளாதாரச் செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1998 முடிய ரூ.220.39



1998 ஏப்ரல் 7]

இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் ரூ.254.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. மாவில் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்புக்கென செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கும் திட்டம்

மா சாகுபடியில் உரமிடுவதாலும், தகுந்த நேரத்தில் பயிர்ப் பாதுகாப்பு செய்வதாலும் ஏற்படும் நன்மைகளை விவசாயிகளுக்கு விளக்கும் நோக்கத்துடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மா சாகுபடியில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு விவசாயிகளின் நிலங்களில் உரமிடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு பற்றிய விவரங்களை விவசாயிகள் கற்றுணர செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு ரூ.60 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு பாத்தி ஒன்றிற்கு ரூ.2,000/- மதிப்புள்ள உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் தருமபுரி, வேலூர், சேலம், மதுரை, திருவள்ளூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1998 முடிய ரூ.18.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99ம் ஆண்டிலும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 6. திண்டுக்கல் மாவட்டத்தில் மலைவாழை சாகுபடியினை புத்துயிர்ப்பு செய்யும் திட்டம்

கீழ்பழனிமலைப் பகுதியில் பாரம்பரியம் மிக்க மலைவாழை சாகுபடியினைப் புத்துயிர்ப்பு செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. "முடிக்கொத்து" எனப்படும் நச்சுயுரி நோயினால் அழிந்த மலைவாழைச் சாகுபடியினை மீண்டும் நன்முறையில் சாகுபடிக்குக் கொணருவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. முதலாண்டில் இத்திட்டம் செயல்படுத்திட வேண்டிய உரிய பகுதிகள் சர்வே செய்யப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். மேலும் முடிக்கொத்து நோயின் காரணியை அழிக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். இப்பணிக்கென பிப்ரவரி 1998 முடிய 950 எக்டேர் நிலம் சர்வே செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நச்சுயுரி நோய் தாக்காத தாய்க்கிழங்குகள் உயர் தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு தேர்வு செய்யப்படும். பின்னர் நச்சுயுரி இல்லாத இக்கிழங்குகள் திசு வளர்ப்பு முறையில் இனவிருத்தி செய்யப்படும். திசு வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு செடிகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவு செய்யப்பட்டு சீரிய பாதுகாப்பு முறையில் வாழைக்கன்றுகளாக உற்பத்தி செய்யப்படும். 1998-99 ஆம் ஆண்டு 200 எக்டேர் பரப்பில் மலைவாழை சாகுபடி ரூ.16.95 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏற்படும் தடைகளை நீக்குவதற்கான வழிமுறைகளைத் தெரிவிக்கவும், பிற பிரச்சினைகளை ஆராய்ந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முறைகளை வகுக்கவும் வேண்டி ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாட்டில் மலர் வளர்ச்சி மேம்பாடு

மலர்கள் வளர்ப்பினை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்து மலர்கள் மற்றும் அதன் தொடர்பான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான வணிக ரீதியாக மலர்கள் வளர்ப்பது குறித்த கொள்கையை அரசு வெளியிட்டது. இக்கொள்கை மலர்களைக் குளிர்பதன வசதியுள்ள அறைகளில் பக்குவப்படுத்தவும், அவைகளைத் தரம்பிரிக்கவும், அவற்றை உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விற்பனை மையங்களில் விற்பனை செய்யவும் தேவையான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கான உதவியை அளிக்க வகுக்கப்பட்டுள்ளது.

மலர்களின் வளர்ச்சி மேம்பாட்டுக்காக அரசு கீழ்க்காணும் சலுகைகளை வழங்கியுள்ளது:

(1) மலர்ச்செடிகளை வளர்க்கும் பிரிவுகளுக்கு, 1978 ஆம் ஆண்டைய தமிழ்நாட்டில் மின்சாரம் வழங்குவதற்கான கட்டண விகிதத்தைத் திருத்தி அமைக்கும் சட்டத்தின்கீழ் குறைந்த மின் அழுத்தக் கட்டணம், பிரிவு-IIIA-ன்படி மின்கட்டணம் வசூலிக்கப்படும். இச்சலுகை 10 குதிரைத் திறனுக்கு உட்பட்டுள்ள அனைத்து மின் இணைப்புக்களுக்கு வழங்கப்படும். மேலும், புதிதாக மின்சார இணைப்பு வேண்டி மலர்செடிகள் வளர்க்கும் பிரிவுகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு மின்வாரிய விதிகளுக்கு உட்பட்டு உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.



(2) நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டில் 20 சதவீதம் வரை ரூ.20 இலட்சத்துக்குட்பட்டு மலர்ச்செடிகள் வளர்ப்புப் பிரிவுகளுக்கு மூலதன மானியம் வழங்கப்படும். ஏற்கெனவே, வரையறுக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பட்டியலில் பின்வருவன சேர்த்துக்கொள்ளப்படுகின்றன:-

(அ) பசுமைக்குடில் அமைப்புகள்

(ஆ) பாசனம் மற்றும் உரநீர்க்கலப்புக் கருவி

(இ) குளிர்பதன அறை, தரம் பிரிப்பு அறை மற்றும் நடமாடும் குளிப்பதன வாகன கருவிகள்

3) மூலப்பொருட்கள் வாங்கவும், இடுபொருட்கள் மற்றும் மலர்ச்செடிகள் வளர்க்கும் பிரிவுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விற்பனை வரியில் சலுகையாக 3 சதவீத வரி விதிக்கப்படும்.

4) மலர்ச்செடிகள் வளர்க்கும் பிரிவுகளுக்குத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெற ஓர் ஆண்டுக்கு ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) என்று வசூலிக்கப்படும் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

மலர்ச்செடிகள் வளர்க்கும் பிரிவுகளுக்கு மூலதன மானியத்தை விநியோகம் செய்ய அரசு, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தையும், தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தையும் நியமித்துள்ளது. இதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரால் தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகங்களுக்குப் பெற்று வழங்கப்படும்.

## மைய அரசு திட்டங்கள்

### 1. ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் முந்திரி பயிரின் பரப்பினை விரிவாக்குவதற்கும், முதிர்வடைந்துள்ள முந்திரி தோட்டங்களைப் புத்துயிர் ஊட்டுவதன் மூலமும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலமும் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்திடவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாகுபடியாளர்களின் நலனுக்காக உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை மேம்படுத்தும்பொருட்டு செயல்விளக்கத் திடல்கள்

[1998 ஏப்ரல் 7

அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் விருத்தாசலம்-1, விருத்தாசலம்-2 போன்ற உயரிய இரக முந்திரி ஒட்டுக்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.148.375 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய ரூ.119.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

**2. ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழகத்தில் நறுமணப் பயிர்கள் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கும்பொருட்டு தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகள் சாகுபடியாளர்களுக்கு வழங்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உயரிய சாகுபடி தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், காலத்தே பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல்பற்றி சாகுபடியாளர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படுகின்றன. 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.136.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகின்றது. பிப்ரவரி 1998 முடிய ரூ.107.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

**3. ஒருங்கிணைந்த வெப்ப, குளிர் மற்றும் வறட்சி மண்டல பழ அபிவிருத்தித் திட்டம்**

உயர் மகசூலைத் தரும் தரமான நடவுச் செடிகள் கிடைக்கச் செய்வதன் மூலமும், முதிர்ந்த பழத்தோட்டங்களின் உற்பத்தியை அதிகரிக்க இடுபொருட்கள் வழங்குதலின் மூலமும், பழப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பழப்பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பழப்பயிர்களின்கீழ் கூடுதல் பரப்பு கொண்டு வரப்படுகிறது. செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல் மூலம் விவசாயிகள் நவீன தொழில்நுட்ப முறைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கான 1997-98 ஆம் ஆண்டு ரூ.80.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998 முடிய ரூ.67.59 இலட்சம் இத்திட்டத்தில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99 ஆம்



1998 ஏப்ரல் 7]

ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

**4. வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்**

வணிக முக்கியத்துவம் வாய்ந்த மலர்களின் சாகுபடியை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் ஒரு திடலுக்கு ரூ.6,000 மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டு செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன.

விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக செடிகள் உற்பத்திக்காகவும் மற்றும் செயல் விளக்கத்திற்குத் தேவையான செடிகளை உற்பத்தி செய்யவும் "மாதிரி மலர் மையம்" ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய ரூ.14.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99ஆம் ஆண்டில் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

**5. கோகோ அபிவிருத்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் கோகோ பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும்பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் உயர் விளைச்சல் இரக விதையில்லா இனப் பெருக்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நடவுச் செடிகளைப் பயன்படுத்தி செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. பரப்பு விரிவாக்கத்திற்கென நடவுச் செடிகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் 1997-98ஆம் ஆண்டு ரூ.1.45 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய ரூபாய் 1.45 இலட்சம் செலவினமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

**6. வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் வேர் மற்றும் கிழங்குப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் வீரிய விதைகள், உரங்கள் மற்றும்

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் உள்ளடங்கிய ரூ.200 மதிப்புள்ள சிறுதளைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. அவர்களிடமிருந்து ரூ.10 மட்டும் அடையாளத் தொகையாக வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டம் 1997-98ஆம் ஆண்டு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய ரூ.1.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 500 சிறுதளைகள் விநியோகிக்கப்பட்டு இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

### 7. தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் உபயோகம்

**பசுமைக்குடில்கள்**

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தை பிரபலப்படுத்தும்பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்த அளவு பசுமைக்குடில் அமைப்பதற்கு ஒரு அலகிற்கு 50 சத மானியமாக ரூ.31,250 அதிகபட்சத் தொகையாகவும், நடுத்தர பசுமைக்குடில் அமைப்பதற்கு 40 சத மானியமாக உயர்ந்தபட்சமாக ரூ.1.00 இலட்சமும் வழங்கப்படுகிறது.

1997-98 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.10.06 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998-99ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

### 8. காளான் வளர்ப்பு

தமிழகத்தில் காளான் உற்பத்தி மற்றும் அதன் தரத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சாகுபடியாளர்களுக்குக் காளான் சாகுபடி குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது. 1997-98ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய 200 விவசாயிகளுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு செலவினம் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99ம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.



### 9. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் முக்கிய மூலிகை மற்றும் நறுமணப் பயிர்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல் போன்ற நோக்கங்களைக்கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் செயல்விளக்க மற்றும் விதை உற்பத்தி திடல் விவசாயிகளின் வயல்களில் அமைக்க ரூ.1,500 மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1998 முடிய இத்திட்ட இலக்கான 70 செயல்விளக்கப் பாத்திகள் ரூ.1.05 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு முழு சாதனை அடையப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

### 10. காய்கறி அபிவிருத்தித் திட்டம்

உயர்விளைச்சல்/வீரிய காய்கறிகளை பிரபலப்படுத்தும்பொருட்டு இத்திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு ரூ.9.82 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் அடிப்படை மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்படும். சாகுபடியாளர்களுக்குச் சிறுதளைப் பைகள் வழங்கப்படும். 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டம் மைய அரசின் நிர்வாக ஒப்புதலைப் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

## பகுதி 2 திட்டங்கள்

பகுதி 2 திட்டங்களின்கீழ் அரசுத் தோட்டக்கலை பண்ணைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் நடவுச் செடிகளின் தரம் மற்றும் எண்ணிக்கை உயர்த்தப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு ரூ.40.00 இலட்சம் 5 அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட வழங்கப்பட்டது. பிப்ரவரி 1998 வரையில் ரூ.37.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 7

## அட்டவணை 3.1

### தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

பரப்பு-எக்டேரில்
உற்பத்தி-டன்களில்
உற்பத்தித் திறன்-டன்/எக்டேர்

| வ. எண். | விவரம் | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 (உத்தேசம்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பழங்கள் | | | | | |
| | பரப்பு | 163296 | 179596 | 185587 | 188379 | 189195 |
| | உற்பத்தி | 2966717 | 3620646 | 4818576 | 4615286 | 4729875 |
| | உற்பத்தித்திறன் | 18.17 | 20.16 | 25.96 | 24.50 | 25.00 |
| 2. | காய்கறிகள் | | | | | |
| | பரப்பு | 150824 | 170922 | 174818 | 177483 | 179313 |
| | உற்பத்தி | 3593253 | 4516001 | 4397932 | 4989047 | 5309457 |
| | உற்பத்தித்திறன் | 23.80 | 26.40 | 25.16 | 28.11 | 29.61 |
| 3. | நறுமணப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 175001 | 177806 | 165522 | 167177 | 168849 |
| | உற்பத்தி | 207061 | 271735 | 272888 | 334354 | 354583 |
| | உற்பத்தித்திறன் | 1.18 | 1.53 | 1.65 | 2.00 | 2.10 |
| 4. | மலைப்பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 175995 | 177764 | 177098 | 178859 | 180647 |
| | உற்பத்தி | 570380 | 591066 | 582328 | 670721 | 713556 |
| | உற்பத்தித்திறன் | 3.24 | 3.33 | 3.29 | 3.75 | 3.95 |
| 5. | மலர்கள் | | | | | |
| | பரப்பு | 11742 | 12340 | 14194 | 15613 | 17175 |
| | உற்பத்தி | 58378 | 61704 | 70970 | 85872 | 99615 |
| | உற்பத்தித்திறன் | 4.97 | 5.00 | 5.00 | 5.50 | 5.80 |



1998 ஏப்ரல் 7]

## அட்டவணை 3.2

### மாநில தோட்டக்கலைப் பண்ணைகள்

| வ.எண் (1) | இடம் (2) | மாவட்டம் (3) |
|---|---|---|
| 1. | ஆத்தூர் | காஞ்சிபுரம் |
| 2. | விச்சந்தாங்கல் | காஞ்சிபுரம் |
| 3. | மேல்கதிர்பூர் | காஞ்சிபுரம் |
| 4. | மேல்ஒட்டிவாக்கம் | காஞ்சிபுரம் |
| 5. | பிச்சிவாக்கம் | திருவள்ளூர் |
| 6. | மாதவரம் | திருவள்ளூர் |
| 7. | நெய்வேலி | கடலூர் |
| 8. | விருத்தாசலம் | கடலூர் |
| 9. | தகரக்குப்பம் | வேலூர் |
| 10. | கூடப்பட்டு | வேலூர் |
| 11. | நவ்லாக் | வேலூர் |
| 12. | செம்மேடு | நாமக்கல் |
| 13. | படசோலை | சேலம் |
| 14. | ஏற்காடு | சேலம் |
| 15. | கருமந்துறை | சேலம் |
| 16. | மணியார்குன்றம் | சேலம் |
| 17. | கருமந்துறை | சேலம் |
| 18. | கருமந்துறை | சேலம் |
| 19. | முள்ளுவாடி | சேலம் |
| 20. | சிறுமலை | சேலம் |
| 21. | திம்மாபுரம் | தர்மபுரி |
| 22. | ஜீனூர் | தர்மபுரி |
| 23. | ஆனைக்கட்டி | கோயம்புத்தூர் |
| 24. | கல்லார் | கோயம்புத்தூர் |
| 25. | முதலைப்பட்டி | கரூர் |
| 26. | குடுமியான்மலை | புதுக்கோட்டை |
| 27. | வல்லத்திராக்கோட்டை | புதுக்கோட்டை |

[1998 ஏப்ரல் 7

| வ.எண் (1) | இடம் (2) | மாவட்டம் (3) |
|---|---|---|
| 28. | நாட்டுமங்கலம் | புதுக்கோட்டை |
| 29. | ஆடுதுறை | தஞ்சாவூர் |
| 30. | மருங்குளம் | தஞ்சாவூர் |
| 31. | பெரியகுளம் | தேனி |
| 32. | கொடைக்கானல் | திண்டுக்கல் |
| 33. | பிரையன்ட் பூங்கா, கொடைக்கானல் | திண்டுக்கல் |
| 34. | தாண்டிக்குடி | திண்டுக்கல் |
| 35. | சிறுமலை | திண்டுக்கல் |
| 36. | ரெட்டியார்சத்திரம் | திண்டுக்கல் |
| 37. | பூவாணி | விருதுநகர் |
| 38. | திருவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 39. | தேவக்கோட்டை | சிவகங்கை |
| 40. | நேமம் | சிவகங்கை |
| 41. | குற்றாலம் | திருநெல்வேலி |
| 42. | பர்லியார் | நீலகிரி |
| 43. | காட்டேரி | நீலகிரி |
| 44. | குன்னூர் | நீலகிரி |
| 45. | குன்னூர் | நீலகிரி |
| 46. | சிம்ஸ் பூங்கா குன்னூர் | நீலகிரி |
| 47. | தொட்டபெட்டா | நீலகிரி |
| 48. | தும்மனட்டி | நீலகிரி |
| 49. | விஜயநகரம் | நீலகிரி |
| 50. | அரசு தாவரவியல் பூங்கா உதகை | நீலகிரி |
| 51. | நஞ்சநாடு | நீலகிரி |
| 52. | தேவாலா | நீலகிரி |
| 53. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 54. | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி |



1998 ஏப்ரல் 7]

## அத்தியாயம் 4

### வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை

மாநிலத்தின் மண் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், பராமரிக்கவும், வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்க்கண்ட பணிகளில் உழவர்களுக்கு உதவி வருகிறது :

அ. மண் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாத்தல்

ஆ. வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்தி நிரந்தரமாக பயன்தரும் மாற்று நில உபயோக முறைகளைப் புகுத்துதல்.

இ. நிலத்தடி நீர்வள ஆதாரத்தை மேம்படுத்தி பாசன வளங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

ஈ. தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மற்றும் தென்னைக்கும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை நிறுவித் தேவையான அளவு நீரை சிக்கன முறையில் உபயோகிக்க வழி வகுத்தல்

உ. ஏரி மற்றும் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்

ஊ. வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்வதற்கு பண்ணைக் கருவிகளை வழங்குதல் மற்றும் நிலத்தைச் சீர்திருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், கோவில் குளங்களைப் புதுப்பித்தல், கிராமக் குளம், குட்டைகளைச் சீரமைத்தல் மற்றும் சிறுபாசனக் குளங்களை நிலைப்படுத்துதல் போன்ற பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொள்கிறது.

### 2. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)

*2.1* மானாவாரி நிலப்பகுதி நிலங்கள் அதிக நீர் அரிப்பினால் பாழ்படுகின்றன. மண் அரிப்பினைத் தடுக்கவும், நிலங்களை மேம்படுத்தவும், நீர்வடிப் பகுதி அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாநிலம் 34

நதிப்படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவைகள் ஆறுகள் மற்றும் பெரிய ஓடைகள் வாரியாக நீர்வடிப் பகுதிகள் மற்றும் துணை நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. துணை நீர்வடிப் பகுதிகள், சிறிய ஆறுகள், பெரிய மற்றும் கிளை ஓடைகள் வாரியாக சிறிய நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சிறிய நீர்வடிப் பகுதிகளிலே செயல்படுத்தப்படும் மண்வளப் பாதுகாப்பு பணிகளின் கீழ் சம உயர வரப்பு அமைத்தல், காடு வளர்த்தல், நிலம் சமன் செய்தல், குழாய் பதித்தல், மாற்று வடிகால் அமைத்தல், தடுப்பு அணைகள் கட்டுதல், ஓடைகள் பராமரிப்பு போன்ற பணிகள் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. 1997-98-ம் ஆண்டில் 80,000 எக்டேர் பரப்பில் ரூ. 1295.37 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பிப்ரவரி 1998 முடிய ரூ. 1170.54 இலட்சம் செலவில் 79,989 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலில் பணிச்செலவினம் அரசினால் ஏற்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சமதவணைகளில் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இப்பணிக்கு விவசாயிகளுக்கு 25 சதவித மானியம் வழங்கப்படுகிறது.

தரிசு நிலங்கள் மற்றும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டிற்கு டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் டானிடா நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளின் அணுகுமுறை, செயல்பாடு மற்றும் மேற்படி பணிகளில் விவசாயிகளின் ஈடுபாடு ஆகியவற்றைப் பாராட்டியுள்ளது. விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுப் பணிகளின் அடிப்படையில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு பணிகள் சீரமைக்கப்பட உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 1,514.95 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.2 பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)

பழங்குடி மக்களின் நிலங்களில் மண்அரிப்பைத் தடுத்து அந்த நிலங்களின் விளை திறனை உயர்த்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருச்சி



மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒன்பது பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பல துறைகள் இணைந்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்கின்றன. நிலம் சமன் செய்தல், சமஉயர கற்சுவர் அமைத்தல், தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் அரசின் செலவில் முழு மானியத்துடன் இந்தப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பழங்குடி மக்களின் நிலங்களைப் பயிர் செய்ய ஏதுவான விளைநிலங்களாக மாற்றி அமைத்து, பழங்குடி மக்களின் வேலை வாய்ப்பினைப் பெருக்குவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 70.00 இலட்சம் செலவில் 580 எக்டேர் பரப்பில் பணி செயலாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1998 முடிய ரூ. 64.36 இலட்சம் செலவில் 607 எக்டேர் பரப்பில் பணி செயலாக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிட்டுள்ள ஏழு மாவட்டங்களிலும் ரூ.80.00 இலட்சம் செலவில் 580 எக்டர் பரப்பில் பணி செயலாக்கப்பட உள்ளது.

## 2.3 மலைப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

மலைப்பகுதிகளில் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டை முறைப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :

### அ. நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் (மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

அகில இந்திய மண் மற்றும் நில உபயோக அளவை வாரியத்தால் கண்டறியப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டு அகில இந்திய மண் மற்றும் நில உபயோக அளவை வாரியத்தினால் நீர்வடிப் பகுதிகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன. குந்தா மற்றும் கீழ்பவானி நீர்வடிப் பகுதிகளில் உள்ள 176 நீர்வடிப் பகுதிகளில், 58 நீர்வடிப் பகுதிகள் அதிகமண் அரிமானம் எதிர்நோக்குபவையாகவும், அவற்றிற்கு மண்வளப் பாதுகாப்புப் பணிகள் தேவை எனவும் கண்டறியப்பட்டு, முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன. பணி செயலாக்கப்படும் இடங்கள் நிலத்தின் மழை அளவு, மண்ணின் தன்மை, மண் அரிமானம் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன. 1996-97 முடிய 47 நீர்வடிப்

பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 9 நீர்வடிப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 653.50 இலட்சம் செலவில் 8,518 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 1998 முடிய ரூ. 554.27 இலட்சம் செலவில் 8,518 எக்டேர் பரப்பில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 617.27 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கீழ்பவானி நீர்பிடிப்புப் பகுதியை மறு அளவை செய்வது தொடர்பான தமிழ்நாடு அரசின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மறு அளவை செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீர்வடிப் பகுதிகள் பணிச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இப்பணிச்செலவினத்தில் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டு மீதம் 50 விழுக்காடு கடனாக கருதப்படுகிறது. கடன் தொகை, பணி முடிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து 10 ஆண்டு சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

### ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி கூடுதல் மழை பெறுவதால் அதிக மண் அரிமானத்தை எதிர்கொள்கிறது. முறையற்ற நில நிர்வாகம் நிலங்களின் தன்மைக்கு கேடு விளைவிக்கின்றது. ஒருங்கிணைந்த நுண்ணிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டின் அடிப்படையில் சுற்றுப்புற சூழலுக்கு ஊறு விளைவிக்காவண்ணம் மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுப்புற சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி விஞ்ஞான முறையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் 7,645 எக்டேர் பரப்பில் ரூ.363.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதில் பிப்ரவரி 1998 முடிய ரூ. 320.45 இலட்சம் செலவில் 7,637 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1998-99-ஆம் ஆண்டில் இத்திட்டச் செயல்பாட்டிற்கு ரூ. 363.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட உள்ளது. பணிச் செலவில் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 50 விழுக்காடு கடனாகக் கருதப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து நிர்ணயிக்கப்பட்ட வட்டியுடன் 10 ஆண்டு சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது.



### இ. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் பல வளர்ச்சிப் பணிகளை அங்கமாகக் கொண்ட திட்டமாகும். இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மிக முக்கியமானதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிலச் சரிவுகளைத் தடுப்பது மிக முக்கியப் பணியாக இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. புவியியல் தொழில் நுட்பக் குழு கண்டறிந்த இடங்களில் நிலச் சரிவினைத் தடுக்கும் பணி வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு ரூ. 255.86 இலட்சம் செலவில், 2,120 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், பிப்ரவரி 1998 முடிய ரூ. 232.39 இலட்சம் செலவில் 2,201 எக்டேர் பரப்பில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 125 முக்கியமான இடங்களில் ரூ. 110.00 இலட்சம் செலவில் நிலச்சரிவினைத் தடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 428 இலட்சம் செலவில் 2,370 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நிலச்சரிவுப் பணிக்குரிய செலவினம் 100 விழுக்காடு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிகளில் 50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும் வழங்கப்படுகிறது. கடன் தொகை இரண்டு ஆண்டுகள் கழித்து நிர்ணயிக்கப்பட்ட வட்டியுடன் 10 ஆண்டு சம தவணைகளில் விவசாயிகளிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

## 3. தொலை உணர்வுப் பிரிவு

### 3.1 மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்கு நிலை அறிக்கை தயாரித்தல்

வேளாண்மைப் பொறியியல் துறையால் 1985-ஆம் ஆண்டிலிருந்து தொலை உணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மத்திய திட்டக் குழுவினால் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பார்சன் பள்ளத்தாக்கு, குந்தா மற்றும் வைகை அணை நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நிலை அறிக்கை தயாரிக்க தொலை உணர்வுப்பிரிவு துவங்கப்பட்டது.

மேற்கண்ட பணி முடிவுற்றதும், தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியின் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி

மலைப் பகுதியில் 1000 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் 1,500 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

விண்வெளிக்கலம் மூலம் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மண் அரிமானம், நில உபயோகம், புவியியல் மற்றும் வடிகால் போன்ற தகவல்கள் பெற நிலை அறிக்கைகள் தயாரிக்கப் படுகின்றன. நிலை அறிக்கைகளின் அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள முன்னுரிமை நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பகுதியின் பரப்பளவான 24,000 சதுர கிலோ மீட்டரில் இதுவரை 18,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலுவையில் உள்ள பரப்பளவிற்கு நிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

### 3.2 தமிழ்நாட்டின் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு மற்றும் மண்ணின் வரைப்படத் தொகுப்பு தயாரித்தல்

இத்திட்டம் மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் ஒரு பிரிவான மாநில நில உபயோக வாரியம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

அ. நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு :

ஜூலை '95-இல் மாநிலத் திட்டக் குழுவினால் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்க ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் வரைபடத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஆ. மண்ணின் வரைபடத் தொகுப்பு :

மத்திய அரசின் வேளாண் அமைச்சகம் ரூ.4.50 இலட்சத்தைத் தமிழ்நாட்டு நீர்வடிப் பகுதிகளில் மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்க நிதி ஒதுக்கியுள்ளது. தமிழ்நாடு மாநில திட்டக்குழு, மத்திய வேளாண் அமைச்சகத்தை அதன் ஆணையை மறு ஒப்பளிப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டது. மறு ஒப்பளிப்பு ஆணை தற்பொழுது பெறப்பட்டுள்ளது.



### 4. சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் (மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

தமிழ்நாட்டின் பாசனப் பரப்பில் 47 விழுக்காடு கிணற்றின் மூலமாக பயன்பெறுகிறது. கிணற்றுப் பாசனத்தில் நீரைக்கொண்டு செல்லுவதிலும், உரிய பயிர்களுக்கு அளிப்பதிலும் நீர் விரயம் ஏற்படுகிறது. கிணற்றுப் பாசனத்தால் பயன்பெறும் பகுதிகளில், சிக்கனப் பாசன முறையை அறிமுகப்படுத்தி பாசனநீர் உபயோகிப்புத் திறனை அதிகரிக்கலாம். சொட்டுநீர்ப் பாசனம் பண்ணை அளவில் பின்பற்றக்கூடிய நுண்ணிய நீர்ப்பாசன முறையாகும். இம்முறையில் பயிருக்குத் தேவையான பாசன நீர் சரியான அளவில் வேர்ப் பகுதியிலேயே வழங்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசன முறையில் நீர் சேமிப்பும், அதிக உற்பத்தியும் உறுதி செய்யப்படுகிறது. இது மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். தோட்டக்கலைப் பயிர்களுக்குப் பிளாஸ்டிக் உபயோகித்து, சொட்டு நீர்ப்பாசன வசதி அமைக்கும் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிதி உதவியுடன் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 90 விழுக்காடு மானியம் மத்திய அரசினாலும், மீதி 10 விழுக்காடு மாநில அரசினாலும் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பணிக்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்கு ரூ. 1,247.95 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. சிறு, மிகச்சிறு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு, ஒரு எக்டேருக்கு பணிச் செலவில் 90 விழுக்காடு அல்லது எக்டேருக்கு ரூ. 25,000, இவற்றில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு பணிச் செலவில் 70 விழுக்காடு அல்லது எக்டருக்கு ரூ. 25,000, இவற்றில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. பிப்ரவரி '98 முடிய தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் பணியில் 6040 எக்டேர் பயன்பெற ரூ.695.77 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1247.95 இலட்சம் மானியமாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

### 5. நில மேம்பாடு (மாநிலத் திட்டம்)

வேளாண்மைக்கு நிலம் மற்றும் நீர் முக்கிய ஆதாரங்களாகும். விவசாயிகளின் நிலங்களில் பாசனம் மற்றும் பண்ணைப் பணிகளைச் செவ்வனே விரைவில் செயல்படுத்த நிலம் சமன் செய்தல், நிலம் சீராக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையில்

உள்ள மண்தள்ளும் இயந்திரங்களைக் (புல்டோசர்) கொண்டு நிலம் சமன் செய்தல், நிலங்களைப் பாசன வசதி பெற சீராக்குதல், அதிக பரப்பளவில் விவசாயம் செய்ய வழிவகுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையில் 113 மண் தள்ளும் இயந்திரங்கள் மாநிலத்தின் மாவட்டங்களில் பரவலாக உள்ளன. சமீபத்தில் வாங்கப்பட்ட 25 மண் தள்ளும் இயந்திரங்களையும் சேர்த்து துறைவசம் உள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

சாகுபடிப் பணிகளை உரிய காலத்தில் செய்திட இத்துறை விவசாயிகளுக்கு உழுவை, சேடை விளைபொருட்களை எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளில் உதவிட உழுவை இயந்திரங்களை (டிராக்டர்) அதன் இணைப்புப் பாகங்களுடன் வாடகைக்கு வழங்குகிறது. சாகுபடிப் பணியில் உபயோகித்திட, விவசாயிகளுக்கு வழங்க இத்துறை வசம் 158 டிராக்டர்கள் உள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் மண்தள்ளும் இயந்திரங்களைக் கொண்டு நிலம் சமன் செய்யும் பணிகளில் வருட இலக்காகிய 1,87,600 மணிகளில் பிப்ரவரி '98 முடிய 2,00,153 மணிகள் சாதனை அடையப்பட்டுள்ளது. மேலும் டிராக்டர்களை விவசாயப் பணிகளில் ஈடுபடுத்த வருட இலக்காகிய 81,800 மணிகளுக்கு, பிப்ரவரி '98 முடிய 83,047 மணிகள் சாதனை அடையப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் புல்டோசர்கள் மூலம் நிலம் சமன் செய்யும் பணிகளுக்கு 2;20,000 மணிகளும், டிராக்டர்களைக் கொண்டு இயந்திர சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள 75,000 மணிகளும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள காவிரி, வெண்ணார், கல்லணைக் கால்வாய் ஆகியவற்றின் பாசன வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணிகளில் இத்துறை ஈடுபட்டது. 1997-98 ஆம் ஆண்டில், 75 புல்டோசர்களைக் கொண்டு 532 கிலோ மீட்டர் நீளத்திற்குத் தூர் அகற்றப்பட்டது.

**6. நீர்வள நிர்வாகம் — நிலத்தடி நீர்வள மேம்பாடு (மாநிலத் திட்டம்)**

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப்படுத்துதல் போன்றவை சிறுபாசனத் திட்டத்தின் இலக்காகும். தமிழ்நாட்டின் பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்ட நிலையில் விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை



ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டுபோன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிட்டு ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்துறைக்குச் சொந்தமான ரெஸிஸ்டிவிடி மீட்டர் மற்றும் மின்சார லாக்கிங் கருவி ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு அளிக்கிறது. இவற்றைக் கொண்டு நீர் ஆதாரம், அமைக்கப்படும் கிணறு விவரம், கிணற்றினால் பாசனம் பெறும் பரப்பு போன்ற விவரங்கள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இத்துறையில் இப்பணிக்காக 3 மின்சார லாக்கிங் கருவிகளும், 22 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும் உள்ளன.

விசைத் துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை வெடிக் கருவி, நீள்துளைக் கருவி மற்றும் காற்றமுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், வறண்டு போன கிணறுகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையினால் கீழ்க்காணும் இயந்திரங்கள் பராமரிக்கப்படுகின்றன :

| | |
|---|---|
| பெர்குஷன் துளைக் கருவிகள் | 40 |
| ரோட்டரி துளைக் கருவிகள் | 54 |
| காலிக்ஸ் துளைக் கருவி | 1 |
| ஹேமர் துளைக் கருவி | 1 |
| வாகன்/இன்வெல் துளைக் கருவிகள் | 38 |
| பாறை வெடிக் கருவிகள் | 79 |
| நீள்துளைக் கருவிகள் | 43 |
| காற்றமுத்தக் கருவிகள் | 13 |
| கைத்துளைக் கருவிகள் | 349 |

கைத்துளைக் கருவிகளைச் சிறுவிசைத் துளைக் கருவிகளாக மாற்றுவதற்கு அரசு ரூ.20 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதனால் கருவியின் துளையிடும் திறன் கூடுவதுடன், கூலியாட்களின் தேவையும் குறைக்கப்படுகிறது. இருபது கைத்துளைக் கருவிகள் சிறு விசைத் துளைக் கருவிகளாக மாற்றப்பட்டு, துறையில் உள்ள சிறுபாசன இயந்திரங்களுடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

[1998 ஏப்ரல் 7

1997-98 ஆம் ஆண்டில் அமைக்கப்பட வேண்டிய 8,800 குழாய்க் கிணறுகள்/வடிமுனைக் குழாய்க்கிணறுகளுக்கு பிப்ரவரி '98 முடிய 8,000 குழாய்க்கிணறுகள்/வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு குழாய்க் கிணறுகள் அமைக்க விவசாயிகளுக்கு உதவி தொடரப்படும்.

## 7. பாசனப் பகுதியில் நீர் மேலாண்மை

### 7.1. பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் (மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)

பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேம்படுத்தப்பட்ட பாசன வேளாண்மையை மையக் கருத்தாகவும் மற்றும் சிறந்த நீர்ப்பாசனத்திற்குத் தொடர்புடைய செயல்பாடுகளினால் திறம்பட உபயோகம் பெறும் வகையிலும் கீழ்கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது :—

அ. பண்ணை மேன்மைப் பணிகள்

ஆ. சுழற்சி முறை நீர்ப்பாசனம் (வாரபந்தி)

இ. விவசாயிகளுக்குக் குழுச் செயல்பாட்டிற்காக செயல் ஊக்கமளித்தல்

ஈ. விவசாயிகளுக்குச் சங்கங்கள் அமைத்தல்

பாசனப் பகுதி மேன்மைத் திட்டச் செயல்பாட்டிற்கான நிதி, மாநில முதலீடு மத்திய அரசு வழங்கும் நிதி உதவித் தொகைக்கு இணையான முறையில் 50:50 என்ற விகிதத்தில் கிடைக்கிறது.

இந்திய அரசு இத்திட்டத்தின் கீழ் ஆறு பாசனப் பகுதிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவையாவன; காவேரி, கீழ்பவானி, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கோதையாறு, சித்தார், பட்டனம்கால் திட்டம். பண்ணை மேன்மைப் பணிகள் என்பது நீரை எடுத்துச் செல்லுதல், பங்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்குப் பொருத்தமாக உள்ள அமைப்புகளை உருவாக்குதல் ஆகியவையாகும். புதிய மண் வாய்க்கால் அமைத்தல், இருக்கும் மண் வாய்க்காலுக்குக் காரை இடுதல், பங்கீடு அல்லது நீர்பிரிப்புத் தொட்டிகள் கட்டுதல் போன்றவை இப்பண்ணை மேம்பாட்டுப் பணிகளில் உள்ளடங்கும். வாரபந்தி (சுழற்சி முறை நீர்ப்பாசனம்) திட்டத்தின் மூலம் ஒவ்வொரு



1998 ஏப்ரல் 7]

வயலுக்கும் தேவையான நீர் சரியான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, விவசாயிகளின் பங்கேற்புடன் சம விகித அளவில் பாசன நீர்ப்பங்கீடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 44,740 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் 4,990 எக்டர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனப் பணிகளும் ரூ.3410.75 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பிப்ரவரி '98 முடிய 43,011 எக்டேர் பரப்பில் பண்ணை மேன்மைப் பணிகளும் 63,034 எக்டர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனப் பணிகளும் ரூ.2753.00 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 51,400 எக்டேர் பரப்பில் பண்ணை மேன்மைப் பணிகளும், 79,400 எக்டேர் பரப்பில் சுழற்சி முறை பாசனத் திட்டப்பணிகளும் ரூ.3715.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1998-99-இல் தாமிரபரணி பாசனப் பரப்பில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 7.2. விவசாயிகளின் பங்கேற்பு அணுகுமுறை (பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்)

பாசனப் பகுதி மேன்மைத் திட்டப் பணிகளின் வெற்றி என்பது விவசாயிகளின் பங்கேற்பைச் சார்ந்தே உள்ளது. விவசாயிகள் தாங்களாகவே தங்கள் பண்ணைகளில் நீர் மேலாண்மையை அமுல்படுத்தவும், அதனை நீண்ட காலத்துக்குச் செவ்வனே நிறைவேற்றும் வண்ணமாகவும் குழுச் செயல்பாட்டுடன் செயல்படுத்தி ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த விவசாயச் சங்கங்கள் சமுதாய அமைப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மூன்றடுக்கு முறையில் ஒவ்வொரு திட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. அவை:

| | | | |
|---|---|---|---|
| 1 | விவசாயிகள் சங்கம் | - | மதகளவில் |
| 2 | விவசாய சபைகள் | - | கிளை வாய்க்கால் அளவில் (1975-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டது) |
| 3 | விவசாயிகள் பாசன இணையம்/உச்சநிலை குழு | - | பாசனப் பகுதி முழுமைக்கும் |

பிப்ரவரி 1998 வரை 377 விவசாயச் சபைகளும், 7900 விவசாயச் சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

[1998 ஏப்ரல் 7

### 7.3. விவசாயச் சங்கங்களுக்கான மேலாண்மை மானியம் (பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்)

அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள், சபைகள் நீண்ட காலம் நிலை பெற்றிருப்பதற்காகவும், சமமான நீர்பங்கீட்டிற்கான சுழற்சி முறை பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும் இந்திய அரசு பதிவு செய்யப்பட்ட விவசாயச் சபைகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.500.00 என்ற அளவில் ஒரே தவணையில் மேலாண்மை மானியமாக நிதி உதவி அளித்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.170.00 இலட்சம் மேலாண்மை மானியத் தொகை வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாயச் சபைகளுக்கு ரூ.100.00 இலட்சம் மேலாண்மை மானியமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8. ஊரக வளர்ச்சிப் பணிகள் (ஊரக வளர்ச்சித் திட்டம்)

நிலத்தடி நீரை அதிக அளவு பயன்படுத்துவதாலும், குறைந்த மழை அளவினாலும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. பாசனக்கிணறுகளில் வருடா வருடம் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. ஓடைகளில் குறுக்கே அமைக்கப்படும் நீர் சேகரிப்பு கட்டமைப்பே கசிவுநீர்க் குட்டையாகும். இக்கசிவுநீர்க் குட்டைகள் பருவகாலத்தில் நீரைச் சேமித்து நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிக்கின்றன. இக்கசிவுநீர்க் குட்டைகள் வண்டல் படிவமான அமைப்பாக செயல்பட்டு வெள்ள அபாயத்தைக் கட்டுப்படுத்துகின்றன. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. பல திட்டங்களின் கீழ் 1996-97 முடிய 9,726 கசிவுநீர்க் குட்டைகள் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளன. அமைக்கப்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் நீர் ஆதாரத்தைப் பெருக்கியுள்ளது சிறப்பான அம்சமாகும். கசிவுநீர்க் குட்டைகளின் அருகிலுள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசன ஏரிகளைச் சீரமைத்து அதிக அளவில் அவைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 7]

## அத்தியாயம் 5

### நீர்ப்பிரிமுகடு மேம்பாடு

பாசனப் பகுதிகளில் ஒருமுக நோக்காகக் கொண்ட பசுமைப்புரட்சி முடிவுற்ற நிலையில் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்த வளம் குறைந்த பகுதிகளான மானாவாரி பகுதிகளிலிருந்துதான் எதிர்கால உணவு மற்றும் உடை தேவைகள் பெறப்பட வேண்டும் என தெரிந்து கொள்ளப்பட்டது. இவ்வாறாக மானாவாரிப் பகுதிகளில் மொத்த விளை உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஒருங்கிணைந்த நோக்கோடு நீர்ப்பிரிமுகடுப் பகுதியை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மண் அரிப்பைத் தடுத்தல், மழைநீரை அதிக அளவு பயன்படுத்துதல், மானாவாரி சாகுபடிக்கான தொழில் நுட்பங்களை உபயோகித்து பயிர் உற்பத்தியை மேம்படுத்துதல், பண்ணை காடுகள், மானாவாரி தோட்டக்கலை வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் உள்ளமைப்பு மேம்பாடு போன்ற ஆதரவு முயற்சிகளுடன் கூடிய திட்டக்கூறுகள் இவற்றில் அடங்கும். மேற்பரப்பில் உள்ள நீர் முழுவதும் மற்றும் நிலத்தடி நீர் முக்கால் பங்கு செலவழிக்கப்பட்ட நிலையில் உள்ள நமது மாநிலத்திற்கு இத்திட்டங்கள் மிகவும் அவசியமாகும். இவ்வாறாக நிலைப்படுத்தப்பட்ட வேளாண் நீர்ப்பிரிமுகப்பகுதி அணுகுமுறை மற்றும் கிராம சமுதாயங்களின் தொழில்நுட்பங்களைக் கையாளுவதன்மூலம் கிராம சமுதாயங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக மைய அரசு ஆதரவுடன்கூடிய வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டங்கள் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் ஒரு ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் சுற்றுப்புற சூழல் சமன்பாட்டை மீளப்பெறும் கண்ணோட்டத்தில் நிலம், நீர், இன்னபிற இயற்கை வளங்களை உகந்த அளவுக்கு பயன்படுத்துவதன் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை மேம்படுத்துவதும், வறட்சியிலிருந்து தடுப்பதும் ஆகும். இத்திட்டம் தமிழகத்தில் 16 மாவட்டங்களில் உள்ள 80 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. அவ்வாறு செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்,

தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கான செலவு மைய மற்றும் மாநில அரசுகளால் 50:50 என்ற விகிதத்தில் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

1995-96 ஆம் ஆண்டு முதல் மைய அரசு இத்திட்டத்திற்கான குறிக்கோளை மக்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் வகையில் புதிய வழிகாட்டி கோட்பாடுகளை அமைத்துள்ளது. மைய அரசின் புதிய வழிகாட்டி கோட்பாட்டின்படி வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 80 வட்டாரங்களில் 297 நீர்ப்பிரிமுகடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒரு திட்ட செயல்பாட்டு முகமைக்கு 10 முதல் 12 நீர்ப்பிரிமுகடு பகுதிகள் என்ற வரையரையில் 30 திட்ட அமுலாக்க முகமைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நீர்ப்பிரிமுகடு பகுதிக் குழுக்கள், நீர்ப்பிரிமுகடு சங்கங்கள், பயனாளிகள் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகிய நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:—

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | செலவு |
|---|---|---|
| 1995-96 | 1485.00 | 761.06 |
| 1996-97 | 1485.00 | 1210.76 |
| 1997-98 | 1485.00 | 1353.76 (1998 பிப்ரவரி வரை) |

இந்த அரசின் முயற்சியினால் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் கூடுதலாக 103 நீர்ப்பிரிமுகடுப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆக இம்மாநிலத்தில் இத்திட்டம் மொத்தமாக 400 நீர்ப்பிரிமுகடுப் பகுதிகளில் செயலாக்கப்படும். 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1,285.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





## 2. தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடுத் திட்டம்

தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடுத் திட்டம் மைய அரசின் ஆதரவோடு 1990-91 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ.41.51 கோடி ஆகும். 84 நீர்ப்பிரிமுகடுகளின் மொத்தப்பரப்பு 1,75,704 எக்டேர்கள். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 1,72,657 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.38.48 கோடியாகும். 19 மாவட்டங்களில், 84 நீர்ப்பிரிமுகடுகள் ஐந்து வேளாண் தட்ப வெட்ப நிலைப்பகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை வடமேற்குப்பகுதி, வடகிழக்குப்பகுதி, காவிரி டெல்டா பகுதி, தெற்குப்பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட நீர்ப்பிரிமுகடுகளின் அருகிலேயே 84 புதிய நீர்ப்பிரிமுகடுகள் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு ரூ.700.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் 2,62,526 எக்டேர் நிலப்பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் நோக்கங்கள்

1. ஆரோக்கியமான சூழ்நிலை சமநிலையைத் திரும்பப் பெறுதல்
2. நிலம் மற்றும் ஈரப்பதத்தை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல்.
3. வேலை வாய்ப்பு மற்றும் தனிநபர் வருமான வழிகளை உருவாக்குதல்.
4. நீர்ப்பிரிமுகடு மேலாண்மை கொள்கைகளின் அடிப்படையில் பண்ணைத் தொழிலை விவசாயிகள் செய்ய ஊக்குவித்தல்.
5. கிராம மக்கள் நகரத்தை நோக்கிச் செல்வதைத் தவிர்த்தல்.
6. இருக்கும் வளங்களைக் கொண்டு உணவு மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

[1998 ஏப்ரல் 7

| | (ரூ. இலட்சம்) |
|---|---|
| 28-2-98 வரையிலான நிதி சாதனை | 625.390 |
| 31-3-98 வரையில் எதிர்பார்க்கப்படும் செலவினம் | 723.397 |
| 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதித் திட்டம் | 1500.000 |
| நிதி உதவியில் மைய அரசின் பங்கு | 75 விழுக்காடு மானியம் 25 விழுக்காடு கடன் |

1997-98 ஆம் ஆண்டிற்கான இலக்கு பிப்ரவரி '98 வரையிலான சாதனை மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவைகள் பின்வருமாறு—

| வ.எண். | பணிகள் | 1997-98-ம் ஆண்டிற்கான இலக்கு | பிப்ரவரி1998 வரையிலான செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | 1998-99-ம் ஆண்டிற்கான திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | அடிப்படைச் செயல்பாடுகள் | 253.189 | 255.224 | 525.00 |
| 2. | சாகுபடி நில செயல்பாடுகள் | 195.317 | 168.202 | 405.00 |
| 3. | கால்நடை பராமரிப்புப்பணி | 43.404 | 41.121 | 90.00 |
| 4. | சாகுபடி அல்லாத நில செயல்பாடுகள் | 231.487 | 160.843 | 480.00 |
| | மொத்தம் | 723.397 | 625.390 | 1500.00 |

## 3. பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள மொத்த நிலப்பரப்பில் சுமார் 15 விழுக்காடு பயன்படுத்தப்படாத நிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க இவ்வகையான குறைந்த தரமுடைய



1998 ஏப்ரல் 7]

பயன்படுத்தப்படாத நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவில் ஒரு காலவரையறையின் அடிப்படையிலும் சில முன்னுரிமைகளின் அடிப்படையிலும் நமது மாநிலத்தில் உள்ள புன்செய் நிலங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத நிலங்கள் முழுவதையும் மேம்பாடு செய்வதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

திட்டமிடுதல் மற்றும் திட்டத்தைச் செயல்படுத்துதல் போன்ற எல்லா நிலைகளிலும் உள்ளூர் மக்களின் பங்கு மற்றும் தீவிர ஆதரவோடு பயன்படுத்தப்படாத நிலங்களில் நீர்ப்பிரிமுகடுப் பகுதி அடிப்படையில் மண் மற்றும் ஈரப்பதத்தைக் காத்தல், தற்போதுள்ள நீர்வளத்தை அதிகரித்தல், மரங்களை வளர்ப்பதின் மூலம் பசுமையை ஏற்படுத்துதல் போன்ற தகுந்த மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுவதுதான் இந்தப் பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மைய அரசின் தேசிய பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டு வாரியத்தின் 100 விழுக்காடு உதவியுடன் பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டுத்திட்டம், தமிழ்நாட்டில் 1994-95 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் செயல்பாட்டினை மாநில அரசு கூர்ந்தாய்வு செய்து வருகின்றது.

### 3.1. ஒருங்கிணைந்த பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டுத் திட்டம்

நேர்மைநெறி, நிலை நிறுத்தல் ஆகிய பரந்த நோக்குடன் சுற்றுப்புற சூழலின் பாதுகாப்பிற்கும், விறகு, தீவனப்பயிர், மரத்தேவை மற்றும் உள்ளூர் மக்களின் குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள சமுதாயத்தினரின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடும் இத்திட்டம் செயல்படுகிறது.

இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்துவதற்கு மைய அரசு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது :—

[1998 ஏப்ரல் 7

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டத்தின் பெயர் | மொத்தப் பரப்பு (எக்டரில்) | ஒப்பளிப்பு அளிக்கப் பட்ட தொகை | திட்டக் காலம் (வருடங் களில்) | நிதிசாதனை 28-2-1998 வரையில் | வட்டாரம்/ நீர்ப்பிரிமுகடு களின் பெயர் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| புதுக்கோட்டை | 2155 | 126.45 | 5 | 23.940 | கந்தர்வகோட்டை |
| ஈரோடு | 4000 | 344.45 | 4 | 107.598 | குடியாலத்தூர் |
| சிவகங்கை | 3072 | 285.00 | 5 | 98.650 | காளையார் கோவில் |
| கடலூர் | 3010 | 249.88 | 5 | 11.210 | கெடிலம் |
| வேலூர் | 5000 | 296.04 | 3 | 114.760 | பொன்னையார் |
| திருவண்ணாமலை | 3900 | 255.94 | 4 | 99.252 | செங்கம் |

### 3.2. முதலீடு முன்னேற்றத் திட்டம்

இம்முதலீடு முன்னேற்றத் திட்டத்தின்படி வனங்கள் அல்லாத பயன்படுத்தப்படாத நிலங்களை மேம்படுத்துவதற்கு தனியார் கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும், தனியார் தொழில்முனைவோருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் ஏற்றுக் கொண்ட திட்ட முதலீட்டில் 25 விழுக்காடு அல்லது ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்ட மானியம் வழங்கப்படுகிறது. இவ்வரசு இதுவரையில் இத்திட்டத்தின் கீழ் 8 (எட்டு) செயற்குறிப்புகளை மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வனங்கள் அல்லாத பயன்படுத்தப்படாத நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நான்கு (4) திட்டங்களுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :



1998 ஏப்ரல் 7]

(ரூபாய் இலட்சத்தில்)

| செயல்படுத்தும் முகமையின் பெயர் | வங்கிக் கடன் | திட்டத்தை செயல்படுத்து வோரின் பங்கு | மைய அரசின் மானியம் | மொத்தம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| தமிழ்நாடு ப்ளாண்டேஷன்ஸ், குமாரகோவில் போஸ்ட், கன்னியாகுமரி மாவட்டம். | 17.05 | 8.52 | 8.52 | 34.09 | 25.59 |
| தவமணி ஆர்ச்சார்ட்ஸ், பெத்த நாயக்கன்பட்டி, பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம். | 10.26 | 5.24 | 5.24 | 20.74 | 14.29 |
| காவிரி கார்டன்ஸ் பிரைவேட் லிமிடெட், தொரைக்குடி கிராமம், மணிகண்டம் பஞ்சாயத்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 12.10 | 6.05 | 6.05 | 24.20 | 20.00 |
| டாக்டர் எம். பாஸ்கரன் திருமதி சாந்தி பாஸ்கரன், வெள்ளபுத்தூர் கிராமம், மதுராந்தகம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். | 14.50 | 7.345 | 7.345 | 29.10 | 12.76 |

எஞ்சியுள்ள செயற்குறிப்புகள் மைய அரசின் தேசிய பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டு வாரியத்தில் நிலுவையில் உள்ளன. மைய அரசின் ஒப்பளிப்பு ஆணைகள் பெற்றிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 3.3. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 68 செயற்குறிப்புகளை இவ்வரசு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது. அவற்றுள் கீழ்க்கண்ட மூன்று (3) திட்டங்களுக்கு மட்டும் மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது :

(ரூபாய் இலட்சத்தில்)

| தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பெயர் | இத்திட்டத்திற்காக மைய அரசு ஒப்புதல் செய்து அனுமதித்துள்ள தொகை | மைய அரசு இதுவரை வழங்கிய தொகை | சாகுபடிக்கான மொத்தப்பரப்பு (எக்டேரில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. ப்ளிஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனம், மதுரை மாவட்டம். | 6.69 | 1.33 | 150 |
| 2. தமிழ்நாடு ஏழை உழவர் சங்கம், சேலம் மாவட்டம். | 6.69 | 1.33 | 150 |
| 3. சமூக சேவை விஞ்ஞானம் மற்றும் கிராம முன்னேற்றத்திற்கான சங்கம், திண்டுக்கல் மாவட்டம். | 6.97 | 1.39 | 150 |

எஞ்சியுள்ள செயற்குறிப்புகள் 'கப்பார்ட்' (CAPART) நிறுவனத்திற்கு மேல் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டுள்ளன. ஒப்பளிப்பு ஆணைகள் பெற்றிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 3.4. தொழில் நுட்ப முன்னேற்றம், விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு செயற்குறிப்புக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| திட்டத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மொத்த பரப்பு (எக்டேரில்) | திட்டக் காலம் (வருடங்கள்) | செயல் படுத்தும் முகமை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| தொழில் நுட்ப முன்னேற்றம் விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம் | மருத்துவாழ் மலை கன்னியாகுமரி மாவட்டம் | 25.44 | 25 | 5 | கன்னியா குமரி மாவட்ட ஆட்சியர் |





### 4. பயன்படுத்தப்படாத நிலமேம்பாடு, நீர்ப்பிரிமுகடு மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான உயர்நிலைக்குழு

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படாத நிலமேம்பாடு, நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைப் பெருமளவில் செயல்படுத்துவதற்கும் அதன் மூலம் அதிகரித்து வரும் உணவு, தீவனம், எரிபொருள், நாரியற்பொருள், மரம் ஆகிய தேவைகளைச் சந்திப்பதற்கும் தகுந்த வழிமுறைகளையும், யுத்திகளையும் அரசுக்கு வழங்குவதற்கு டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் தலைமையின் கீழ், வனங்கள் அல்லாத பயன்படுத்தப்படாத நிலமேம்பாடு, நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஓர் உயர்நிலைக் குழுவை அரசு ஏற்படுத்தியது. இந்த உயர்நிலைக்குழு தனது அறிக்கையை 22-6-1997 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. இந்த உயர்நிலைக் குழு பல பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது. இந்த பரிந்துரைகள் குறித்து சம்பந்தப்பட்ட செயலர்களோடு விவாதிப்பதற்காக தலைமைச் செயலரின் தலைமையின் கீழ், 22-12-1997 அன்று ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தப் பரிந்துரைகளை எவ்வாறு செயல்படுத்தலாம் என்பது குறித்தான கருத்தினை அனுப்பிவைக்குமாறு மாநிலத் திட்டக் குழுவை கேட்டுக் கொள்ளலாம் என அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மாநில திட்டக் குழுவின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 7

## அத்தியாயம் 6

### வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மை முன்னேற்றத்திற்கும், வேளாண் வளர்ச்சி, வேளாண் கல்வி மற்றும் வேளாண் சார்புத் தொழில்கள் பற்றி ஆராயவும் 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்புத் தொழில்களை அரசுத் துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கிராமப்புற மக்களுக்கு விரிவாக்கத் துறையின் மூலம் செயல்படுத்துதல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், தட்பவெப்ப நிலைக்கேற்ப திருத்திய உயர்விளைச்சல் பயிர் இரகங்களை உருவாக்குதல், மேலாண்மை, பயிர்பாதுகாப்பு மற்றும் சிரிய தொழில் நுணுக்கங்களைக் கண்டறிதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகம் அரும்பாடுபட்டு வருகிறது.

### 1. கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வித் திட்டங்கள் கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம், திருச்சிராப்பள்ளி, குமுளூர், பெரியகுளம், மேட்டுப்பாளையம் ஆகிய ஏழு வளாகங்களில் உள்ள 10 கல்லூரிகளில் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், பொறியியல் மற்றும் மனையியல் ஆகிய ஐந்து கலைப்புலங்களில் இளமறிவியல் கல்வித் திட்டங்களும், 26 துறைகளில் மூதறிவியல் கல்வியும், 20 துறைகளில் முனைவர் பட்டப்படிப்பும், பட்டு வளர்ப்பில் ஒரு முதுநிலைப் பட்டயப் படிப்பும் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் இளமறிவியலில் 489 மாணவர்களும், மூதறிவியல் பட்டப்படிப்பில் 224 மாணவர்களும், முனைவர் பட்டப்படிப்பில் 73 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். இதில் 45 விழுக்காடு பெண்கள் ஆவர்.

அகில இந்திய போட்டித் தேர்வின் அடிப்படையில் தேர்வு பெறும் மாணவர்களுக்கு 10 விழுக்காடு இடம் இளமறிவியல் பட்டப் படிப்புகளிலும், 15 விழுக்காடு இடம் மூதறிவியல் பட்டப் படிப்புகளிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் 18 மாணவர்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கல்வி உதவித் தொகை கிடைக்கப்பெற்றுள்ளது.



1998 ஏப்ரல் 7]

தமிழ்நாடு அரசு ஆணையின்படி 1996-97 மற்றும் 1997-98 ஆம் கல்வியாண்டுகளுக்குரிய பட்டதாரிகள் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மொத்த மதிப்பெண்கள் 300-க்கு, முதல் 10 நிலையில் உள்ள மாணவர்கள் வருவாய்த் துறை அலுவலர்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆணையின் பயன்கள் சென்ற 20-10-1997 அன்று சென்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உணவு பதப்படுத்துதல் பொறியியலில் இளங்கலை பட்டப்படிப்பு 1998-99 கல்வியாண்டில் தொடங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்கள் வேளாண்மைக் கல்வியைப் பயில வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, 1998-99 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு 15% இட ஒதுக்கீடு வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "பெரியார் அறக்கட்டளை" ஒன்றை ஏற்படுத்தும்பொருட்டு ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை மூலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டில் உள்ள வேளாண் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் சிறந்த மாணவர்களைத் தேர்வு செய்து அவர்களின் விடுதிக் கட்டணம், கல்விக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் வாங்கும் செலவு உள்ளிட்ட கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த மாணவர்கள் 10 பேர் இந்திய வனப் பணி (IFS) தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### 2. ஆராய்ச்சி

தமிழ்நாடு அரசு 1997-98 ஆம் ஆண்டில் ஏழு புதிய ஆராய்ச்சித் திட்டங்களை ரூ.21.90 இலட்சம் நிதியளவில் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களில் சிறு மக்காச்சோளம், பழங்கள் மற்றும் காய்கறிகளில் அறுவடைக்குப்பின் நேர்த்தி, தட்பவெப்ப மண்டலங்களுக்கு உகந்தவாறு திட்டமிடுதல், உயிரியல் கொல்லிகள், மண்புழு மற்றும் கரும்பில் செவ்வழுகல் நோய் போன்றன முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆராய்ச்சியை மேலும் வலுப்படுத்த தேசிய அளவிலான நிறுவனங்கள்

[1998 ஏப்ரல் 7

மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மற்றும் அளிக்கப்படும் நிதி பற்றிய விபரங்கள் அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## அட்டவணை-1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு *1997-98* ஆம் ஆண்டில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மற்றும் அளிக்கும் நிதி பற்றிய அறிக்கை.

| நிறுவனங்கள் | | | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அ. | திட்டம் (மனிதவள மேம்பாடு மற்றும் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் சேர்த்து) | மாநில அரசு | 2275.68 |
| ஆ. | திட்டமல்லாதது | | 1372.51 |
| | இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | | 470.60 |
| | மைய அரசு | | 137.76 |
| | வெளிநாட்டு நிறுவனங்கள் | | 63.19 |
| | தனியார் நிறுவனங்கள் | | 34.28 |

இத்திட்டங்களில் புதிய பயிர் ரகங்களை உருவாக்குதல், நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், நார்ப்பயிர்கள், கரும்பு, எண்ணெய்ப்பனை, நெல் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல், தழை, உரம், பாசன முதலீடுகள் மாதிரி, கழிவு பயன்படுத்துதல், விதை உற்பத்தி, பூச்சி மருந்துகள், உயிரியல் உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள், பண்ணை அமைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டக மேலாண்மை, சுற்றுப்புற சூழல் மாசுபடுதல், தொலை உணர்வு, மூலிகைப் பயிர்கள், மஞ்சள், மிளகாய், அலங்கார மலர்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் போன்றன செயலாக்கப்பட்டன.



1998 ஏப்ரல் 7]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கல்லூரி வளாகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகளின் சீரிய முயற்சியினால் *13* புதிய வேளாண் பயிர் இரகங்களும் *3* தோட்டக்கலைப் பயிர்களும் மற்றும் இரண்டு வேளாண் உயிர்ப்பொருளும் (காளான்) அதாவது நெல்லில் நான்கும், கரும்பில் மூன்றும், சிறு மக்காச்சோளம், பாசிப்பயறு, கொண்டைக்கடலை, கொள்ளு, [illegible], தட்டைப்பயறு, வீரிய ஒட்டு ஆமணக்கு, வீரிய ஒட்டு தக்காளி, கீரை, பூகோசு ஆகியவற்றில் ஒவ்வொன்றும் மற்றும் இரண்டு காளான் இரகங்களும் வெளியிடப்பட்டன. மேலும் வேளாண் மக்களின் வேலைப் பளுவைக் குறைத்து பணியை எளிதில் செய்ய மூன்று புதிய வேளாண் கருவிகளான நெல் அறுவடை இயந்திரம், தென்னை மரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி மற்றும் வேளாண் கழிவு வாயு அடுப்பு போன்றவைகளும் வெளியிடப்பட்டன. இப்பயிர் இரகங்களும், வேளாண் கருவிகளும் பொங்கல் பரிசாக சனவரி *08, 1998* அன்று வேளாண் மக்களின் நலனுக்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம் அமைப்பதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ.*26.75* இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஏத்தாபூர் கிராமத்தில் *11.87.5* எக்டேர் அரசு நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் ஆராய்ச்சி மையம் நிறுவப்படும்.

## 3. வல்லுநர் விதை குறியீடும், விநியோகமும்

வேளாண் மக்கள் நல்ல விதைகளைப் பெற்று பயன்பெற உதவும் நோக்கத்துடன் மாநில வேளாண்மை மற்றும் விதை உற்பத்தியாளர்களின் விரிவாக்கத் துறையினருக்கு வல்லுநர் விதையைப் பெருக்க மொத்த குறியீட்டு விதை அளவான *1,46,431* கிலோவில் *1,63,911* கிலோ விநியோகிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய விபரம் அட்டவணை 2-இல் தரப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 7

## அட்டவணை-2

*1997-98* ஆம் ஆண்டில் - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் வல்லுநர் விதை விநியோகம்.

| பயிர் | 1997-98 வருடத்திற்கான விதை விநியோகம் (பிப்ரவரி '98 வரை) வேளாண் மைத் துறை மற்றும் மைய அரசு | தனியார் | மொத்தம் | வேளாண் மைத் துறை மற்றும் மைய அரசு | தனியார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நெல் | 20780 | 7020 | 27800 | 24564 | 9499 | 34063 |
| சிறு தானியங்கள் | 249 | 13 | 262 | 478 | 73 | 551 |
| பயறு வகைகள் | 10272 | - | 10272 | 8571 | - | 8571 |
| எண்ணெய் வித்துக்கள் | 107219 | - | 107219 | 119373 | 237 | 119610 |
| பருத்தி | 440 | 90 | 530 | 131 | 253 | 384 |
| தீவனப் பயிர்கள் | 290 | - | 290 | 55 | 206 | 261 |
| காய்கறிப் பயிர்கள் | 3 | 55 | 58 | 94 | 377 | 471 |
| மொத்தம் .. | 139253 | 7178 | 146431 | 153266 | 10645 | 163911 |

### 4. தொழில் நுட்ப பரிமாற்றம்

பல்கலைக்கழகத்தின் பல்வேறு விரிவாக்க மையங்களின் வாயிலாக ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் தொழில் நுட்பங்களை உழவர்களிடம் பரப்பும் பணியில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் ஈடுபட்டுள்ளது.

தகவல் தொடர்பு நிலையத்தின் வாயிலாக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் எடுக்கப்படுகின்ற வீடியோ நிகழ்ச்சிகள் (25), வானொலி வேளாண்மைப் பள்ளி (6) மற்றும் அஞ்சல்வழி பாடத்திட்டம் (6) முதலான முக்கிய பணிகள் வாயிலாக வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளின் தொழில் நுட்பங்கள் உழவர்களிடம் பரப்பப்பட்டு வருகின்றன. இது தவிர வீடியோ நூலகப் பிரிவு, வளர்ச்சித் துறைகளுக்குத் தேவையான வீடியோ நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகின்றது.



1998 ஏப்ரல் 7]

#### அ. வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள்

பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் செயல்படும் 5 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள் வேளாண்மை மற்றும் இதர வளர்ச்சித் துறைகளின் ஈடுபாட்டுடன் பல்வேறு விரிவாக்கப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12,000 உழவர்கள் இந்த விரிவாக்கப் பணிகள் வாயிலாகப் பயன்பெறுகின்றனர்.

அறிக்கை காலத்தில் 532 பயிற்சிகள், 362 செயல் விளக்கங்கள், 165 கிராமக்கூட்டங்கள், 536 பண்ணை ஆலோசனைப் பணிகள், 72 கருத்துக் காட்சிகள் மற்றும் 61 முகாம்களையும் இம்மையங்கள் செயல்படுத்தின. இதுதவிர பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் வாயிலாக 268 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. 175 வானொலி/தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் 138 பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

#### ஆ. வேளாண்மை தகவல் பணி

பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பங்களைப் பரப்பும் பணியை வேளாண்மை தகவல் பணி மையம் செவ்வனே செய்து வருகின்றது. வாராந்திர செய்திகள் ஒவ்வொரு புதன்கிழமையும் தயாரிக்கப்பட்டு உழவர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அறிக்கை காலத்தில் 128 தொழில் நுட்ப செய்திகள் பரப்பப்பட்டன.

#### இ. பயிற்சி

வேளாண்மை மற்றும் இதர பிரிவுகளின் வளர்ச்சித் துறைகளின் விரிவாக்கப் பணியாளர்கள், இடுபொருள் நிறுவனத்தினர், அரசு சாரா நிறுவனங்கள், தேசிய வங்கிகள் போன்ற பிரிவினருக்கு பல்கலைக்கழகம் பயிற்சிப் பிரிவின் வாயிலாகத் தொழில் நுட்பப் பயிற்சிகளை அளித்து வருகிறது. அறிக்கை காலத்தில் 1163 நபர்கள் பயன்பெறும் வண்ணம் 49 பயிற்சிகளைப் பயிற்சிப் பிரிவு நடத்தியது.

#### ஈ. வெளியீடுகள்

விரிவாக்கக் கல்வி இயக்ககத்தினால் மாதாந்திர செய்தி மடல் தமிழ் மொழியில் ஒன்றும், ஆங்கில மொழியில் ஒன்றுமாக வெளியிடப்படுகின்றன. வளர்ச்சித் துறைகளின் விரிவாக்கப்

[1998 ஏப்ரல் 7

பணியாளர்கள் மற்றும் உழவர்களுக்கு அந்தந்த இடங்களுக்கு ஏற்ற தொழில் நுட்பங்கள் செய்தி மடல்கள் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றன. ஆராய்ச்சித் திட்டங்களின் முடிவுகளும் அவ்வப்பொழுது விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இதுதவிர, 12,000 சந்தாதாரர்களைக் கொண்ட மாதாந்திர தமிழ் வெளியீடான "வளரும் வேளாண்மை" என்ற சிறு புத்தகமும் தொழில் நுட்பங்களைப் பரப்பிட வெளியிடப்படுகின்றது.

### உ. முன்னோடி கிராமங்களின் மூலம் தொழில் நுட்ப பரிமாற்றம்

இறைவை மற்றும் மானாவாரி நில அமைப்பின் அடிப்படையில் 200 பண்ணைக் குடும்பங்கள் உள்ள 20 கிராமங்களைத் தெரிவு செய்து அனைத்து நவீன தொழில் நுட்பங்களையும் கொண்ட செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றை முன்னோடி கிராமங்களாக அமைக்கும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஊ. தொழில் நுட்பங்களின் மதிப்பீடும் பயன்பாடும் பற்றிய திட்டம்

சந்தியூரில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வாயிலாக ராபி 1997-98, காரிப் 1998-99 ஆம் பருவங்களில் செயல்படுத்தும் வண்ணம் தொழில் நுட்பங்களின் மதிப்பீடும் பயன்பாடும் என்ற திட்டம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின்மூலம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.33,000 ஆகும். இத்திட்டத்தின் வாயிலாக ஆராய்ச்சி மற்றும் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஈடுபாடு அதிகரிப்பதுடன் புதிய தொழில் நுட்பங்களின் பயன்பாடு பற்றிய உழவர்களின் கருத்துக்களும் கண்டறியப்பட ஏதுவாகின்றது.

### முக்கியத்துவம் வாய்ந்த எதிர்காலத் திட்டங்கள்

1. வேளாண் மற்றும் ஆலைக் கழிவுகளை மீண்டும் உபயோகித்தல்
2. பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களில் நுண்பெருக்கம்
3. மருத்துவ/மூலிகைச் செடிகள்
4. ஏற்றுமதிக்குகந்த தோட்டக்கலை
5. அங்கக வேளாண்மை
6. கடற்கரையோர உவர் நிலங்கள்
7. ஆராய்ச்சியில் தகவல் நுட்பவியலில் பங்கை அதிகப்படுத்துதல்



1998 ஏப்ரல் 7]

## அத்தியாயம் 7

### விதைச் சான்றளிப்பு

வேளாண்மையில் விதை ஒரு முக்கிய இடுபொருள் ஆகும். தரமான விதைகள் உழவர்களுக்கு கிடைக்கச் செய்ய விதைச் சான்றுத் துறை கீழ்க்கண்ட நான்கு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :

1. விதைச் சான்றளிப்பு
2. விதை ஆய்வு
3. விதைப் பரிசோதனை
4. பயிற்சி

### 1. விதைச் சான்றளிப்பு

விதைச் சட்டம் 1966 மற்றும் விதை விதிகள் 1968-ன்படி விதைச் சான்றளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விதைகளின் ஆதாரத்தைச் சரிபார்த்து, விதை வயலின் பல நிலைகளில் வயல் தரங்கள் ஆய்வு செய்து, விதைச் சுத்திகரிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு, விதை தரம் பரிசோதித்து தரமான விதைகளுக்குச் சான்று வழங்குவதன் மூலம் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது. இத்துறை ஒவ்வொரு ஆண்டும் தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து சான்று விதைகளின் உற்பத்தியை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. (அட்டவணை-I) 1998-99-ஆம் ஆண்டில் 32 ஆயிரம் மெட்ன் சான்று விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 2. விதை ஆய்வு

விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கச் செய்ய விதை ஆய்வுப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. விதை ஆய்வாளர்கள் விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்து, தரம் அறியும் பொருட்டு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறது. தரம் குறைந்த விதை விற்பனை மற்றும் முறைகேடான விதை விற்பனைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது விதைக்கட்டுப்பாட்டு ஆணை 1983-ன்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இதுவரை 6,183 விதை விற்பனை நிலையங்களுக்கு

உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிப்ரவரி '98 முடிய 1,458 மெ.டன் அளவு தரமற்ற விதைகளுக்கு விற்பனைத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 216 வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 22,250 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் செய்யவும், 16,000 விதை மாதிரிகள் எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (அட்டவணை-2)

## 3. அ. விதைப் பரிசோதனை

அரசால் அறிவிக்கப்பட்ட ஏழு விதைப் பரிசோதனை நிலையங்கள் முறையே கோவை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, தர்மபுரி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரத்தில் இயங்கி வருகின்றன. இவை ஆண்டொன்றுக்கு 42,000 விதை மாதிரிகள் சோதனை செய்யும் திறன் கொண்டுள்ளன. இப்பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மாதிரிகளும், விதை ஆய்வுப் பிரிவின் விதை மாதிரிகளும், உழவர்களிடம் இருந்தும் விற்பனையாளர்களிடம் இருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும், அவற்றின் புறத்தூய்மை, முளைப்புத் தன்மை, ஈரத்தன்மை, பிற ரக கலப்பு போன்ற பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 44,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (அட்டவணை 3)

### ஆ. இனத்தூய்மைப் பரிசோதனை

வீரிய பருத்தி, வீரிய ஆமணக்கு மற்றும் அதன் தாயாதி ரகங்கள், ஆதாரநிலை-1 இரகப் பருத்தி விதைகளின் இனத்தூய்மையைக் கண்டறிந்து தரமான விதைகளுக்குச் சான்றளிக்கும்பொருட்டு இனத்தூய்மைப் பரிசோதனை கண்ணம்பாளையம் பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணையிலும் மற்றும் விதைச் சான்று இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கண்ணாடி ஆய்வகத்திலும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. சந்தேகம் ஏற்படும் விதைக் குவியல்களில் விதை ஆய்வு பிரிவினரால் விதை விற்பனை நிலையங்களிலிருந்து எடுக்கப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 1,500 விதை மாதிரிகளுக்கு இப்பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. பயிற்சி

விதை உற்பத்தித் தொழில் நுட்பங்களை அறியும்பொருட்டு அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. விதை



விற்பனையாளர்களுக்கு விதைச் சட்டம் செயலாக்கம் பற்றியும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன (அட்டவணை 4). இதனைக் கருத்திற்கொண்டு, விதைச் சான்று இயக்குநரகத்தில் பயிற்சி மையம் ஒன்று ரூ.37/- இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.

## நிதி

1997-98 ஆம் ஆண்டு ரூ.585.53 இலட்சம் ஒதுக்கீட்டில் பிப்ரவரி '98 முடிய ரூ.501.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.551.51 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய ரூ.86.62 இலட்சம் விதைச் சான்று பதிவுக் கட்டணம், வயல் ஆய்வுக் கட்டணம், விதைச் சுத்தி நிலைய உரிமைக் கட்டணம், விதை விற்பனை உரிமைக் கட்டணம், விதைப் பரிசோதனைக் கட்டணம் மற்றும் சான்றட்டை விற்பனை ஆகியவற்றின் மூலம் வரவினமாகப் பெறப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் வரவினம் ரூ.97.00 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது.

### அட்டவணை-1

சான்று செய்த விதையளவு (மெ.டன்)

| வ. எண். | பயிர் | 1996-97 | 1997-98 (பிப்ரவரி '98 வரை) | 1998-99 (திட்டம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | நெல் | 18191 | 19768 | 23500 |
| 2. | ரக சிறுதானியங்கள் | 268 | 298 | 400 |
| 3. | வீரிய சிறுதானியங்கள் | 29 | 23 | 50 |
| 4. | ரக பருத்தி | 2436 | 1317 | 2500 |
| 5. | வீரிய பருத்தி | 32 | 119 | 200 |
| 6. | பயறு வகைகள் | 1306 | 1270 | 2250 |
| 7. | எண்ணெய்வித்துப் பயிர்கள் | 2149 | 2878 | 3000 |
| 8. | காய்கறிகள் | 41 | 60 | 100 |
| | மொத்தம் | 24452 | 25733 | 32000 |

## அட்டவணை-2

### விதை ஆய்வு

| வ. எண். | பயிர் | 1996-97 | 1997-98 (பிப்ரவரி '98 வரை) | 1998-99 (திட்டம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு (எண்கள்) | 26322 | 21448 | 22250 |
| 2. | விதை மாதிரிகள் எடுத்தது (எண்கள்) | 17404 | 16081 | 16000 |
| 3. | தரக்குறைவு காரணமாக விற்பனை தடை செய்யப்பட்ட குவியல்கள் (எண்கள்) | 2295 | 1077 | .. |
| 4. | நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் (எண்கள்) | 190 | 216 | .. |

## அட்டவணை-3

### விதை மாதிரிகள் ஆய்வு

| வ. எண். | பயிர் | 1996-97 | 1997-98 (பிப்ரவரி '98 வரை) | 1998-99 (திட்டம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | விதை மாதிரிகள் ஆய்வு செய்தது (எண்கள்) | 44153 | 44404 | 44000 |
| 2. | தரம் குறைந்த விதை மாதிரிகள் (எண்கள்) | 6306 | 5442 | .. |



## அட்டவணை - 4

### பயிற்சி

| வ. எண். | பயிற்சி விவரம் | பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 1996-97 | 1997-98 (பிப்ரவரி '98 வரை) | 1998-99 (திட்டம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஆற்றுப்படுத்தும் பயிற்சி | 45 | 49 | 50 |
| 2. | விதைச் சான்று அலுவலர்களுக்கு புத்துரட்டப் பயிற்சி | 248 | 227 | 250 |
| 3. | தனியார் விதை உற்பத்தியாளர் பயிற்சி | 8113 | 8884 | 9000 |
| 4. | அரசு விதை உற்பத்தியாளர் பயிற்சி | 6468 | 8154 | 5200 |
| 5. | விதை விற்பனையாளர் விதைத் தரம் பேணும் பயிற்சி | 5145 | 5513 | 5500 |
| | மொத்தம் | **20019** | **22827** | **20000** |

[1998 ஏப்ரல் 7

## அத்தியாயம் - 8

### வேளாண் விளைபொருள் விற்பனை

1928 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ராயல் கமிஷன், விவசாயிகளை இடைத்தரகர்கள் பிடியில் இருந்து காப்பாற்றவும், மேம்பாடான விற்பனை வசதிகளை வழங்கவும், அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தவும் பரிந்துரை செய்தது. இராயல கமிஷனின் பரிந்துரைப்படி அரசு, சென்னை வணிகப்பயிர் சட்டத்தை 1933 ஆம் ஆண்டில் இயற்றியது. இச்சட்டப்படி தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூரில் பருத்திக்கென ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்று முதலில் அமைக்கப்பட்டது. தொடர்ந்து மணிலாவுக்கென விழுப்புரத்தில் இரண்டாவது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1959 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பிறகு 1933 ஆம் ஆண்டுச் சட்டம் நீக்கப்பட்டு "தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் வாணிபச் சட்டம்" 1959 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் மாவட்ட தலைமையிடத்தில் விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்க வகை செய்யப்பட்டது. வேளாண்மை விளைபொருட்களைக் கண்டறிதல், சட்டத்தின்கீழ் அவற்றை அறிவிக்கை செய்தல், வாணிப நடவடிக்கையை ஒழுங்குபடுத்த முக்கியமான மையங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்தல் இவ்விற்பனைக் குழுக்களின் பணிகளாகும்.

1959 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம், பின்னர் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991 என மாற்றப்பட்டு, 1-2-91 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

வேளாண்மை விற்பனை குறித்த பணிகள் அனைத்தும் முதன் முதலில் வேளாண்மை இயக்குநர் மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. பின்னர் 1977 ஆம் ஆண்டு வேளாண் விற்பனைத் துறை தனித் துறையாக மாற்றப்பட்டது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் வேளாண் விளைபொருட்கள் விற்பனையில் பெருகிவரும் தேவைகளுக்கு ஏற்ப அனைத்து வசதிகளையும் சிறப்பான முறையில் கொடுத்திடும் நோக்கத்தில் இத்துறை பிரிக்கப்பட்டது. இத்துறை ஆரம்ப காலத்தில் முதுநிலை தொழில்நுட்ப அலுவலரின் (வேளாண் துறையின் கூடுதல் இயக்குநர்) தலைமையில் இயங்கி வந்தது. இத்துறை தற்போது இந்திய ஆட்சிப்பணி அலுவலர் தலைமையில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.



1998 ஏப்ரல் 7]

வேளாண்மை விற்பனைத் துறையானது விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்வதில் உதவி புரிவதுடன், உரிமம் பெற்ற வியாபாரிகளின் மூலம் நியாயமான விலை, சரியான எடைக்கு உத்தரவாதம் மற்றும் உடனடிப் பணப் பட்டுவாடா போன்ற சேவைகளை வழங்குகிறது.

இத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

1. வேளாண் விளைபொருட்கள் விற்பனையை ஒழுங்குபடுத்தி விவசாயிகள் பயன்படும் வகையில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்து செயல்படுத்துதல்.
2. நுகர்வோர் பயன்பெறும் வகையில் விளைபொருட்கள், கால்நடைப் பொருட்கள், வனப்பொருட்கள் இவைகளுக்கு அக்மார்க் தரம் பிரிப்புப்பணி மேற்கொள்ளுதல்.
3. வேளாண் விளைபொருட்களுக்குத் தரத்திற்கேற்ற விலை கிடைக்க வணிகமுறை தரம் பிரிப்புப் பணிகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், பண்ணைகளிலும் மேற்கொள்ளுதல்.
4. தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் மூலம் வேளாண்மை விற்பனைத் துறையின் விளம்பரம் மற்றும் பிரச்சாரம், அங்காடிகளை மேம்படுத்துதல், அன்றாட அங்காடி விளைபொருள் வரத்து, விலை நிலவரம் குறித்து விசாரித்து தகவல் பெற்று வெளியிடுதல் போன்ற பணிகளைச் செயலாக்குதல்.

### விற்பனைக் குழுக்கள்

தமிழ்நாட்டில் தற்சமயம் 16 விற்பனைக் குழுக்கள் பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கி (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) செயல்பட்டு வருகின்றன. விளைபொருட்கள் விற்பனையில் விவசாயிகளுக்கு மேலும் சேவை புரிந்திடவும், நிர்வாக வசதிகளுக்காகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு விற்பனைக் குழு ஏற்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

### 1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனை துறையில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 44 சோதனைச்

[1998 ஏப்ரல் 7

சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள், 16 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்குச் சம அளவில் விளைபொருட்களை விற்க/வாங்கத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன. மேலும் மறைமுக ஏலம் மூலம் ஆதாயமான போட்டி விலை கிடைக்க விவசாயிகளுக்கு வழிவகை செய்யப்படுகிறது. இது தவிர, வேளாண் விளைபொருட்களுக்கு தரம் பிரிப்பு வசதிகளும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 1% (ஒரு சதவீதம்) சந்தைக் கட்டணமாக வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இது தவிர உரிமக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்தும், எடையாளர்களிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்/விற்பனையாளர் ஆகியோரிடம் இருந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செய்யும் சேவைகளுக்கு எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. மேலும் விளைபொருள் விற்பனையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இடைத்தரகர்கள் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவது இல்லை.

விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் அளிக்கப்படும் சேவைகள்

1. சரியான எடை
2. வணிகமுறை தரம் பிரிப்பு
3. கிட்டங்கி வசதிகள்
4. உரிமம் பெற்ற வியாபாரிகளால் நல்ல விலைக்குப் பொருட்களை விற்றல்
5. இடைத்தரகர்கள், கமிஷன் ஏஜெண்டுகள் ஆகியவர்களைத் தவிர்த்தல்
6. மறைமுக ஏலமுறை
7. வங்கி வசதிகள்



1998 ஏப்ரல் 7]

8. உடனடி பணம் பட்டுவாடா
9. அங்காடி விலை விவரம் அறிவித்தல்
10. பொருளீட்டுக் கடன் வசதி
11. விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, சுகாதார கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்
12. வண்டி மாடுகள் நிறுத்துவதற்குப் பாதுகாப்பான இட வசதி
13. இலவச மருத்துவ வசதி
14. தமிழ்நாடு உழவர் நல நிதி திட்டம்
15. தேவையான அளவு விளைபொருட்களை ஒரே இடத்தில் வாங்க வசதி
16. பாதுகாப்பாக பணப் பட்டுவாடா செய்திட வசதி
17. தொலைபேசி மற்றும் ஃபேக்ஸ் வசதி

விற்பனைக் குழு மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 1997-98 ஆம் ஆண்டு முடிய அமைக்கப்பட்ட அடிப்படை வசதிகள் விவரம் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### விளைபொருட்கள் அறிக்கை

முக்கிய விளைபொருட்களில் வாணிபத்தை ஒழுங்குபடுத்த இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 29 விளைபொருட்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளன. மேலும் அனைத்து விற்பனைக் குழுக்களிலும், அனைத்து விளைபொருட்களையும் ஒரே மாதிரியாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பொருளீட்டுக் கடன்

சிறு/குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும்பொருட்டு, 137 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 4 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75% வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சம் ரூ. 25,000 வரை பெறலாம். இக்கடனுக்கு முதல் 15

நாட்களுக்கு வட்டியில்லை. மீதமுள்ள நாட்களுக்கு 12% முதல் 14.5% வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

### தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டால் அல்லது நிரந்தர ஊனமுற்றால் ரூ. 25,000 மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு மானியத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், நபரொன்றுக்கு வருடமொன்றுக்கான தவணைக் கட்டணமான ரூ. 10-ஐ உரிய விற்பனைக் குழுவும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகிறது.

### வணிகமுறை தரம் பிரிப்பு

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், விவசாயிகளின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்கச் செய்வதே ஆகும். இத்திட்டத்திற்காக 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பணி கிராமங்களில் விவசாயிகள் இருக்கும் இடத்திற்குச் சென்றும் மேற்கொள்ளப்படுகிறது. இம்மையங்களின் பெயர், அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில் நுட்ப மையம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பச் செய்திகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

### அக்மார்க் தரம் பிரிப்பு

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே நுகர்வோர்க்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்கள் மற்றும் ஒரு முதன்மை அக்மார்க் ஆய்வகம் செயல்பட்டு வருகின்றன.

அக்மார்க் தரம் பிரிப்பின் கீழ் மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பண்டங்கள் மற்றும் மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்படாத பண்டங்கள்,



பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் தரம் பிரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற தரம் பிரிப்பாளர்களுக்கு அக்மார்க் முத்திரைச் சீட்டுகள், உணவு பொருள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் நிதியாண்டில் சேலம், மதுரை, கோவை ஆகிய மூன்று அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த அரசு 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம், மாநில அரசின் செயலாணை எண் 2852, வேளாண்மைத் துறை நாள் 24-10-1970-ன்படி அமைக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

தன்னிலை அதிகாரம் இல்லாத வாரியமாக இயங்கி வந்த தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் 1-2-1991 முதல் அமல்படுத்தப்பட்ட தமிழ்நாடு விளைபொருட்கள் விற்பனைச் (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படி மற்றும் அரசாணை எண் 299, வேளாண்மை (வே.வி.1) துறை, நாள் 13-6-1995 மூலம் தன்னிலை அதிகாரம் பெற்ற வாரியமாக இயங்கி வருகிறது. வாரியத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

### 1. விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள்

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விற்பதால் அடையும் நன்மைகள் குறித்து விரிவான விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 4 மையங்கள் மூலமாகச் செய்து வருகிறது.

### 2. விவசாயிகள் மற்றும் விற்பனைத் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

வாரியத்தின் பயிற்சி பிரிவு, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையம் மூலமாக விற்பனைத் துறையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சியினை நடத்தி வருகிறது. இப்பயிற்சி மையத்தின் மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :

1. தரம் பிரிப்பாளர் பயிற்சி.
2. விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி.
3. விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம்.

## 3. கட்டுமானப் பணிகள்

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்திலுள்ள பொறியியல் பிரிவு, விற்பனைக் குழுக்களின் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், உலர் களங்கள், ஏலக்கொட்டகைகள், வணிக வளாகங்கள், விவசாயிகள் இடுபொருள் கடைகள், பணப் பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்திற்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15% தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50% சந்தை அபிவிருத்தி நிதிக்காக ஒதுக்கீடு செய்து விற்பனைக் குழு அபிவிருத்திக்காகச் செலவிடப்படுகிறது. மீதமுள்ள 50% தொகை வாரிய நிர்வாகத்திற்கும் விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி உள்ளிட்ட வாரியத்தின் இதரப் பணிகளுக்காகவும் செலவிடப்படுகிறது.

## செயல்படுத்திடும் திட்டங்கள்

### 1. பன்னாட்டு மலர் ஏல மையம், சென்னை

சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 20 கோடி மதிப்பில், பன்னாட்டு மலர் ஏல மையம் ஒன்று மலர் உற்பத்தியாளர்கள், உள்நாடு மற்றும் வெளி நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்மையத்தின் மூலம் உள்நாடு மற்றும் வெளி நாட்டில் ஏற்றுமதி விற்பனைக்கு ஏற்ற வகையில் ஏல மையத்தில் கட்டுப்படுத்தப்பட்ட சீதோஷ்ண நிலையில் ஏற்றுமதிக்காக வளர்க்கப்படும் மலர்கள் மற்றும் உள்நாட்டு பாரம்பரிய மலர்கள் ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். இந்த பன்னாட்டு மலர் ஏல மையம்,



'அபீடா' புதுடெல்லி, தமிழ்நாடு அரசு மைய அரசு நிறுவனமான மற்றும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் நிதியுதவியுடன் அமைக்கப்படுகிறது. இம்மையம் அமைப்பதற்காக பள்ளிக்கரணை கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலத்தினைக் கையகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்பன்னாட்டு மலர் ஏல மையம் நிறுவனத்திற்காக தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம், தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தி நிறுவனத்திற்கு (டான்ஹோப்) ரூ. 5 கோடியைக் கடனாக வழங்க அரசு உத்தரவு வழங்கியுள்ளது.

### 2. நெல் வணிக வளாகம், மதுரை

மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதியில் ரூ. 11.58 கோடி செலவில் நெல் விற்பனைக்கென புதிய விற்பனை வளாகம் அமைக்கப்பட உள்ளது. தற்போது மதுரையில் நெல்பேட்டை என்ற இடத்தில் இயங்கி வரும் நெல் விற்பனை மையம் மிகுந்த நெருக்கடியான இடத்தில் இயங்கி வருவதால், நெருக்கடியைத் தவிர்த்திட புதிய இடத்தில் எல்லா வசதிகளுடன் நிறுவப்பட உள்ளது. இம்மையம் அமைப்பதற்காக மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான 9.03 ஏக்கர் நிலம் மதுரை விற்பனைக் குழுவால் வாங்கப்பட்டு, அந்நிலம் உடைமையாக்கப்பட்டுள்ளது. நெல் மையம் அமைப்பதற்கான அடிப்படை சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி வேளாண்மை நிதிக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட செயல்பாட்டிற்காக மதுரை விற்பனைக் குழுவிற்குத் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரிய நிதியிலிருந்து ரூ. 1.00 கோடி கடனாக வழங்க அரசு உத்தரவு வழங்கியுள்ளது.

### 3. கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

அறுவடைக்குப்பின் ஏற்படும் மொத்த தானிய இழப்பான 9.33%-ல் சரியான உலர் கள வசதியின்மையால், 1.68% இழப்பு ஏற்படுகிறது. அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை ஓரளவிற்குக் குறைப்பதற்காக ஆறு மாவட்டங்களில் 60 கிராமங்களில் 60 x 20 மீட்டர் பரப்பளவில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பில் விற்பனைக் குழு உபரி நிதியிலிருந்து உலர் களங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 53 இடங்களில் உலர் களங்கள் அமைக்கும் பணி முடிவடைந்துவிட்டது. மீதமுள்ள 7 இடங்களில் பணிகள் விரைவில் முடிக்கப்படும். இவ்வுலர் களங்கள் கிராமப் பஞ்சாயத்தால் பராமரிக்கப்படும். இவ்வுலர் களங்கள் மூலம்

[1998 ஏப்ரல் 7

விளை பொருட்களின் தரம் உயர்த்தப்பட்டு அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு ஓரளவு குறைக்கப்படும்.

### 4. இலவச மருத்துவ வசதி

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் விவசாயிகள் விளை பொருட்கள் விற்பனை செய்வதை ஊக்குவிப்பதற்காகவும், விவசாயிகளின் உடல் நலனைப் பாதுகாக்கவும், 1997-98 ஆம் நிதியாண்டில் "இலவச மருத்துவ மையம்" என்ற ஒரு முன்னோடித் திட்டத்தை 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பகுதி நேர பதிவு பெற்ற மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு, விற்பனைக் குழு நிதியிலிருந்து இம்மையங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இதுவரை 6 மையங்கள் துவக்கப்பட்டு, நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 4 மையங்கள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

### 5. கரும்பு வெல்ல வணிக வளாகம், திருச்சி

திருச்சி மாநகரத்தின் மத்தியில் உள்ள திருச்சி கிளைச் சிறைச்சாலைக்குச் சொந்தமான 7.52 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 13.30 கோடி மதிப்பில் கரும்பு வெல்ல வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது. தற்போது திருச்சியில் செயல்பட்டு வரும் வெல்ல மண்டி புதிய வெல்ல விற்பனை வணிக வளாகத்திற்கு மாற்றப்படுவதால், இவ்விடத்தில் உள்ள நெரிசலைத் தவிர்க்க முடியும். இம்மையத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் திருச்சி விற்பனைக் குழுவிற்கு மாற்றம் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்க குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

### 6. மஞ்சள் விற்பனை வணிக வளாகம், ஈரோடு

மஞ்சள் விற்பனைக்கென அனைத்து வசதிகளுடன் நவீன மஞ்சள் விற்பனை வளாகம் ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டில் அமைக்கப்பட உள்ளது. அனைத்து மொத்த மஞ்சள் விற்பனையும் ஈரோடு நகரில் நடைபெறுவதால், இதற்கெனத் தனியாக மஞ்சள் விற்பனை வளாகம் ஒன்று ஈரோட்டில் அமைப்பது விவசாயிகளின் நீண்ட நாளையத் தேவையாகும். இவ்வணிக வளாகம் அமைப்பதற்கென நிலம் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இவ்வணிக வளாகம் அமைப்பதற்குத் தகுதியான ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், மஞ்சள் வணிக வளாகம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படும்.



1998 ஏப்ரல் 7]

### 7. அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்துதல்

சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநில அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்தும் பொருட்டு, 6 நவீன உபகரணங்கள், ரூ. 30.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

### 8. வேளாண்மை விற்பனை இயக்ககத்திற்குக் கணிப்பொறி, ஜெராக்ஸ் மற்றும் பேஃக்ஸ் கருவிகள் வாங்குதல்

வேளாண்மை விற்பனை இயக்ககத்திற்குக் கணிப்பொறி, ஜெராக்ஸ் மற்றும் பேஃக்ஸ் கருவிகள் வாங்க ரூ. 3.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, கருவிகள் வாங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### 9. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப் படவுள்ள புதிய வணிக வளாகங்கள்

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க உதவிடும் பொருட்டும் மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட வணிக வளாகங்கள் அமைத்திட தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. பருத்தி வணிக வளாகம், தேனி.
2. காய்கறிகள் வணிக வளாகம், மேட்டுப்பாளையம்.
3. காய்கறிகள் வணிக வளாகம், உடுமலைப்பேட்டை.
4. தேங்காய் வணிக வளாகம், பட்டுக்கோட்டை.

[1998 ஏப்ரல் 7

## அட்டவணை 1

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மையம் குறித்த விவரங்கள்

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | துணை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங் கிகள் | வணிக முறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | காஞ்சிபுரம் | 14 | 1 | 3 | 5 | 7 | - | - |
| 2. | வேலூர் | 12 | - | - | 4 | 5 | - | - |
| 3. | திருவண்ணாமலை | 16 | - | - | 7 | 10 | - | - |
| 4. | கடலூர் | 10 | 1 | 3 | 5 | 6 | - | - |
| 5. | விழுப்புரம் | 18 | - | - | 7 | 13 | 1 | - |
| 6. | சேலம் | 19 | - | 5 | 2 | 6 | - | - |
| 7. | தருமபுரி | 16 | - | 2 | 4 | 5 | - | - |
| 8. | கோவை | 18 | 5 | 5 | 12 | 2 | 3 | - |
| 9. | ஈரோடு | 23 | 6 | 5 | 7 | 10 | 2 | 1 |
| 10. | திருச்சி | 19 | 2 | 4 | 10 | 4 | - | - |
| 11. | தஞ்சாவூர் | 29 | - | 7 | 7 | 5 | - | - |
| 12. | புதுக்கோட்டை | 10 | - | 3 | 2 | 2 | - | - |
| 13. | மதுரை | 21 | - | 1 | 8 | 7 | 1 | - |
| 14. | இராமநாதபுரம் | 20 | - | 1 | 10 | 6 | 1 | - |
| 15. | திருநெல்வேலி | 19 | - | 1 | 13 | 6 | 3 | - |
| 16. | கன்னியாகுமரி | 6 | - | 4 | 5 | 2 | - | - |
| | மொத்தம் | 270 | 15 | 44 | 108 | 96 | 11 | 1 |



1998 ஏப்ரல் 7]

## அட்டவணை 2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சொந்த நிலம் | கட்டிடம் | ஊரகக் கிட்டங்கி | பரிவர்த் தனைக் கூடம் | உலர் களம் | விவசாயி கள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | காஞ்சிபுரம் | 7 | - | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2. | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3. | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4. | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5. | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6. | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | - | 4 | 3 |
| 7. | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8. | கோவை | 18 | 58 | 12 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9. | ஈரோடு | 14 | 12 | 7 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10. | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11. | தஞ்சாவூர் | 12 | 12 | 7 | 20 | 9 | 8 | 11 | 11 |
| 12. | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13. | மதுரை | 14 | 1 | 8 | 10 | 16 | 4 | 10 | 12 |
| 14. | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15. | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16. | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |

[1998 ஏப்ரல் 7

**அட்டவணை 3**

**விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

**1. காஞ்சிபுரம்**

1. காஞ்சிபுரம்
2. திருத்தணி
3. திருவள்ளூர்
4. செங்குன்றம்
5. மதுராந்தகம்
6. உத்திரமேரூர்
7. பொன்னேரி
8. திருக்கழுக்குன்றம்
9. சுங்குவார்சத்திரம்
10. பள்ளிப்பட்டு
11. ஊத்துக்கோட்டை
12. அச்சிரப்பாக்கம்
13. கும்மிடிப்பூண்டி
14. நசரத்பேட்டை

**2. வேலூர்**

1. வேலூர்
2. திருப்பத்தூர்
3. ஆற்காடு
4. அரக்கோணம்
5. வாணியம்பாடி
6. காவேரிப்பாக்கம்
7. குடியாத்தம்
8. கலவை
9. அம்மூர்
10. காட்பாடி
11. ஆம்பூர்
12. திமிரி

**3. திருவண்ணாமலை**

1. திருவண்ணாமலை
2. ஆரணி
3. வந்தவாசி
4. சேத்துப்பட்டு
5. செய்யார்
6. போளூர்
7. செங்கம்
8. புதுப்பாளையம்
9. வானாபுரம்
10. வேட்டவலம்
11. தெள்ளார்
12. மங்கல மாமண்டூர்
13. தேசூர்
14. பெருமணல்லூர்
15. தூசி
16. கீழ்பென்னாத்தூர்

**4. கடலூர்**

1. விருத்தாசலம்
2. கடலூர்
3. பண்ருட்டி
4. திட்டக்குடி
5. காட்டுமன்னார்கோவில்
6. சிதம்பரம்
7. குறிஞ்சிப்பாடி
8. சேத்தியாதோப்பு
9. ஸ்ரீமுஷ்ணம்
10. புவனகிரி

**5. விழுப்புரம்**

1. திண்டிவனம்
2. திருக்கோவிலூர்
3. உளுந்தூர்பேட்டை
4. விழுப்புரம்
5. சின்னசேலம்
6. கள்ளக்குறிச்சி
7. செஞ்சி
8. தியாகதுர்கம்
9. சங்கராபுரம்
10. திருவெண்ணெய்நல்லூர்
11. மணலூர்பேட்டை
12. அவலூர்பேட்டை
13. மரக்காணம்
14. விக்ரவாண்டி
15. அனந்தபுரம்
16. வளத்தி
17. மூங்கில்துரைப்பட்டு
18. கிளியனூர்



1998 ஏப்ரல் 7]

**அட்டவணை 3—தொடர்ச்சி**

**விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்—தொடர்ச்சி**

**6. சேலம்**

1. சேலம்
2. ஆத்தூர்
3. நாமக்கல்
4. ராசிபுரம்
5. திருச்செங்கோடு
6. சங்ககிரி
7. கொங்கணாபுரம்
8. கொளத்தூர்
9. வெல்லூர்
10. மேச்சேரி
11. வாழப்பாடி
12. தம்மம்பட்டி
13. நாமகிரிப்பேட்டை
14. தலைவாசல்
15. ஓமலூர்
16. காடையம்பட்டி
17. கங்கவல்லி
18. கருமந்துறை
19. சோளக்காடு

**7. தருமபுரி**

1. தருமபுரி
2. கிருஷ்ணகிரி
3. ஓசூர்
4. கெலமங்கலம்
5. பாலக்கோடு
6. பொன்னகரம்
7. போச்சம்பள்ளி
8. காவேரிப்பட்டினம்
9. ஊத்தங்கரை
10. அரூர்
11. பாப்பிரெட்டிபட்டி
12. கொளத்தூர்
13. பர்கூர்
14. ராயக்கோட்டை
15. தென்கனிக்கோட்டை
16. பாப்பாரப்பட்டி

**8. கோயம்புத்தூர்**

1. திருப்பூர்
2. அவினாசி
3. சேவூர்
4. அன்னூர்
5. காரமடை
6. கோயம்புத்தூர்
7. சூலூர்
8. பல்லடம்
9. உடுமலைப்பேட்டை
10. ஆனைமலை
11. பொள்ளாச்சி
12. மலையடிப்பாளையம்
13. நெகமம்
14. கிணத்துக்கடவு
15. தொண்டாமுத்தூர்
16. மடத்துக்குளம்
17. பெத்தீப்பம்மபட்டி
18. பொங்கலூர்

**9. ஈரோடு**

1. ஈரோடு
2. அவல்பூந்துறை
3. கொடுமுடி
4. சிவகிரி
5. சித்தோடு
6. பவானி

**10. திருச்சிராப்பள்ளி**

1. ஜெயங்கொண்டம்
2. கரூர்
3. அரியலூர்
4. மணப்பாறை
5. ஆண்டிமடம்
6. துறையூர்

**11. தஞ்சாவூர்**

1. அதிராமபட்டினம்
2. அம்மாப்பேட்டை
3. பூதலூர்
4. கும்பகோணம்
5. மதுக்கூர்
6. ஒரத்தநாடு

[1998 ஏப்ரல் 7

## அட்டவணை - 3—தொடர்ச்சி

### விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்—தொடர்ச்சி

**9. ஈரோடு**
(தொடர்ச்சி)

7. பூதப்பாடி
8. அந்தியூர்
9. மைலம்பாடி
10. கவுந்தம்பாடி
11. கோபி
12. நம்பியூர்
13. வெள்ளக்கோவில்
14. சத்தியமங்கலம்
15. புஞ்சைபுளியம்பட்டி
16. தாளவாடி
17. பெருந்துறை
18. [illegible]த்தூர்
19. காங்கேயம்
20. வெள்ளாங்கோவில்
21. தாராபுரம்
22. மூலனூர்
23. அலங்கியம்

**10. திருச்சிராப்பள்ளி**
(தொடர்ச்சி)

7. பெரம்பலூர்
8. லால்குடி
9. திருச்சிராப்பள்ளி
10. தொட்டியம்
11. மணச்சநல்லூர்
12. குளித்தலை
13. துவரங்குறிச்சி
14. இரும்பூதிப்பட்டி
15. சின்னதாராபுரம்
16. புள்ளம்பாடி
17. தாத்தயங்கார்பேட்டை
18. மேலணைக்குழி
19. அரும்பாவூர்

**11. தஞ்சாவூர்**
(தொடர்ச்சி)

7. பட்டுக்கோட்டை
8. பாபநாசம்
9. பேராவூரணி
10. தஞ்சாவூர்
11. வல்லம்
12. திருப்பணந்தாள்
13. வலங்கைமான்
14. பாப்பாநாடு
15. கிவலூர்
16. கொரடாசசேரி
17. குத்தாலம்
18. மன்னார்குடி
19. மயிலாடுதுறை
20. நாகப்பட்டினம்
21. பூந்தோட்டம்
22. செம்பனார்கோவில்
23. சீர்காழி
24. வேதாரண்யம்
25. வடுவூர்
26. கடைவாசல்
27. திருப்பூண்டி
28. திருவாரூர்
29. திருத்துறைப்பூண்டி



1998 ஏப்ரல் 7]

## அட்டவணை 3—தொடர்ச்சி

### விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்—தொடர்ச்சி

**12. புதுக்கோட்டை**

1. ஆலங்குடி
2. அறந்தாங்கி
3. புதுக்கோட்டை
4. கந்தர்வகோட்டை
5. ஆவுடையார்கோவில்
6. கீரனூர்
7. கீரமங்கலம்
8. பொன்னமராவதி
9. இலுப்பூர்
10. கரம்பக்குடி

**13. மதுரை**

1. தேனி
2. திண்டுக்கல்
3. திருமங்கலம்
4. ஒட்டன்சத்திரம்
5. உசிலம்பட்டி
6. பழனி
7. நத்தம்
8. கம்பம்
9. வத்தலகுண்டு
10. மேலூர்
11. போடிநாயக்கனூர்
12. சின்னமனூர்
13. மதுரை
14. கோபால்பட்டி
15. டி. கல்லுப்பட்டி
16. வாடிப்பட்டி
17. வடமதுரை
18. ஆண்டிப்பட்டி
19. வேடசந்தூர்
20. உத்தமபாளையம்
21. பெரியகுளம்

**14. இராமநாதபுரம்**

1. விருதுநகர்
2. இராஜபாளையம்
3. சாத்தூர்
4. அருப்புக்கோட்டை
5. ஸ்ரீவில்லிபுத்தூர்
6. வத்திராயிருப்பு
7. வெம்பக்கோட்டை
8. சிவகங்கை
9. திருபுவனம்
10. மானாமதுரை
11. சிங்கம்புணரி
12. காரைக்குடி
13. இளையான்குடி
14. தேவகோட்டை
15. இராமநாதபுரம்
16. பரமக்குடி
17. கமுதி
18. திருவாடானை
19. இராசசிங்கமங்கலம்
20. முதுகுளத்தூர்

[1998 ஏப்ரல் 7

## அட்டவணை 3—தொடர்ச்சி

### விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்—தொடர்ச்சி

**15. திருநெல்வேலி**

1. கோவில்பட்டி
2. சங்கரன்கோவில்
3. தூத்துக்குடி
4. புதூர்
5. கடம்பூர்
6. கழுகுமலை
7. தென்காசி
8. அம்பாசமுத்திரம்
9. வள்ளியூர்
10. ஸ்ரீவைகுண்டம்
11. திருநெல்வேலி
12. விளாத்திகுளம்
13. கடையநல்லூர்
14. திசையன்விளை
15. பாவூர் சத்திரம்
16. திருவேங்கடம்
17. எட்டையபுரம்
18. சிவகிரி
19. ஆலங்குளம்

**16. கன்னியாகுமரி**

1. ஈத்தாமொழி
2. வடசேரி
3. களியக்காவிளை
4. திங்கள் சந்தை
5. குலசேகரம்
6. தொடுவட்டி



1998 ஏப்ரல் 7]

## அட்டவணை 4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்.

| | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை (வடக்கு), (தெற்கு) மற்றும் முதன்மை ஆய்வகம் |
| 2. | வேலூர் | வேலூர் |
| 3. | கடலூர் | பண்ருட்டி |
| 4. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1, திருச்சிராப்பள்ளி-2 |
| 6. | கரூர் | கரூர் |
| 7. | மதுரை | மதுரை |
| 8. | தேனி | தேனி |
| 9. | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10. | விருதுநகர் | விருதுநகர் |
| 11. | சிவகங்கை | சிவகங்கை |
| 12. | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 13. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 14. | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 15. | சேலம் | சேலம் |
| 16. | தருமபுரி | தருமபுரி |
| 17. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 18. | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு 1, 2, காங்கேயம் 1, 2 வெள்ளக்கோவில், சித்தோடு |

[1998 ஏப்ரல் 7

## அத்தியாயம் 9

## வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்

### 1. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டமானது உலக வங்கி நிதி உதவியுடன் 1991-92 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஓர் ஏழாண்டு கால பலதுறைத் திட்டமாகும். உலக வங்கி மேற்சொன்ன திட்டத்தினை இடைக்கால ஆய்வு செய்து திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை ரூ. 309.29 கோடியிலிருந்து ரூ. 409.52 கோடியாக உயர்த்தி ஒப்பளிப்பு அளித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் இறுதி ஆண்டாகும்.

இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 409.52 கோடியில் ரூ. 332.80 கோடி கீழே குறிப்பிட்டுள்ள திட்டப் பணிகளுக்கு பிப்ரவரி 1998 முடிய செலவிடப்பட்டுள்ளது :—

| திட்டப்பணி (1) | திட்ட ஒதுக்கீடு (2) | செலவினம் (ரூபாய் கோடியில்) பிப்ரவரி 1998 வரை (3) |
|---|---|---|
| வேளாண்மைத் திட்டமிடல் | 13.07 | 5.35 |
| வேளாண்மை விரிவாக்கம் | 78.24 | 52.33 |
| விதை உற்பத்தி | 12.82 | 10.65 |
| நீர்ப்பிரிமுகடு மேம்பாடு | 29.43 | 25.47 |
| கால்நடை மேம்பாடு | 45.05 | 41.51 |
| காடு வளர்ப்பு | 57.62 | 49.91 |
| கிராமப்புறச் சாலைகள் | 123.35 | 101.62 |
| கிராமப்புற குடிநீர் வசதி | 49.94 | 45.96 |
| **மொத்தம்** | **409.52** | **332.80** |



1998 ஏப்ரல் 7]

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

அ. அபிவிருத்தித் தடைகளைக் கண்டறிந்து அதைக் களைவதற்கான வழிமுறைக்கு முன்னுரிமை அளித்து அரசின் செயல்திறனை மேம்படுத்துதல்.

ஆ. விவசாயிகளுக்கு செலவிற்கேற்ற பலன் உள்ள சேவைகளை உருவாக்குதல்.

இ. மாநில வேளாண்மை தொலைநோக்குத் திட்டங்களில் விரிவாகக் கண்டறியப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி இனங்களில் மாநில அரசின் முதலீட்டு முன்னுரிமைகளுக்குத் துணை செய்தல்.

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்ட குறிப்பான குறிக்கோள்கள் பின்வருமாறு:—

அ. உயர் உற்பத்தி மற்றும் வருவாய் மூலம் ஊரக ஏழ்மையைப் போக்குதல்.

ஆ. இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் மானாவாரி நிலங்களைப் பாதுகாத்தல்.

இக்குறிக்கோள்களை அடைய, கீழ்க்காணும் இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

1. வேளாண்மைத் திட்டமிடுதல்.
2. வேளாண்மை விரிவாக்கம்.
3. விதை உற்பத்தி.

**வேளாண்மைத் திட்டமிடல் :**

மாநில மற்றும் மாவட்ட அளவில் திட்ட செயல்திறனைச் செம்மைப்படுத்துவது இத்திட்ட இனத்தின் நோக்கமாகும். இவ்வினத்தின் முதல் நடவடிக்கையாக துணை வேளாண்மை இயக்குநர் (கொள்கை, திட்டம், மேலாண்மை) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வலுவலர்கள் மாவட்ட அளவில் வேளாண் துறை நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வரன்முறை செய்து செயல்படுத்த உதவி வருகிறார்கள். இதுபோல் மாநில அளவில் திட்டப்பிரிவும் செம்மைப்படுத்தப்பட்டு வரன்முறை மற்றும் மதிப்பீடு பிரிவு, கொள்கை, திட்டம் மற்றும் மேலாண்மைப் பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. இத்துறையின் மேலாண்மைத் தகவல் முறையை மேலும்

செம்மைப்படுத்தும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிப்பொறிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இப்பணிக்காக ரூ. 7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக தலைமையிடத்திலும் கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 3 மாவட்டத் தலைமை அலுவலகங்களிலும் ரூ. 60 இலட்சம் செலவில் கணிப்பொறி இயந்திரங்கள் வாங்கி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. 250 இலட்சத்தில் மீதமுள்ள நிதியில் மாநிலத்தில் உள்ள 38 ஆய்வகங்களில் மார்ச் 1998-க்குள் கணிப்பொறி வாங்கி அமைக்கப்படும். 1998-99 ஆம் ஆண்டில் மீதமுள்ள 24 மாவட்ட தலைமையிடங்களுக்குக் கணிப்பொறி வசதி அமைக்க ரூ. 216 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் வட்ட அளவிலான துறைப் பணியாளர்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ள துவாக்குடி பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்பட்டனர். களைப்பு தவிர்க்கும் கருவிகள் மாநில மற்றும் மாவட்ட திட்ட அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1998 வரை ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 774.02 இலட்சத்தில் ரூ. 204.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதி 38 ஆய்வகக் கணிப்பொறி மற்றும் தகவல் நிறுவன ஆய்விற்கு மார்ச் 1998-க்குள் செலவிடப்படும்.

## வேளாண்மை விரிவாக்கம்

வேளாண் விரிவாக்கத்தைப் பலமுனைப்படுத்தும் நோக்கத்துடன் விவசாயிகளை ஈடுபடுத்தும் வகையில் ஒரு வட்டாரத்திற்கு 10 மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்துறையைச் சேர்ந்த முதுநிலை மற்றும் நடுநிலை அலுவலர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் விரிவாக்கத் திறமைகளை வலுப்படுத்தும் வகையில் குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் இயக்குநர் அலுவலகத்திற்குக் கூடுதல் இடவசதி அளிக்க, இரண்டு தளங்கள் கொண்ட கட்டடம் கட்டவும் 23 வேளாண் உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் கட்டவும், 5 வேளாண் இணை இயக்குநர்கள் அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் ரூ. 1007 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் உபரியாக 3 தளம் கட்டவும், 9 வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள்





கட்டவும், 33 வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கட்டடங்கள் கட்டவும் ரூ. 2137.74 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு கட்டடப்பணி பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ. 2703.82 இலட்சத்தில் (கட்டடங்கள் உட்பட) பிப்ரவரி 1998 வரை இவ்வினத்தில் ரூ. 853.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## விதை உற்பத்தி

விவசாயிகளுக்குத் தரமான விதைகளை விநியோகம் செய்யும் நோக்கத்துடன், கிடங்குகள், கதிரடிக்கும் களங்கள், பண்ணை மேம்பாட்டுப் பணிகள், முள்வேலி அமைத்தல், கிணறுகள் தோண்டுதல், பம்பு செட்டுகள் அமைத்தல் ஆகிய உள்ளிருப்பு வசதிகள் மூலம் ஆதார விதை உற்பத்தி மாநில விதைப் பண்ணைகளில் இவ்வினத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வினத்தில் திட்டத்தில் ஏழு ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 220.98 இலட்சம் முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது.

## ஒருங்கிணைந்த நீர்ப்பிரிமுகடு மேம்பாடு

பாலாறு மற்றும் வெள்ளாறு நீர்பிடிப்புப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரிப் பகுதிகளில் சாகுபடிக்கு உகந்த மற்றும் சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், மண்ணின் ஈரத்தன்மையை முடிந்த வரை உபயோகித்தல், மண் மற்றும் நீர்ப் பராமரிப்பு மூலம் அதிகப்படியான நீர் வழிந்து ஓடுவதைக் கட்டுப்படுத்துதல், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தி விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் விரிவாக்கம் 18 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட இனங்கள் திட்டப் பகுதி மற்றும் விரிவு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## திட்டப்பகுதி

1. சரிவிற்குக் குறுக்கே தாவரத் தடுப்பு
2. மரப் பயிர்
3. தோட்டக்கலை

[1998 ஏப்ரல் 7

4. பயிர் செயல் விளக்கங்கள்
5. மறுகாடு வளர்ப்பு மற்றும் மறுவாழ்வு
6. தீவன மேம்பாடு
7. வடிகால் வசதி அமைத்தல்

**விரிவுப் பகுதி**

1. சரிவுக்குக் குறுக்கே தாவரத் தடுப்பு
2. மரப் பயிர்
3. தோட்டக்கலை மற்றும் மரம் வளர்த்தல்
4. செயல் விளக்கங்கள்
5. ஆட்குறைப்புக் கருவிகள்

1998-99-ல் இத்திட்டம் செப்டம்பர் 1998 வரை செயல்பட உள்ளது. ஆகையால் ஏப்ரல் 1998 முதல் செப்டம்பர் 1998 வரை இத்தேவை கீழ்க்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | 7 வருட மொத்தம் | பிப்ரவரி 1998 முடிய சாதனை | 1998-99-ன் தேவை |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மைத் திட்டமிடல் | 984.80 | 401.73 | 3.50 |
| 2. | வேளாண் விரிவாக்கம் | 7749.36 | 5233.13 | 308.74 |
| 3. | விதை உற்பத்தி | 220.98 | 220.98 | 253.36 |
| 4. | ஒருங்கிணைந்த நீர்ப்பிரிமுகடு மேம்பாடு | 2943.00 | 2547.25 | 181.45 |
| | மொத்தம் .. | **11898.14** | **8403.09** | **747.05** |

**தோட்டக்கலை**

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்குத் தேவையான அடிப்படை ஆதார வசதிகள் செய்து தரப்படுகின்றன. திட்டப் பணிகள் அனைத்தும் செப்டம்பர் 1998-க்குள் நிறைவு பெறும் என



1998 ஏப்ரல் 7]

எதிர்பார்க்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட பணிகள் நிறைவேறும் பொருட்டு ரூ. 100 இலட்சம் இத்திட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**2. வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்**

வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 1995-96 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ரூ. 98.29 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் ஐந்தாண்டுகால பல்துறைத் திட்டமாகும். இதன் நோக்கங்கள் பின்வருமாறு :

அ. பெருகி வரும் வேளாண் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு பல்கலைக்கழக வேளாண் கல்வியின் பாடத் திட்டத்தை வலுப்படுத்துதல்.

ஆ. வேளாண் துறை மற்றும் சார்புத் துறைகளின் பணியாளர்கள் புதிய மற்றும் கடினமான பணிகளைச் செய்வதற்கு ஏதுவாக பணியிடைப் பயிற்சி அளித்தல்.

இ. வேளாண் பிரிவு மேம்பாட்டினை வளர்க்க வேளாண் பிரிவு மனித ஆற்றலை மேலாண்மை செய்தல்.

இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 98.29 கோடியில் பிப்ரவரி 1998 முடிய ரூ. 20.19 கோடி கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது :

| வ. எண் | பணிகள் | திட்ட ஒதுக்கீடு | செலவினம் பிப்ரவரி 1998 முடிய | 1998-99 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் | 3872.21 | 1033.25 | 242.34 |
| 2. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 2389.16 | 739.28 | 389.28 |
| 3. | வேளாண்மை | 165.70 | 47.22 | 30.63 |
| 4. | தோட்டக்கலை | 306.02 | 46.04 | 54.08 |
| 5. | வேளாண் பொறியியல் | 207.60 | 43.62 | 35.04 |

[1998 ஏப்ரல் 7

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 6. | வனம் | 243.79 | 39.72 | 27.92 |
| 7. | கால்நடை பராமரிப்பு | 366.29 | 29.80 | 37.02 |
| 8. | மீன்வளம் | 197.89 | 23.44 | 35.46 |
| 9. | மனித சக்தி தேவை மதிப்பீடு | 35.25 | 0.92 | 1.05 |
| 10. | திட்ட மேற்பார்வை மற்றும் செயலாக்கப் பிரிவு | - | 15.78 | 11.40 |
| 11. | பொருட்கள் எதிர்பாராச் செலவினம் | - | - | - |
| 12. | விலையில் எதிர்பாராச் செலவினம் | - | - | - |
| 13. | பணியிடை மற்றும் நிர்வாகம் மனித சக்தி மேம்பாடு/மனித சக்தி மேலாண்மை | 06.91 | - | - |
| | மொத்தம் | 9829.58 | 2019.07 | 864.22 |

*1998-99 ஆம் ஆண்டுக்காக ரூ. 864.22 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

## (அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தியது. இத்திட்டத்தில் 5 வருடங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 38.72 கோடியாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் கல்வி மற்றும் பாடத் திட்டங்களைப் புதுப்பித்தல், கல்வி உத்திகளை ஊக்குவித்தல், ஆய்வுக்கூடக் கருவிகள், கணிப்பொறிகள், நூலகங்கள், மாணவ விடுதிகள் ஆகியவற்றை நவீனப்படுத்துதல், மாணவர்களுக்கு வழிகாட்டி வேலைவாய்ப்புகளுக்குத் துணை நிற்றல் போன்றன இத்திட்டத்தின் அங்கங்களாகும். இதுவரை இவ்வாண்டில் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டுதல், வெளிநாடு மற்றும் உள்நாட்டில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி, நூலக மேம்பாடு மற்றும் ஆய்வுக் கூடங்களுக்கான அறிவியல் இயந்திரங்கள் மற்றும் கருவிகள்



1998 ஏப்ரல் 7]

வாங்கி உபயோகித்ததன் மூலம் ரூ. 3.64 கோடி செலவாகி உள்ளது. வேளாண்மை இளங்கலைப் பட்டப்படிப்புக்குத் தேவையான மிக முக்கிய சோதனைக் கருவிகள், இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் நலனுக்காக 39 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்களுக்கான தேர்வு எழுதும் கூடம், மருத்துவமனை, உணவு விடுதி மேம்பாடு, 26 ஆசிரியர் குடியிருப்புகள், கணிப்பொறி மையம், மாணவர் நல மையம் மற்றும் 6 வந்துபோகும் பேராசிரியர்களுக்கான குடியிருப்புகள் போன்ற கட்டடப் பணிகள் மிகத் துரிதமாக நடந்து வருகின்றன.

மாணவர்களுக்கு வருடம் முழுவதும் பயிர்களை வளர்ப்பதற்கான முறைகளைச் செயல்படுத்த மாதிரி பயிர் வளர்ப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. சொட்டுநீர்ப் பாசனங்களும், சாண எரிவாயுக் கூடங்களும் அமைக்கப்பட்டு மாணவர்கட்குப் போதிக்கப்படுகிறது. மாணவர்களின் கல்வி பாடத் திட்டங்களை மேம்படுத்த உரம், விதை, பூச்சிக்கொல்லி, மலைப்பயிர் மற்றும் வேளாண்மைத் தொழில் சார்ந்த நிபுணர்கள் அடங்கிய முதல் கூட்டம் கூடி விவாதித்து பரிந்துரை கூறி உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களின் தொழிற்கல்வி செயல்திறனை அதிகரிக்க, பட்டப்படிப்பில் வணிகக் கல்வி பாடத் திட்டங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. இவற்றில் முக்கியமான வேளாண்மையில் ஏழு, தோட்டக்கலையில் இரண்டு, வேளாண் பொறியியலில் நான்கு மற்றும் வனத் துறையில் நான்கு பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பல்கலைக்கழகத்தில் கல்வி அறிவியல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஒன்று, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வனவியல் பாடங்களில் உள்ள மூத்த பேராசிரியர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 39 ஆசிரியர்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இதுகாறும் 14 ஆசிரியர்கள் இப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளிநாட்டுப் பயிற்சிக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், பிலிப்பைன்ஸ் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு மார்ச் கடைசிக்குள் மேலும் 10 ஆசிரியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

[1998 ஏப்ரல் 7

உள்நாட்டுப் பயிற்சியில் இதுகாறும் 151 ஆசிரியர்கள் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தில் 'நார்ம்' கல்வி தொழில்நுட்பத்தில் பயிற்சியை முடித்துள்ளனர். இதே பயிற்சியில் மேலும் 4 பேர் ஹரியானா வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஹிசாரில் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் 30 ஆசிரியர்கள் பல்வேறு வகையான பயிற்சிக்குச் சென்று வந்துள்ளனர். மேலும் 50 ஆசிரியர்கள் இந்த ஆண்டு பிப்ரவரி - ஏப்ரல் மாதங்களில் ஹரியானா வேளாண் பல்கலைக்கழகத்துக்கு கல்வி நுட்பத்தில் பயிற்சி பெற அனுப்பப்பட உள்ளனர்.

## (ஆ) வேளாண்மை

வேளாண் துறையில் மனித வள மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தப்பட்ட 1997-98 ஆம் ஆண்டின் இலக்கு பிப்ரவரி 1998 வரையிலான சாதனை ஆகிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| இனங்கள் (1) | இலக்கு (2) | பிப்ரவரி 1998 வரை சாதனை (3) |
|---|---|---|
| 1. வெளிநாட்டுப் பயிற்சி (எண்கள்) | 6 | .. |
| 2. உள்நாட்டுப் பயிற்சி (எண்கள்) | 20 | 25 |
| 3. கணிப்பொறிப் பயிற்சி (எண்கள்) | 50 | 77 |

1998-99-ல் இத்திட்டம் தொடரப்படும்.

## (இ) தோட்டக்கலை

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டு பதினான்கு அலுவலர்கள் "தோட்டக்கலை பயிர் உற்பத்தி தொழில் நுட்பம், திசு வளர்ப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட சாகுபடி" முறையில் பயிற்சிபெறும் பொருட்டு தாய்லாந்து மற்றும் நெதர்லாந்து நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவைதவிர உள்நாட்டுப் பயிற்சியின் மூலமும் துறை அலுவலர்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு இந்தியாவிலுள்ள பல்வேறு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு ரூ. 32.49 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றது. பிப்ரவரி 1998 முடிய ரூ. 18.44 இலட்சம்



1998 ஏப்ரல் 7]

செலவிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 32.49 இலட்ச மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## (ஈ) வேளாண்மைப் பொறியியல்

1995-96 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.207.60 இலட்சம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தலைமையிடத்தில் ஒரு மனித வள மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

1. பயிற்சியாளர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி அளித்தல்.
2. தேசிய பயிற்சி மையங்களில் சிறப்புப் பயிற்சி அளித்தல்.
3. திருச்சியில் இயங்கும் வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தை நவீனப்படுத்தி உயர்த்துதல் (பலப்படுத்துதல்)

1997-98 ஆம் ஆண்டில் தொலை உணர்வு, புவியியல் விவரங்கள் மற்றும் நுண்ணிய நீர்ப் பாசனம் தொடர்பான பயிற்சிக்கு அயல் நாட்டில் கொலராடோ பல்கலைக்கழகத்திற்கு ஒன்பது அலுவலர்கள் அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றனர். 1998-99 ஆம் ஆண்டில் நீர்வடிப்பகுதி மேம்பாடு, நில மேம்பாடு, வடிகால், நீர்ப் பாசன மேம்பாடு, நுண்ணிய நீர்ப்பாசன நுணுக்கங்கள் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி பெற 20 அலுவலர்கள் அனுப்பப்பட உள்ளனர். தலைமையிட மனித வள மேம்பாட்டுக் குழு மற்றும் திருச்சியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தைப் பலப்படுத்த ரூ. 18.72 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயப் பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் உணவுத் தன்னிறைவை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டமாகச் செயல்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் இராமநாதபுரம் மற்றும் சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் ரூ. 28.73 கோடி

ஒதுக்கீட்டுடன் 74,400 பண்ணை மகளிரை ஏழாண்டுகளில் பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.422.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பிப்ரவரி 1998 வரை ரூ.364.29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1997-98 ஆம் ஆண்டு இனவாரியான செயல் இலக்கு மற்றும் பிப்ரவரி 1998 சாதனை மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை பின்வருமாறு:—

| வ. எண். | இனம் | 1997-98 இலக்கு | பிப்ரவரி 1998 வரை சாதனை | 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கிராமப்புற பயிற்சி | 485 | 475 | 330 |
| 2. | சிறப்புப் பயிற்சி | 109 | 91 | 220 |
| 3. | பண்ணை மகளிர் மாநாடு | 109 | 85 | 220 |
| 4. | தொடர் நடவடிக்கை | 3142 | 2721 | 2530 |
| 5. | குழு அமைத்தல் | .. | .. | 220 |

## 4. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (கட்டம்-2)

திருநெல்வேலி விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி, திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சங்கரன்கோவில், இராதாபுரம் மற்றும் நாங்குநேரி வட்டங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தாங்குளம், திருச்செந்தூர் வட்டங்களிலும் மொத்தம் 120 கிராமங்கள் பயன்பெற செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில பங்காகிய ரூ.995.44 இலட்சம் சேர்த்து ரூ.4172.44 இலட்சம் செலவில் 42,500 எக்டேர் பரப்பு பயன்பெற ஏழு ஆண்டுகளில் செயல்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 5-8-1994-ல் துவங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டு, இத்திட்ட காலத்தின் நான்காவது ஆண்டு ஆகும். இத்திட்டத்தின் முக்கியப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



1. முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீர்வடிப் பகுதிகளின் விவசாயிகள் தங்களது மானாவாரி நிலம், தோட்டக்கலை நிலம் மற்றும் காடுகளில் இயற்கை வளங்களின் தரங்களைப் பாதுகாத்து உபயோகித்தல்.

2. முன்னுரிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் காற்று மற்றும் நீர் அரிமானத்தைக் கட்டுப்படுத்தல்.

3. விவசாயிகட்கு குறுகிய மற்றும் நீண்ட நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தல்.

இத்திட்டத்தில் தாவர அரண் அமைத்தல், வேளாண் காடுகள் மேம்பாடு, குழாய்க் கிணறுகள் அமைத்தல், தாவர அரண்கள், வேளாண் காடுகள், மேய்ச்சல் நிலங்கள் போன்றவற்றைப் பராமரித்தல், இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர், சிக்கனமான செலவின மரங்கள் மற்றும் வருடாந்தர பலன்தரும் மரங்கள் வளர்த்தல், மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு போன்ற பணிகள் முக்கியப் பணிகளாகும். 31-3-1997 முடிய உள்ள காலத்தில் 10,022 எக்டேரில் ரூ. 1010.66 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 5000 எக்டேர் பரப்பில் ரூ.448.94 இலட்சம் செலவில் பணி செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.474.42 இலட்சம் செலவில் 5,500 எக்டேரில் பணி செயலாக்கப்பட உள்ளது.

## 5. 'டானிடா' நிதி உதவியுடன் விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை வட்டங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், முதுகுளத்தூர் வட்டங்களிலும், மொத்தமாக 83 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநில அரசின் பங்காக ரூ. 71.39 இலட்சத்துடன் சேர்த்து ரூ. 1300.30 இலட்சம் செலவில் 11,000 எக்டேர் பயன்பெறும் வகையில், திட்ட முன்னோடி காலமாக 6 மாதம் சேர்த்து 5½ ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டதாகும். இத்திட்டம் 8-11-1994 அன்று தொடங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டு மூன்றாவது செயலாண்டு ஆகும். இத்திட்டத்தின் முக்கியப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீர்வடிப் பகுதிகளின் விவசாயிகள் தங்கள் மானாவாரி நிலம், தோட்டக்கலை நிலம் மற்றும் காடுகளில் இயற்கை வளங்களின் தரங்களைப் பாதுகாத்து உபயோகித்தல்.

2. முன்னுரிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் காற்று மற்றும் நீர் அரிமானத்தைக் கட்டுப்படுத்தல்.

3. விவசாயிகட்கு குறுகிய மற்றும் நீண்ட நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு அவர்களின் வருமானத்தை அதிகரித்தல்.

இத்திட்டத்தில் வேளாண் காடு மேம்பாடு, தாவர அரண் அமைத்தல், மேய்ச்சல் நில மேம்பாடு, இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர் மற்றும் சிக்கனமான செலவின மரங்கள் மற்றும் வருடாந்திர பலன் தரும் மரங்கள் வளர்த்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திட்ட துவக்க நாளிலிருந்து 31-3-1997 முடிய ரூ. 339.97 இலட்சம் செலவில் 2,535 எக்டேரில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 208.96 இலட்சம் செலவில் 1,200 எக்டேர் பரப்பு பயன்பெறும் வகையில் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 276.74 இலட்சம் செலவில் 1,320 எக்டேரில் பணி செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 10

## மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

### அ. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்)

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்) மற்றும் அதன் சார்புடைய வட்டார மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்கள், ஐந்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்கீழ் வேலையற்ற பொறியாளர்களுக்கும் மற்றும் திறன் வாய்ந்த தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் 1972-ல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம் மற்றும் அதன் சார்புச் சங்கங்களின் முக்கியக் குறிக்கோள்கள் வருமாறு :

1. புல்டோசர்கள், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றை வாடகைக்கு அளித்தல்.

2. வேளாண் மக்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசுச் சார்புடைய நிறுவனங்களுக்கும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்தல்.

3. வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகள் ஆகியவற்றைத் தயாரித்து வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்தல்.

4. இரசாயன உரம், இயற்கை உரம் போன்ற வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்.

5. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள் தயாரித்து விநியோகம் செய்தல் போன்ற பிற அரசு வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குதல்.

## 1. வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்

### அ. அக்ரோஃபெட்டின் வாடகைக்கு விடும் பணிகள்

1. விவசாயிகளின் தரிசு நிலத்தை மேம்படுத்தவும் அவைகளை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தவும் 5 டிராக்டர்

டோசர்களையும் 4 புல்டோசர்களையும் வாடகைக்கு விடும் பணியை அக்ரோஃபெட் செய்து வருகின்றது.

2. 2 ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டு பணியாற்றி வருகின்றது.

3. ஒரு ஆழ்துளையிடும் கருவியை விவசாயத்திற்காகவும் குடிநீர் வசதிக்காகவும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட வாடகைக்கு விட்டு வருகின்றது.

4. 5 சாலை உருளைகளை ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிராமப்புறச் சாலைகள் அமைப்பதன் பொருட்டு வாடகைக்கு விட்டு வருகின்றது.

**ஆ. சார்புச் சங்கங்களின் வாடகைக்கு விடும் பணிகள்**

அக்ரோஃபெட் சார்பு மையங்கள் 10 டிராக்டர் டோசர்கள், 185 டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள், 81 பவர் டில்லர்கள், ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் கருவி, 4 பாறை உடைக்கும் கருவிகள் மற்றும் 50 ஆயில் இன்ஜின் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தந்து சேவை செய்து வருகின்றன.

**2. வேளாண் மக்களின் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளை சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சீர்படுத்தவும் மற்றும் பராமரிப்பதற்கும் இணையத்தைச் சார்ந்த 118 சங்கங்களில் பட்டறை இயந்திரங்களான பற்ற வைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், கிரைண்டர்கள், கம்ப்ரசர்கள் ஆகிய வசதிகள் அமைக்கப்பெற்றுள்ளன. 12 மாவட்ட மையங்களிலும் வாகனங்களை விசைநீர் மூலம் சுத்தம் செய்யும் கருவி, ஹைட்ராலிக் ராம்ப், ஏர் கம்ப்ரசர்கள் முதலியன கொண்டு வேளாண் கருவிகளைப் பழுதுபார்க்கும் மற்றும் சிராக்கம் செய்யும் பணிகளையும் ஆற்றி வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் மாதனூர், கடலூர் மாவட்டத்தில் கடலூர், தஞ்சாவூர் மாவட்டத்தில், மல்லிப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி ஆகிய 4 இடங்களில் டீசல் விநியோக மையங்கள் அமைக்கப்பெற்று டீசல் விநியோகம் செய்து வருகின்றன.



**3. மேம்படுத்தப்பட்ட வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகள் தயாரித்தல்**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட வேளாண் கருவிகளை அக்ரோஃபெட் மற்றும் அதன் சார்பு மையங்களின் மூலம் உள்ளூர் தேவைக்கேற்ப தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

**4. வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்**

அக்ரோஃபெட் சார்பு மையங்களின் மூலம் ரசாயன உரங்கள், இயற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ஜிப்சம் போன்ற இடு பொருட்களை வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

**5. அரசு சார்புத் திட்டங்கள்**

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவைகளின் பல்வேறு திட்டங்களை அக்ரோஃபெட் அதன் 210 சார்பு மையங்களின் மூலம் நல்ல முறையில் செயலாக்கம் செய்து வருகின்றது.

**அ. மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம்**

வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்களை இணையமும் அதன் சார்பு மையங்களும் தயாரித்து வழங்கிட அரசு அனுமதித்துள்ளது. அதன்படி மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளான தழை மிதிக்கும் கருவிகள், கட்டி உடைக்கும் கருவிகள், சமன்படுத்தும் தகடுகள், சேறு கலக்கும் கருவிகள், ஒருவழிக் கலப்பைகள், இருவழிக் கலப்பைகள் மற்றும் கரை அமைக்கும் கலப்பைகள் போன்றவற்றை அக்ரோஃபெட் சார்பு மையங்கள் தயாரித்து வருகின்றன. இந்த விவசாயக் கருவிகள் அரசு வேளாண் கிடங்குகளுக்கு வழங்கப்பட்டு வேளாண் மக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 194 இலட்சம் மதிப்பிற்கான 60,558 வேளாண் கருவிகள் இதுவரை விநியோகம் செய்துள்ளது.

**ஆ. வறட்சி நிவாரணத் திட்டத்திலும், இதர திட்டங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்**

வறட்சி நிவாரணத் திட்டத்திலும் இதர திட்டங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு

[1998 ஏப்ரல் 7

அளித்ததுபோல் இவ்விணையத்திற்கும் அரசால் ஒப்படைக்கப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.525 இலட்சம் மதிப்பில் 2,120 ஆழ்துளைக் கிணறுகள் அக்ரோஃபெட்டின் மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

**இ. இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் தயாரித்து விநியோகம் செய்தல்**

மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்திலும் இதரத் திட்டங்களிலும் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் மற்றும் பள்ளிகளுக்கு ரூ.510 இலட்சம் மதிப்பிற்கான 45,000 இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்களை அக்ரோஃபெட் தயாரித்து விநியோகித்துள்ளது.

**ஈ. 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 5 மையங்களுக்கு டிராக்டர்கள் வழங்குதல்**

1997-98 ஆம் ஆண்டில் ஒரு மையத்திற்கு ரூ. 2 இலட்சம் வீதம் 5 மையங்களுக்கு ரூ.10 இலட்சம் அளவில் 5 டிராக்டர் டிரெய்லர்கள் வழங்க அரசிடமிருந்து பகுதி-2 திட்டத்தின்கீழ் மானியம் பெற்று அதனைப் பயன்படுத்தி இணையம் 5 எண்கள் டிராக்டர் மற்றும் டிரெய்லர்களை, 1. சின்னமனூர், தேனி மாவட்டம் 2. காரமடை, கோவை மாவட்டம் 3. ஆத்தூர், சேலம் மாவட்டம், 4. பள்ளிப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் 5. திருமானூர், பெரம்பலூர் மாவட்டம் ஆகிய மையங்களுக்குக் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

**உ. அக்ரோஃபெட்டின் கிடங்கு மற்றும் விற்பனை நிலையம்**

1997-98-ல் விழுப்புரத்தில் தரம் வாய்ந்த கீழ்க்காணும் பொறியியல் உபகரணங்கள் மற்றும் காரணிகளை விநியோகிப்பதற்காகக் கிடங்கு வசதியுடன் கூடிய விற்பனை நிலையத்தை அக்ரோஃபெட் அமைந்துள்ளது :

1. பல்வேறு அளவுகளில் இரும்பு பைப்புகள்.
2. பல்வேறு அளவுகளில் பி.வி.சி. பைப்புகள்.
3. மின் மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் ஸ்டார்ட்டர் போன்ற உபகரணங்கள்.
4. கைத் தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள்.



1998 ஏப்ரல் 7]

5. இந்தியா மார்க்-2 கைப்பம்புகள்.
6. வேளாண் கைக்கருவிகளான கடப்பாரை, நீண்ட கரண்டிகள், இரும்புக் குடங்கள், கோடாரி முதலியன.
7. தார்ப்பாய்கள் முதலியன.

**அக்ரோஃபெட்டின் செயலாக்கம்**

1993-94 முதல் 1997-98 (பிப்ரவரி 1998 முடிய) அக்ரோஃபெட்டின் நிதிச் செயலாக்கம் பின் வருமாறு :

| வரிசை எண் (1) | ஆண்டு (2) | செயலாக்கம் (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1 | 1993-94 | 1593.00 |
| 2 | 1994-95 | 543.00 |
| 3 | 1995-96 | 1689.00 |
| 4 | 1996-97 | 1550.80 |
| 5 | 1997-98 (பிப்ரவரி 1998 வரை) | 1768.67 |

**எதிர்காலத் திட்டங்கள்**

1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றிட அக்ரோஃபெட் திட்டமிட்டுள்ளது :

1. ரூ.156 இலட்சத்தில் மேலும் நான்கு புல்டோசர்களை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி வசதியுடன் வாங்கிட திட்டமிட்டுள்ளது.
2. ரூ.12 இலட்சத்தில் இரண்டு டிராக்டர்கள், டிரெயிலர் மற்றும் உபகரணங்களுடன் வாங்கி வாடகைப் பணியை விரிவாக்கிடத் திட்டமிட்டுள்ளது.
3. சென்னையில் ஒரு சர்வீஸ் ஸ்டேசனை ரூ. 8 இலட்சம் செலவில் நிறுவிடத் திட்டமிட்டுள்ளது.

4. சென்னையில் சொந்த அலுவலகக் கட்டடத்தைக் கட்டிட திட்டமிட்டுள்ளது.

5. சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவிடத் திட்டமிட்டுள்ளது.

## ஆ. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காஃப்)

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் 1-1-1981 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 53/1961) பிரிவு 9-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவு இணையமாகும்.

### 2. நோக்கம்

எண்ணெய்வித்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் போன்ற பணிகளைத் திறம்பட ஒருங்கிணைப்பதின் வாயிலாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் பொருளாதார மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு உகந்த பணிகளை மேற்கொள்வதே இந்த இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 3. பங்கு மூலதனம்

இந்த இணையத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5.00 கோடியாகும். இணையத்தின் திட்டப்பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட எண்ணெய்வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் தொடக்கச் சங்கங்களும் (எண்ணெய்வித்து கூட்டுறவுச் சங்கங்கள்) தேசிய பால்வள நிறுவனமும் இந்த இணையத்தின் உறுப்பினர்களாகத் தகுதி பெற்றவையாகும். இந்த இணையத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.160.05 இலட்சம். இதில் ரூ.98.88 இலட்சம் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் தனது பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளது. எஞ்சிய தொகையான ரூ.61.17 இலட்சம் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளன.



### 4. தாவர எண்ணெய்த் திட்டம்

### 4.1 திட்டப் பகுதி

தற்போது இத்திட்டம் திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் 20 வட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது. இணையம் இதுவரை 335 எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவித்து 1,492 கிராமங்களில் 84,920 உறுப்பினர்களைப் பதிவு செய்துள்ளது. 1,30,948 எக்டேர் பகுதியில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### 4.2 திட்ட நிதி

இதற்கான நிதி உதவியினை (முதல் கட்டம்) தேசிய பால்வள வாரியம் அளித்து வந்துள்ளது. இதன் முதல் கட்ட திட்ட முதலீடு ரூ.15.61 கோடி. இதில் தேசிய பால்வள வாரியம் ரூ.8.42 கோடி கடனாகவும், ரூ.7.19 கோடி மானியமாகவும் அளித்துள்ளது. அத்துடன் தேசிய பால்வள வாரியம் இணையத்திற்குத் தேவையான குறைந்த காலக் கடன்களையும், கொள்முதல், விற்பனை மற்றும் பிற நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட கருத்துரு அடிப்படையில் வழங்கி வருகிறது. தற்போது தேசிய பால்வள வாரியம் நிதி உதவியினை 1991-92-ம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. அரசு இணையத்திற்குத் தேவையான அனைத்து நிதி உதவியினையும் அளித்து உதவ முன் வந்துள்ளது. அந்த வகையில் 1993 ஆம் ஆண்டு ரூ.1.00 கோடிக்கு வழிவகை முன்பணமாகவும், ரூ.80 இலட்சம் (வட்டியில்லாத) ஆதார நிதியாகவும் வழங்கி அத்துடன் மத்திய எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் போன்ற திட்ட உதவிகளையும், சத்துணவுத் திட்டத்திற்கான சமையல் எண்ணெயினை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக இணையம் அளிப்பதற்கு உதவியும், விற்பனை அங்காடி கட்டணத்திலிருந்து விலக்கும் மற்றும் இணையத்தினால் செலுத்தப்பட்ட கொள்முதல் வரியினை மானியமாக திருப்பி அளிக்கவும் வகை செய்துள்ளது.

### 5. உற்பத்திப் பெருக்கம்

இணையத்தின் உற்பத்திப் பெருக்கப் பணிகள் எண்ணெய்வித்துக்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதன் மூலமும், ஒரு எக்டேர் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதன் மூலமும் எண்ணெய்வித்துக்கள்

[1998 ஏப்ரல் 7

உற்பத்தியைப் பெருக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடைய இணையம் தீவிரமாகத் தன்னுடைய விரிவாக்கப் பணியாளர்களின் மூலம் நல்ல தரமான எண்ணெய்வித்துக்கள் விநியோகித்தல், செயல்முறை விளக்கம் அளித்தல், பயிற்சி கொடுத்தல், இடுபொருட்களை வழங்குதல் போன்ற விரிவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதன்மூலம் திட்டப் பகுதி மாவட்டங்களில் உற்பத்தித் திறனை 11 சதவிகிதம் அதிகரித்தும் விவசாயிகளின் வருவாயை 15 சதவிகிதம் பெருக்கியும் சாதனை புரிந்துள்ளது.

## 6. வட்டார உழவியல் மையம்—பயிற்சி மையம்

இந்த இணையம் மேம்படுத்தப்பட்ட சிறந்த வல்லுநர் மற்றும் ஆதார விதைகளை உற்பத்தி செய்யவும், இந்த இணையத்தின் சங்கங்களின் விவசாயிகள் மற்றும் பணியாளர்களின் மற்ற பயிற்சித் தேவையினை நிறைவு செய்யவும் ரூ.3.00 கோடி செலவில் நெய்வேலியின் திட்டப் பகுதியில் (102 எக்டேர் பரப்பில்) உழவியல் மையம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றை 1985 ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இம்மையத்தைப் பொறுக்கு விதை உற்பத்தி மையமாக (இந்திய அரசு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழு) ஐ.சி.ஏ.ஆர். அங்கீகரித்துள்ளது. இம்மையம் 1997-98 ஆம் ஆண்டில் [illegible]500 குவிண்டால் வல்லுநர் விதைகளையும் மற்றும் ஆதார விதைகளையும் உற்பத்தி செய்துள்ளது. மாநிலத்தின் தேவையை முழுமையாக நிறைவு செய்ய வல்லுநர் விதை உற்பத்திப் பரப்பைப் படிப்படியாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பகுதியாக விவசாயிகளின் நிலங்களில் வல்லுநர் விதை உற்பத்தியை அங்கீகரித்துள்ளதால், உழவியல் மையத்தின் மூலமாக அருகில் உள்ள தகுதி வாய்ந்த வட்டாரங்களில் வல்லுநர் மற்றும் ஆதாரநிலை-1 வித்து உற்பத்தியைச் செய்ய நேரிடையாகத் தொழில் நுட்பங்களை அளித்து ஈடுபடுத்த கருத்துரு செய்யப்பட்டு அமல்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டிற்கு 100 குவிண்டால் வல்லுநர் விதை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் வட்டார உழவியல் மையத்தில் ரூ.3.88 இலட்சத்தில் ஓர் உலர் களமும், ரூ.3.32 இலட்சத்தில் பாசன வசதி மேம்பாட்டிற்காக பி.வி.சி. குழாய்கள் போடவும் திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டிற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 7]

1998ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகளும், 1998-99 ஆம் ஆண்டிற்குப் பயிரிட வேண்டிய பரப்பு குறித்தான திட்ட அளவும் கீழ்க்கண்டவாறு:

| பருவம் 1997-98 | பயிரிடப்பட்டுள்ள பரப்பு (எக்டேரில்) | | | |
|---|---|---|---|---|
| | 1998-99 | | திட்டமிடப்பட்டது | |
| | திட்டமிடப்பட்டது | சாதனை | வ.உடமை | விவநிலம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கரீப் | 65 | 65 | 65 | 10 |
| ராபி | 65 | 65 | 65 | 10 |

வட்டார உழவியல் மையத்திலேயே பயிற்சி மையம் ஒன்றை எல்லாவித வசதிகளுடன் இவ்விணையம் சுமார் ரூ.40 இலட்சம் முதலீட்டில் அமைத்துள்ளது. இம்மையத்தில் மூன்று விதமான பயிற்சிகள் பயிற்சியில் பங்கேற்போருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. (1) விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் (2) சங்கச் செயலர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்தல் (3) திட்டப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல். இந்தப் பயிற்சி மையம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு எல்லா எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம், பயிற்சி அளிக்க ஒதுக்கப்பட்டது. 1997-98ல் 5,000 விவசாயிகளுக்கு திட்டப் பகுதி மற்றும் வேளாண் துறை விவசாயிகளுக்கு விதை உற்பத்தி, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, சிகப்பு கம்பளிப் புழு, வேர்ப் புழு மற்றும் இலைச்சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி இதுவரையில் 4,176 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. உழவியல் மையமும் பயிற்சி மையமும் இணையத்தின் தனிப்பட்ட அங்கங்களாகச் செயல்படுகின்றன.

## 7. எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்

இவ்விணையம் மைய அரசு உதவி பெற்ற எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டங்களைத் திட்ட பகுதியைச் சார்ந்த மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. அத்துடன் வேளாண்மைத் துறைக்காகவும் சில திட்டங்களை மேற்கொண்டு அமல்படுத்த உதவி வருகிறது. தமிழக அரசு 1997-98 ஆம் ஆண்டு எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் இவ்விணையத்திற்குச் சுமார் ரூ.385.10 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1997-98ஆம் ஆண்டு சாதனை (28-2-1998 முடிய) மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான பிரேரணை விபரங்கள் கீழே அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன.

[1998 ஏப்ரல் 7

## எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம்

(அலகு ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | இனத்தின் விவரம் | குறியீடு பொருள் | குறியீடு நிதி | 1997-98 ஆம் ஆண்டு சாதனை (பிப். 1998) பொருள் | 1997-98 ஆம் ஆண்டு சாதனை (பிப். 1998) நிதி | 1998-99 ஆம் ஆண்டு முன்மொழிவு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | வேளாண்மைத் துறைக்கு இடுபொருள் விநியோகம் | | | | | |
| அ. | ஜிப்சம் (எக்டேரில்) | 70000 | 140.00 | 69565 | 139.130 | 140.00 |
| ஆ. | வேர்ப் புழு கட்டுப் படுத்துதல் (எக்.) | 2100 | 10.50 | 2096.00 | 10.500 | 34.00 |
| இ. | விதை நேர்த்தி (எக். இலட்சத்தில்) | 1.666 | 27.75 | 0.870 | 27.250 | 30.00 |
| ஈ. | சிறுதளை | - | 35.00 | 27618 | 35.011 | 100.00 |
| உ. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு | - | - | - | - | 50.00 |
| ஊ. | இனக்கவர்ச்சிப்பொறி | - | - | - | - | 25.00 |
| எ. | பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் | - | - | - | - | 12.00 |
| ஏ. | நுண்ணுயிர் கலவை (ரைசோபியம் கல்ச்சர்) | - | - | - | - | 31.00 |
| ஐ. | பண்ணைக் கருவிகள் | - | - | - | - | 40.00 |
| | கூடுதல் | - | 213.25 | - | 211.891 | 462.00 |
| 2. | டான்காப் திட்டப் பகுதிக்கான இடுபொருள் விநியோகம் | | | | | |
| அ. | வல்லுநர் விதை கொள்முதல் (குவி.) | 500 | 19.00 | 243.35 | 14.265 | 19.00 |
| ஆ. | ஆதார விதை கொள்முதல் (குவி.) | 1500 | 3.00 | 461.95 | 0.919 | 3.00 |
| இ. | விதை கிராமம் (குவி.) | 8550 | 17.10 | 322.02 | 0.621 | 12.00 |
| ஈ. | விதை விநியோகம்(குவி.) | 6670 | 20.00 | 705.68 | 1.806 | 21.00 |
| உ. | சிறுதளை (எண்) | - | 15.00 | 13480 | 15.156 | 16.00 |
| 3. | விதை சாரா இனங்கள் | | | | | |
| அ. | பெருவிளக்கப் பண்ணை (எக்.) | 8.00 | 8.00 | 631.40 | 8.168 | 8.00 |



1998 ஏப்ரல் 7]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| ஆ. | விதை நேர்த்தி மருந்து (எக். இலட்சத்தில்) | 0.135 | 2.25 | 1729.00 | 2.065 | 2.25 |
| இ. | வேர்ப் புழு கட்டுப் படுத்துதல் (எக்.) | 700 | 3.50 | 710.00 | 3.500 | 3.50 |
| ஈ. | ஜிப்சம் (எக்டேரில்) | 30150 | 60.00 | 27910.00 | 55.820 | 60.00 |
| உ. | விவசாயிகள் பயிற்சி | 5000 | 10.00 | 4050.00 | 8.100 | 10.00 |
| ஊ. | கட்டமைப்பு வசதிகள் | 2 | 14.00 | - | - | - |
| எ. | பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் | - | - | - | - | 3.00 |
| ஏ. | பண்ணைக் கருவிகள் | - | - | - | - | 3.00 |
| ஐ. | பணியாளர் நலன் | - | - | - | - | 10.00 |
| | கூடுதல் | - | 171.85 | - | 110.420 | 149.75 |
| | மொத்த கூடுதல் | - | 385.10 | - | 322.311 | 631.75 |

## 8. விதைப் பதப்படுத்தும் மையம்

இவ்விணையம் நான்கு விதைப் பதப்படுத்தும் மையங்களைக் கிடங்கு வசதியோடு நெய்வேலி, விருத்தாசலம், திருவண்ணாமலை மற்றும் செய்யாரில் அமைத்துள்ளது. இந்த விதை சுத்திகரிக்கும் மையங்கள் செப்டம்பர் 1997ம் ஆண்டு தொடங்கப்பட்டன. 1998-99ம் ஆண்டு 600 டன்கள் மணிலா விதைகளைச் சுத்தம் செய்து அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 9. பதப்படுத்தும் ஆலைகள்

இவ்விணையம் இரு ஆலைகளை டான்பெஃட் நிறுவனத்திடமிருந்து 1985 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டது. தேசிய பால்வள வாரிய நிதியுதவியோடு ரூ.4.14 கோடி செலவில் விருத்தாசலம் எண்ணெய் ஆலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. சோதனை ஓட்டத்தினை நடத்த 2250 டன் நிலக்கடலையினை நடப்பு ஏப்ரல் 1998 மாதத்தில் கொள்முதல் செய்து சோதனை ஓட்டம் நடத்திடவும், சோதனை ஓட்டம் வெற்றி பெற்றால் வர்த்தக முறையில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இணையத்தின் எண்ணெய் பிழியும் ஆலைகளின் தற்போதைய பதப்படுத்தும் திறன், சேமித்தல் திறன் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

[1998 ஏப்ரல் 7

| வ. எண் | விவரம்/அலகு | திருவண் ணாமலை | விருத்தா சலம் | கிண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | மணிலா உடைப்பு அளவு (டன்/நாளுக்கு) | 150 | 150 | - | 300 |
| 2. | எண்ணெய் பிழிதல் (டன்/நாளுக்கு) | 125 | 100 | - | 225 |
| 3. | சுத்திகரித்தல் (டன்/நாளுக்கு) | 10 | - | - | 10 |
| 4. | கரைசல் பிரிப்பு முறை (டன்/நாளுக்கு) | 40 | 40 | - | 80 |
| 5. | மணிலாக்காய் மற்றும் பிண்ணாக்கு இருப்பு வைத்தல் (டன்களில்) | 7000 | 5000 | - | 12000 |
| 6. | எண்ணெய் இருப்பு வைத்தல் (டன்களில்) | 1000 | 1700 | 5020 | 7720 |

1998-99 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை ஆலையினைச் செயல்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படும்.

## 10. டான்காப் விற்பனை நடவடிக்கைகள்

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சமையல் எண்ணெயை மாதந்தோறும் வழங்கும் பணியை டான்காப் சிறந்த முறையில் செய்து வருகிறது. பிப்ரவரி 1998 வரை டான்காப் 1427 டன் சமையல் எண்ணெயைச் சத்துணவுத் திட்டத்திற்காக விற்பனை செய்துள்ளது. டான்காப் "வின்னர்" என்ற வணிகப் பெயரில் தரமிக்க சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் எண்ணெயினை ஒரு லிட்டர் பாலித்தீன் பைகளில் நிரப்பி தமிழகம் முழுவதும் பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விற்பனை செய்து வருகிறது. பாமாலின் பாக்கெட்டுகள் விற்பனையில் 1997-98 ஆம் ஆண்டிற்கான இலக்கு 2850 டன்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 2200 டன்கள் விற்பனை ஆகியுள்ளது. இந்தப் பாமாலின் விற்பனையைச் செவ்வனே செய்து முடிக்க டான்காப் 5 விற்பனைச் சரகங்களைப் பின்வருமாறு உருவாக்கியுள்ளது :



1998 ஏப்ரல் 7]

1. சென்னை
2. திருவண்ணாமலை
3. விருத்தாசலம்
4. ஈரோடு
5. மதுரை

மேற்கண்ட சரகங்கள் மூலமாக கூட்டுறவு அங்காடிகளுக்குத் தேவையை அறிந்து உடனுக்குடன் விற்பனையைச் செய்து வருகிறது.

### 1998-99 ஆம் ஆண்டிற்கான விற்பனைத் திட்டம்

டான்காப் 1998-99 ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்டவாறு விற்பனைத் திட்டத்தினை வகுத்துள்ளது :

| வ.எண் | திட்டங்கள் | அளவு(டன்) | விற்பனை மொத்த மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சத்துணவுத் திட்டத்திற்காக சமையல் எண்ணெய் விற்பனை | 2200 | 753.28 |
| 2. | நுகர்வோர் விற்பனை | | |
| | அ. பாமாலின் | 2500 | 812.50 |
| | ஆ. சூரியகாந்தி எண்ணெய் | 300 | 126.00 |
| | இ. கடலை எண்ணெய் விற்பனை | 750 | 300.00 |
| | ஈ. தேங்காய் எண்ணெய் | 50 | 27.50 |
| 3. | ஏற்றுமதிக்காகவும், உள்ளூர் விற்பனைக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மணிலாப் பயறு விற்பனை (எச்.பி.எஸ்) | 1000 | 200.00 |
| 4. | பிண்ணாக்குகளில் விற்பனை | | |
| | அ. கடலை | 840 | 67.20 |
| | ஆ. சூரியகாந்தி மற்றும் பருத்தி | 1500 | 75.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | பொது விநியோகத் திட்டத்திற்காக பாமாலின் நிரப்பி விற்பனை செய்தல் | 2000 | 620.00 |
| | மொத்தம் | | 2981.48 |
| | | | (அ) ரூ.30 கோடி |

மேற்குறிப்பிட்ட அனைத்து வியாபார நடவடிக்கைகளின் மூலமாக வருகின்ற 1998-99 ஆம் ஆண்டில் மொத்த இலாபமாக ரூ.122.80 இலட்சம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 11. எண்ணெய் நிரப்பும் பிரிவு

இந்த இணையமானது இரண்டு எண்ணெய் நிரப்பும் நிலையங்களைத் திருவண்ணாமலை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. அவற்றின் நிரப்பும் திறன் பின்வருமாறு :

| இடம் (1) | நிரப்பும் திறன் (2) | எண்ணெய் சேமிப்பு கிடங்கு வசதி (3) |
|---|---|---|
| 1. சென்னை | 75 டன்/நாள் | 5000 டன் |
| 2. திருவண்ணாமலை | 30 டன்/நாள் | 1000 டன் |

மேற்கண்ட நிரப்பு நிலையங்களை முழுத் திறனுக்கும் உபயோகித்து இணையத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி போன்ற நகரங்களில் பொது விநியோகத் திட்டத்திற்காக மத்திய அரசாங்கமே நேரிடையாக பாமாலினை டான்காப்பிற்கு ஒதுக்கீடு செய்யக் கோரலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.



## இ. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்

**(தாய்)**

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ் வருமாறு:

அ. வேளாண்மை வளர்ச்சி பெறச் செய்யவும் நவீனமயமாக்க உதவும் பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

ஆ. வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

இ. மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளை விரைவில் வளர்ச்சிபெற ஊக்குவித்தல்.

2. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.455.90 இலட்சம் ஆகும். இதில் தமிழ்நாடு அரசு ரூ.290.90 இலட்சமும் இந்திய அரசு ரூ.165.00 இலட்சமும் தங்களின் பங்கு மூலதனமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

3. மேற்கூறிய நோக்கங்களைப் பூர்த்தி செய்யும்பொருட்டு 'தாய்' நிறுவனம் கீழ்க்கண்ட இரண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அ. சூரியகாந்தி எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மீன்பிடி வலைகள் ஆகிய மூன்று பொருட்களை உற்பத்தி செய்து பெருமளவில் விற்பனை செய்வது.

ஆ. உரம் மற்றும் விவசாயக் கருவிகளை பெருமளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வது.

### உற்பத்தி நடவடிக்கைகள்

### 3.1 பூச்சிக்கொல்லி மருந்து ஆலை, அம்பத்தூர்

இக்கழகம், 1976 ஆம் ஆண்டு அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்பு ஆலை உதவியுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்த ஆலையின் மூலதனம் ரூ.34.00 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 1000 லிட்டர் திரவ மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது. தற்போது

[1998 ஏப்ரல் 7

கீழ்க்குறிப்பிட்டுள்ள திரவ பூச்சிக்கொல்லி மருந்துகளை இந்த ஆலை தயாரித்து விற்பனை செய்து வருகிறது :

**திரவ மருந்து**

அ. பாஸ்போமிடான் 86% எஸ்.எல்.

ஆ. எண்டோசல்பான் 35% இ.சி.

இ. மானோ குரோட்டாபாஸ் 36% எஸ்.எல்.

ஈ. குயினால்பாஸ் 25% இ.சி.

உ. சைபர்மெத்ரின் 10% இ.சி.

ஊ. பென்வலரேட் 20% இ.சி

எ. குளோரோபைரிபாஸ் 20% இ.சி.

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனையின் அளவும் 1998-99ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (பிப்.1998 வரை) | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு திரவம் (லிட்டரில்) | 145940 | 17984 | 97404 | 148290 | 201770 | 200000 |
| விற்பனை அளவு திரவம் (லிட்டரில்) | 146510 | 9913 | 96941 | 152925 | 197235 | 200000 |
| விற்பனைத் தொகை ரூ. இலட்சத்தில் | 260.64 | 83.53 | 230.41 | 334.31 | 374.49 | 426.97 |

## 3.2 மீன்பிடி வலை ஆலை, கிண்டி

மீனவர்களுக்கு இயந்திரங்களினால் பின்னப்பட்ட மீன்பிடி வலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. இந்த ஆலை ஆண்டிற்கு 60 டன்கள் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது.

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனை அளவும் 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :



1998 ஏப்ரல் 7]

| | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (பிப்.1998 வரை) | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (டன்களில்) | 71 | 67 | 53 | 21 | 26 | 60 |
| விற்பனை அளவு (டன்களில்) | 65 | 59 | 58 | 25 | 24 | 60 |
| விற்பனைத் தொகை ரூ. இலட்சத்தில் | 90.23 | 89.79 | 104.15 | 43.02 | 41.85 | 108.72 |

## 3.3 சூரியகாந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை, போச்சம்பள்ளி.

இக்கழகம், 1978ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தர்மபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு முழுமையான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியுள்ளது. இந்த ஆலையின் மூலதனம் ரூ.109.50 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 40 டன்கள் சூரியகாந்தி விதையைப் பிழிந்து எண்ணெய் எடுக்கவும், 30 டன்கள் சூரியகாந்தி பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கவும், 20 டன்கள் கச்சா சூரியகாந்தி எண்ணெயைச் சுத்திகரிக்கவும் திறன் கொண்டது.

இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் 'சனோலா' என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் துணை உற்பத்திப் பொருளாகிய எண்ணெய் பிழிந்து எடுக்கப்பட்ட சூரியகாந்தி பிண்ணாக்கு, கோழி மற்றும் கால்நடை உணவுப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க 'தாய்' நிறுவனம் சூரியகாந்தி விதையை முறையாக விவசாயிகளிடமிருந்து நேரிடையாக நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்து வருகிறது.

இந்த ஆலையில் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும் 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

[1998 ஏப்ரல் 7

| | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (பிப்.1998 வரை) | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (டன்களில்) | | | | | | |
| பிழிதல் | 6738 | 7604 | 8433 | 5731 | 6295 | 9662 |
| சுத்திகரித்தல் | 3057 | 3276 | 2785 | 3033 | 2911 | 3600 |
| கரைத்து எண்ணெய் எடுத்தல் | 3892 | 4623 | 4918 | 4880 | 3762 | 5700 |
| விற்பனை அளவு எண்ணெய் (டன்களில்) | 3093 | 3294 | 3035 | 3204 | 3015 | 3600 |
| இதர எண்ணெய் துணைப் பொருட்கள் | 3500 | 3577 | 4984 | 2377 | 3660 | 5500 |
| விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 1302.89 | 1602.63 | 1653.00 | 1590.71 | 1602.92 | 2114.74 |

தமிழக அரசு போச்சம்பள்ளியில் உள்ள சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை நவீனப்படுத்த ரூ.25.00 இலட்சம் வழங்கியுள்ளது. இந்தத் தொகை முழுமையாக செலவழிக்கப்பட்டு இந்த எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

**3.4 வர்த்தக நடவடிக்கைகள்.**

**விவசாய கருவிகள் விற்பனை :**

இக்கழகம் பிரசித்தி பெற்ற அனைத்து வகை உற்பத்தியாளர்களின் டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்களை விற்பனை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. இப்பண்ணை இயந்திரங்கள் இதற்குப் பொருத்தமான கேஜ்வீல், கல்டிவேட்டர், தரமான உதிரி பாகங்கள், டயர் டியூப் மற்றும் மின்கலங்கள் (பேட்டரி) உடன் அனைத்து கிளை மையங்கள் மூலமும் விற்பனை செய்து வருகிறது. இக்கழகத்திற்குத் தமிழகம் முழுவதும் 9 கிளை மையங்களும் 15 விற்பனைக் கூடங்களும் உள்ளன.

இந்த வணிக நடவடிக்கைகளின் கடந்த ஐந்து ஆண்டு கால விற்பனை அளவும் 1998-99 ஆம் ஆண்டுக்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



1998 ஏப்ரல் 7]

| | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (பிப்.1998 வரை) | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை அளவு டிராக்டர், பவர் டில்லர் (எண்) | 1934 | 1231 | 1203 | 952 | 1361 | 1624 |
| மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 1581.61 | 1286.75 | 1287.27 | 1091.34 | 1612.43 | 2164.08 |
| உதிரிபாகங்கள் (ரூ. இலட்சத்தில்) | 361.11 | 464.13 | 1144.18 | 729.14 | 685.92 | 933.50 |

**2. விவசாயம் இயந்திரமயமாக்குவதை ஊக்குவித்து விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரக் கலப்பைகளையும் உபகரணங்களையும் வழங்கும் திட்டம் (மத்திய அரசின் ஆதரவுடன்).**

அ. மத்திய அரசால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் தமிழக அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கிட 600 பவர் டில்லர்களை டில்லர் ஒன்றுக்கு ரூ.30,000.00 மானியம் என்ற அடிப்படையில் ரூ.180.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை பிறப்பித்தது. இவை தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தால் வழங்கப்படும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 356 பவர் டில்லர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 244 பவர் டில்லர்களும் 98 மார்ச் மாத முடிவுக்குள் வழங்கப்பட்டு இத்திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்படும்.

ஆ. மேலும் தமிழக அரசு கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு 25 சதம் மானிய விலையில் இயந்திரக் கலப்பைக்கான இழுவை உபகரணங்களை விவசாயிகளுக்கு வழங்கிடும் பொருட்டு ரூ.25.00 இலட்சம் இக்கழகத்திற்கு வழங்கி உள்ளது. இத்திட்டம் உடனடியாக செயல்படுத்தப்பட்டு 31-3-1998-க்குள் நிறைவேற்றப்படும்.

**3. உர விற்பனை.**

அநேக தலை சிறந்த உர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உரங்களை பெருமளவில் இக்கழகம் விற்பனை செய்து வருகிறது.

இப்பிரிவின் கடந்த ஐந்து ஆண்டு கால விற்பனை அளவும் 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (பிப்.1998 வரை) | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை அளவு (டன்களில்) | 233.27 | 6559 | 5065 | 8162 | 8172 | 25000 |
| விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 1059.23 | 239.62 | 308.40 | 326.93 | 335.03 | 1040.13 |

**4. உணவு பதப்படுத்தும், ஊக்குவிக்கும் நிறுவனமாக செயல்பட்டு பணி புரிதல்.**

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தை மாநில அளவில், மாநில அளவிலான பதப்படுத்தப்பட்ட உணவு வகை தொழில் வளாகத்தை மேம்படுத்துவதற்கான செயல்முறைத் திட்டங்களை எடுத்துரைத்து, ஊக்குவிக்கும் நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

இந்நிறுவனம் தொழில் முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், உணவு பதப்படுத்துபவர்களுக்கும் மற்றும் இது சம்பந்தியாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக அமைந்து, சம்பந்தமான ஆராய்ச்சி முழுமையான வளர்ச்சிக்குத் தொண்டாற்றி ஒருங்கிணைந்து ஒரு வருகின்றது.

இது சம்பந்தமாக இக்கழகத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:—

1. தொழில் வளர்ச்சிக்கு முறையான திட்டமிடுதல்.
2. தொழில் முனைவோர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுத்தல்.
3. முதலாவதாக தொழில் ஆரம்பிப்பவர்களுக்குத் தேவையான பங்கு மூலதனம் அளித்து உதவி செய்வது.
4. தனிப்பட்ட தொழிற்பேட்டைகளை நிறுவி, மேம்படுத்தி அதன் பின் தொழில்முனைவோர்களுக்குச் சலுகை முறையில் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
5. நவீன தொழில்நுட்பங்களைப் பதப்படுத்துவோர் விழிப்புணர்ச்சியுடன் அறிவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், அதனைப் பின்பற்றுவதற்கும், தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
6. தொழில்முனைவோர்களுக்கு அத்தியாவசியமான பயிற்சி திட்டங்களை அளித்தல்.



7. உணவு பதப்படுத்தும் மையங்களுக்கு இன்றியமையாத நுட்பமான விவரங்களைத் தெரிவிப்பதற்கு ஒரு புள்ளிவிவர வங்கியை நிறுவி நடத்துதல்.
8. தொழிற்சாலைகளுக்கு ஒரு முன்னோடி வழிகாட்டும் நிறுவனமாகவும் பலதரப்பட்ட தொழில் முனைவோருக்கு அவர்கள் சார்பாக ஒரு இணைப்புப் பாலமாகவும் அமைந்து செயல்படுதல்.
9. உணவு பதப்படுத்தும் தொழில்களில் ஏற்படும் இடையூறுகளை அறிய தொழில் முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் நேருக்குநேர் சந்திப்பை ஏற்படுத்தி, விவாதங்கள் நடத்தி அவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண செயல்படுதல்.
10. மத்திய அரசு வழங்கும் உதவிகளை இந்நிறுவனம் ஒரு முன்னோடி நிறுவனமாக செயல்பட்டு உற்பத்தியாளர்களுக்குச் சரியான முறையில் போய்ச் சேர்வதற்கும் மற்றும் ஏற்றுமதி உணவுப் பொருட்களைக் குளிர்ச்சாதனம் மூலம் பதப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவி புரிந்திடல் ஆகியவற்றையும் குறிக்கோளாகக் கொண்டிருத்தல்.

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவிடவும் மற்றும் மேம்படுத்துவதற்கான இணை மற்றும் கூட்டுத் துறையில் தொழில் முனைவோர்களுடன் பங்கெடுத்துள்ள திட்டங்கள் பின்வருமாறு:—

| வ. எண் (1) | நிறுவனங்களின் பெயர் (2) | திட்டத்தின் பெயர் மற்றும் திட்ட மதிப்பீடு (3) | தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் பங்கு (4) |
|---|---|---|---|
| 1 | மெஸார்ஸ் டான்டேக் அக்ரோ கெமிகல்ஸ், கடலூர் | தொழில்நுட்ப வகையிலான பூச்சிகொல்லி மருந்தின் மூலப்பொருள் 2) ரூ.11.65 கோடி | தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் முதலீடு ரூ.9.90 இலட்சம் 2.2 சதவீதம் |
| 2. | இன்டஸ் ஃப்ளோரா பேஸ் லிட்., பெங்களூர் | ஏற்றுமதிக்கான உயர்வகை பூக்கள் பயிரிடுதல் 2) ரூ.3.00 கோடி | பங்குத் தொகையில் தாய் நிறுவனத்தின் முதலீடு 11 சதவிகிதம் (அதாவது ரூ.11.00 இலட்சம்) |

| வ. எண் (1) | நிறுவனங் களின் பெயர் (2) | திட்டத்தின் பெயர் மற்றும் திட்ட மதிப்பீடு (3) | தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் பங்கு (4) |
|---|---|---|---|
| 3. | மெஸர்ஸ் டச் ராமா அக்ரோ புட்ஸ், மதுராந்தகம் | 100% ஏற்றுமதிக்கான உணவு வெள்ளைக் காளான் பயிரிடுதல் (2) ரூ.15.50 கோடி | பங்குத் தொகையில் தாய் நிறுவனத்தின் முதலீடு ரூ.126.00 இலட்சமாகும். இத்தொகையை மத்திய அரசும் மாநில அரசும் தலா ரூ.63.00 இலட்சம் வீதம் வழங்கி உள்ளன. |
| 4. | மெஸர்ஸ் போச்சிராஜு ஃப்ளோரி டெக், ஒசூர். | ஏற்றுமதிக்கான உயர்வகை பூக்கள் பயிரிடும் திட்டம் (2) ரூ. 13.59 கோடி | தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் ரூ.10 இலட்சத்தை வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மீதமுள்ள நிதி ஒதுக்கீட்டுத் தொகை வழங்குவது பற்றி செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. |
| 5. | மெஸர்ஸ் சச்சின் ஃப்ளோரி டெக், ஒசூர். | ஏற்றுமதிக்கான உயர்வகை பூக்கள் பயிரிடுதல் திட்டம் (2) ரூ.9.50 கோடி | ரூ.10.00 இலட்சம் இந்தத் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மீதமுள்ள நிதி ஒதுக்கீட்டுத் தொகை வழங்குவது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. |
| 6. | வேப்ப எண்ணெயை அடிப்படையாகக் கொண்டு பூச்சி மருந்து தயாரித்தல் | அரசு இந்த இரண்டு திட்டங்களுக்கும் தலா ரூ.2.50 இலட்சம் வீதம் வழங்கி கீழே கூறப்பட்டுள்ள பொருட்களை தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் உற்பத்தி செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. (அ) வேப்ப எண்ணெயை அடிப்படையாகக் கொண்டு பூச்சி மருந்து தயாரித்தல் (ஆ) டிரைகோ டர்மா விரிடி உயிரியல் பூஞ்சக்காளான். | |
| 7. | டிரைகோ டர்மா விரிடி (உயிரியல் பூஞ்சக்காளான் முறையில் பூஞ்சக் காளான் அழித்தல்) | உயிரியல் பூஞ்சக்காளான் முறையில் பூஞ்சக்காளானை அழித்தல், தாய் நிறுவனம் தனது சொந்த அலுவலக கிளைகளில் இத்திட்டங்களை எடுத்து முன்னதாகவே உற்பத்திக்கான ஆக்கவேலைகளைத் தொடங்கி மாதிரி உற்பத்தி தொடங்கப்பட்டு இந்த உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |



| வ. எண் (1) | நிறுவனங் களின் பெயர் (2) | திட்டத்தின் பெயர் மற்றும் திட்ட மதிப்பீடு (3) | தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் பங்கு (4) |
|---|---|---|---|
| 8. | ஒருங்கிணைந்த தேங்காய் மற்றும் அதன் உபபொருட்களை உற்பத்தி செய்யும் ஆலையை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைத்தல் | ரூ.10.00 கோடி | அரசு இத்திட்டத்திற்காக ரூ.100 இலட்சம் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. கூட்டு முயற்சியில் இப்பிரிவை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 9. | பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி | ரூ.1.40 கோடி | இத்திட்டத்திற்கு அரசு ரூ.10.00 இலட்சம் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்திற்கு வழங்கி உள்ளது. இத்திட்டத்திற்கான இயந்திரங்களை வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளியை நாளேடுகளில் இந்நிறுவனம் அறிவித்து உள்ளது. கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள போலுப்பள்ளி கிராமத்தில் இத்திட்டத்தை நிறுவுவதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. |

மேலும் மத்திய அரசு உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களை பல்வேறு மாவட்டங்களில் நிறுவுவதற்காக மானியத் தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் தொழில் முனைவோர்களை மேம்படுத்துவதிலும் தொழில்நுட்பங்களை உபயோகப்படுத்தி, ஊரக விவசாய மூலப்பொருட்களைக்கொண்டு பதப்படுத்திய உணவுப் பொருட்களைத் தயாரிப்பதிலும், தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தால் அவர்களாகவே ஒரு சிறிய தொழில் பிரிவை மேலாண் செய்வதற்கும் உதவியாக இருக்கும். இத்திட்டம் ஊரக தொழில் முனைவோர்களுக்கு தொழில் நுட்ப வகையில் உற்பத்தி, விற்பனை, தரக்கட்டுப்பாடு, வரவு-செலவு, திட்டம் போன்றவற்றில் பயிற்சி அளிக்கிறது.

**உதவித் தொகையின் அளவு**

அ. இத்திட்டத்தின் மூலம் வழங்கும் உதவியானது ரூ.2.00 இலட்சம் வரை இயந்திரங்களும், தொழிற்சாலை நிலையங்களுக்கு தரத்தை நிர்ணயிக்கும் உபகரணங்களும் வாங்குவதற்காக வழங்கப்படும்.

ஆ விதை மூலதனம்/சுழல் நிதிக்காக, ஒருமுறை மானியம் ரூபாய் ஒரு இலட்சம் வரை உணவு பதப்படுத்தல் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு வாணிப உற்பத்திக்கு வகை செய்யப்பட்டுள்ளது. ஒன்றிற்கு மேற்பட்ட தயாரிப்புக்கான உற்பத்திக்கும், பயிற்சி அளிக்கவும், இயந்திரம் தளவாடங்கள் வாங்க நிதி உதவி மற்றும் தரம் ஆய்வு செய்யும் கருவிகள் ஆகியவைகளுக்கு அதிகபட்சம் ரூ.7.50 இலட்சங்கள் வரை அனுமதிக்கப்படும். விதை மூலதனம்/வாணிப உற்பத்திக்கு ரூ.2.00 இலட்சம் வரை சுழல் நிதியாக அனுமதிக்கப்படும்.

இதுவரை 11 உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு மத்திய அரசு, உதவி மானியத் தொகை வழங்கியுள்ளது. மேலும் 25 உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களின் திட்டங்கள், மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் மானியத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

## 5. விற்பனை அளவு மற்றும் இலாபம்

1997-98 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.53.00 கோடிக்கு விற்பனை செய்ய உள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.68.00 கோடிக்கு விற்பனை செய்து ரூ.35.00 இலட்சம் நிகர இலாபம் ஈட்ட உள்ளது.

## ஈ. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலை பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்தின் (டான்ஹோப்) முதன் நோக்கம், உற்பத்தியாளர்களின் முழு ஈடுபாட்டுடன் வலிமையுடைய கூட்டுறவு, கோட்பாட்டுடன் தங்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு வழி வகுத்தலாகும். இக்குறிக்கோளினை அடைந்திட அறுவடைக்குப்பின் பொருட்களை கையாள்வதற்குத் தேவையான உள்ளமைப்பு வசதிகளைப் பெற்ற அடித்தளம் அமைத்துக் கொடுத்தலே முக்கியமானதாகும். இதன் அடிப்படையில், தோட்டக்கலைப் பொருட்கள் விற்பனை தொடர்பான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கொள்முதல் நிலையம் அமைத்தல், சேமிப்பு நிலையம் மற்றும் உற்பத்தி மையங்களிலிருந்து உற்பத்தி பொருட்களை விற்பனை மையங்களுக்கு கொண்டுவர வாகன வசதி ஏற்படுத்தித் தருதல் மற்றும் நுகர்வோர் விற்பனை நிலையங்கள் திறப்பது போன்ற முக்கியமானவைகளை உள்ளடங்கியதாகும். இப்பணிகள் முதற்கட்டமாக நிறைவேற்றப்பட ரூ.1023

இலட்சத்தில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதியுதவி பெறும் பிரேரணை, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு அரசினால் ரூ.150.31 இலட்சம் அரசின் ஒப்புரவு பங்குத் தொகையாக ஏற்று இத்திட்டத்தில் செயல்படுத்த கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

டான்ஹோப்பில் தற்போது 2,392 அங்கத்தினர்கள் உள்ளனர். 1996-97 ஆம் ஆண்டில் வணிகம் செய்து முடித்த மதிப்பு ரூ.43.42 இலட்சமாகும். 1997-98 ஆம் ஆண்டில் இதுவரை வணிகம் மேற்கொண்ட மதிப்பு ரூ. 30.02 இலட்சமாகும். இந்திரா நகரில் சென்னை மாநகராட்சி வணிக வளாகத்தில், டான்ஹோப் நிறுவனம் ஒரு நுகர்வோர் விற்பனை அங்காடியைத் துவக்கியுள்ளது. புதிய விற்பனை நிலையங்கள் துவங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய தோட்டக்கலை வாரியத்தால், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பீட்டினைத் தவிர்க்கும் திட்டத்தின்கீழ் பிளாஸ்டிக் கிரேட்டுகளை வழங்குவதற்கு டான்ஹோப் நிறுவனம் தமிழ்நாட்டிற்குத் தொடர்பு முகமையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் இதுவரை ரூ.3.30 இலட்சத்திற்கு இரு பிரேரணைகள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளன.

D
Y2H,31'N98
N98:44.1
21845

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002